வெளியீடு 9-5-2006 Issued 9-5-2006

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஜனவரி 24, 2006—தொகுதி 90 — எண் 1

Tuesday the 24th January, 2006 —Volume 90 — No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

926
21.9.06

24-1-2006

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii – vii |
| Governor and Council of Ministers | ix – xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii – xvi |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xvii – xxvii |
| **1. வினாக்கள் விடைகள்—** | |
| உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 3) | 1– 78 |
| **2. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு | 79, 80 |
| **3. கவன ஈர்ப்புகள்—** | |
| (அ) துறைமுகத்திலிருந்து எடுத்துச்செல்லும் வேதிப் பொருட்கள் சாலைகளில் சிதறாமல் இருக்க வாகன உரிமையாளர்களுக்குக் கட்டுப்பாடுகள் | 79, 80–83 |
| (ஆ) வால்பாறை தோட்டக் குடியிருப்புப் பகுதிகளில் வன விலங்குகளால் ஏற்படும் உயிர்ச் சேதத்தைத் தவிர்க்க தெரு விளக்குகள் அமைத்தல் | 83–87 |
| **4. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) மனுக்கள் குழு | 87 |
| (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 87 |

| | பக்கங்கள் |
|---|---|
| **5. இடைக்கால் வரவு–செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்**—தொடர்ச்சி | 87–97, 101–198 |
| திரு. லா. சந்தானம் | 88–97 |
| திரு. பி.எம். நரசிம்மன் | 101–115 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 116–123, 125–131 |
| திரு. கே.சி. கருணாகரன் | 132–144 |
| திரு. ஜி.கே. மணி | 145–167 |
| * திருமதி டி. யசோதா | 167–169, 178–198 |
| **6. விதி 110–ன்கீழ் அறிக்கை—** | |
| முன்னாள் உறுப்பினர் திருமதி கிருஷ்ணவேணி அவர்களுக்கு நிதியுதவி மற்றும் குடியிருப்பு வசதி—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 97–101 |
| **7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 198–199 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை, பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

**3. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

4. **சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள் தகவல் தொழில்நுட்பவியல்.

5. **உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் :**

உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு, புள்ளியியல் மற்றும் கூட்டுறவு.

6. **இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

7. **சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

8. **மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

9. **ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி**

...சைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கி...ாமத் தொழில் வாரியம்.

227007
சென்னை-600 008
நூலகம்



V21... 806-90

10. **ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

11. **போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

12. **தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

13. **வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

14. **பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

15. **கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன் :**

கால்நடை பராமரிப்பு.

16. **வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

**17. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**18. கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டோர் மற்றும் வணிக வரிகள்.

**19. பால் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

**20. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**21. மீன்வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

**22. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.



**23. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

**24. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**25. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

----

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. **Chief Minister** | .. **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance** | .. **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. **Minister for Law and Information Technology** | .. **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |
| 5. **Minister for Food and Co-operation** | .. **The Hon. Thiru Pollachi V. Jayaraman:** Food, Civil Supplies, Consumer Protection, Price Control, Statistics and Co-operation. |

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. P. Vijayalakshmi Palanisamy:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

8. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Health, Medical Education and Family Welfare.

9. **Minister for Rural Industries** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi & Village Industries Board.

10. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-servicemen.

11. **Minister for Transport and Electricity** .. **The Hon. Thiru R. Viswanatham**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Electricity and Non- conventional Energy Development.

12. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.



13. **Minister for Agriculture** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

14. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

15. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**

Animal Husbandry.

16. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Forests & Environment and Pollution Control.

17. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

18. **Minister for Education and Commercial Taxes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees, Evacuees and Commercial Taxes.

19. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

| | | |
|---|---|---|
| **20. Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru V. Somasundaram:**<br>Handlooms and Textiles. |
| **21. Minister for Fisheries** | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:**<br>Fisheries. |
| **22. Minister for Tourism** | .. | **The Hon. Thiru A. Miller:**<br>Tourism and Tourism Development Corporation. |
| **23. Minister for Labour** | .. | **The Hon. Thiru P. Annavi:**<br>Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| **24. Minister for Information & Publicity and Local Administration** | .. | **The Hon. Thiru K.P. Anbalagan:**<br>Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural indebtedness, Urban and Rural Water Supply. |
| **25. Minister for Sports and Youth Welfare** | .. | **The Hon. Thiru Inbathtamilan:**<br>Sports and Youth Welfare. |

---



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

### மாற்றுத் தலைவர்கள் #

*திரு. ப. இராஜரெத்தினம்*

*திரு. அ. அன்வர் ராஜா*

*திருமதி சி.எம். சூரியகலா*

*திரு. லா. சந்தானம்*

*டாக்டர் தே. குமாரதாஸ்*

*முனைவர் செ.கு. தமிழரசன்*

### செயலாளர்

*திரு. வெ. இராசாராமன்*

---

# 17-1-2006 **அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.**

| | |
|---|---|
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்ரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (விடுப்பு) |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எல்., பி.எட். | - துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் நிலை குழு அலுவலர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (பொறுப்பு) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ., பி.ஜி.எல். | - பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்சி. | - சார்புச் செயலாளர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. அ. நவாப் ஜான், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |

| | |
|---|---|
| திருமதி இரா. ரேவதி, எம்.ஏ. | - செயலாளரின் தனிச் செயலாளர் (சார்புச் செயலாளர் நிலை) |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | - ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | - தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | - தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | - திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | - அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | - வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | - புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | - தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆகு.சி. | - பேரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | - நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | - தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | - இராமநாதபுரம் |

19. ஆண்டிவேல், திரு. ப. - வேடசந்தூர்
20. ஆறுமுகம், திரு. கே. - செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆவா.)
41. இன்பத்தமிழன், திரு. - ஸ்ரீவில்லிபுத்தூர்



42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
48. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
50. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
51. கணேசன், திரு. வி. - மங்களூர் (செ.வ.)
52. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
59. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆவா.)
60. கனகதாரா, செல்வி சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்
64. கார்த்தி, திரு. மு. - சேலம்-2
65. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்

66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
67. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
68. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
69. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
70. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
71. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
72. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
73. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
74. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
75. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
76. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
77. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
78. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
79. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
80. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
81. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
82. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
83. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
84. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
85. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
86. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
87. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆவா.)
88. சாமி, திரு. ஆர். - மேலூர்
89. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்



90. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
91. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
92. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்
93. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். - கரூர்
94. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
95. சிவபெருமாள், திரு. அ. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
96. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
97. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
98. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
99. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
100. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
101. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
102. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
103. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
104. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
105. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
106. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
107. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
108. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்
109. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
110. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர்
112. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்

113. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
114. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
115. தமிழரசன், முனைவர் செ.கு. - நன்னிலம் (செ.வ.)
116. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்
117. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
118. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
119. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
120. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
121. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
122. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
123. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
124. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
125. துரைமுருகன், திரு. - காட்பாடி
126. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
127. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு
128. நடராசன், திரு. வ.து. - இளையான்குடி
129. நடராஜன், திரு. அ. - குத்தாலம்
130. நடராஜன், திரு. எஸ். - நாட்ராம்பள்ளி
131. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
132. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
133. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
134. நளினி மனோகரன், திருமதி - போளூர்
135. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு



136. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
137. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்
138. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
139. பச்சைமால், திரு. கே.டி. - குளச்சல்
140. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
141. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
142. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
143. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
144. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
145. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
146. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
150. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை
151. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
152. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி
153. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி
154. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்
155. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
156. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்
157. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி

158. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
159. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
160. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
161. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
162. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
163. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
166. பொன்னம்பலம், திரு. டி.பி. - சமயநல்லூர் (செ.வ.)
167. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
168. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
169. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
170. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
171. மஹேஸ்வரி, திருமதி எ.எஸ். - கோயம்புத்தூர் மேற்கு
172. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
173. மணி, திரு. டி. - விளவங்கோடு
174. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
175. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
176. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி
177. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி
178. மில்லர், திரு. அ. - கடலூர்
179. முரளிதரன், திரு. கே.வி. - தளி
180. முருகேசன், திரு. ஆகு. - ஆத்தூர்



181. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
182. மைதிலி, திருமதி தி. - காஞ்சிபுரம்
183. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
184. மோகன், திரு. ப. - சின்னசேலம்
185. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
186. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
187. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
188. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப்பாளையம்
189. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
190. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை
191. ராமசாமி, திரு பி.சி. - மொடக்குறிச்சி
192. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
193. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
194. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி
195. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி
196. ராஜா, திரு. எச். - காரைக்குடி
197. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்
198. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்
199. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்
200. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார் திரு. மா.ப. - பேரூர்
201. ரோகிணி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
202. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு
203. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. - அரவக்குறிச்சி

204. வடிவேல், திரு. ஆர். - வாணியம்பாடி
205. வளர்மதி, திருமதி பா. - ஆலந்தூர்
206. வளர்மதி ஜெபராஜ், திருமதி - மதுரை மேற்கு
207. வள்ளல் பெருமான், டாக்டர் பி. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
208. வாசுதேவன், திரு. பெ. - மதுராந்தகம்
209. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
210. வில்வநாதன், திரு. இரா. - சோளிங்கர்
211. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. - பூங்கா நகர்
212. விஜயகுமார், திரு. கே.எஸ். - கும்மிடிப்பூண்டி
213. விஜயபாஸ்கர், டாக்டர் சி. - புதுக்கோட்டை
214. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. - பனமரத்துப்பட்டி
215. வீரபாண்டியன், திரு. ஜெக. - மயிலாடுதுறை
216. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி
217. வெங்கடாஜலம், திரு. செ. - சேலம்-1
218. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
219. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
220. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
221. வேல் முருகன், திரு. தி. - பண்ருட்டி
222. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்
223. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
224. ஜீவானந்தம், திரு. இரா. - நாகப்பட்டினம்
225. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. - ஆரணி
226. ஜெயக்குமார், திரு. கு. - நாமக்கல் (செ.வ.)



227. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
228. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
229. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
230. ஹக்கீம், திரு. எம்.ஏ. - மதுரை மத்தி
231. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு
232. (வெற்றிடம்) - அந்தியூர் (செ.வ.)
233. (வெற்றிடம்) - வந்தவாசி (செ.வ.)
234. (வெற்றிடம்) - தாராபுரம் (செ.வ.)
235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி - (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

□□□□

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 11, பார்த்திப — திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஜனவரி 24, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்*
*தாழாது உஞற்று பவர்க்கு".*

தமது குடியை உயர்த்துவதற்கான செயல்களைக் காலந்தாழ்த்தாமல், விரைந்து செய்ய முற்படுபவர்கள், அவற்றைச் செய்துமுடிக்கும் விதத்தினை ஆராய்வதற்கு முன்னரே, அந்தச் செயல்கள் நிறைவேறிவிடும்.

### 1. வினாக்கள்–விடைகள்

**உடுக்குறியிடாத வினாக்கள்**
**(பட்டியல் 3)@**

1—

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 42423—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான வாத்தலை-டி-புத்தூர் வரையிலான 0/0-14/4 கி.மீ. சாலையினை நடப்பாண்டில் செப்பனிட அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

---

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த நாளன்றுள்ளவாறு அமைந்தனவாகும்.

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* தற்போதைக்கு இல்லை. இருப்பினும், வருங்காலங்களில் நிதிநிலைக்கேற்ப, இச்சாலைப் பணியை முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் செய்ய தக்கவாறு பரிசீலிக்கப்படும்.

*(ஆ)* இவ்வினா எழவில்லை.

**2—**

## பயிர் ஈட்டுறுதித் திட்டம்

**வினா எண் 60759—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புதுக்கோட்டை மாவட்டத்தில் 2001-2004 ஆம் ஆண்டுகளில் பயிர் ஈட்டுறுதித் திட்டத்தில் (குறிப்பாக நெல், கடலை) பயனடைந்தோர் எத்தனை பேர்?

*(ஆ)* வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

*(இ)* பயனடைந்தோர் இல்லையெனில், காரணம் யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* புதுக்கோட்டை மாவட்டத்தில் 2001-2004 ஆம் ஆண்டுகளில் பயிர் ஈட்டுறுதித் திட்டத்தில் (குறிப்பாக நெல், கடலை) பயனடைந்தோர் விவரம்:

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை — 600 008





| பயனடைந்தோர் எண்ணிக்கை | | |
|---|---|---|
| ஆண்டு | நெல் | கடலை |
| 2001 | 5,156 | 28 |
| 2002 | 1,218 | 24 |
| 2003 | 516 | 59 |
| 2004 | — | 116 |

*(ஆ)* வழங்கப்பட்ட தொகை விவரம்:

வழங்கப்பட்ட தொகை
*(ரூபாய்)*

| ஆண்டு | நெல் (சம்பா) | கடலை |
|---|---|---|
| 2001 | 55,21,510 | 27,209 |
| 2002 | 42,88,484 | 2,53,268 |
| 2003 | 13,42,093 | 2,39,693 |
| 2004 | — | 21,697 |

*(இ)* பயனடைந்தோர் இல்லையென்பதற்கான காரணம்:

இத்திட்டத்தின்கீழ் காப்பீட்டுத் தொகை வழங்குவது, பயிர் விளைச்சல் பரிசோதனையின் (crop cutting equipments) முடிவைப் பொறுத்ததாகும். ஒவ்வொரு பயிர் பருவத்திற்கும், அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளில் அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களின் விளைச்சல் விவரங்கள், புள்ளியியல் துறையினரால் பரிசோதனை செய்யப்பட்டு பயிர்க் காப்பீட்டு நிறுவனத்திற்கு அளிக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் சராசரி விளைச்சல் (average yield) விவரம் கணக்கிடப்படுகிறது. உத்திரவாத மகசூல் (guaranteed yield) அளவினைவிட இது குறைவாக இருப்பின், இழப்பீட்டுத் தொகை கணக்கிடப்பட்டு அளிக்கப்படுகிறது. இதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் இதரப் பயிர் பருவங்களுக்கும், இதரப் பயிர்களுக்கும் இழப்பீட்டுத் தொகை ஏதும் வழங்கப்படவில்லை.

3—

## கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 66179—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுத் துறை மூலம் காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) பதில் எழவில்லை.

4—

## வங்கிக் கடனைத் திருப்பிச் செலுத்துதல்

**வினா எண் 69113—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, அர்பன் கூட்டுறவு வங்கியில் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்கள் எத்தனை பேர்?

(ஆ) வசூலிக்க எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை, அர்பன் கூட்டுறவு வங்கியில் 31-8-2005 ஆம் தேதியின்படி வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களின் எண்ணிக்கை 2,985.



(ஆ) இந்தக் கடன்களை முழுமையாக வசூலிக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வங்கியின் பணியாளர்கள் அனைவருக்கும் குறியீடுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாரமும் பணியாளர்களின் கடன் வசூல் முன்னேற்றம் குறித்து வங்கியின் தனி அலுவலரால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மேலும், சரகத் துணைப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து துறை அலுவலர்களை வால்பாறை அர்பன் கூட்டுறவு வங்கியில் வசூல் பணியில் ஈடுபடுத்தி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு திங்களிலும் சரகத் துணைப் பதிவாளரால் நடத்தப்படும் ஆய்வுக் கூட்டங்களில் கடன் வசூல் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

5—

## கூட்டுறவுச் சங்கத்திலுள்ள உறுப்பினர்கள்

**வினா எண் 75274—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திலுள்ள உறுப்பினர்கள் எத்தனை பேர்?

(ஆ) இச்சங்கம் இலாபத்தில் இயங்கி வருகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் 22-2-1999-ல் பதிவு செய்யப்பட்டு, 19-5-1999 முதல் செயல்படத் துவங்கியுள்ளது. இச்சங்கத்தில் 133 உறுப்பினர்கள் சேர்ந்து பங்குத் தொகையாக ரூ. 43,000/-ஐ செலுத்தியுள்ளனர்.

(ஆ) இச்சங்கம் 2004-2005 தணிக்கையாண்டில் நிகர லாபமாக ரூ. 245/-ம், 31-3-2005-இல் ரூ. 6,251.10 தொகுப்பு நட்டமும் அடைந்து உள்ளது.

6—

## நகைக் கடன்

**வினா எண் 75827—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி நகரக் கூட்டுறவு வங்கியில் 2001-2002, 2002-2003, 2003-2004, 2004-2005 மற்றும் 2005-2006 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட நகைக் கடன் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி நகரக் கூட்டுறவு வங்கியில் 2001-2002, 2002-2003, 2003-2004, 2004-2005 மற்றும் 2005-2006 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட நகைக் கடன் விவரம் பின்வருமாறு:—

| வ.எண் | நகைக் கடன் வழங்கிய ஆண்டு | நகைக்கடன் நபர் எண்ணிக்கை | தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 2001-2002 | 7,911 | 585.52 |
| 2 | 2002-2003 | 7,940 | 570.23 |
| 3 | 2003-2004 | 8,205 | 635.67 |
| 4 | 2004-2005 | 9,565 | 759.49 |
| 5 | 2005-2006 (ஆகஸ்ட் 2005 வரை) | 3,213 | 312.48 |

7—

## பால்வாடி பள்ளியைத் துவங்குதல்

**வினா எண் 63414—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, இராமநாயக்கன்பேட்டை ஊராட்சி, போடப்பள்ளிகொல்லை, பெருமாகவுண்டர் வட்டம்,





குளிக்கொல்லை, குள்ளுகவுண்டர் வட்டம், பொன்னுகவுண்டர் வட்டம் ஆகிய பகுதிகளுக்குட்பட்ட கிராமங்களில் பால்வாடி பள்ளி தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, இராமநாயக்கன்பேட்டை ஊராட்சியில் கீழ்க்குறிப்பிட்டுள்ள மையங்கள் செயல்பட்டு வருகின்றன:

1. இராமநாயக்கன்பேட்டை — I
2. இராமநாயக்கன்பேட்டை — II
3. இராமநாயக்கன்பேட்டை — III

இராமநாயக்கன்பேட்டை-II மையத்தில் போடர்பள்ளி, குள்ளி கொள்ளை கிராமம் ஆகிய துணைக் கிராமங்கள் அடங்கியுள்ளன. இராமநாயக்கன்பேட்டை-III மையத்தின்கீழ், பெருமாள்கவுண்டர் வட்டம், பொன்னுக்வுண்டர் வட்டம், குள்ளுகவுண்டர் வட்டம் துணைக் கிராமங்களாக உள்ளன. இப்பகுதியில் உள்ள மக்கள் அனைவரும் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்து வருகிறார்கள் என்பதாலும், இந்த மையங்களில் புதிய மையங்கள் ஆரம்பிக்க தேவையான மக்கட் தொகை, பயனாளிகள் (300-க்கும் குறைவாக உள்ளதால்) இல்லாததாலும் இக்கிராமங்களில் புதிய மையங்கள் துவங்க இயலவில்லை.

8—

## சுகாதார நிலையம்

**வினா எண் 49568—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், ஏற்காடு மலைப் பகுதியில் வாழும் மலைவாழ் மக்களுக்கு கிராமங்கள்தோறும் சுகாதார நிலையம் அமைத்துத் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2006 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஏற்காடு மலைப் பகுதியில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை. மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப்பகுதியில் 30,000-50,000 மக்கள் தொகைக்கும், மலைப் பகுதியில் 3,000-5,000 மக்கள் தொகைக்கும் முறையே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம்/துணை சுகாதார நிலையம் அமைக்கப்படுகிறது. இதன் அடிப்படையில், ஏற்காடு ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 32,500 (1991 கணக்கெடுப்பு)-க்கு ஏற்ப இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களும், பதினொன்று துணை சுகாதார நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் ஏற்காடு மலைவாழ் மக்களுக்குத் தேவையான அடிப்படை மருத்துவ வசதிகள் கிடைப்பதால் ஏற்காடு மலைப்பகுதியில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் சுகாதார நிலையம் அமைக்கும் அவசியம் இல்லை.

**9—**

## ஆரம்ப சுகாதார மையம்

**வினா எண் 59043—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2004-2005 ஆம் நிதியாண்டில் சேலம் மாவட்டத்தில் புதிதாக ஆரம்ப சுகாதார மையங்கள் எத்தனை திறக்க அரசு எண்ணியுள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது தமிழ்நாட்டின் மொத்த கிராம மக்கள் தொகைக்கு ஏற்ப போதுமான அளவில் 1,415 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருவதால், சேலம் மாவட்டத்தில் புதிய



2006 ஜனவரி 24]

ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**10—**

## சுகாதார நிலையங்களில் மருந்துகளை வழங்குதல்

**வினா எண் 60803—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் சிறு குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து இலவசமாக வழங்கப்படுவதுபோல், முத்தடுப்பு நோய் ஊக்குவிப்பு மருந்துகளும், இருதய நோய்த் தடுப்பு மற்றும் ரணஜன்னி மருந்துகளும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் போலியோ சொட்டு மருந்து இலவசமாக வழங்கப்படுவதுபோல், தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், ரணஜன்னி போன்ற மூன்று நோய்களைத் தடுக்க டி.பி.டி. என்ற முத்தடுப்பூசி மற்றும் நுரையீரலை பாதிக்கச் செய்யும் குழந்தைப் பருவ காச நோயைத் தடுக்க பி.சி.ஜி., மற்றும் தட்டம்மை வராமல் தடுக்க தட்டம்மை தடுப்பூசி முதலான தடுப்பு மருந்துகள், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகள் மூலம் இலவசமாக வழங்கப்படுகின்றன. குழந்தைகளைப் பாதிக்கும் ரூபெல்லா என்ற வைரஸ்நோய் மணல்வாரி அம்மை போன்ற நோயாகும். பெண்கள் கருவுற்றிருக்கும் காலத்தில் ரூபெல்லா வைரஸ் அவர்களைத் தாக்கும்போது, அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை பிறவி ஊனத்துடன் பிறக்க வாய்ப்புள்ளது. குழந்தைகளுக்கும் வளர் இளம் பெண்களுக்கும் ரூபெல்லா தடுப்பூசி போடுவதன் மூலம் இதனைத் தவிர்க்கலாம். இந்தத் தடுப்பூசி தேசிய அளவில் நமது நாட்டில் நடைமுறையில் இல்லை. தமிழ்நாட்டில் தேனி, கடலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை மற்றும் வேலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் தலா ஒரு ஒன்றியத்தில் உள்ள அனைத்து 10 முதல் 15 வயதிற்குட்பட்ட பெண்கள் மற்றும் 2 முதல் 5 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் ஆகியோருக்கு பரீட்சார்த்த முறையில் ரூபெல்லா மற்றும் மீஸில்ஸ் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

தற்போது இத்திட்டத்தைப் பிற மாவட்டங்களுக்கும் விரிவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இருதயம் சம்பந்தமான நோய்களுக்குத் தடுப்பூசிகள் எதுவும் இல்லை.

**11—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 60905—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஒன்றியம், செல்வனேந்தல் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில். உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

செல்வனேந்தல் கிராமத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் கோட்டைப்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. மத்திய அரசின் இலக்கின்படி, இரு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கிடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கி.மீ. மேல் இருத்தல் வேண்டும். இந்த நிபந்தனை இந்நேர்வில் நிறைவு செய்யப்படவில்லை. மேலும், தமிழ்நாட்டின் மக்கள் தொகைக்கு ஏற்ப போதுமான அளவில் 1,415 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. எனவே, செல்வனேந்தல் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**12—**

## தொழில் செய்ய கடனுதவி

**வினா எண் 26733—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பேரூராட்சி, கிருஷ்ணாபுரம், செக்குமேடு ஆகிய பகுதிகளில் கூடை பின்னும் தொழில் செய்பவர்களுக்கு மானியத்துடன் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திடம் எந்தவொரு தொழில் செய்வதற்கும் நேரடியாக நிதியுதவி வழங்கும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை. இருப்பினும், மத்திய அரசின் கதர் கிராம ஆணையம் மூலமாக விளிம்புத் தொகைத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன் மூலம் ரூ. 25.00 இலட்சம் வரை உள்ள திட்டங்களுக்கு ரூ. 10.00 இலட்சம் வரை 25 சதவீதமும், மீதமுள்ள தொகைக்கு 10 சதவீதமும் விளிம்புத் தொகை மானியமாக வழங்கப்படும்.

2. தாழ்த்தப்பட்டோர் / மலை வாழ்வோர் / ஏனைய பிற்படுத்தப்பட்டோர் / மகளிர் / உடல் ஊனமுற்றோர் / முன்னாள் ராணுவத்தினர்/ சிறுபான்மையினர் போன்றவர்களுக்கும், மலை எல்லைப்புறம், பழங்குடிப் பகுதிகளுக்கு ரூ. 10.00 இலட்சம் வரையிலான திட்ட மதிப்பில் 30 சதவீதமும், அதற்கு மேல் ரூ. 25.00 இலட்சம் வரையில் மீதியுள்ளவைக்கு 10 சதவீதம் வரையும் விளிம்புத் தொகை மானியமாக வழங்கப்படும்.

3. விளிம்புத் தொகை திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பேரூராட்சி, கிருஷ்ணாபுரம், செக்குமேடு ஆகிய பகுதிகளில் உள்ள கைவினைஞர்கள் கூடை பின்னும் தொழில் செய்ய முன்வருவார்களாயின், அருகில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளை அணுகி திட்ட அறிக்கையினை அளித்து, கடனுதவியுடன் விளிம்புத் தொகை மானியமும் பெறலாம்.

**13—**

## கோரைப்பாய்த் தொழிற்சாலை

**வினா எண் 66239—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறையில், சேத்துமடையில் கோரைப்பாய்த் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறை, சேத்துமடையில் கோரைப்பாய் தொழிற்சாலை ஏற்படுத்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2. கோவை மாவட்டம், ஆனைமலை வட்டாரம், சோமந்துரைசித்தூர் பகுதியில் ஏற்கெனவே கோரைப்பாய் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதே பகுதியில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுவிற்கு வங்கிக் கடன் வழங்கி ரூ.95,000/- மதிப்பிலான இயந்திரம் நிறுவப்பட்டு, மகளிர் சுய உதவிக் குழு கோரைப்பாய் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. கோரைப்பாய் தயாரிக்கத் தேவையான கோரைப்புல் அதே பகுதியில் கிடைக்காமல் வேறு இடங்களில் இருந்து கொண்டு வந்து கோரைப்பாய் தயாரிக்கப்படுகிறது.

3. சிறு தொழில் நிறுவனங்கள் தொடங்க தற்பொழுது தனியார் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் தாராளமாக கடன் வழங்கப்படுகிறது. எனவே, தனியார் யாராவது சேத்துமடைப் பகுதியில் கோரைப்பாய் தயாரிக்க முன்வந்தால் அவர்களுக்குத் தேவையான அனைத்து ஆலோசனைகளையும் வழங்கி, வங்கிகள் மூலம் தேவையான கடன் வழங்க, நடவடிக்கைகளை மாவட்டத் தொழில் மையம் மேற்கொள்ளும்.

4. மேலும் பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் அப்பகுதியில் உள்ள படித்து வேலை இல்லாத மகளிர் மற்றும் இளைஞர், தனியாகவோ அல்லது கூட்டாகவோ இந்தத் தொழிலை மேற்கொண்டு செய்யலாம். இவ்விதம் விருப்பம் உள்ள படித்து வேலை இல்லாதவர்கள் மாவட்டத் தொழில் மையத்தை அணுகினால் இத்திட்டத்தின்கீழ் கோரைப்பாய் தயாரிக்க அவர்களுடைய கடன் விண்ணப்பங்கள் வங்கிக்குப் பரிந்துரைக்கப்பட்டு கடன் பெற்று தொழில் துவங்க ஆவன செய்யப்படும்.

**14—**

## தொழில் நடத்த கடனுதவி

**வினா எண் 71548—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் பகுதி மக்கள் கயிறு திரித்தல் மற்றும் கூடை பின்னுதல் போன்ற தொழில்கள் நடத்த அரசு கடனுதவி வழங்க ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திடம் தற்போது எந்தவொரு தொழில் செய்வதற்கும் நேரடியாக நிதியுதவி வழங்கும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை. இருப்பினும், கிராமப் பகுதி மக்களின் நன்மைக்காக, இந்திய அரசின் விவசாயம் மற்றும் கிராமத் தொழில் அமைச்சகம், கதர் ஆணையம் மூலமாக விளிம்புத் தொகைத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், தனி நபர்/ நிறுவனங்களுக்கு உயர்ந்தபட்சம் ரூ. 25.00 இலட்சம் வரை கடன் வழங்கப்பட்டு வருகிறது. இதில் ரூ. 10.00 இலட்சம் வரை 25 சதவீதமும், மீதமுள்ள தொகைக்கு 10 சதவீதமும் விளிம்புத் தொகை மானியமாக வழங்கப்படும்.

(2) தாழ்த்தப்பட்டோர் / மலை வாழ்வோர் / ஏனைய பிற்படுத்தப்பட்டோர் / மகளிர் / உடல் ஊனமுற்றோர் / முன்னாள் இராணுவத்தினர் / சிறுபான்மையினர் போன்றவர்களுக்கு மலை எல்லைப்புறம் பழங்குடிப் பகுதிகளுக்கு, ரூ. 10.00 இலட்சம் வரையிலான திட்ட மதிப்பில் 30 சதவீதமும், அதற்கு மேல் ரூ. 25.00 இலட்சம் வரையில் மீதமுள்ளவைக்கு 10 சதவீதம் வரையும் விளிம்புத் தொகை மானியமாக வழங்கப்படும்.

(3) மேற்காணும் விளிம்புத் தொகைத் திட்டத்தின்கீழ், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் பகுதி மக்கள் கயிறு திரித்தல் மற்றும் கூடை பின்னுதல் போன்ற தொழில்கள் நடத்த முன்வருவார்களாயின் அருகில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளை அணுகி தொழிலுக்கான திட்ட அறிக்கையினை அளித்து கடன் உதவியுடன் அதற்கான மானியமும் பெறலாம்.

**15—**

## முட்டைப் பவுடர் தயாரிக்கும் ஆலை

**வினா எண் 71828—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 24

(அ) கள்ளக்குறிச்சியில் முட்டைப் பவுடர் தயாரிக்கும் கூட்டுறவு ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை, முட்டை உற்பத்தி அதிக அளவில் இல்லை. எனவே, கள்ளக்குறிச்சியில் முட்டைப் பவுடர் தயாரிக்கும் கூட்டுறவுத் தொழிற்சாலை அமைக்க சாத்தியம் இல்லை.

16—

## தேனீ வளர்க்கக் கடனுதவி

**வினா எண் 74834—திரு. ப. அரசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஏம்பல், அழியாநிலை, சிறுநாட்டான்வயல், புதுப்பட்டி மற்றும் அரிமளம் முதலிய பகுதிகளில் உள்ள மக்களுக்கு தேனீ வளர்க்க மானியத்துடன் கடன் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, ஏம்பல், அழியாநிலை, சிறுநாட்டான்வயல், புதுப்பட்டி மற்றும் அரிமளம் முதலிய பகுதிகளில் உள்ள மக்களுக்கு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் தேனீ வளர்க்க மானியத்துடன் கடன் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் மூலம் கிராமிய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் விளிம்புத் தொகை மானியம் வழங்கும் திட்டத்தின்படி, மக்கள் தொகை 20,000-க்குள் உள்ள கிராமப் பகுதிகளில் உள்ள பயனாளிகள் வங்கிகளில் தங்களது திட்டங்களுக்குரிய நூறு விழுக்காடு கடனைப் பெறுவார்களேயானால், அவர்களால் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய 100 விழுக்காடு கடனில் 25 முதல் 30 விழுக்காடு வரை விளிம்புத் தொகை மானியம் வாரியத்தின் மூலம் அளிக்கப்பட்டு வருகிறது.



2006 ஜனவரி 24]

(2) அறந்தாங்கி தொகுதி, ஏம்பல், அழியாநிலை, சிறுநாட்டான்வயல், புதுப்பட்டி மற்றும் அரிமளம் முதலிய பகுதி மக்கள் தேனீ வளர்க்க உரிய முறையில், கதர் வாரியத்தினை அணுகினால் மேற்காணும் விளிம்புத் தொகைத் திட்டத்தின்கீழ் 25 முதல் 30 விழுக்காடு வரை மானியத்துடன் கூடிய கடன் பெற வாய்ப்புள்ளது.

17—

## மெழுகுவர்த்தி உற்பத்தி

**வினா எண் 75092—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்வராயன்மலை ஊராட்சி ஒன்றியத்தில் மெழுகுவர்த்தி உற்பத்தியை பெண்கள் குடிசைத் தொழிலாக நடத்த அரசு உதவ முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

கதர் கிராமத் தொழில் ஆணையம் விளிம்புத் தொகைத் திட்டத்தின் கீழ் தொழில்கள் முனைவோருக்கு கடனுதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கடனுதவி பெற விரும்பினால் தகுந்த திட்ட அறிக்கையுடன் சம்பந்தப்பட்ட கதர் கிராமத் தொழில் வாரிய உதவி இயக்குநர்களை அணுகினால் அருகில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடனுதவி பெற்றுத்தர தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் விளிம்புத் தொகைத் திட்டத்தின்கீழ் கடனுதவி பெறும் கைவினைஞர்களுக்கு அவர்கள் திரும்பச் செலுத்தும் தொகையில் 25 சதவீதம் வரை மானியமும் வழங்கப்படும். கல்வராயன்மலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மகளிர் "மகளிர் குழுக்களை" அமைத்து மெழுகுவர்த்தி உற்பத்தித் தொழிலைச் செய்ய முன்வருவார்களேயானால், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அவர்கள் இத்தொழிலைச் செய்ய அரசு அனைத்து உதவிகளையும் செய்யும்.

18—

## தொழிற்பேட்டையைத் துவங்குதல்

**வினா எண் 75395—திரு ப. அரசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 24

அறந்தாங்கி அருகில், ஒத்தக்கடையில் தொழிற்பேட்டை தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகில், ஒத்தக்கடையில் தொழிற்பேட்டை அமைக்கும் வாய்ப்புகள் இல்லை.

ஏற்கெனவே புதுக்கோட்டை மாவட்டத்தில் சிட்கோ தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு, தொழிற்கூடங்களும் தொழிற் மனைகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. புதுக்கோட்டை (சிப்காட்) தொழிற்பேட்டையில், சிட்கோவினால் மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் காலியாக உள்ளன. இது குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| வரிசை எண் | தொழிற் பேட்டை பெயர் | மொத்த பரப்பளவு ஏக்கரில் | தொழிற்கூடங்கள் | | | மனைகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கட்டப் பட்டவை | ஒதுக்கீடு செய்யப் பட்டவை | காலியாக உள்ளவை | மேம் படுத்தப் பட்டவை | ஒதுக்கீடு செய்யப் பட்டவை | காலியாக உள்ளவை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. | புதுக் கோட்டை (சிட்கோ) | 23.180 | 38 | 38 | 0 | 5 | 5 | 0 |
| 2. | புதுக் கோட்டை (சிப்காட்) | 5.450 | 10 | 10 | 0 | 15 | — | 15 |
| 3. | மாத்தூர் | 21.450 | 17 | 17 | 0 | 24 | 24 | 0 |
| **குறுந்தொழிற்பேட்டை** | | | | | | | | |
| 1. | புதுக் கோட்டை (சிட்கோ) | — | 15 | 15 | 0 | — | — | — |
| 2. | திருமயம் | 0.200 | 5 | 5 | 0 | — | — | — |
| 3. | ஆலங்குடி | 0.230 | 10 | 10 | 0 | — | — | — |
| 4. | கந்தர்வக் கோட்டை | 0.250 | 10 | 10 | 0 | — | — | — |



2006 ஜனவரி 24]

ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் மேற்கண்ட தொழிற்பேட்டையிலுள்ள காலியாக உள்ள மேம்படுத்தப்பட்ட தொழில்மனைகளுக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் அறந்தாங்கி அருகில் ஒத்தக்கடையில் குறைந்தபட்சம் 10-க்கும் மேற்பட்ட ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் தகுந்த தொழில் திட்டத்துடன் தொழில் தொடங்க முன்வருவாரேயாயின், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் கலந்தாலோசித்து உரிய தரிசு நிலங்கள் கிடைக்கப் பெறுமேயாயின், சிட்கோ நிறுவனம் அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைக்க தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

**19—**

## சிட்கோ மூலம் தொழிற்பேட்டை

**வினா எண் 75435—திரு. ப. அரசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர், கந்தர்வக்கோட்டை, கறம்பக்குடி, விராலிமலை, ஆலங்குடி, திருமயம், பொன்னமராவதி ஆகிய ஒன்றியங்களில் "சிட்கோ" மூலம் தொழிற்பேட்டை அமைத்திடும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை, ஆலங்குடி, திருமயம் ஆகிய ஒன்றியங்களில் சிட்கோ ஏற்கெனவே குறுந்தொழிற்கூடங்களை அமைத்துள்ளது. மற்ற ஒன்றியங்களான இலுப்பூர், கரம்பக்குடி, விராலிமலை, பொன்னமராவதி ஆகிய இடங்களில் தொழிற்பேட்டை அமைக்கும் வாய்ப்புகள் இல்லை.

ஏற்கெனவே புதுக்கோட்டை மாவட்டத்தில் சிட்கோ தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு, தொழிற்கூடங்களும் தொழிற் மனைகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. புதுக்கோட்டை (சிப்காட்) தொழிற்பேட்டையில், சிட்கோவினால் மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் காலியாக உள்ளன. இது குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

[2006 ஜனவரி 24

| வரிசை எண் | தொழிற் பேட்டை பெயர் | மொத்த பரப்பளவு ஏக்கரில் | தொழிற்கூடங்கள் | | | மனைகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கட்டப் பட்டவை | ஒதுக்கீடு செய்யப் பட்டவை | காலியாக உள்ளவை. | மேம் படுத்தப் பட்டவை | ஒதுக்கீடு செய்யப் பட்டவை | காலியாக உள்ளவை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. | புதுக் கோட்டை (சிட்கோ) | 23.180 | 38 | 38 | 0 | 5 | 5 | 0 |
| 2. | புதுக் கோட்டை (சிப்காட்) | 5.450 | 10 | 10 | 0 | 15 | — | 15 |
| 3. | மாத்தூர் | 21.450 | 17 | 17 | 0 | 24 | 24 | 0 |
| | **குறுந்தொழிற்பேட்டை** | | | | | | | |
| 1. | புதுக் கோட்டை (சிட்கோ) | — | 15 | 15 | 0 | — | — | — |
| 2. | திருமயம் | 0.200 | 5 | 5 | 0 | — | — | — |
| 3. | ஆலங்குடி | 0.230 | 10 | 10 | 0 | — | — | — |
| 4. | கந்தர்வக் கோட்டை | 0.250 | 10 | 10 | 0 | — | — | — |

ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் மேற்கண்ட தொழிற்பேட்டையிலுள்ள காலியாக உள்ள மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளுக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் இலுப்பூர், கரம்பக்குடி, விராலிமலை, பொன்னமராவதி ஆகிய இடங்களில் குறைந்தபட்சம் 10-க்கும் மேற்பட்ட ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் தகுந்த தொழில் திட்டத்துடன் தொழில் தொடங்க முன்வருவாரேயாயின், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் கலந்தாலோசித்து உரிய தரிசு நிலங்கள் கிடைக்கப்பெறுமேயாயின், சிட்கோ நிறுவனம் அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைக்க தகுந்த நடவடிக்கை எடுக்கும்.



2006 ஜனவரி 24]

**20—**

## சிட்கோமூலம் தொழிற்பேட்டை

**வினா எண் 75442—திரு ப. அரசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல், குன்றாண்டார்கோவில், அரிமளம், கீரனூர், ஆவுடையார்கோவில், மணமேல்குடி ஆகிய ஒன்றியங்களில் சிட்கோமூலம் தொழிற்பேட்டை அமைத்திடும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல், குன்றாண்டார்கோவில், அரிமளம், கீரனூர், ஆவுடையார்கோவில், மணமேல்குடி ஆகிய ஒன்றியங்களில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் வாய்ப்புகள் இல்லை.

ஏற்கெனவே புதுக்கோட்டை மாவட்டத்தில் சிட்கோ தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு, தொழிற்கூடங்களும் தொழில் மனைகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. புதுக்கோட்டை (சிப்காட்) தொழிற்பேட்டையில், சிட்கோவினால் மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் காலியாக உள்ளன. இதுகுறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| வரிசை எண் | தொழிற் பேட்டை பெயர் | மொத்த பரப்பளவு ஏக்கரில் | தொழிற்கூடங்கள் | | | மனைகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கட்டப் பட்டவை | ஒதுக்கீடு செய்யப் பட்டவை | காலியாக உள்ளவை | மேம் படுத்தப் பட்டவை | ஒதுக்கீடு செய்யப் பட்டவை | காலியாக உள்ளவை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. | புதுக் கோட்டை (சிட்கோ) | 23.180 | 38 | 38 | 0 | 5 | 5 | 0 |
| 2. | புதுக் கோட்டை (சிப்காட்) | 5.450 | 10 | 10 | 0 | 15 | — | 15 |

[2006 ஜனவரி 24

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3. | மாத்தூர் | 21.450 | 17 | 17 | 0 | 24 | 24 | 0 |
| **குறுந்தொழிற்பேட்டை** | | | | | | | | |
| 1. | புதுக் கோட்டை (சிட்கோ) | — | 15 | 15 | 0 | — | — | — |
| 2. | திருமயம் | 0.200 | 5 | 5 | 0 | — | — | — |
| 3. | ஆலங்குடி | 0.230 | 10 | 10 | 0 | — | — | — |
| 4. | கந்தர்வக் கோட்டை | 0.250 | 10 | 10 | 0 | — | — | — |

ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் மேற்கண்ட தொழிற்பேட்டையில் காலியாக உள்ள மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளுக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் அம்மாவட்டத்தில் அன்னவாசல், குன்றாண்டார்கோவில், அரிமளம், கிரனூர், ஆவுடையார்கோவில், மணமேல்குடி ஆகிய ஒன்றியங்களில் குறைந்த பட்சம் 10-க்கும் மேற்பட்ட ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் தகுந்த தொழில் திட்டத்துடன் தொழில் தொடங்க முன்வருவாரேயாயின், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் கலந்தாலோசித்து உரிய தரிசு நிலங்கள் கிடைக்கப்பெறுமேயாயின், சிட்கோ நிறுவனம் அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைக்க தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

**21—**

## சிட்கோமூலம் தொழிற்பேட்டை

**வினா எண் 75468—திரு ப. அரசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி நகரில் சிட்கோமூலம் தொழிற்பேட்டை அமைத்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி நகரில் சிட்கோமூலம் தொழிற்பேட்டை அமைக்கும் வாய்ப்புகள் இல்லை.



2006 ஜனவரி 24]

ஏற்கெனவே புதுக்கோட்டை மாவட்டத்தில் சிட்கோ தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு தொழிற்கூடங்களும் தொழிற் மனைகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. புதுக்கோட்டையில் (சிப்காட்) தொழிற்பேட்டையில், சிட்கோவினால் மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் காலியாக உள்ளன. இதுகுறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| வ. எண் | தொழிற் பேட்டை பெயர் | மொத்த பரப்பளவு ஏக்கரில் | தொழிற்கூடங்கள் | | | மனைகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கட்டப் பட்டவை | ஒதுக்கீடு செய்யப் பட்டவை | காலியாக உள்ளவை | மேம் படுத்தப் பட்டவை | ஒதுக்கீடு செய்யப் பட்டவை | காலியாக உள்ளவை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. | புதுக் கோட்டை (சிட்கோ) | 23.180 | 38 | 38 | 0 | 5 | 5 | 0 |
| 2. | புதுக் கோட்டை (சிப்காட்) | 5.450 | 10 | 10 | 0 | 15 | — | 15 |
| 3. | மாத்தூர் | 21.450 | 17 | 17 | 0 | 24 | 24 | 0 |
| **குறுந்தொழிற்பேட்டை** | | | | | | | | |
| 1. | புதுக் கோட்டை (சிட்கோ) | — | 15 | 15 | 0 | — | — | — |
| 2. | திருமயம் | 0.200 | 5 | 5 | 0 | — | — | — |
| 3. | ஆலங்குடி | 0.230 | 10 | 10 | 0 | — | — | — |
| 4. | கந்தர்வக் கோட்டை | 0.250 | 10 | 10 | 0 | — | — | — |

ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் மேற்கண்ட தொழிற்பேட்டையில் காலியாக உள்ள மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளுக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் அறந்தாங்கி நகரில், குறைந்த பட்சம் 10-க்கும் மேற்பட்ட ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள்

[2006 ஜனவரி 24

தகுந்த தொழில் திட்டத்துடன் தொழில் தொடங்க முன்வருவாரேயாயின், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் கலந்தாலோசித்து உரிய தரிசு நிலங்கள் கிடைக்கப்பெறுமேயாயின், சிட்கோ நிறுவனம் அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைக்க தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

**22—**

## சுயதொழில் தொடங்கக் கடன்

**வினா எண் 75487—திரு. ப. அரசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதியில் பாரதப் பிரதமர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் 2001-02, 2002-03, 2003-04 ஆம் ஆண்டுகளில் சுய தொழில் தொடங்க விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதில் எத்தனை பேர் தேர்வு செய்யப்பட்டு கடன் வழங்கப்பட்டது?

(இ) வழங்கிய கடன் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) அறந்தாங்கி தொகுதியில் பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம்மூலம் 2001-02, 2002-03, 2003-04 ஆம் ஆண்டுகளில் சுய தொழில் துவங்க விண்ணப்பித்தவர்கள், கடன் பெற்றவர்கள் மற்றும் வழங்கப்பட்ட கடன் தொகை விவரம் கீழ்க்கண்டவாறு:

| வ.எண் | வருடம் | விண்ணப்பித்தவர்கள் | கடன் பெற்றவர்கள் | கடன் பெற்ற தொகை |
|---|---|---|---|---|
| 1. | 2001-02 | 178 | 61 | ரூ. 25.39 இலட்சம் |
| 2. | 2002-03 | 185 | 75 | ரூ. 12.71 இலட்சம் |
| 3. | 2003-04 | 183 | 85 | ரூ. 17.70 இலட்சம் |



2006 ஜனவரி 24]

**23—**

## மரவள்ளிக்கிழங்கு மாவு தயாரிக்கும் தொழிற்சாலை

**வினா எண் 75675—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் அங்கலிக்குறிச்சி மெயின்ரோட்டில் மரவள்ளிக்கிழங்கு மாவு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, அங்கலிக்குறிச்சி பகுதியில் மரவள்ளிக்கிழங்கு தேவையான அளவு பயிரிடப்படவில்லை. எனவே அங்கலிக்குறிச்சி மெயின் ரோட்டில் மரவள்ளிக்கிழங்கு மாவு தயாரிக்கும் தொழிற்சாலையினை நிறுவ சாத்தியக்கூறுகள் இல்லை.

2. எனினும் வால்பாறை தொகுதியின் அங்கலிக்குறிச்சி மெயின் ரோடு பகுதியில், மரவள்ளிக்கிழங்கு மாவு தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க தனியார் எவரேனும் முன்வரும்பட்சத்தில், அவர்களுக்கு அனைத்து அறிவுரைகளையும் வழங்கி வங்கிக் கடன் பெற பரிந்துரை செய்து தொழிற்சாலை துவங்க அனைத்து உதவிகளையும் கோயம்புத்தூர் மாவட்டத் தொழில் மையம் செய்துதரும்.

3. மேலும் கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆனைமலை வட்டாரத்தில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தென்னை நார் மஞ்சி மற்றும் கயிறு பொருட்கள் தயாரிப்புக்காக நான்கு திட்டங்களுக்கு மாநில அளவிலான தேர்வுக் குழுவினால் ஒப்புதல் வழங்கப்பட்டது. ஏற்கெனவே ஒரு நிறுவனம் 21-1-2004 தேதி முதல் துவங்கப்பட்டு, கயிறு மற்றும் கயிறு பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டு இயங்கி வருகிறது. ஒரு நிறுவனம் தொழிற்சாலை கட்டி முடித்து இயந்திரங்கள் நிறுவி

[2006 ஜனவரி 24

மின் இணைப்பு மற்றும் உள்ளாட்சி உரிமம் பெற்று தொழில் துவங்க ஆயத்த நிலையில் உள்ளது. மூன்றாவது திட்டத்திற்கு வங்கிக் கடன் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அந்தத் தொழில் அலகு தொழிற்சாலைக் கட்டடம் கட்டி இயந்திரங்கள் நிறுவி இன்னும் இரண்டு மாதங்களில் உற்பத்தியைத் துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 4-வது திட்டத்திற்கு மாநில தேர்வுக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது. வங்கிக் கடன் பெற்று 3 மாதங்களில் அனைத்துப் பணிகளையும் முடித்து அந்தத் தொழில் அலகு உற்பத்தியைத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**24—**

## ஜவ்வரிசி தொழிற்சாலை

**வினா எண் 75676—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சட்டமன்றத் தொகுதி ஆழியார் நகரில் ஜவ்வரிசி தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஆழியார் நகரில் ஜவ்வரிசி தயாரிக்கும் தொழிலுக்குத் தேவைப்படும் மூலப்பொருளான மரவள்ளிக்கிழங்கு இப்பகுதியில் தேவையான அளவு கிடைப்பதில்லை. எனவே வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஆழியார் நகரில் ஜவ்வரிசி தயாரிக்கும் தொழில் துவங்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும் வால்பாறை தொகுதியில் உள்ள ஆழியார் நகரில் மற்ற இடங்களிலிருந்து மூலப்பொருட்கள் கொண்டு வந்து ஜவ்வரிசி தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ தனியார் முன்வரும் பட்சத்தில், அவர்களுக்குத் தொழில் துவங்க அனைத்து ஆலோசனைகளும் உதவிகளும் கோயம்புத்தூர் மாவட்ட தொழில் மையம்மூலம் செய்து தரப்படும்.



2006 ஜனவரி 24]

**25—**

## மரச்சாமான்கள் தயாரிக்கும் தொழிற்சாலை

**வினா எண் 75776—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சேத்துமடை, வால்பாறை மற்றும் சின்கோனா பகுதிகளில் மரச்சாமான்கள் தயாரிக்கும் சிறிய தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்ட வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் சேத்துமடை, வால்பாறை மற்றும் சின்கோனா பகுதிகளில் மரச்சாமான்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க பிரேரணை எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

2. மேலும் வால்பாறை பகுதி தனியார் நிறுவனம் மற்றும் வனத் துறையைச் சார்ந்த இடமாகும். அணைக்கட்டுப் பகுதிகளைச் சார்ந்ததாகவும் உள்ளது. இப்பகுதியில் வசித்துவரும் தொழிலாளர்கள் பெரும்பாலும் தேயிலைத் தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வருகின்றனர். நடைமுறையில் உள்ள மத்திய அரசு ஆணைப்படி, வன எல்லைக்கு அருகில் மரம் அறுக்கும் மின் தொழிற்சாலை முன் அனுமதியின்றி துவங்க இயலாது. எனவே வால்பாறை மற்றும் சின்கோனா பகுதியில் மரச் சாமான்கள் தயாரிக்கும் சிறு தொழில் நிறுவனங்களை சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு அமைப்பதற்கு படித்த இளைஞர்கள் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் முன்வந்தால், கோயம்புத்தூர் மாவட்டத் தொழில் மையம் பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்மூலம் வங்கிக்கு கடன் வழங்க பரிந்துரை செய்ய ஆவன செய்யும்.

[2006 ஜனவரி 24

**26—**

## சிட்கோ தொழிற்பேட்டை அமைத்தல்

**வினா எண் 82029—திரு. ப. அரசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, அத்தாணி, மணமேல்குடி, கோட்டைப்பட்டினம், மீமிசல், கரூர், ஆவுடையார்கோவில், நாகுடி, வேம்பங்குடி, ஆவணத்தாங்கோட்டை ஆகிய இடங்களில் சிட்கோ தொழிற்பேட்டை உருவாக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி. அத்தாணி, மணமேல்குடி, கோட்டைப்பட்டினம், மீமிசல், கரூர், ஆவுடையார்கோவில், நாகுடி, வேம்பங்குடி, ஆவணத்தாங்கோட்டை ஆகிய இடங்களில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் வாய்ப்புகள் இல்லை.

ஏற்கெனவே புதுக்கோட்டை மாவட்டத்தில் சிட்கோ தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு தொழிற்கூடங்களும் தொழிற் மனைகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. புதுக்கோட்டை (சிப்காட்) தொழிற்பேட்டையில், சிட்கோவினால் மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் காலியாக உள்ளன. இதுகுறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ. எண். | தொழிற் பேட்டை பெயர் | மொத்த பரப்பளவு ஏக்கரில் | தொழிற்கூடங்கள் | | | மனைகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கட்டப் பட்டவை | ஒதுக்கீடு செய்யப் பட்டவை | காலியாக உள்ளவை | மேம் படுத்தப் பட்டவை | ஒதுக்கீடு செய்யப் பட்டவை | காலியாக உள்ளவை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 | புதுக் கோட்டை (சிட்கோ) | 23.180 | 38 | 38 | 0 | 5 | 5 | 0 |



2006 ஜனவரி 24]

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | புதுக் கோட்டை (சிப்காட்) | 5.450 | 10 | 10 | 0 | 15 | .. | 15 |
| 3 | மாத்தூர் | 21.450 | 17 | 17 | 0 | 24 | 24 | 0 |
| **குறுந்தொழிற்பேட்டை** | | | | | | | | |
| 1. | புதுக் கோட்டை (சிட்கோ) | .. | 15 | 15 | 0 | .. | .. | .. |
| 2 | திருமயம் | 0.200 | 5 | 5 | 0 | .. | .. | .. |
| 3. | ஆலங்குடி | 0.230 | 10 | 10 | 0 | .. | .. | .. |
| 4 | கந்தர்வக் கோட்டை | 0.250 | 10 | 10 | 0 | .. | .. | .. |

ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் மேற்கண்ட தொழிற்பேட்டையிலுள்ள காலியாக உள்ள மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளுக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் அம்மாவட்டத்தில் அத்தாணி, மணமேல்குடி, கோட்டைப்பட்டினம், மீமிசல், கரூர், ஆவுடையார்கோவில், நாகுடி, வேம்பங்குடி, ஆவணத்தாங்கோட்டை ஆகிய இடங்களில் குறைந்தபட்சம் 10-க்கும் மேற்பட்ட ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் தகுந்த தொழில் திட்டத்துடன் தொழில் தொடங்க முன்வருவாரேயாயின், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் கலந்தாலோசித்து உரிய தரிசு நிலங்கள் கிடைக்கப் பெறுமேயாயின், சிட்கோ நிறுவனம் அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைக்க தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

**27—**

## மீன் எண்ணெய்த் தொழிற்சாலை

**வினா எண் 83195—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் பரம்பிக்குளம் அணைக்கு அருகில் மீன் எண்ணெய் தயாரிக்கும் சிறிய தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

[2006 ஜனவரி 24

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் பரம்பிக்குளம் அணைக்கு அருகில் மீன் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

2. கடல்மீன் வகைகளான வேல் (Whale) ஷார்க் (Shark) காட் (Cod Fish) ஆகியவற்றிலிருந்துதான் மீன் எண்ணெய் தயாரிக்க இயலும். இத்தகைய தொழிற்சாலைகளை கடலோரப் பகுதிகளில் நிறுவுவதுதான் தொழில்நுட்பரீதியாகவும் பொருளாதாரரீதியாகவும் கட்டுப்படியானதாக இருக்கும்.

3. மேலும் அணைக்கட்டுகள், ஆறு, குளம், குட்டைகள் மற்றும் நீர் நிலையிலிருந்து கிடைக்கும் மீன் வகைகள் உண்ணத் தகுந்தவையே தவிர, தொழில்நுட்பரீதியாக மீன் எண்ணெய் தயாரிக்க உகந்தவை அல்ல. எனவே வால்பாறை தொகுதியில் பரம்பிக்குளம் அணைக்கு அருகில் மீன் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

4. புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு, நன்னீர் இறால் வளர்ப்பு, களி நண்டு வளர்ப்பு, சிங்கி இறால் வளர்ப்பு, முத்துச்சிப்பி வளர்ப்பு ஆகிய தொழில்கள் மானியம் பெறத் தகுதியுடைய தொழில்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இத்தகைய தொழிற்சாலைகள் தொடங்க தனியார் எவரேனும் முன் வந்தால், அவர்களுக்குத் தக்க ஆலோசனைகள் வழங்கி புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தொழில் துவங்க கோயம்புத்தூர் மாவட்டத் தொழில் மையத்தின்மூலமாக அனைத்து உதவிகளும் அளிக்கப்படும்.

**28—**

## தாட்கோ அலுவலகத்திற்கு இட ஒதுக்கீடு

**வினா எண் 59722—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 24]

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் மாவட்ட தாட்கோ அலுவலகத்தினை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்கு மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் கூடுதலாகக் கட்டப்படவிருக்கும் சிறு வளாகக் கட்டடத்திற்கு, அரசு ஒப்புதல் அளிக்கும்போது, அக்கூடுதல் கட்டடத்தில் தாட்கோ அலுவலகத்திற்குப் போதிய இட ஒதுக்கீடு செய்ய அத்தருணத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

•

**29—**

## உயர்நிலைப் பள்ளியைத் துவங்குதல்

**வினா எண் 62698—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறையில் உள்ள ஆதிதிராவிடர் நல துவக்கப் பள்ளி *2004-2005* கல்வி ஆண்டில் நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இந்தப் பள்ளியில் இருந்து சுமார் 1/2 கி.மீ. தூரத்தில் ஏற்கெனவே ஒரு அரசு உயர்நிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. எனவே

தற்போதைய சூழ்நிலையில் வால்பாறையில் ஆதிதிராவிட நலத் துறையின்மூலம் உயர்நிலைப் பள்ளி துவக்க அவசியம் இல்லை.

**30—**

## இலவச காலனி விடுகள்

**வினா எண் 66740—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், பெரிய சோளிபாளையம் ஊராட்சி, தண்ணீர் பந்தல் ஆதிதிராவிடர் தெரு மக்களுக்கு இலவச காலனி வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கபிலர்மலை தொகுதி, கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், பெரிய சோளிபாளையம் ஊராட்சி, தண்ணீர் பந்தல் ஆதிதிராவிடர் தெருவில் மொத்தம் 51 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இதில் 25 குடும்பங்களுக்கு 1991-92 ஆம் ஆண்டிலும், 22 குடும்பங்களுக்கு 1994-95 ஆம் ஆண்டிலும் ஜவகர் கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தில் அரசு தொகுப்பு வீடுகள் ஏற்கெனவே கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**31—**

## மின்கம்பத்தில் உள்ள ஸ்டே கம்பியை அகற்றுதல்

**வினா எண் 1417—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம், 25-வது வார்டு இராஜேந்திர நகர், 5-வது தெருவில் ஒரு மின் கம்பத்தின்





ஸ்டே கம்பி தெருவின் மையப் பகுதியில் உள்ளதால், அதனை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம், 25-வது வார்டு, இராஜேந்திர நகர் 5-வது தெருவில் மையப் பகுதியில் இருந்த ஒரு மின் கம்பத்தில் ஸ்டே கம்பி 12-4-2004 அன்று அகற்றப்பட்டுவிட்டது.

**32—**

## புதிய மின்கம்பங்கள்

**வினா எண் 53023—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, செம்மங்குடி ஊராட்சி, தெற்குத் தெருவிற்கு செல்லும் சாலையில் உள்ள மின் கம்பம் சரி செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சீர்காழி தொகுதி, செம்மங்குடி ஊராட்சி தெற்குத் தெருவிற்கு செல்லும் சாலையில் உள்ள பழுதடைந்த இரண்டு மின் கம்பங்கள் 29-5-2004 அன்று அகற்றப்பட்டு, புதிய மின் கம்பங்கள் அமைக்கப்பட்டுவிட்டன.

**33—**

## மின் கட்டணம் செலுத்துதல்

**வினா எண் 53611—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை அனுப்பானடியைச் சேர்ந்த மக்கள் மின் கட்டணம் செலுத்தி வந்த இடத்தை மாற்றியதால் ஏற்பட்டுள்ள இடர்பாட்டைப்

[2006 ஜனவரி 24

போக்கி மீண்டும் பழைய இடத்திலேயே மின் கட்டணம் செலுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அனுப்பானடியில் மாநகராட்சி சுகாதார அலுவலகத்தின் வராண்டா பகுதியில் இயங்கி வந்த மின் கட்டண வசூல் மையம் பாதுகாப்பு இன்மை மற்றும் துர்நாற்றம் காரணமாகவும் 1-7-2001 முதல் தெப்பக்குளம் பிரிவு அலுவலகத்தில் இயங்கி வருகிறது. இந்த வசூல் மையம் அனுப்பானடியிலிருந்து சுமார் 2 கி.மீ. சுற்றளவுக்குள்தான் உள்ளது. வாரியப் பணத்திற்குப் பாதுகாப்பு இல்லாததால், இதை மறுபடியும் அனுப்பானடிக்கு மாற்ற இயலாது.

**34—**

## குழல் விளக்குகள்

**வினா எண் 54337—திரு. கே. ஆறுமுகம் :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், பெரும்பேடு கிராமத்திலிருந்து பழைய சாலைக்குச் செல்லும் சாலையிலும், புதிய காலனியிலிருந்து கிராமத்திற்குச் செல்லும் பிரதான சாலையிலும் மின்கம்பங்கள் வைத்து குழல் விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், பெரும்பேடு கிராமத்திலிருந்து பழைய சாலைக்குச் செல்லும் சாலையிலும், புதிய காலனியிலிருந்து கிராமத்திற்குச் செல்லும் பிரதான சாலையிலும் புதிய தெருவிளக்குகள் அமைக்க வேண்டி இதுவரை விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. பெரும்பேடு ஊராட்சியில் இன்றைய தேதி வரை ரூ.59,880/-மின் கட்டண பாக்கி உள்ளது. மின் கட்டண பாக்கியை செலுத்தியபின் மேற்கண்ட பகுதிகளுக்கு புதிய தெரு விளக்குகள் வேண்டி பெரும்பேடு ஊராட்சியிடமிருந்து மின்பாக்கியில்லா சான்றிதழ் மற்றும் மின் நீட்டிப்பு பணிக்கு ஆகும் முழு செலவினை செலுத்தும் சம்மதத்துடன் விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



**35—**

## மானியம் வழங்குதல்

**வினா எண் 54659—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூரிய ஒளிமூலம் மின் உற்பத்தி செய்து விவசாய மோட்டார்களை இயக்குபவர்களுக்கு மாநில அரசு மானியம் வழங்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாநில அரசின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டத்தின்கீழ் சூரிய ஒளி மின் பம்புகளுக்கு மானியமாக ரூ.1.95 இலட்சம் தொகை வழங்கி ஆணையிடப்பட்டது. இதன்மூலம் 20 பயனாளிகள் மானிய உதவி பெறுவர். இம்மானியமானது சூரிய ஒளி பம்பினை விவசாயத் தேவைகளுக்கு பயன்படுத்துவோருக்கு மத்திய அரசினால் வாட் ஒன்றிற்கு ரூ.100/- வீதம் வழங்கப்படும் மானியத்துடன் சேர்த்து கூடுதலாக வழங்கப்படுகிறது.

[2006 ஜனவரி 24

36—

### மின் நிலையம் துவங்குதல்

**வினா எண் 54674-திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ராமகுண்டத்திலுள்ள மின் உற்பத்தி நிலையம் போல் மற்றொரு மின் நிலையம் துவக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேசிய அனல் மின் கழகத்திற்குச் சொந்தமான 2100 மெகாவாட் திறன் கொண்ட ராமகுண்டம் அனல் மின் நிலையம் ஆந்திர மாநிலத்தில் சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத்தின் அருகிலும், தமிழ்நாட்டில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்குச் சொந்தமான 1020 மற்றும் 1470 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையங்கள் I & II நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தின் அருகிலும் இயங்கி வருகின்றன. வடசென்னையில் 1000 மெகாவாட் திறனுடைய அனல் மின் நிலையம் அமைப்பதற்கு தேசிய அனல் மின் கழகத்துடன் (NTPC) தமிழ்நாடு மின்சார வாரியம் கூட்டாக அமைப்பதற்கு, தமிழக அரசு அனுமதி அளித்ததின்படி, 12-07-2002 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் முன்னிலையில் புரிந்து உணர்வு (MOU) ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இந்தத் திட்டத்திற்குத் தேவையான வளர்ச்சிப் பணிகள் ஏற்கெனவே துவங்கப்பெற்று நடைபெற்று வருகின்றன. தூத்துக்குடியில் 1000 மெகாவாட் திறனுடைய அனல் மின் நிலையம் அமைப்பதற்கு நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் (NLC) இணைந்து தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழக அரசு அனுமதி அளித்ததின்படி, 19-06-2003 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் முன்னிலையில் புரிந்து உணர்வு (MOU) ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இந்தத் திட்டத்திற்குத் தேவையான வளர்ச்சிப் பணிகள் ஏற்கெனவே துவங்கப்பெற்று நடைபெற்று வருகின்றன. இவ்விரு அனல் மின் நிலையங்களும் பதினோராவது ஐந்தாண்டு திட்டத்தின் மத்தியில் செயல்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



2006 ஜனவரி 24]

37—

### மின் வாரியக் கோட்டம்

**வினா எண் 55013—திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரில் மின்வாரியக் கோட்டம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகரில் புதியதாக மின்வாரியக் கோட்டம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை. எடப்பாடி நகர் மேட்டூர் கோட்டத்திற்குள்ளடங்கியதாகும். புதியதாக ஒரு கோட்டம் அமைக்க குறைந்தபட்சம் நான்கு உபகோட்டங்களும் முறையே ஒவ்வொரு உபகோட்டத்திற்கும் நான்கு பிரிவு அலுவலகங்களும் இருக்க வேண்டும். ஆனால் தற்போது எடப்பாடி நகரில் இரண்டு உபகோட்டங்கள் மற்றும் ஏழு பிரிவு அலுவலகங்களை உள்ளடக்கியதாக உள்ளது. இவை தனியாக ஒரு கோட்டம் புதியதாக அமைக்க போதுமானவை அல்ல.

38—

### மின் இணைப்பு வழங்குதல்

**வினா எண் 55088—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, அரசூர் ஊராட்சி, பச்சை பெருமாள் தெருவிற்கு மின்கம்பம் அமைத்து மின் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* சீர்காழி தொகுதி, அரசூர் ஊராட்சி, பச்சை பெருமாள் தெருவிற்கு மின் கம்பம் அமைத்து மின் இணைப்பு வழங்க விண்ணப்பங்கள் எவையும் பெறப்படவில்லை. அவ்வூராட்சிக்கு மின் கட்டணத் தொகை நிலுவை இல்லாதிருந்து, அதனிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டு அப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகை முழுவதையும் செலுத்த இசைவு தெரிவித்தால் தெரு விளக்கு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**39—**

### மின் விளக்கு வசதி

**வினா எண் 55417—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல் ஊராட்சி, திருமுல்லைவாசல் பெரியமதகிலிருந்து வழதலைக்குடி தெரு வரை, ஆரப்பள்ளம் ஊராட்சி. புதுத்தெருவிற்கும், நரிமுடுக்கு ஆதிதிராவிடர் தெருவிற்கும் மின் கம்பம் அமைத்து மின் விளக்கு அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல் ஊராட்சி, பெரிய மதகிலிருந்து வழுதலைக்குடி தெருவரை, ஆரப்பள்ளம் ஊராட்சி புதுத் தெருவிற்கும், நரிமுடுக்கு ஆதிதிராவிடர் தெருவிற்கும் புதிய தெரு விளக்குகள் வேண்டி இதுவரை விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. மேலும் இவ்வாண்டு அரசு தெரு விளக்குகள் அமைக்கும் திட்டத்திலும், மேற்கண்ட ஊராட்சிகள் இடம் பெறவில்லை. எனவே புதிய தெரு விளக்குகள் வேண்டி அந்த ஊராட்சிகளிடமிருந்து மின் பாக்கியில்லா சான்றிதழ் மற்றும் மின் நீட்டிப்பு பணிக்கு ஆகும் முழுச் செலவினை செலுத்தும் இசைவுடன்



விண்ணப்பம் பெறப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**40—**

### மின் அளவை உயர்த்துதல்

**வினா எண் 55640—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அனல் மின் திட்டத்தில் தற்போது எடுக்கப்படும் மின் அளவு எவ்வளவு?

(ஆ) அம்மின் அளவை உயர்த்த அரசிடம் கருத்துரு ஏதும் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மேட்டூர் அனல் மின் திட்டத்தில் தற்போது எடுக்கப்படும் மின் அளவு 840 மெகாவாட் ஆகும். கடந்த 2003-2004 ஆம் ஆண்டில் உற்பத்தியான மின் அளவு 6735 மில்லியன் அளவுகளாகும்.*

(ஆ) இம்மின் அளவை உயர்த்த தற்போது கருத்துரு ஏதும் இல்லை.

**41—**

### மின் வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 55928—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் மற்றும் வைத்தீஸ்வரன் கோயிலில் இயங்கி வரும் மின்வாரிய அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

[2006 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) வைத்தீஸ்வரன் கோயில் மின்வாரிய அலுவலகம் தற்போது சொந்த அலுவலகக் கட்டடத்திலும் கொள்ளிடம் மின்வாரிய அலுவலகம் தற்போது ஆச்சாள்புரம் துணை மின் நிலைய சொந்தக் கட்டடத்திலும் இயங்கி வருகிறது.

(ஆ) வினா எழவில்லை.

**42—**

**மின் நிலைய அலுவலர்களுக்கு குடியிருப்பு வசதி**

**வினா எண் 55935—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, அரசூர், திருவெண்காடு, ஆச்சாள்புரம் மற்றும் வைத்தீஸ்வரன் கோயிலில் உள்ள துணை மின் நிலையத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு குடியிருப்பு வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) அரசூர் துணை மின் நிலையத்தில் அலுவலர் குடியிருப்பு தற்போது உள்ளது. திருவெண்காடு, ஆச்சாள்புரம் வைத்தீஸ்வரன் கோயில் துணை மின் நிலையங்களில் குடியிருப்பு வாரியத்தின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) நிதிநிலை சீரடையும்போது பரிசீலிக்கப்படும்.

**43—**

**மின் விளக்கு அமைத்தல்**

**வினா எண் 57022—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 24]

(அ) சீர்காழி தொகுதி, கீழசட்டநாதபுரம் ஊராட்சி, சின்ன நிம்மேலியிலிருந்து பெரிய நிம்மேலி வரையில் மின் கம்பம், மின் விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கீழசட்டநாதபுரம் ஊராட்சி, சின்ன நிம்மேலியிலிருந்து பெரிய நிம்மேலி வரையில் புதிய தெரு விளக்குகள் கோரி சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பிடமிருந்து விண்ணப்பம் ஏதும் இதுவரை பெறப்படவில்லை. ஊரக வளர்ச்சித் (பி3) துறை, அரசாணை எண் 8, நாள்: 12-1-2004-இல் குறிப்பிடப்பட்டுள்ள தெரு விளக்கு அமைக்கும் திட்டத்திலும் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் தெரு விளக்கு அமைக்கும் பணி சேர்க்கப்படவில்லை. மின் கட்டணப் பாக்கி மற்றும் நிலுவையிலுள்ள தொகைகளைச் செலுத்தி புதிய தெரு விளக்குகள் அமைக்க ஆகும் செலவையும் செலுத்த சம்மதம் தெரிவித்து கீழசட்டநாதபுரம் ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டால் அதற்கான செலவைச் செலுத்தியபின் விளக்குகள் அமைத்துத் தரப்படும். தற்போது சீர்காழி தொகுதியில் 10,161 தெருவிளக்குகளும், கீழசட்டநாதபுரம் ஊராட்சியில் 134 தெரு விளக்குகளும், சின்ன நெம்மேலியிருந்து பெரிய நெம்மேலி வரை 23 தெரு விளக்குகளும் உபயோகத்தில் உள்ளன.

**44—**

**மின் விளக்கு வசதி**

**வினா எண் 57028—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, புங்கனூர் ஊராட்சியில் ஆதிதிராவிடர் வசிக்கும் கீழத் தெருவிற்கு மின் விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2006 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சீர்காழி தொகுதி, புங்கனூர் ஊராட்சியில் ஆதிதிராவிடர் வசிக்கும் கீழத்தெருவிற்கு புதிய தெரு விளக்குகள் கோரி இந்த உள்ளாட்சி அமைப்பிடமிருந்து விண்ணப்பம் ஏதும் இதுவரை பெறப்படவில்லை. ஊரக வளர்ச்சித் (பி3) துறை, அரசாணை எண் 8, நாள் 12-1-2004-இல் குறிப்பிடப்பட்டுள்ள தெரு விளக்கு அமைக்கும் திட்டத்திலும் மேற்குறிப்பிட்ட பகுதிகள் சேர்க்கப்படவில்லை. மின் கட்டணப் பாக்கி மற்றும் நிலுவையிலுள்ள தொகைகளைச் செலுத்தி புதிய தெரு விளக்குகள் அமைக்க ஆகும் செலவைச் செலுத்தும் இசைவுடன் விண்ணப்பம் புங்கனூர் ஊராட்சியிடமிருந்து பெறப்பட்டால் அதற்கான செலவைச் செலுத்தியபின் விளக்குகள் அமைத்துத் தரப்படும். தற்போது சீர்காழி தொகுதியில் 10,161 தெரு விளக்குகளும், புங்கனூர் ஊராட்சியில் 115 தெரு விளக்குகளும் கீழத்தெருவில் 14 தெரு விளக்குகளும் உபயோகத்தில் உள்ளன.

**45—**

## மின்மாற்றி அமைத்தல்

**வினா எண் 57881—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கீழசட்டநாதபுரம் ஊராட்சி, நிம்மேலி கிராமத்தில் புதிய மின்மாற்றி (டிரான்ஸ்பார்மர்) அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சீர்காழி தொகுதி, கீழசட்டநாதபுரம் ஊராட்சி, நிம்மேலி கிராமத்தில் குறைந்த மின்னழுத்தம் (170 வோல்ட்) இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அதை நிவர்த்தி செய்வதற்காக, புதிய மின்மாற்றி அமைக்க ரூ.1,66,840/- செலவில் மதிப்பீடு அனுமதிக்கப்பட்டுள்ளது. விரைவில் மின்மாற்றி அமைக்கப்படும்.



2006 ஜனவரி 24]

**46—**

## விபத்துகளைத் தடுத்தல்

**வினா எண் 59304—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் பேருந்துகளினாலும், லாரிகளாலும் தொடர்ந்து விபத்துகள் நடைபெற்று வருவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டத்தில் பேருந்துகளாலும், லாரிகளாலும், விபத்துகள் நடைபெற்று வருவதைத் தடுக்க சாலைகளில் ஆங்காங்கே வேகத் தடுப்பு ஏற்படுத்தியும் அடிக்கடி வாகனத் தணிக்கை நடத்தியும், மேலும் 24 மணி நேரமும் நெடுஞ்சாலைகளில் வாகனங்களில் ரோந்து பணி மேற்கொண்டும், விபத்துகள் நடைபெறுவதைத் தடுக்க அரசு கடும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**47—**

## மின்மாற்றி அமைத்தல்

**வினா எண் 59879—திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், புள்ளம்பாடி ஒன்றியம், மேலஅரசூருக்குத் தனியாக மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், புள்ளம்பாடி ஒன்றியத்தில், மேலஅரசூர் கிராமத்தில் ஏற்கெனவே உள்ள

[2006 ஜனவரி 24

2 மின்மாற்றிகள் (100 கே.வி.ஏ./22 கே.வி.) மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள ஒருமுனை மின்பாதையை இருமுனை மின்பாதையாக மாற்றும் பணியும், குறைந்த திறன் கொண்ட கம்பியை (7/2.11 MM ACSR) அதிகத் திறன் கொண்ட (7.3.35 MM ACSR) கம்பியாக மாற்றும் பணியும் துவங்கப்பட்டு 7-9-2004 அன்று முடிக்கப்பட்டது. தற்போது மின்னழுத்தம் 220 வோல்ட்டுக்கு மேல் உள்ளது. எனவே, மேலஅரசூருக்குத் தனியாக மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**48—**

### மின்விளக்கு வசதி

**வினா எண் 59962—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை ஒன்றியம் கல்லாபுரம் ஊராட்சி, இந்திரா புதுநகர், காட்டுப்பதி, பூச்சிமேடு, வாய்க்கால்மேடு, காந்தி காலனி, இந்திராபுரம், மேல் நகர், மாவிலாம்பாறை, எம்.ஜி.ஆர். நகர் பகுதிகளில் குடிசைகளுக்கு மின் விளக்கு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): விவரங்கள் கீழ்க்காணும் பட்டியலில் தெரிவிக்கப்படுகின்றன :-

| வரிசை எண். | குடியிருப்புகளின் பெயர். | மொத்த குடிசைகள். | ஒரு விளக்கு மின் இணைப்பு உள்ள குடிசைகள். | மின் இணைப்பு இல்லா குடிசைகள். | நிலுவையிலுள்ள விண்ணப்ப விவரம். |
|---|---|---|---|---|---|
| 1. | கல்லாபுரம் ஊராட்சி | 88 | 50 | 38 | இல்லை |
| 2. | இந்திரா புதுநகர் | 65 | 11 | 54 | இல்லை |
| 3. | காட்டுப்பதி | 56 | 26 | 30 | இல்லை |
| 4. | பூச்சிமேடு | 19 | 17 | 2 | இல்லை |
| 5. | வாய்க்கால்மேடு | 15 | 6 | 9 | இல்லை |
| 6. | காந்தி காலனி | 12 | 8 | 4 | இல்லை |
| 7. | இந்திராபுரம் | 4 | 0 | 4 | இல்லை |
| 8. | வேல்நகர் | 40 | 32 | 8 | இல்லை |
| 9. | மாவிலாம்பாறை | 65 | 51 | 14 | இல்லை |
| 10. | எம்.ஜி.ஆர். நகர் | 40 | 0 | 40 | இல்லை |
| | **மொத்தம் ..** | **404** | **201** | **203** | **0** |





மேற்படி குடியிருப்புகளில் மின் இணைப்பு இல்லாத குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. அவ்வாறு பெறப்படின் தகுதிவாய்ந்த குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும்.

**49—**

### மின் வசதி

**வினா எண் 60707—திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, துஞ்சனூர் ஊராட்சி, சாணனேந்தல் கிராமம் மற்றும் பலவரசன் ஊராட்சி, கிடங்கிவயல் ஆதிதிராவிட குடியிருப்புக்கு மின் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, துஞ்சனூர் ஊராட்சி, புது ஒக்கூர் கிராமத்தில், சாணனேந்தல் குடியிருப்பில் உள்ள குடிசைகளுக்கு 15 எண்ணிக்கையும், பலவரசன் ஊராட்சி, கிடங்கிவயல் கிராமம், ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு 14 எண்ணிக்கையும் ஆக மொத்தம் 29 விண்ணப்பங்கள் ஒரு விளக்கு மின் இணைப்பு வேண்டி

[2006 ஜனவரி 2

பெறப்பட்டன. அவற்றில் கிடங்கிவயல் ஆதிதிராவிட குடியிருப்பி
உள்ள 14 விண்ணப்பங்களுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது

சாணனேந்தல் குடியிருப்பில் (15 விண்ணப்பங்களில்) தற்போதுள்ள
10 குடிசைகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டது.

**50—**

### மின்மாற்றி அமைத்தல்

**வினா எண் 61653—திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்து
மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு
விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, பிராமணவயல், இடையாத்தூர் மற்று
நிளையாகுடியில் குறைந்த மின்னழுத்தத்தை மாற்றி சீரான மின்
விநியோகம் அளித்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சார
துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, பிராமணவயல் பகுதி, இடையாத்தூர் மற்று
நிளையாகுடி பகுதிகளில் முறையே 26-7-2004 மற்றும் 19-10-2004 ஆகிய
தினங்களில் ஆய்வு செய்யப்பட்டபோது ஒருமுனை மின்னழுத்த
முறையே 210 வோல்ட் எனக் கண்டறியப்பட்டது. ஆதலின் இந்த
பகுதிகளில் புதிய மின்மாற்றி நிறுவ தற்போது அவசியம் எழவில்லை

**51—**

### பேருந்து இயக்கம்

**வினா எண் 62016—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு போக்குவரத்து
மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டம், சங்கராமநல்லூர் ஊராட்சி, மடத்தூர்
கிராமத்திற்கு உடுமலை-விழைமம் வழி மடத்தூர் வந்த அரசுப் பேருந்து
எண் 18 மீண்டும் இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், உடன் நடவடிக்கை எடுக்கப்படுமா?



2006 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): உடுமலை நகர வழித்தடம் எண் 18, உடுமலை-மடத்தூர் (வழி) கொழுமம் ஆகும். இப்பேருந்து நிறுத்தப்படாமல் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றது. மாலை 6.25 மணியளவில் உடுமலையில் எடுக்கும் நடை மட்டும் பயணிகளின் அடர்வு குறைவாக இருந்ததால் நிறுத்தப்பட்டுள்ளது. அதேநேரத்தில் வழித்தடம் 12பி மற்றும் 18, உடுமலையில் இயக்கப்படும் பேருந்து பிறிதொரு வழித்தடத்தில் மடத்தூருக்கு வருவதால் ஒரே நேரத்தில் இரண்டு பேருந்துகள் மடத்தூருக்கு வருவதை முன்னிட்டு நிறுத்தப்பட்ட வழித்தடம் 18-ன் நடையை திரும்பவும் மடத்தூர் வரை இயக்க வேண்டிய அளவிற்கு பயணிகள் அடர்வு இல்லை. எனினும் தற்பொழுது மடத்தூருக்கு 22 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**52—**

### குடிசை வீட்டிற்கு மின் இணைப்பு

**வினா எண் 62047—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டம், கல்லாபுரம் ஊராட்சி, இந்திரா புதூர், பழங்குடியினருக்கு குடிசை வீட்டிற்கு விளக்கு அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): உடுமலை வட்டம், கல்லாபுரம் ஊராட்சி, இந்திரா புதூர் பகுதியில் இதுவரை 11 குடிசை வீடுகளுக்கு 1 விளக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒரு விளக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை. மேலும், ஒரு மின் விளக்கு மின் இணைப்பு பெற தகுதியுள்ள குடிசைகள் ஏதும் தற்போது அப்பகுதியில் இல்லை.

[2006 ஜனவரி 24

53—

## சாலை விதிகளைக் கடைபிடிக்கச் செய்தல்

**வினா எண் 62063—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறையில் பொது மக்கள் சாலை விதிகளைக் கடைபிடிக்க செய்தித் துறை மூலம் சினிமாவில் காட்சியாகக் காட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சாலை விதிகளைக் கடைபிடிக்க செய்தித் துறை மூலம் சினிமாவில் காட்சியாகக் காண்பிப்பதற்கான கருத்துரு ஏதும் தற்பொழுது அரசிடம் இல்லை.

54—

## ஆலோசனைக் குழு அமைத்தல்

**வினா எண் 62169—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொடர்ந்து விபத்துகள் நடைபெற்று வருவதைத் தடுக்க சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஆலோசனைக் குழு ஒன்றை அரசு ஏற்படுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கோயம்புத்தூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட சாலைப் பாதுகாப்புக் குழு ஒன்று ஏனைய துறை அதிகாரிகளுடன் இயங்கி வருகிறது. இக்குழுவில் அம்மாவட்டத்தின் சட்டமன்ற உறுப்பினர்களும் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். அக்குழுவானது சாலை விபத்துகளைத் தடுக்கும் உபாயங்களை அவ்வப்போது செயல்படுத்துவதுடன் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் செயலாற்றி வருகிறது. ஆகவே இதற்காகத் தனியாக சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஆலோசனைக் குழு அமைக்க வேண்டிய அவசியமில்லை.



2006 ஜனவரி 24]

55—

## நவீன உத்திகள்

**வினா எண் 62472—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மின்சாரக் கசிவால் தீ விபத்து ஏற்படுவதைத் தடுக்க மின் வாரியம் மூலம் நவீன உத்திகளையும் விழிப்புணர்வையும் மக்களிடம் ஏற்படுத்த அரசு பரிசீலிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மின்சாரக் கசிவாலும், தரமில்லாத மின் சாதனங்களைப் பயன்படுத்துவதாலும், கம்பி அறுந்து விழுவதாலும் ஏற்படக்கூடிய தீ விபத்து பற்றி சினிமா திரையரங்கு மூலமாகவும், கேபிள் டி.வி. மூலமாகவும், சுவரொட்டி மூலமாகவும் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. மேலும், தரமான சாதனங்களைக் கொண்டு மின்கட்டமைப்பை ஏற்படுத்திடவும் வலியுறுத்தப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் மே 2-வது வாரம் மின் பாதுகாப்பு வார விழா அந்தந்த மின் பகிர்மான வட்டம் மற்றும் கோட்ட அளவில் தமிழ்நாடு முழுவதும் நடைபெறுகிறது. மேற்படி மின் பாதுகாப்பு வார விழாவின்போது மின் பாதுகாப்புப் பற்றி துண்டுப் பிரசுரம் மற்றும் விளம்பரங்கள் மூலம் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

56—

## காற்றாலைகள் மூலம் மின்சார உற்பத்தி

**வினா எண் 62652—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 24

*(அ)* கோவை மாவட்டம், வால்பாறையில் சேத்துமடை மற்றும் வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சிகளில் காற்றாலைகள் மூலம் மின்சார உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* மைய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் மற்றும் தமிழ்நாடு அரசின் நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் மொத்தம் 67 இடங்களில் காற்றுவள ஆதாரங்களை மதிப்பீடு செய்ய தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்தால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு ஆய்வு செய்யப்பட்ட 67 இடங்களில் காற்றின் வேகம் மற்றும் காற்றின் அடர்த்தி ஆகியவற்றின் அடிப்படையில், மைய அரசு தமிழ்நாட்டின் 8 மாவட்டங்களில் 41 இடங்களை காற்றாலைகள் அமைத்து மின் உற்பத்தி செய்வதற்கு உகந்த இடங்கள் என அறிவித்துள்ளது.

வால்பாறை பகுதியிலுள்ள சேத்துமடை மற்றும் வேட்டைக்காரன்புதூர் ஆகிய இடங்கள் மைய அரசு தெரிவு செய்த காற்றுவளம் மிக்க 41 பகுதிகளில் அடங்கவில்லை. எனவே, வால்பாறை வட்டத்திலுள்ள சேத்துமடை மற்றும் வேட்டைக்காரன்புதூர் ஆகிய பேரூராட்சிப் பகுதிகள், காற்றாலைகளை அமைத்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு உகந்த இடங்களாகக் கருத முடியாது. எனினும், மேற்கூறப்பட்ட இடங்களில் காற்றுவள ஆதாரங்களை மதிப்பீடு செய்ய போதிய நிதியுதவி கிடைத்தால் காற்றுவள மதிப்பீடு செய்வதற்கான ஆய்வு மேற்கொண்டு காற்றுவளம் மிக்க பகுதிகளாகத் தெரிவு செய்யப்பட்டால் இவ்விடங்களில் தனியார் துறை மூலம் காற்றாலைப் பண்ணைகள் அமைக்க ஆவன செய்யப்படும். ஆனால், தற்போது காற்றுவளமிக்க பகுதிகளில் இந்த இடங்கள் சேராததால் காற்றாலைப் பண்ணைகள் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

*(ஆ)* எழவில்லை.



2006 ஜனவரி 24]

**57—**

### காற்றாலை மின் உற்பத்தி

**வினா எண் 62894—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோவில்பட்டி தொகுதி, நாலாட்டின்புதூர், இளையரசனேந்தலில் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் மற்றும் தமிழ்நாடு அரசின் நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் மொத்தம் 67 இடங்களில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் காற்றுவள ஆதாரங்களை மதிப்பீடு செய்ய ஆய்வு மேற்கொண்டது. அவ்வாறு ஆய்வு செய்யப்பட்ட 67 இடங்களில், காற்றின் வேகம் மற்றும் காற்றின் அடர்த்தி ஆகியவற்றின் அடிப்படையில், மைய அரசு தமிழ்நாட்டின் 8 மாவட்டங்களில் 41 இடங்களை காற்றாலைகள் அமைத்து மின் உற்பத்தி செய்வதற்கு உகந்த இடங்கள் என அறிவித்துள்ளது.

கோவில்பட்டி தொகுதியிலுள்ள நாலாட்டின்புதூர் மற்றும் இளையரசனேந்தல் ஆகிய இடங்கள் மைய அரசு தெரிவு செய்த காற்று வளம் மிக்க 41 பகுதிகளில் அடங்கவில்லை. எனவே, கோவில்பட்டி தொகுதியிலுள்ள நாலாட்டின்புதூர் மற்றும் இளையரசனேந்தல் ஆகிய பகுதிகள், காற்றாலைப் பண்ணைகள் அமைத்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு தற்சமயம் உகந்த இடங்களாகக் கருத முடியாது. எனினும், மேற்கூறப்பட்ட இடங்களில் காற்றுவள ஆதாரங்களை மதிப்பீடு செய்ய போதிய நிதியுதவி கிடைத்து காற்றுவளம் மிக்க பகுதிகளாகத் தெரிவு செய்யப்பட்டால் அவ்விடங்களில் தனியார் துறை மூலம் காற்றாலைப் பண்ணைகள் அமைக்க ஆவன செய்யப்படும். ஆனால் தற்போது காற்றுவளமிக்க பகுதிகளில் இந்த இடங்கள் சேராததால் காற்றாலைப் பண்ணைகள் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

*(ஆ)* எழவில்லை.

[2006 ஜனவரி 24

**58—**

## போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல்

**வினா எண் 62989—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு நகரத்திற்குள் காலை 10.00 மணிக்கு மேல் கனரக வாகனங்கள் வருவதைத் தடை செய்து போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஈரோடு நகரில் உள் நோக்கி வரும் அனைத்து வாகனங்களும் நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையம் வழியாகவும், கரூர், திருச்சி மற்றும் தென் மாவட்டங்களில் இருந்து வரும் வாகனங்கள் அனைத்தும் ஈரோடு நகரில் தென் பகுதியான பூந்துறை ரோடு வழியாகவும், கோவை மாவட்டத்திலிருந்து வரும் வாகனங்கள் அனைத்தும் பெருந்துறை ரோடு வழியாகவும், மேட்டூர், சத்தியமங்கலம் பகுதிகளில் இருந்து வரும் வாகனங்கள் அனைத்தும் சத்திரோடு வழியாகவும், ஈரோடு நகருக்குள் 24 மணிநேரமும் வந்து செல்கின்றன. ஈரோடு நகரில் ஜவுளித் தொழிலும், மஞ்சள் மண்டி போன்றவை மிக முக்கியமான வியாபாரத் தொழில்களாக உள்ளன. அதிகப்படியான லாரி அலுவலகங்கள் நகரின் உட்பகுதியில் அமைந்துள்ளன. கனரக வாகனங்களில் குறிப்பாக லாரிகளை மட்டும் காலை 10.00 மணிக்குமேல் நகருக்கு வராமல் தடுக்கும்பட்சத்தில் மேற்படி லாரிகள் சுமைகளை ஏற்றி இறக்கவோ அல்லது நகருக்கு வெளியே அவற்றை நிறுத்தி வைக்கவோ தனியாக எந்த இடமும் ஒதுக்கி வைக்கப்படவில்லை. காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை சுமார் 2,000-க்கும் மேற்பட்ட கனரக வாகனங்கள் நகருக்குள் வந்து செல்கின்றன. ஈரோடு நகரில் பெரும்பாலான சாலைகள் குறுகலாக உள்ளதால் போக்குவரத்து நெரிசல் அதிகம் ஏற்படுகிறது.

இப்பிரச்சினை சம்பந்தமாக மாவட்டாட்சியர் அவர்களால் நடத்தப்படும் சாலைப் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் கனரக வாகன உரிமையாளர்கள், வருவாய்த் துறை அதிகாரிகள், போக்குவரத்துத் துறை



2006 ஜனவரி 24]

அதிகாரிகள், வியாபாரிகள் மற்ற பிரதிநிதிகள், நகராட்சி ஆணையர், காவல் துறை அதிகாரிகள் ஆகியோருடன் கலந்து ஆலோசித்து போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**59—**

## ஆளில்லா துணை மின் நிலையம்

**வினா எண் 63277—திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், காளிப்பேட்டையில் 33 கி.வோ. ஆளில்லா துணை மின் நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், காளிப்பேட்டையில் ரூ. 84.41 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு 33 கி.வோ. ஆளில்லாத துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துருவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. துணை மின் நிலையம் அமைக்கும் பணி இந்த ஆண்டிலேயே தொடங்கப்படவுள்ளது.

**60—**

## மின் வாரிய பண்டகசாலை

**வினா எண் 64488—திரு. ப. அரசன்:** மாண்புமிகு. போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மணமேல்குடி மற்றும் ஆவுடையார்கோயில் பகுதிகளில் மின் வாரிய பண்டகசாலைகள் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2006 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மணமேல்குடி மற்றும் ஆவுடையார்கோவில் பகுதிகள் புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டம், அறந்தாங்கி கோட்டத்தைச் சார்ந்தவை. தமிழ்நாடு மின்சார வாரிய நிதியின்படி, ஒரு கோட்டத்துக்கு ஒரு துணை பண்டகசாலை இருக்க வேண்டும். அறந்தாங்கி கோட்டத்தில், அழியா நிலையில் ஏற்கெனவே ஒரு துணை பண்டகசாலை இயங்கி வருவதால், அதே கோட்டத்தைச் சார்ந்த மணமேல்குடி மற்றும் ஆவுடையார்கோவில் பகுதிகளில் மற்றொரு துணை பண்டகசாலை துவங்க இயலாது.

**61—**

## சூரிய அடுப்பு விநியோகம்

**வினா எண் 65443—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கிராம மக்களுக்கு மானிய விலையில் சூரிய அடுப்புகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மத்திய அரசின் மரபுசாரா அமைச்சகத்தின் மானியத் திட்டத்தின்கீழ் நான்கு வகையான சூரிய அடுப்புகள் விநியோகிக்கப்படுகின்றன.

(i) பெட்டி வடிவ சூரிய அடுப்பு. (5 நபர்கள் வரை பயன்படுத்தலாம்)

(ii) வட்டில் வடிவ சூரிய அடுப்பு. (15 நபர்கள் வரை பயன்படுத்தலாம்)

(iii) ஸ்கெப்லர் அமைப்பு.

(iv) சூரிய நீராவி அடுப்பு.



2006 ஜனவரி 24]

இதில் பெட்டி வடிவ சூரிய அடுப்புகளுக்கு மட்டும் மானியம் வழங்கப்படுவதில்லை. ஆனால் வட்டில் வடிவ சூரிய அடுப்புகளுக்கும் பிற வகை அடுப்புகளுக்கும் மொத்த விலையில் 50 சதவீதம் வரை, மானியம் வழங்கப்படுகிறது. மீதித் தொகையை பயனாளிகள் ஏற்க முன்வந்தால், மைய அரசிடமிருந்து மானியம் பெற்றுத்தர ஏற்பாடு செய்யப்படும்.

பெட்டி வடிவ அடுப்பு தவிர பிற வகை சூரிய அடுப்புகள் தனி நபர்களுக்குப் பயன்படுவதில்லை. பெரிய நிறுவனங்கள், தொண்டு அமைப்புகளுக்கு மட்டும் அதிக அளவில் சமைப்பதற்கு அவை பயன்படும்.

தமிழ்நாட்டில் சூரிய சக்தி அடுப்புகளைத் தயாரிப்போர் அதிக அளவில் இல்லாததால், இத்தகைய அடுப்புகளை மானிய விலையில் கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் வழங்கும் திட்டம் எதுவுமில்லை.

**62—**

## சூரிய அடுப்புகளை வழங்குதல்

**வினா எண் 65445—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னசேலம் தொகுதி, ஏ. வாசுதேவனூர் கிராம மக்களுக்கு மானிய விலையில் சூரிய அடுப்புகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மரபுசாரா அமைச்சகத்தின் மானியத் திட்டத்தின்கீழ் நான்கு வகையான சூரிய அடுப்புகள் கீழ்க்கண்டவாறு விநியோகிக்கப்படுகின்றன:

(i) பெட்டி வடிவ சூரிய அடுப்பு. (5 நபர்கள் வரை பயன்படுத்தலாம்)

(ii) வட்டில் வடிவ சூரிய அடுப்பு. (15 நபர்கள் வரை பயன்படுத்தலாம்)

(iii) ஸ்கெப்லர் அமைப்பு.

(iv) சூரிய நீராவி அடுப்பு.

இதில் பெட்டி வடிவ சூரிய அடுப்புகளுக்கு மானியம் வழங்கப்படுவதில்லை. ஆனால், வட்டில் வடிவ சூரிய அடுப்பிற்கு மொத்த விலையில் 50 சதவீதம் வரை மானியம் வழங்கப்படுகிறது. மீதித் தொகையை பயனாளிகள் ஏற்க முன்வந்தால், மைய அரசிடமிருந்து மானியம் பெற்றுத் தர ஏற்பாடு செய்யப்படும்.

பிற வகை சூரிய அடுப்புகள் தனி நபர்களுக்குப் பயன்படுவதில்லை. பெரிய நிறுவனங்கள், தொண்டு அமைப்புகள் ஆகியவற்றுக்கு மட்டும் அவை பயன்படும்.

தமிழ்நாட்டில் சூரிய சக்தி அடுப்புகளைத் தயாரிப்போர் அதிகம் இல்லாததால் இத்தகைய அடுப்புகளை பெருமளவில் வழங்க முடியவில்லை.

(ஆ) தனிநபர்கள் இந்த அடுப்புகளைப் பயன்படுத்த முன்வந்தால் தகுதியான மானியம் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும்.

**63—**

## சூரிய ஒளி தெரு விளக்கு

**வினா எண் 65575—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், தோக்கியம் ஊராட்சியில், சின்னூரான் வட்டம், ஊர் கவுண்டர் சென்னப்பன் வீடு அருகில், தண்ணீர் கிணறு, சுகுமார் வீதி வீடு அருகில் சின்னவாயன் வட்டம் ஆகிய கிராமங்களுக்கு சூரிய ஒளி (சோலார்) தெரு விளக்கு அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மைய அரசின் மரபுசாரா அமைச்சகத்தின் மானியத் திட்டத்தின்கீழ் சூரிய ஒளி தெரு விளக்குகள் அமைக்க மாநில அரசு





நிறுவனமான தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை மூலம் மானியம் வழங்கப்படுகிறது. தெரு விளக்கின் மொத்த விலையில் சுமார் 50% வரை மானியம் தரப்படுகிறது. இந்த மானியம் போக மீதித் தொகையை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஏற்க வேண்டும். தோக்கியம் ஊராட்சி, மானியம் போக மீதித் தொகையை செலுத்த முன்வந்தால் மைய அரசின் ஒதுக்கீட்டிற்கேற்ப பெற்று மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அவ்வாறு மீதித் தொகையைச் செலுத்த ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லாவிட்டால் சட்டமன்ற அல்லது நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ அல்லது பிற வளர்ச்சித் திட்டங்களிலிருந்தோ நிதி ஒதுக்கீடு பெற்று மீதிச் செலவை ஏற்க முன்வந்தால், 50 சதவீதம் வரை மானியம் பெற்று சூரிய ஒளி தெரு விளக்குகள் அமைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) மானியம் நீங்கலாக உள்ள மீதிச் செலவை ஊராட்சி ஏற்கவோ அல்லது பிற திட்டங்களிலிருந்து பெற்றுத் தரவோ முன்வந்தால் சூரிய சக்தி தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**64—**

## மின் இணைப்பு வழங்குதல்

**வினா எண் 66626—திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம் தொகுதி, சென்னை மாநகராட்சி 63-வது வட்டம், அன்னை சத்தியா நகர் 2-வது தெருவில் உள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அன்னை சத்தியா நகர், சென்னை குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திற்கும், நெடுஞ்சாலைத் துறைக்கும் சொந்தமான பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, மின் வாரிய விதிகளின்படி அந்த இரு துறையினரிடமிருந்தும் மின் இணைப்பு வழங்க தடையில்லாச் சான்றிதழ் அளிக்கப்பட்டால் வாரிய விதிமுறைகளின்படி மின் இணைப்பு வழங்கப்படும்.

65—

## மின் பற்றாக்குறையைச் சீர்செய்தல்

**வினா எண் 66798—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், திருவெள்ளரையில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீபுண்டரீகாஷப்பெருமாள் திருக்கோவில் மற்றும் அதன் சுற்றுப் பகுதியில் மின் பற்றாக்குறைவு ஏற்பட்டுள்ளதைச் சீர் செய்ய அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், திருவெள்ளரை கிராம பஞ்சாயத்திற்கு உட்பட்ட திருவெள்ளரை அருள்மிகு ஸ்ரீபுண்டரீகாஷப்பெருமாள் திருக்கோவில் அருகில் 100 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றி இருந்தது. இதற்குப் பதிலாக ரூ. 3,24,800/- செலவில் 200 கே.வி.ஏ. திறன் கொண்ட புதிய மின்மாற்றி பொருத்தி தாழ்வழுத்த மின்பாதைகளில் மேம்பாட்டுப் பணிகள் முடித்து 8-3-2005 அன்று இயக்கப்பட்டுள்ளது. தற்போது மேற்கண்ட திருக்கோவில் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் முன்பு இருந்த 180 வோல்ட் என்ற மின் அழுத்தம் 220 வோல்ட் என்று மேம்பாடு அடைந்து சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

66—

## பேருந்தை இயக்காத அலுவலர்கள்

**வினா எண் 72275—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளி பேருந்து நிலையத்திற்கு இடம் இருந்தும் பேருந்தை இயக்காத அலுவலர்கள் மீது அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், வேலூர் மண்டலத்தின் திருப்பத்தூர் பணிமனையிலிருந்து நாட்ராம் பள்ளிக்கும், நாட்ராம்பள்ளி வழியாகவும் இயக்கப்படும் 10 நகரப் பேருந்துகளும் மற்றும் 2 புறநகர்ப் பேருந்துகளும் தினசரி நாட்ராம்பள்ளி பேருந்து நிலையம் வழியாக இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், வேலூர் மண்டலத்தால் கிருஷ்ணகிரி, ஓசூர் மற்றும் பெங்களூர் ஆகிய இடங்களுக்கு இயக்கப்பட்டுவரும் நீண்ட தூரப் பேருந்துகளும் நாட்ராம்பள்ளி வழியாகவே இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, பேருந்தை இயக்கவில்லை என்று அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அவசியம் எழவில்லை.

67—

## தண்ணீர்த் தட்டுப்பாடு

**வினா எண் 32977—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், உப்பாரப்பட்டி ஊராட்சி, உப்பாரப்பட்டியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையால் நடத்தப்படும் விடுதியிலுள்ள மாணவர்களின் தண்ணீர்த் தட்டுப்பாட்டை போக்கும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், உப்பாரப்பட்டியில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவர் விடுதியில் உள்ள கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணறு ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் நீர் உப்புத் தன்மை கொண்டதாக இருப்பதால் சமையலைத்தவிர பிற வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. சமையலுக்கு அருகிலுள்ள பள்ளியின் ஆழ்துளைக் கிணற்றிலிருந்து நீர் எடுக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. எனவே, தண்ணீர்த் தட்டுப்பாடு ஏதும் இல்லை.

(ஆ) வினா எழாது.

**68—**

## வான்கோழி வளர்ப்புத் திட்டம்

**வினா எண் 64746—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி மற்றும் கொள்ளிடம் ஒன்றியத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் வான்கோழி வளர்ப்புத் திட்டம் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி மற்றும் கொள்ளிடம் ஒன்றியத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் செயல்படுத்தும் வான்கோழி வளர்ப்புத் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) எழாது.

**69—**

## கால்நடை மருத்துவமனையை பழுதுபார்த்தல்

**வினா எண் 67065—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இருப்பாளி ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனையை பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இருப்பாளி ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனை பழுதடைந்துள்ளது. அதனை பழுது பார்க்க இயலாது. ஆதலால் அதனை இடித்துவிட்டு நபார்டு திட்டத்தின் மூலம் புதிய கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.





**70—**

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 69634—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம் சின்னகோட்டிமுளை கிராமத்தை மையமாகக்கொண்டு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் கோட்டம், கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சின்னகோட்டிமுளை கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 665 ஆகும். இதன் அருகில் 4 கி.மீ. தூரத்தில் வி.சாத்தப்பாடி கால்நடை கிளை நிலையமும், கம்மாபுரம் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. மேலும் கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் கம்மாபுரம், மந்தாரக்குப்பம் ஆகிய 2 கால்நடை மருந்தகங்களும், வி.மங்கலம், கோட்டேரி, அ.குமாரமங்கலம், வி.சாத்தாப்பாடி, கீரனூர் ஆகிய ஐந்து கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. இவை மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகள் சின்னகோட்டிமுளை கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமானதாக உள்ளது. ஆதலால் கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் ஆளுகைக்குட்பட்ட சின்னகோட்டிமுளை கிராமத்தில் நேரிடையாக ஒரு புதிய கால்நடை மருத்துவமனை துவக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) எழாது.

**71—**

## கால்நடை மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம்

**வினா எண் 70352—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 24

(அ) சேலம் தொகுதி குரங்குச் சாவடியில் கால்நடை மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், சேலம் 2-வது தொகுதி, குரங்குச் சாவடி கால்நடை மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டிடம் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

**72—**

## கால்நடை மருத்துவமனைக் கட்டடம்

**வினா எண் 71615—திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரணமல்லூர் தொகுதி, கீழப்பட்டு கிராமத்திற்கு துணை கால்நடை மருத்துவமனைக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) பெரணமல்லூர் தொகுதி, கீழப்பட்டு கிராமத்தில் கால்நடை கிளை நிலையமோ/கால்நடை மருந்தகமோ செயல்படாத நிலையில் கட்டிடம் கட்டுவது குறித்த வினா எழாது.

(ஆ) எழாது.

**73—**

## கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 74539—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2006 ஜனவரி 24]

(அ) பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஹள்ளி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெண்ணாகரம் தொகுதியில் ஏற்கெனவே பெண்ணாகரம், பெரும்பாலை, எரியூர், பாப்பாரப்பட்டி ஆகிய நான்கு இடங்களில் கால்நடை மருந்தகமும் பி. அக்ரஹாரம், சின்னம்பள்ளி, தின்னபேளூர் ஆகிய 3 இடங்களில் கால்நடை கிளை நிலையமும் இயங்கி வருகின்றன. மேலும் தற்பொழுது துறையின்கீழ் செயல்பட்டுவரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆதலால் பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஹள்ளி ஊராட்சியில் நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**74—**

## ஊதிய மாற்றம் கோருதல்

**வினா எண் 74747—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை உதவி மருத்துவர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அலுவலர் குழு 1998 மற்றும் ஒரு நபர் குழு 1998-ன் பரிந்துரைகளின் அடிப்படையில் பல்வேறு பதவிகளுக்கு ஊதிய மாற்றம் செய்யப்பட்ட ஆணைகள் வெளியிடப்பட்டபின், எந்தவொரு

[2006 ஜனவரி 24

பதவிக்கும் ஊதிய மாற்றம் மேற்கொள்ளக்கூடாது என்று கொள்கையளவில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக ஊதிய மாற்றம் கோரும் கால்நடை உதவி மருத்துவர்களின் கோரிக்கை ஏற்கெனவே நிராகரிக்கப்பட்டுள்ளது.

**75—**

## கால்நடை மருந்தகங்கள்

**வினா எண் 75088—திரு. சி. சண்முகம் :** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி தொகுதியில் எத்தனை கால்நடை மருந்தகங்கள் உள்ளன?

(ஆ) இவ்வாண்டு புதியதாக எத்தனை கால்நடை மருந்தகங்கள் திறக்க அரசிடம் திட்டம் உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி கோட்டம், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தில் கீழ்க்காணும் கால்நடை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன:—

| வரிசை எண் | கால்நடை மருந்தகங்கள் | கால்நடை மருத்துவமனை | கால்நடை கிளை நிலையம் |
|---|---|---|---|
| 1. | ஆவடி | பூவிருந்தவல்லி | 1. வீரராகவபுரம் |
| 2. | திருமழிசை | | 2. தண்டரை |
| | | | 3. நசரத்பேட்டை |
| | | | 4. கோளப்பஞ்சேரி |
| | | | 5. குத்தமபாக்கம் |
| | | | 6. ஜமீன்கொரட்டூர் |
| | | | 7. திருநின்றவூர் |



2006 ஜனவரி 24]

(ஆ) இந்த ஆண்டு (2005-2006) புதியதாக கால்நடை மருந்தகங்கள் துவக்க தற்போது அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

**76—**

## கால்நடை கிளை நிலையம்

**வினா எண் 84908—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆணைக்காரன் சத்திரம் ஊராட்சி, அனுமந்தபுரம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) புதிதாக கால்நடை கிளை நிலையம் தோற்றுவிப்பதற்கு விதிக்கப்பட்ட தடையாணை இன்னமும் அமலில் உள்ள நிலையில், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியத்தில் உள்ள அனுமந்தபுரம் கிராமத்தில் புதிதாக கால்நடை கிளை நிலையம் தோற்றுவிக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) எழாது.

**77—**

## இசைக் கல்லூரிக்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 50384—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரில் இசைக் கல்லூரிக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாநகரில் அரசு இசைக் கல்லூரிக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக பாரதியார் பல்கலைக்கழக வளாகம், பழைய நீதிமன்ற வளாகம் போன்ற இடங்களில் நிலம் ஒதுக்கீடு பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) உகந்த இடம் கிடைக்கப்பெற்றவுடன் அரசு இசைக் கல்லூரிக்கு சொந்தமாக கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**78—**

**மாணவர்களுக்கு ஊக்கத் தொகை**

**வினா எண் 75125—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (M.B.C.) சீர்மரபினர் (D.N.C.) மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (M.B.C.) சீர்மரபினர் (D.N.C.) மாணவர்களுக்கு "இலவச கல்வி" வழங்கப்பட்டு வருகிறது. எனவே ஊக்கத்தொகை வழங்க வேண்டிய நிலை எழவில்லை.

தமிழ்நாட்டில் தமிழ்வழி பயிலும் மாணவர்களுக்கு சாதி வேறுபாடின்றி தமிழ்வழி ஊக்கத்தொகை (Tamil Medium Stipend) வழங்கப்பட்டு வருகிறது.



**79—**

**கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள்**

**வினா எண் 81136—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) ஆம் நடத்தப்படுகின்றன.

(ஆ) பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குத் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் மற்ற மாவட்டங்களைப் போன்றே சேலம் மாவட்டத்திலும் நடத்தப்பெற்று வருகின்றன. மாவட்ட அளவில் வெற்றிபெற்ற பள்ளி/கல்லூரி மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. 2004 ஆம் ஆண்டில் மாநில அளவில் வெற்றி பெற்ற பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கு 01-05-2005 ஆம் நாள் அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களால் பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2005-2006 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் பள்ளி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் 20-08-2005 அன்று நடத்தப் பெற்றுள்ளன. எந்த மாவட்டமும் விடுபடாத நிலையில் போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசுத் தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன.

**80—**

**பால் தரத்தை அளக்கும் மின்னணுக் கருவி**

**வினா எண் 65766—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 24

*(அ) காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திற்கும் திரவ நைட்ரஜன் குடுவைகள் மற்றும் பால்தரமளக்கும் கருவி வழங்கப்பட்டுள்ளனவா ?*

*(ஆ) ஆம் எனில், ஒவ்வொன்றிற்கும் எத்தனை வழங்கப்பட்டுள்ளன ?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): காஞ்சிபுரம் மாவட்டத்தில் 26 சங்கங்களுக்கு, சங்கம் ஒன்றுக்கு 1 திரவ நைட்ரஜன் குடுவை வீதம் 25 திரவ நைட்ரஜன் குடுவைகளும், மற்றும் 13 பால் சங்கங்களுக்கு, சங்கம் ஒன்றுக்கு 1 தரம் அளக்கும் மின்னணுக் கருவி வீதம் 13 தரம் அளக்கும் மின்னணுக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.*

**81—**

## பாலாடைக்கட்டி உற்பத்தி

**வினா எண் 71047—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதியில் ஆவின் சார்பில் பாலாடைக்கட்டி உற்பத்திப் பிரிவை மேம்படுத்த அரசு முன்வருமா ?*

*(ஆ) ஆம் எனில், எப்போது ?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை மற்றும் சீர்காழி பகுதிகளில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் 1,000 லிட்டர் பால் கொள்முதல் செய்து அந்தப் பாலை உள்ளூரிலேயே விற்பனை செய்து வருகின்றன. சீர்காழி தொகுதியில் பால் உற்பத்தி மிகக் குறைவாக இருப்பதால் இப்பகுதியில் பாலாடைக்கட்டி உற்பத்தி செய்ய வாய்ப்பு ஏதுமில்லை.*



2006 ஜனவரி 24]

**82—**

## பால் உற்பத்தியாளர் சங்கத்திற்குப் புதிய கட்டடம்

**வினா எண் 74490—திரு. அ.இரா. மலையப்பசாமி:** *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், சுங்காரம்பட்டி ஊராட்சியில் செயல்பட்டு வரும் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?*

*(ஆ) ஆம் எனில், எப்போது ?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): நாமக்கல் மாவட்டம், கபிலர்மலைத் தொகுதி சுங்காரம்பட்டி ஊராட்சியில் உள்ள எம்.எம்.ஆர். 30. நடுப்புதூர் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கென கட்டடம் கட்டுவதற்கு சங்கத்தின் சார்பில் எவ்வித அடிமனையும் சொந்தமாக இல்லாததால் நடுப்புதூர் கிராம நத்தம் சர்வே எண் 133/2-ன்படி, 1.58.5 எக்டேர் பரப்பு உள்ள நத்தம் புறம்போக்கு நிலத்தில், கபிலர்மலை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அல்லது சட்டமன்ற உறுப்பினர் நிதி அல்லது அரசுத் திட்டத்தில் சங்கக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**83—**

## ஆவின் பால் விற்பனை நிலையம்

**வினா எண் 82942—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அறந்தாங்கியில் ஆவின் பால் விற்பனை நிலையம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி நகரில் ஆவின் பால் விற்பனை குறைவாக இருப்பதால் நேரிடையாக ஆவின் பால் விற்பனை நிலையம் தொடங்க வாய்ப்பில்லை.

**84—**

**பால் உபபொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை**

**வினா எண் 62943—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டையில் நுகர்வோர்களுக்குத் தேவையான பால் உபபொருட்கள் புதுக்கோட்டை நகரிலிருந்து சுமார் 50 கி.மீ. தொலைவில் உள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திலிருந்து பெறப்பட்டு தடையின்றி விற்பனை செய்யப்பட்டு வருகிறது. எனவே புதுக்கோட்டை ஒன்றியத்தில் பால் உற்பத்தி மிகக் குறைவாக இருப்பதால் புதுக்கோட்டையில் பால் உபபொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க வாய்ப்பில்லை.

**85—**

**மீனவர் கூட்டுறவுச் சங்கம்**

**வினா எண் 64854—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் மீனவர்கள் அதிகமாக வசிப்பதால் மீனவ மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். மீனவ மகளிர்கள் குறைந்தபட்சம் 25 பேர்கள் சேர்ந்து ஒரு கிராமத்திற்கு ஒரு மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கலாம். மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க சம்பந்தப்பட்ட மாவட்ட மீன் துறை உதவி இயக்குநர் அவர்களைத் தொடர்பு கொண்டால் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பது குறித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) சீர்காழி தொகுதி மீனவ மகளிர், மாவட்ட மீன் துறை உதவி இயக்குநரை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரடியாக சென்று மனு செய்யலாம்.

**86—**

**உயர்ந்த ரக மீன்களை வளர்த்தல்**

**வினா எண் 69995—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை புல்மலையில் தங்கும் விடுதிக்கு எதிரில் உள்ள நீரோடையில் உயர்ந்த ரக மீன்கள் வளர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வால்பாறை புல்மலையில் தங்கும் விடுதிக்கு எதிரில் உள்ள நீரோடையில் உயர்ந்த ரக மீன்கள் வளர்க்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

**87—**

**மீன் பதப்படுத்தும் திட்டம்**

**வினா எண் 71034—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி கீழமூவர்கரையில் மீன் பதப்படுத்தும் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சீர்காழி தொகுதி கீழமூவர்கரையில் மீன் பதப்படுத்தும் தொழிற்சாலை கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**88—**

## செயற்கை தாவரப் பாறைகளை உருவாக்குதல்

**வினா எண் 75698—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் செயற்கை தாவரப் பாறைகள் கடலுக்கடியில் உருவாக்கவும், அமைக்கவும் அரசு திட்டம் வகுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு மாவட்டத்தில் 1999 ஆம் ஆண்டு, மத்திய அரசின் 100 சதவீத நிதியுதவியுடன் கூடிய திட்டங்களின்கீழ், பழைய நடுக்குப்பம் அண்மைக் கடல் பகுதியில் ரூ. 3.20 இலட்சம் செலவில் செயற்கை மீன் உறைவிடம் (Artificial Reef) அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு மீனள மேம்பாட்டு இயக்கத்தின்கீழ் தமிழ்நாடு அண்மைக் கடலோரப் பகுதிகளின், மீன் வளத்தையும் பெருக்கும் முகத்தான், 5 ஆண்டுகளில் 50 இடங்களில் ஆண்டொன்றுக்கு 10 இடங்களில் 10 செயற்கை மீன் உறைவிடங்கள் வீதம் ரூ. 500.00 இலட்சம் செலவில் அமைத்திட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதற்கு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தினைப் பொறுத்தவரையில், செயற்கை மீன் உறைவிடங்கள் அமைப்பதற்கு தகுந்த இடங்களாக பனையூர் பெரியகுப்பம், பனையூர் சின்னக்குப்பம் மற்றும் கடப்பாக்கம் ஆகிய இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. மத்திய அரசின் செலவின





ஒப்புதல் பெறப்பட்டபின்னர், நிதி ஒதுக்கீட்டுக்குட்பட்டு இவ்வுறைவிடங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**89—**

## மீனவர் ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

**வினா எண் 75748—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் எத்தனை மீனவர்கள் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்?

(ஆ) இவ்விவரங்கள் இம்மாவட்டத்திலுள்ள தொகுதி வாரியாக அளிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 12,145 மீனவர்களும் 4,175 மீனவ மகளிரும் ஆக மொத்தம் 16,320 மீனவர்கள் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(ஆ) தொகுதி வாரியான விவரம்:

| வ.எண் | தொகுதி | மீனவர் | மீனவ மகளிர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | தாம்பரம் | 2,898 | 895 | 3,793 |
| 2. | திருப்போரூர் | 3,008 | 1,097 | 4,105 |
| 3. | செங்கற்பட்டு | 2,641 | 1,136 | 3,777 |
| 4. | மதுராந்தகம் | 1,932 | 452 | 2,384 |
| 5. | அச்சிறுபாக்கம் | 1,666 | 395 | 2,261 |
| | மொத்தம் | 12,145 | 4,175 | 16,320 |

**90—**

## மீன்களை வெளிநாட்டிற்கு அனுப்பும் திட்டம்

**வினா எண் 82299—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஜனவரி 24

(அ) வால்பாறை தொகுதி, தீரார் அணை, சோலையார் அணை, பரம்பிக்குளம் அணை மற்றும் ஆழியார் அணையிலிருந்து அதிக அளவு மீன்பிடித்து பதப்படுத்தி வெளிநாட்டிற்கு அனுப்பும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வால்பாறை தொகுதி, தீரார் அணை மற்றும் சோலையார் அணைகளிலிருந்து அதிக அளவு மீன் பிடித்து பதப்படுத்தி வெளிநாட்டிற்கு அனுப்பும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. பரம்பிக்குளம் அணை பொதுப் பணித் துறை கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. அவ்வணையில் மீன்பிடிப்பு ஏதும் தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தால் நடத்தப்படுவதில்லை. ஆழியார் அணை தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. அவ்வணையில் இருந்து பிடிக்கப்படும் மீன்கள் உள்ளூர் மீன் விற்பனை மூலம் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. உள்ளூர் விற்பனை போக எஞ்சிய மீன்கள் அக்கழகம் மூலம் நிறுவப்பட்டுள்ள மீன் விற்பனை அங்காடிகளுக்கு வழங்கப்பட்டு பொதுமக்களுக்கு நியாயமான விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில் அதிக அளவு மீன்வரத்து இவ்வணையில் கிடைப்பது இல்லை. எனவே மீன்களைப் பதப்படுத்தி வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கு ஏதுவான சாத்தியக்கூறுகள் இல்லை.

**91—**

## ஆய்வாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

**வினா எண் 84017—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரிலுள்ள மீன் துறை உதவி ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?



2006 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சீர்காழி நகரிலுள்ள மீன் துறை உதவி ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**92—**

## மீன் அங்காடி

**வினா எண் 84116—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் வேலையில்லா பட்டதாரிகளுக்கு மீன் அங்காடிகள் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): புதுக்கோட்டை மாவட்டத்தில் வேலையில்லா பட்டதாரிகளுக்கு மீன் அங்காடிகள் கட்டிக் கொடுக்க திட்டம் ஏதும் அரசிடம் தற்போது பரிசீலனையில் இல்லை.

**93—**

## மீன்களை விற்பதற்கு மூன்று சக்கர வாகனம்

**வினா எண் 84117—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீனவ குடும்பங்களைச் சேர்ந்த படித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு மீன்களை விற்பதற்கு மூன்று சக்கர வாகனங்கள் மானிய விலையில் வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

மீனவ குடும்பங்களைச் சேர்ந்த படித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு மீன்களை விற்பதற்கு மூன்று சக்கர வாகனங்கள் மானிய விலையில் வழங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**94—**

**ஓய்வூதியம் வழங்கும் திட்டம்**

**வினா எண் 84128—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அடையாள அட்டை வைத்துள்ள 60 வயதுக்கு மேற்பட்ட மீனவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அடையாள அட்டை வைத்துள்ள 60 வயதிற்கு மேற்பட்ட மீனவ முதியவர்களுக்கு ஓய்வூதியம் ஏதும் இத்துறை மூலம் வழங்கப்படுவதில்லை. தமிழகத்தில் பொதுவாக அனைத்துத் தரப்பு வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கு "வருவாய்த் துறை" மூலம் மாதாந்திர உதவித் தொகையை அரசு வழங்கி வருகிறது.

**95—**

**மீன் வளர்க்க பயிற்சி அளித்தல்**

**வினா எண் 84132—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மீன் வளர்க்க பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு என்று தனியாக மீன் வளர்க்க பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் பழவேற்காட்டில் உள்ள மீனவ மகளிர் சுய உதவிக் குழு



உறுப்பினர்களுக்கு இறால் தலை கழிவிலிருந்து கோழி தீவனம் தயாரிக்கும் பயிற்சி மற்றும் கடற்பாசி வளர்ப்பதற்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மேலும் சென்னை, திருவாரூர், மதுரை, தூத்துக்குடி, கோவை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள மீனவ மகளிர் குறிப்பாக தாழ்த்தப்பட்ட/பழங்குடியின மீனவ மகளிருக்கு வண்ண மீன் வளர்ப்பிற்கான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**96—**

**மீனவர் அங்காடி**

**வினா எண் 84133—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி நகரில் அருகன்குளம் அருகில் கட்டி முடிக்கப்பட்டு செயல்படாமலுள்ள மீனவர் அங்காடி எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

29-9-2005 அன்று முதல் அறந்தாங்கி மீன் விற்பனையாளர் சுய உதவிக் குழுவினர் இந்த மீனவர் அங்காடியை பொறுப்பு ஏற்று நடத்தி வருகின்றனர்.

**97—**

**ஓவியர்கள் நல வாரியம்**

**வினா எண் 76088—திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்திலிருந்து தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்?

(இ) அவர்களுக்கு என்ன வசதி செய்யப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த ஓவியர்கள் 39 பேர் தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தில் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

[2006 ஜனவரி 24

(இ) வாரியத்தில் பதிவு செய்து கொண்டுள்ள ஓவியர்கள் உட்பட தொழிலாளர்கள் அனைவருக்கும் கீழ்க்கண்ட உதவித் தொகைகள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| 1. | **விபத்து காப்பீடு திட்டம்**<br>(அ) விபத்து இறப்பு<br>(ஆ) விபத்து ஊனம் | ரூ.1,00,000/-<br>ஊனத்தின் தன்மைக்கேற்ப |
| 2. | இயற்கை மரண உதவி | ரூ.15,000/- |
| 3. | ஈமச் சடங்கு உதவி | ரூ.2,000/- |
| 4. | கல்வி உதவித் தொகை— | |
| | (அ) 10-ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | ரூ.1,000/- |
| | (ஆ) 10-ஆம் வகுப்பு தேர்ச்சி | ரூ.1,000/- |
| | (இ) 11-ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | ரூ.1,000/- |
| | (ஈ) 12-ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | ரூ.1,500/- |
| | (உ) 12-ஆம் வகுப்பு தேர்ச்சி | ரூ.1,500/- |
| | (ஊ) முறையான பட்டப் படிப்பு<br>விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ.1,500/-<br>ரூ.1,750/- |
| | (எ) முறையான பட்ட மேற்படிப்பு<br>விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ.2,000/-<br>ரூ.3,000/- |
| | (ஏ) தொழில்நுட்ப பட்டப் படிப்பு<br>விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ.2,000/-<br>ரூ.4,000/- |
| | (ஐ) தொழில்நுட்ப பட்ட மேற்படிப்பு<br>விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ.4,000/-<br>ரூ.6,000/- |



2006 ஜனவரி 24]

| | | |
|---|---|---|
| | (ஒ) ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு<br>விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ.1,000/-<br>ரூ.1,200/- |
| 5. | திருமண உதவி | ரூ.2,000/- |
| 6. | மகப்பேறு உதவி (பெண் தொழிலாளர்களுக்கு மட்டும்) | ரூ.4,000/- |
| 7. | கண் கண்ணாடி வாங்கிட உதவி | ரூ.500/- வரை |

**98—**

## தொழிலாளர் நல மையங்கள்

**வினா எண் 76151—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்ணாகரம் தொகுதியில் 2004 ஆம் ஆண்டில் தொழிலாளர் நல மையங்கள் அமைக்கப்பட்டுள்ளனவா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டத்தில் உள்ள பெண்ணாகரம் தொகுதியில் 2004 ஆம் ஆண்டில் தொழிலாளர் நல மையங்கள் ஏதும் அமைக்கப்படவில்லை.

**99—**

## மின் வாரியத்தில் பணிபுரிபவர்கள்

**வினா எண் 79193—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நீண்ட காலமாக எவ்வளவு பேர் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வருகிறார்கள்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மின்வாரியத்தில் தினக்கூலி அடிப்படையில் எவரும் பணிபுரியவில்லை.

**100—**

## தொழிலாளர் தகராறுகள்

**வினா எண் 81967—திரு. ப. அரசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதியில் 2001 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை ஏற்பட்ட தொழிலாளர் தகராறுகள் எத்தனை?

(ஆ) அவற்றில் தீர்வு காணப்பட்டவை எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) அறந்தாங்கி தொகுதியில் 2001 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை ஏற்பட்ட தொழிலாளர் தகராறுகள் .. 9

(ஆ) அவற்றில் தீர்வு காணப்பட்டவை:—

| | | |
|---|---|---|
| 1. | பிரிவு 12 (3)-ன் மூலம் | .. 1 |
| 2. | பிரிவு 12(4)-ன் மூலம் | .. 2 |
| 3. | இதர முடிவுகள் மூலம் | .. 6 |
| | மொத்தம் | .. 9 |

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று கொடுத்திருந்தேன். தயவுசெய்து எடுங்கள். (குறுக்கீடுகள்)

## 3. கவன ஈர்ப்புகள்

### (அ) துறைமுகத்திலிருந்து எடுத்துச்செல்லும் வேதிப் பொருட்கள் சாலைகளில் சிதறாமல் இருக்க வாகன உரிமையாளர்களுக்குக் கட்டுப்பாடுகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் (குறுக்கீடு) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. பி.கே. சேகர்பாபு. (குறுக்கீடுகள்)

(திரு. மு.பெ. சாமிநாதன், திரு. எ.வ. வேலு, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் ஆகியோர் எழுந்து நின்று ஏதோ கேட்க முற்பட்டனர்.)

***திரு. பி.கே. சேகர்பாபு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை துறைமுகத்திலிருந்து வேதிப் பொருட்களை எடுத்துச்செல்லும்போது சாலைகளில் சிதறுவதால் பொதுமக்களுக்கு ஏற்படும் சுகாதாரக் கேடுகள்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்)

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு—தொடர்ச்சி

**திரு. சி. ஞானசேகரன்:** ** ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று கொடுத்திருந்தேன்.

[2006 ஜனவரி 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் என்னுடைய அறையில் வந்து பேசுங்கள். மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**திரு. சி. ஞானசேகரன் :** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. உட்காருங்கள். (குறுக்கீடு) என்னுடைய அறையில் வந்து பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர். (குறுக்கீடு)

## 3. கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி

### (அ) துறைமுகத்திலிருந்து எடுத்துச் செல்லும் வேதிப் பொருட்கள் சாலைகளில் சிதறாமல் இருக்க வாகன உரிமையாளர்களுக்குக் கட்டுப்பாடுகள்—தொடர்ச்சி

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

சென்னைத் துறைமுகத்திலிருந்து கந்தகம் போன்ற வேதிப் பொருட்களை தொழிற்சாலைகளுக்கு எடுத்துச்செல்லும்போது சாலையில் சிந்திவிடாமல் இருக்க சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகம், பொருட்களை ஏற்றிச் செல்லும் அனைத்து வாகன உரிமையாளர்களும் கீழ்க்கண்ட நெறிமுறைகளைப் பின்பற்ற அறிவுறுத்தி வருகிறது :

1. சாலையில் இரசாயனப் பொருட்கள் சிந்துவதைத் தவிர்க்க நல்ல முறையில் பராமரிக்கப்படும் வாகனங்களை மட்டும் இரசாயனங்கள் மற்றும் இதர பொருட்களைக் கொண்டு செல்ல உரிமையாளர்கள் பயன்படுத்த வேண்டும்.

2. வாகன உரிமையாளர்கள் இரசாயனப் பொருட்களை வாகன உயரத்திற்கு மேல் குவித்து வைத்துக் கொண்டு செல்லக்கூடாது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2006 ஜனவரி 24] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

3. இரசாயனப் பொருட்களைக் கொண்டு செல்லும் வாகனங்கள் அனைத்தும் தார்பாலின் கொண்டு கயிற்றினால் நல்ல முறையில் இறுகக் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

4. வாகனத்தின் இரு பக்கங்கள் மற்றும் சக்கரங்களும் இரசாயனத் துகள்கள் ஏதுமின்றி சுத்தம் செய்த பிறகே கொண்டு செல்ல வேண்டும்.

5. இரசாயனப் பொருட்களைக் கொண்டு செல்லும் அனைத்து வாகனங்களும் மிதமான வேகத்துடன் செல்ல வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இதுகுறித்து வாரியமும் கடந்த 14–11–2005 அன்று வாகன உரிமையாளர்கள் மற்றும் துறைமுகப் பொறுப்புக் கழகத்தினரை அழைத்து, இத்தகைய செயல்கள் நிகழாவண்ணம், தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை துறைமுகத்திற்கு எடுத்துச் செல்லும்போது முடிந்த தூரம் வரையில் இரயில் மூலமாகவும், மற்ற குறைந்த தூரத்தை சாலைகள் மூலம், பாதுகாப்புடன் எடுத்துச்செல்ல திருவாளர்கள் மெட்ராஸ் ஃபெர்டிலைசர்ஸ், கோரமண்டல் ஃபெர்டிலைசர்ஸ் மற்றும் தமிழ்நாடு பெட்ரோ ப்ராடெக்ட்ஸ் ஆகிய தொழிற்சாலைகளுக்கு வாரியத்திலிருந்து எண் டி 12/தநாமாகவா/பல்வகை/25779/99/செ/ நாள் 22–11–2005 மூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் காவல் துறை மேற்படி சாலைகளில் வாகனங்கள் ஏதும் பாதுகாப்பின்றி வேதிப் பொருட்களை எடுத்துச் செல்லுமானால் கண்காணித்து நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் கூறியுள்ள பொருள்கள்பற்றி படித்துத் தெரிந்துகொண்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ள வேதிப் பொருட்கள் ஏற்றிச் செல்லுகின்ற லாரிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற கட்டுப்பாடுகள் இருந்தாலும், கடந்த 10 நாட்களுக்கு முன்புகூட இந்த வேதிப் பொருட்களை ஏற்றிச் சென்ற லாரியிலிருந்து நச்சுத் தன்மை வாய்ந்த அந்த வேதிப் பொருட்கள் சிதறியதால் அந்தப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடு நிலவியதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கின்றது. ஆகவே, இந்த வேதிப் பொருட்களை ஏற்றிச் செல்லுகின்ற நேரமானது அரசு

[திரு. பி.கே. சேகர்பாபு] [2006 ஜனவரி 24

அலுவலகங்கள் செயல்படுகின்ற நேரங்களைத் தவிர்த்து இரவு நேரங்களில் இப்படிப்பட்ட வேதிப் பொருட்களை ஏற்றிச் செல்வதற்குண்டான கட்டுப்பாடுகளைக் கொண்டு வருவதுடன், இந்த வேதிப் பொருட்களை ஏற்றிச் செல்லும்போது இப்படிப்பட்ட அசாதாரண சூழ்நிலை ஏற்படுகின்றபொழுது சம்பந்தப்பட்ட அந்த வாகன உரிமையாளர் மீது இதுவரையில் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாசு கட்டுப்பாடு வாரியமானது அந்தத் தொழிற்சாலைகளில் அதிக மாசு மற்றும் விபத்து ஏற்பட்டால் நடவடிக்கை எடுக்கலாம். இது சாலையில், லாரியில் ஏற்றிவரும்போது மாசை ஏற்படுத்துவதால் போக்குவரத்துக் கழகத்திற்கு அறிவுரை கூறப்பட்டு, அவர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு மாசு கட்டுப்பாடு வாரியம், போக்குவரத்துத் துறை வட்டார அலுவலர்களுக்கு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியுள்ளது. மேலும், Sulphur போன்ற வேதிப் பொருட்கள் கப்பலில் வந்து இறங்கும்பொழுது துறைமுகத்திலிருந்து மாசு கட்டுப்பாடு வாரியத்திற்குத் தகவல் தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அப்படித் தகவல் தெரிவிக்கும்பொழுது இரவில் ஏற்றிச் செல்வதற்குத் தக்க ஆலோசனை வழங்கியுள்ளது. மற்றும் சிந்தாமல், அதிகச் சுமையை ஏற்றாமல், மக்களுக்கும் எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் இந்த வேதிப் பொருட்களை ஏற்றிச் செல்லவேண்டுமென்று பெரிய வேதித் தொழிற்சாலைகளுக்கு அறிவுரை கூறப்பட்டுள்ளது. மேலும் காவல் துறைக்குத், தவறான முறையில் அதிகச் சுமைகளை ஏற்றி வருகின்ற லாரிகள்மீது நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற வேதிப் பொருட்கள் வைக்கின்ற பாரிமுனை போன்ற பகுதிகளில் இப்படி இரசாயனப் பொருட்கள் வைத்திருக்கின்ற godown-களில் அவ்வப்போது தீப்பிடிக்கும் சம்பவங்கள் நடைபெறுகின்றன. இப்படித் தீப்பிடிக்கும் சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு ஏதேனும் அரசுத் துறையில் தகுந்த முன்னெச்சரிக்கை



2006 ஜனவரி 24] [திரு. பி.கே. சேகர்பாபு]

நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படித் தீப்பிடித்து எரிந்ததாக எந்தத் தகவலும் தெரியவில்லை. எங்கு எரிந்தது என்று கூறினால், அதற்கு பாதுகாப்பான நடவடிக்கையை எடுப்பதற்கு மாசு கட்டுப்பாடு வாரியம் தக்க நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## (ஆ) வால்பாறை தோட்டக் குடியிருப்புப் பகுதிகளில் வன விலங்குகளால் ஏற்படும் உயிர்ச் சேதத்தைத் தவிர்க்க தெரு விளக்குகள் அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை தோட்டக் குடியிருப்புப் பகுதிகளில் வன விலங்குகளால் ஏற்படும் உயிர்ச்சேதத்தைத் தவிர்க்க போதிய தெரு விளக்குகள் அமைக்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

கோவை மாவட்டம், வால்பாறை நகராட்சியில் 56 எஸ்டேட் குடியிருப்புப் பகுதிகள் உள்ளன. வால்பாறை மூன்றாம் நிலை நகராட்சியில் மொத்தம் பின்வரும் தெரு விளக்குகள் பராமரிக்கப்படுகின்றன :

| | | |
|---|---|---|
| 4 அடி குழல் விளக்குகள் | .. | 1702 |
| சோடியம் ஆவி விளக்குகள் | ... | 125 |
| **மொத்தம்** | .. | **1827** |

[திரு. கே.பி. அன்பழகன்] [2006 ஜனவரி 24

56 எஸ்டேட் குடியிருப்புப் பகுதிகளில் 1676 தெரு மின்விளக்குகளும் ஏனைய நகராட்சிப் பகுதிகளில் 151 தெரு மின்விளக்குகளும் பராமரிக்கப்படுகின்றன.

மேலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.5.00 இலட்சம் உள்ளிட்ட ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் 98 தெரு மின்குழல் விளக்குகள் எஸ்டேட் குடியிருப்புப் பகுதிகளில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே உள்ள தெரு மின் விளக்குகளை பராமரிக்க மாதந்தோறும் ரூ.2.50 இலட்சம் மின்கட்டணமாகச் செலுத்தப்பட்டு வருகிறது. மேற்படி விளக்குகள் கூடுதலாக அமைக்கும்பட்சத்தில் ரூ.3.00 இலட்சம் பிரதி மாதம் மின் கட்டணம் செலுத்தப்பட வேண்டியிருக்கும்.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் ஒரு பெண், இரண்டு ஆண்கள் வேலை முடித்து வீடு திரும்பிக்கொண்டிருக்கும்போது யானையால் தாக்கப்பட்டு உயிர்ச்சேதம் ஏற்பட்டது. தற்போது உள்ள தெரு மின்விளக்குகள் பராமரிப்பினால், யானைகள் மற்றும் சிறுத்தைப் புலிகளினால் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படுவதில்லை.

எனவே, எஸ்டேட் குடியிருப்புப் பகுதிகளில் இயங்கி வரும் தெரு மின் விளக்குகள் தற்போதைக்கு போதுமானதாக உள்ளது.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். வால்பாறை சட்டமன்றத் தொகுதியிலுள்ள தேயிலை எஸ்டேட் குடியிருப்புகள் வாட்டர்பால்ஸ், கவர்கல், கருமலை, அக்காமலை, ஊசிமலை, பச்சமலை, அப்பர்பாரலை, வெள்ளமலை, சின்கோனா, நல்லகாத்தி, சோலையாறு, காஞ்சமலை, நல்லமுடி, முடீஸ், ஆனைமுடி, தோனிமுடி, கஜமுடி, வில்லோனி, தாய்முடி, ஹைபாரஸ்ட், வாகமலை, டாப் ஸ்லிப் போன்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் குடியிருக்கின்ற பகுதிகளில் வனவிலங்குகளான யானைகள், சிறுத்தைப் புலிகள், பைசன் ஆகியவை தொடர்ந்து நாள்தோறும் வந்துகொண்டிருக்கின்றன என்பதை அரசுக்குத் தெரியப்படுத்துவது எனது கடமையென்று கருதுகின்றேன். வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், மாலை 6 மணிக்கு மேல் வீட்டை விட்டு வெளியே வருவதற்கு பயந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக, தெரு விளக்குகள் அங்கே



2006 ஜனவரி 24] [திரு. கோவை தங்கம்]

பற்றாக்குறையாக இருப்பதால், பெண்களும், குழந்தைகளும் வெளியிலே வருவதற்கு மிகவும் பயப்படுகின்றார்கள். ஏற்கெனவே போதுமான தெரு விளக்குகள் இல்லாததால், யானைகள் இருட்டிலே நின்றுகொண்டிருக்கின்றன. குடியிருப்புப் பகுதிக்குச் செல்லுகின்றபோது, அந்தப் பாதையிலே நிற்பதால், கடந்த நாலரை ஆண்டுக் காலமாக சுமார் 15 பேர்களுக்கு மேல் யானைகளாலும், சிறுத்தைப் புலிகளாலும், பைசன்களாலும் தாக்கப்பட்டு இறந்திருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இன்னும் கூடுதலாக தெரு விளக்குகள் வழங்குவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், கோவை தங்கம் கடந்த நாலரை ஆண்டுகளில் 15 நபர்கள் அங்கு காட்டு வன விலங்குகளால் தாக்கப்பட்டனர் என்ற தவறான தகவலைக் கொடுத்திருக்கின்றார். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், மூன்று நபர்கள் மட்டும் அந்தப் பகுதியிலே யானைகளால் தாக்கப்பட்டு உயிரிழந்திருக்கின்றார்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது, அந்த 56 எஸ்டேட் குடியிருப்புப் பகுதிகளிலே போதிய தெரு விளக்குகளை அதாவது 1827 தெரு விளக்குகளைப் போட்டதிலிருந்து கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக இதுபோன்ற சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. மேலும் சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாயிலும், மற்ற நிதியாதாரத்திலே 6 இலட்சம் ரூபாயிலும் ஆக 11 இலட்சம் ரூபாய் அளவிலே 98 மின்சார விளக்குகளை கூடுதலாக அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. கூடிய விரைவிலே அந்தக் கூடுதல் 98 மின்சார விளக்குகள் அந்தப் பகுதியிலே அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற மாதம்கூட நல்லகாத்தி, நல்லமுடி, காஞ்சமலை, முடீஸ்

[திரு. கோவை தங்கம்] [2006 ஜனவரி 24

உயர்நிலைப் பள்ளி, முடீஸ் மார்க்கெட், வாட்டர்பால்ஸ், கவர்கல், காஞ்சமலை, சின்கோனா ஆகிய பகுதிகளிலுள்ள கடைகளையும், வீடுகளையும் யானைகள் அடித்து நொறுக்கிவிட்டன. வனத் துறையினர் உடனே வந்து..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், விளக்கு போடுகிறேன் என்று அமைச்சர் சொல்லிவிட்டார்.

**திரு. கோவை தங்கம்:** ஒரே ஒரு நிமிடம். வனத் துறையினர் வந்து அந்த யானைகளை காட்டிற்குள் அனுப்பி வைத்தார்கள். இப்போது இருக்கின்ற தெரு விளக்குகள் போதவில்லையென்பதால், அங்கே யானைகளால் தாக்கப்படுகின்றார்கள், சிறுத்தைப் புலி, பைசன்களாலும் தாக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். ஏராளமான தெரு விளக்குகள் எரியாமல் இருக்கின்றன. அங்கே பழுதடைந்த தெரு விளக்குகளை, வால்பாறை அலுவலகத்திற்குத் தகவல் கொடுத்து, அவர்கள் சென்று பார்ப்பதற்குக் காலதாமதம் ஆகின்றது. ஆகவே வால்பாறையிலே இருக்கின்ற மின்சார இலாகாவிலே போதுமான பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதோடு வால்பாறையிலே சோடியம் ஆவி தெரு விளக்குகள் அமைத்துக் கொடுத்தால் அங்கிருக்கின்ற வெளிச்சத்தின் காரணமாக, யானைகள் குடியிருப்புப் பகுதிகளுக்கு வராமல் இருப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல டாப் ஸ்லிப் செல்லுகின்ற பகுதி. வால்பாறை கீழ்ப் பகுதியிலே இருக்கின்ற ஊராட்சிகளுக்கும், கோட்டூர் பேரூராட்சி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி போன்ற பகுதிகளுக்கும் போதுமான தெரு விளக்குகளை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட எஸ்டேட் பகுதிகளிலே கிட்டத்தட்ட 1676 தெரு விளக்குகள் அங்கே எஸ்டேட் பகுதிகளில்தான் போடப்பட்டிருக்கின்றன. ஏனைய நகராட்சிப் பகுதிகளிலே 151 தெரு விளக்குகள் மட்டும்தான் இருக்கின்றன. ஆகவே அவர், கடந்த வாரம் என்று குறிப்பிட்டார், அந்த நேரத்திலே அந்தப்



2006 ஜனவரி 24] [திரு. கே.பி. அன்பழகன்]

பகுதியிலே எந்தவிதமான உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை. மேலும் கூடுதலாக 98 மின் விளக்குகள் போடப்பட்டு அந்த நகராட்சிப் பகுதிகளிலே 56 எஸ்டேட் குடியிருப்புகளிலும் மேலும் தேவையான மின் விளக்குகள் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2006 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் நூற்று முப்பத்து இரண்டாவது முதல் நூற்று முப்பத்து ஐந்தாவது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். திருமதி வளர்மதி ஜெபராஜ்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2006 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்து நான்காவது அறிக்கையினை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்குரிய இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது

என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கு அனுமதியளித்த தங்களுக்கு என்னுடைய அகில இந்திய பார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பில் உள்ளப்பூர்வமான நன்றியையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த பன்னிரண்டாவது சட்டமன்றப் பேரவையைப் பொறுத்த அளவிலே இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையோடு நிறைவுபெற்று நாம் வருகின்ற சட்டமன்றத் தேர்தலைச் சந்திக்கின்ற இந்த நேரத்தில் இந்த அவையிலே கடந்த நான்கு ஆண்டுகளாக – ஐந்து ஆண்டுகளாக நடந்த நிகழ்ச்சிகளை நான் குறிப்பிடுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். பேரவைத் தலைவர் என்கின்ற முறையில் உங்களைப் பொறுத்த அளவிலே நான் கருதுவது,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்கின்ற வள்ளுவனுடைய குறளுக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அவர் சார்ந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், இந்த அவையைச் சிறப்பாக சீரோடு நடத்திச் செல்வதற்கு பக்குவமானவர், நடத்திச் செல்வதற்கு உரிய தகுதியைப் பெற்றவர், நடத்திச் செல்கின்ற ஆற்றலைப் பெற்றிருக்கின்றவர் என்பதனை மிக ஆராய்ந்து தெளிந்த சிந்தனையோடு உங்களை அந்த இருக்கையிலே அமர்த்தியிருக்கின்ற காரணத்தினால், இந்த ஐந்தாண்டுகளும் சட்டமன்றத்திலே பல்வேறு கருத்து மோதல்கள் ஏற்பட்டாலுங்கூட, உறுப்பினர்கள் மோதிக்கொண்டார்கள் என்கின்ற வரலாறு இல்லாத அளவிற்கு இந்த அவையை நடத்திச் சென்றிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பல காலகட்டங்களிலே நாம் பார்த்திருக்கிறோம். இந்த அவையிலே வருகின்ற பிரச்சினைகளின் மூலமாக உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் கைகலந்து, அதன்மூலமாக காயங்கள் ஏற்பட்டு மருத்துவமனைக்குச் செல்கின்ற நிலையைக்கூட நாம் கண்டிருக்கிறோம். ஆனால் இந்த அவையைப் பொறுத்த அளவிலே அந்த நிலை ஏற்படாத அளவிற்கு இங்கிருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் – ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க் கட்சியாக இருந்தாலும் சரி – அனைவரையும் ஒழுங்குபடுத்தி, பக்குவத்தோடு, பாங்கோடு நடத்திச் சென்றிருக்கிறீர்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நல்லமுறையிலே உறுதுணையாக இருந்திருக்கிறார்கள். அவர்களுடைய வழிகாட்டல், நெறிமுறைகளின் காரணமாக நமது சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் மிகப் பக்குவத்தோடு நடந்திருக்கிறார்கள். இந்த அவையிலே எந்தவிதமான இடையூறுகளும் இல்லாமல் அவையை நடத்திச் செல்வதற்கு முதலமைச்சர் அவர்கள் உதவி செய்திருக்கிறார்கள். எனவே, உங்களை சட்டப்பேரவையில் இருத்தியதற்காகவும், இந்த அவையை நல்லமுறையிலே வழி நடத்துவற்கு உங்களுக்குப் பக்கபலமாக இருந்ததற்காகவும், பல்வேறு நல்ல திட்டங்களை இந்த அவையிலே அறிவித்து, இன்றைக்கு நாட்டு மக்களுடைய மனங்களிலே நீங்காத இடத்தைப் பெற்றிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றியினைக் காணிக்கையாக்கிக்கொள்கின்றேன்.



முற்பகல் 10-15

அதோடுகூட இங்கு இருக்கிற நமது அமைச்சர் பெருமக்கள் பல்வேறு வினாக்கள் எழுப்புகின்றபோதும், பல்வேறு பிரச்சினைகளை அவரவர்கள் துறையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்கின்றபோதும் அவற்றிற்கெல்லாம் முகம் சுளிக்காது இனிய முகத்தோடு அந்த வினாக்களுக்கும் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் செயல்பாடுகளுக்கும் நல்ல விதத்திலே சிறந்த முறையிலே பதிலளித்து இருக்கிறார்கள். இந்த அவையை கௌரவத்தோடு நடத்திச் செல்வதற்கு உறுதுணையாகவும், உதவியாகவும் இருந்திருக்கிறார்கள். எனவே, இந்த அவையிலே வீற்றிருக்கின்ற அமைச்சர் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியை காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

அதோடுகூட நமது சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களும், எதிர்க்கட்சியிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களும்கூட ஓரளவிற்கு ஒத்துழைப்புத் தந்ததன் மூலமாகத்தான் இந்த அவை நல்ல விதத்திலே நடந்து இன்றைக்கு இது நிறைவுபெறுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதனால் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்து இந்த உரையின்மீது என்னுடைய கருத்துகளைக் கூறுவதற்கு விழைகிறேன்.

கடந்த சில தினங்களுக்கு முன்னால் ஆளுநர் உரைக்குப் பதிலளிக்கின்ற நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு இனிய அறிவிப்புகளை இந்த அவையிலே அறிவித்தார்கள். அதிலே இந்த அரசுக்கு உறுதுணையாக இருந்து அரசினுடைய செயல்பாடுகளை எல்லாம் நடைமுறைப்படுத்துகின்ற, அரசுக்குப் பக்கபலமாக இருக்கின்ற

அரசு ஊழியர்களுக்கு அவர்கள் அளித்திருக்கின்ற சலுகை என்பது இன்றைக்கு அரசு ஊழியர்கள் மத்தியிலே மிகுந்த வரவேற்பைப் பெற்றுத் தந்திருக்கிறது என்பதிலே எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய அகவிலைப்படியில் 50 சதவிகிதத்தை அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்திலே இணைத்திருக்கிறார்கள் என்பதும் 67 சதவிகிதமாக இருந்ததை 71 சதவிகிதமாக 4 சதவிகிதம் உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள் என்பதும் அவர்கள் மத்தியிலே மிகுந்த வரவேற்பையும், பாராட்டுதலையும் தந்து கொண்டிருக்கிறது. இருந்தாலுங்கூட, நம்முடைய எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்றவர்கள் எல்லாம் பழைய கசப்பான உணர்வுகள் எல்லாம் அவர்களிடத்திலேயிருந்து மாறிவிடுமா, மறைந்துவிடுமா என்கின்ற ஒரு அபத்தமான வாதத்தை முன்வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். எத்தனைச் சம்பவங்கள் கடந்த காலங்களிலே நடந்த அசம்பாவிதங்களை எல்லாம் மாற்றி, இன்றைக்குத் தோளோடு தோள் கோர்த்து நிற்கின்ற அளவிற்கு இந்த அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை அவர்கள் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒருநேரத்திலே மத்தியிலே மாண்புமிகு குஜ்ரால் அவர்கள் ஆண்டு கொண்டிருக்கின்ற நேரத்தில், அன்றைக்கு ராஜீவ் காந்தி அவர்கள் தமிழக மண்ணிலே படுகொலை செய்யப்பட்டதன் காரணமாக அமைக்கப்பட்ட ஷா கமிஷன் அறிக்கை. (குறுக்கீடு) – ஜெயின் கமிஷன் அறிக்கை – அந்த அறிக்கையின் மூலமாக காங்கிரஸ் பேரியக்கம் அன்றைக்கு மாண்புமிகு குஜ்ரால் அரசுக்குக் கொடுத்துக் கொண்டிருந்த ஆதரவை நீக்கிக் கொள்கின்ற நேரத்தில், அன்றைக்கு ஒரு நிமிடம்கூட நாங்கள் எங்களுடைய பதவியிலிருந்து விலக மாட்டோம் என்று சொன்ன திராவிட முன்னேற்றக் கழகத்தின் அந்த கோஷத்தின் காரணமாக அன்றைக்கு ஒரு அரசு கவிழ்ந்து அதன் மூலமாக இந்த நாடு ஒரு தேர்தலைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இன்றைக்கு அதையெல்லாம் மறந்துவிட்டு, காங்கிரசோடு கை கோர்த்து நிற்கிறது திராவிட முன்னேற்றக் கழகம். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆதரவோடு இன்றைக்கு காங்கிரஸ் இருந்து கொண்டிருக்கிறது. நான் மதுரையைச் சேர்ந்தவன். அன்னை இந்திரா காந்தி அவர்கள் படுகொலையின்போது அன்றைக்கு தற்செயலாக நான் மதுரையிலே இருக்கின்ற செயின்ட் மேரீஸ் மேல்நிலைப் பள்ளியிலே என்னுடைய பிள்ளைகள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். பார்ப்பதற்காகச் சென்றவன். அந்த இடத்திலேதான் அன்னை இந்திரா



காந்தி அவர்களை மிகக் கொடுமையாகத் தாக்கி இரத்த வெள்ளத்தோடு வருகின்ற அந்தக் காட்சியைக் கண்கூடாகப் பார்க்க முடிந்தது. அதையெல்லாம் மறந்துவிட்டு இன்றைக்கு அரசியலிலே ஒன்றாக இருக்கின்ற நிலை இருக்கின்றபோது, அரசு ஊழியர்களுக்கு இந்த அரசு எதனால் அவர்களுக்கு இந்தச் சலுகைகள் எல்லாம் வழங்கமுடியாமல் இருந்தது என்பதை அவர்கள் உணர மாட்டார்களா? அவர்களுக்குத் தெரியாதா? (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–20*

இந்த அரசு வருகின்ற நேரத்தில் இருந்த நிதிநிலை தட்டுப்பாடு, நிதிப் பற்றாக்குறை. ஒவ்வொரு துறையிலும் பல ஆயிரம் கோடிகள் நஷ்டத்திலே இருந்த நிலையினை மாற்றவேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலை. இதையெல்லாம் நமது அரசு ஊழியர்கள் உணர மாட்டார்களா? கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள்தான் ஒரு சினிமாவிலே பாடியிருப்பார். அரசு ஊழியர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது 'ஒன்றாம் தேதி வந்துவிட்டால் கொண்டாட்டம். தேதி 20–க்கு மேல் திண்டாட்டம்' என்று சொல்லியிருப்பார். முதல்' தேதியிலே ஊதியம் பெருகின்றவர்கள், ஒன்றாம் தேதி வந்துவிட்டால் அந்தச் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு அவர்கள் செழுமையாக இருப்பார்கள். அவர்கள் குடும்பம் சந்தோஷமாக தங்களுக்கு வேண்டிய பொருட்களையெல்லாம் வாங்கிக்கொண்டு இருப்பார்கள். ஆனால், அதே நிலையிலே 20 ஆம் தேதியைத் தாண்டுகின்றபோது, கையில் இருக்கின்ற பணம் எல்லாம் செலவழித்துவிட்டு, அவர்கள் என்ன நினைக்கிறார்களோ அதை வாங்க முடியாத கஷ்டத்தில்கூட அன்றைக்கு இருப்பார்கள் என்பதை அன்றைக்கே சுட்டிக்காட்டினார். அதையெல்லாம் தெரிந்திருக்கின்ற அரசு ஊழியர்கள், தங்களுடைய மாதச் சம்பளத்தைப் பெற்று ஒரு மாதம்கூட நம்மால் சரியாக அந்த 30 ஆம் தேதி வரைக்கும் ஒரே சீராக செலவு செய்வதற்கு முடியவில்லை என்பதை உணர்ந்திருக்கின்ற அவர்கள், ஒரு அரசுக்கு ஏற்பட்டிருந்த நிதிநிலையை, நெருக்கடியை, அந்த நிர்வாகத்திலே பங்குகொண்டு, அவர்களும் அதையெல்லாம் சந்தித்தவர்கள் என்கின்ற முறையில் நிச்சயமாக அதைத் தெரிந்துகொண்டிருப்பார்கள். உங்களுடைய பேச்சுக்கள் எல்லாம் அவர்களிடத்திலே எடுபடாது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அரசு நிதிநிலையைச் சீர்திருத்திவிட்டதன் காரணமாக நமக்கு இத்தனைச் சலுகைகளையும் தந்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் உள்ளப்பூர்வமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

அதோடுகூட பல நாட்களாக இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கவில்லை, வாய்ப்பளிக்கவில்லை என்கின்ற நிலையை சொல்லிக்கொண்டிருந்ததற்கு மாறாக, இன்றைக்கு அந்த வேலை தடை நீக்கச் சட்டத்தையும் இந்த அவையிலே அறிவித்து, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்கின்ற உத்தரவாதத்தையும் தந்ததற்காக இந்த அரசை நான் வெகுவாகப் பாராட்டுவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இன்றைக்கு நமது தோழர்கள் எல்லாம் இருக்கிறார்கள். நேற்றைக்குக்கூட, தொழிலாளர்கள்மீது அக்கறைகொண்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எல்லா இடங்களிலும் ஓர் ஆர்பாட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். அது எதற்கு என்று சொன்னால், ஒட்டுமொத்தமாக இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற அத்தனை அரசு ஊழியர்களுக்கும், அவர்களுடைய வைப்பு நிதிக்குரிய வட்டி சதவிகிதம் *9.5*–ஆக இருந்ததை, *8.5*–ஆக குறைத்துவிட்டது மத்திய அரசு. மீண்டும் அவர்களுக்கு அந்த ஒரு சதவிகிதத்தைக் கூட்டித் தரவேண்டும் என்பதற்காக குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் எல்லாம் தொழிலாளர் தோழர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற நம்முடைய பங்கு அதிலே என்ன என்பதை சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். கடந்த *50* ஆண்டு கால வரலாறிலே, இடது சாரி கட்சிகளெல்லாம் காங்கிரசுக்கு எதிராக இருந்துகொண்டிருந்தவர்கள். இன்றைக்கு அதை ஆதரிக்கிறார்கள் என்று சொன்னால், அதிலே எவ்வளவு பெரிய மாற்றங்கள் வந்திருக்கின்றன என்பதையெல்லாம் நாம் சிந்தித்துப் பார்ப்பதற்குக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். எனவே, இந்த அரசு *(குறுக்கீடுகள்)* அதைத்தான் சொல்கிறேன். ஆதரவாக இருந்தாலுங்கூட, நாங்களும்கூட இப்படிப்பட்ட நிலைகளிலே எல்லாம் குரல் கொடுக்க வேண்டியவர்களாக இருந்துகொண்டிருக்கிறோம் என்பதுதான். இப்படி வருகின்றபோது அரசுடைமையாக்கப்பட்ட நிறுவனங்கள் எல்லாம் பொதுத் துறையிலிருந்து தனியார் துறைக்குச் செல்கின்றபோது அவற்றிற்கெல்லாம் குரல் கொடுக்கக்கூடிய நிலையிலே இருக்கிறோம் என்பதுதான் உண்மை. *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருணாகரன், நீங்கள் பேசும்போது சொல்லுங்கள். *(குறுக்கீடு)* நீங்கள் பேசும்போது சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* தவறாக ஒன்றும் சொல்லவில்லை. சந்தானம் பேசுங்கள்.



*(குறுக்கீடுகள்)* சந்தானம் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* அவர்களிடம் பேச வேண்டாம், நீங்கள் பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து நீங்கள் பேசும்போது சொல்லுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** அது போல, இன்றைக்கு இந்த அரசு பல்வேறு துறைகளிலும் பல சாதனைகளைப் படைத்திருக்கிறது. பள்ளிக் கல்வித் துறையை எடுத்துக்கொள்கின்ற நேரத்தில் அந்தப் பள்ளித் துறையிலே எத்தனை தொடக்கப் பள்ளிகளை, நடுநிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தியிருக்கிறது என்கிற விவரங்களையெல்லாம் இந்த அவையிலே பல்வேறு உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். நான் ஒன்றை மட்டும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நான் பல ஆண்டுகளாக கிராமப்புறங்களிலே இருக்கின்ற அந்தத் தொடக்கப் பள்ளிகளையெல்லாம் பார்த்தவன். ஊராட்சி ஒன்றியத்திலே தலைவராகக்கூட இருந்து அதன்மூலமாக அந்தக் காலத்திலே கட்டடங்கள் கட்டுகின்றபோதெல்லாம் அந்தத் தொடக்கப் பள்ளிகளுக்கு ஓடு வேய்ந்த கூரை, இல்லையென்றால் சிமெண்ட் தகடுகள் வேய்ந்த கூரையோடுதான் பள்ளிகளைப் பார்த்திருக்கிறேன். இந்த அரசு வந்த பிறகுதான் ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கின்ற தொடக்கப் பள்ளிகளுக்கு கான்கிரீட் கூரை வேய்ந்த *(மேசையைத் தட்டும் ஒலி)* தரமான கட்டடங்களைக் கட்டி, அதிலே மாணவர்கள் பயின்று கொண்டிருக்கின்ற ஒரு நல்ல நிலையை இன்றைக்கு நம்மால் பார்க்க முடிகிறது.

அது போல, அந்த மாணவர்களுக்குச் செய்திருக்கிற நன்மைகளை எல்லாம் இங்கே பல்வேறு கால கட்டங்களிலே நாம் குறிப்பிட்டிருக்கிறோம். பேருந்து பாஸ் வழங்குதல், இலவச பாட புத்தகங்கள் வழங்குதல், இதுபோல பல சலுகைகளை அந்த மாணவர்களுக்கு வழங்கியிருக்கிறது இந்த அரசு. அதோடு இன்றைக்கு பேருந்து போக்குவரத்துத் துறையிலும் பல்வேறு சாதனைகள். மத்திய அரசு கடந்த 1¼ ஆண்டு காலத்திலே ஏறத்தாழ *5* முறை பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தியிருந்தாலுங்கூட அதற்கெல்லாம் ஈடு கொடுத்து இன்றைக்கு பேருந்து போக்குவரத்துக் கழகங்கள் ஏழை எளிய கிராமப்புற மக்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல், அதே கட்டணத்தை வைத்து சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. பல கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்கவில்லை பேருந்துக் கழகங்கள்

என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த காலங்களிலேயிருந்த அந்த நஷ்டங்களையெல்லாம் போக்கி, இன்றைக்கு ஓரளவிற்கு அதைச் சமாளித்துக்கொண்டு நஷ்டம் இல்லாமல் ஓடுகிற ஒரு நிலையைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால், அது இந்த அரசினுடைய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிர்வாக சாதனைதான் என்று நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஐந்து மணித் துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** அது போல, மின்சாரம். மின்சாரம் என்பது இன்றைக்கும் ஏழைகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த மின்சார வாரியம் கடந்த காலத்திலே எப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இருந்தது என்பது இங்கு பல்வேறு கால கட்டங்களிலே விவாதிக்கப்பட்டிருக்கிறது, தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னால் நமது நெய்வேலி மின் நிலையத்திலேயிருந்து நாம் பெற வேண்டிய பங்குத் தொகையை ஏற்கெனவே இரண்டு ஆண்டுகளுக்குப் பெறவேண்டியதை, முன்பாகவே அரசாங்கம் பெற்றுவிட்ட ஒரு சூழ்நிலை. 200 கோடி ரூபாயை முன்பணமாகப் பெற்றுவிட்ட ஒரு நிலையில், பல ஆயிரக்கணக்கான ரூபாய் நஷ்டத்தில் இருந்த நிலையையும் போக்கி இன்றைக்கு ஏழைகளுக்கு எல்லோருக்கும் இலவச மின்சாரம் வழங்குகின்ற ஒரு நிலையை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. அதோடுமட்டுமல்ல இதுவரைக்கும் எந்த அரசும் செய்யாத அளவிற்கு நமது விவசாயிகள் வைத்திருக்கின்ற மோட்டார் பம்புசெட்டுகள், அவையெல்லாம் பத்து ஆண்டுகளுக்கு மேலாக பழுதுபட்டிருக்கின்ற ஒரு நிலையில் அவற்றை சரி செய்வதற்குகூட வசதியில்லாத விவசாயிகளாக இருக்கிறார்கள் என்பதனைக் கருத்தில்கொண்டு, அந்த விவசாய மோட்டார்களை புதுப்பித்துக்கொள்வதற்கு 25 சதவீத மானியத்தை இந்த அரசு கொடுத்திருக்கிறது என்று சொன்னால், அதெல்லாம் விவசாயிகள் மத்தியிலே எப்படிப்பட்ட நன்மைகளை தேடித் தந்திருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அந்த அளவுக்கு இந்த விவசாயிகள் மேலே அக்கறை கொண்டு இந்த அரசு, செயலாற்றி இருக்கிறது.

*முற்பகல் 10–30*

எல்லோரும் விவசாயிகள் பட்டிருக்கின்ற கடனுக்கு வட்டியை அபராத வட்டியைத் தள்ள வேண்டும் என்கின்ற நிலையை பல்வேறு கால கட்டத்திலே எடுத்துச் சொல்லியுங் கூட, கடந்த காலத்திலே அது



நிறைவேறவில்லை, நிறைவுபெறவில்லை என்பதனை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்மோடு அன்றைக்கு இருந்து தோள்கொடுத்து இந்த விவசாயிகளுக்குக் குறைந்தபட்சம் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும், இல்லையென்றால் வட்டி, அபராத வட்டியையாவது தள்ளுபடி செய்யவேண்டும் என்று சாலை மறியல் எல்லாம் செய்த நிலையினை இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் எல்லாம் அறிவார்கள். அதை எல்லாம் மறந்து, அன்றைக்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காது இருந்த அரசு, அன்றைக்கு அரசுக் கட்டிலிலே இருந்து வெளியேற்றப்பட்ட உடனே நம்மோடு இருந்தவர்கள் எல்லாம் அங்கு சென்றிருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த விந்தையைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இருந்தாலும் அவர்களுடைய சிந்தனை அப்படி இருந்தால் நாம் அதற்கு என்ன செய்ய முடியும்?

அடுத்தபடியாக, பொது விநியோகத் திட்டம். இன்றைக்கு இந்தியாவிலே இருக்கின்ற அனைத்து மாநிலங்களிலும் ஒரே சீராக எல்லா மக்களுக்கும் 3 ரூபாய் 50 காசுக்கு அரிசி வழங்குகின்ற நிலை இருக்கிறதா என்று சொன்னால் இல்லை. அது இந்தியாவிலே தமிழகத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றில் மட்டும்தான் இருக்கிறது என்பதை நிச்சயமாக அனைவரும் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். ஏனென்றால் உண்மை என்று ஒன்று இருக்கிறது. அதை மறுப்பதற்கு முடியாது. மற்ற எல்லா மாநிலங்களும் வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் என்கின்ற பாகுபாட்டினை செய்து அவர்களுக்கு பொது விநியோகத்திலே அரிசி வழங்கிக்கொண்டிருக்கின்ற நேரத்தில் அதே விலையில் எல்லோருக்கும் அரிசி வழங்குகின்ற ஒரு மாநிலமாக தமிழகம் விளங்குகிறது. கடந்த ஓரிரு வாரத்திற்கு முன்னால் மத்திய அரசு உணவு தானியங்களுக்கு வழங்குகின்ற மானியத்தைக் குறைக்கின்ற நேரத்திலே நமது முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய தாய் உள்ளத்தை அங்கு மக்களுக்கு வெளிப்படுத்தினார்கள். மத்திய அரசு அந்த மானியத்தைக் குறைத்துவிட்டபோதும் என்னுடைய மக்கள், தமிழகத்திலே இருக்கின்ற மக்கள் நிச்சயமாக அவதிப்படக்கூடாது, அல்லல்படக்கூடாது என்று அந்தச் சுமையை தமிழக அரசே ஏற்றுக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக நான் பழைய விலைக்கே அந்த பொது விநியோக அரிசியை வழங்குவேன் என்று அறிவித்த உடனே மத்திய சர்க்கார் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறது. அந்த அளவுக்கு ஏழையெளிய மக்களிடத்திலே அக்கறை கொண்ட ஒரு அரசாக, எந்தவிதத்திலும்

அவர்கள் வாடிவிடக்கூடாது, வதங்கிவிடக்கூடாது, தங்களுக்கு வாக்களித்த மக்களை நாம் பாதுகாக்க வேண்டும் என்கின்ற அந்த உரிய நோக்கத்தோடு பாதுகாத்திருக்கிறது இந்த அரசு.

அதேபோல, சுனாமி வந்த நேரமாக இருந்தாலும் சரி, பெரும் வெள்ளம் மழையால் பாதிக்கப்பட்ட நேரமாக இருந்தாலும் சரி, அதிலே அக்கறையோடு கவனத்தை எடுத்துக்கொண்டு அந்தப் பகுதிகளுக்கு எல்லாம் தானே நேராக ஓடோடிச் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுடைய கண்ணீரைத் துடைத்ததோடு, அவர்களுக்குரிய நிவாரணத்தை வழங்கியதிலும் முன்னணியில் நிற்கிறது இந்த அரசு என்பதிலே (மேசையைத் தட்டும் ஒலி) எந்த பொதுமக்களுக்கும் இன்றைக்கு ஐயப்பாடு இல்லை என்கின்ற நிலைதான். ஒரு அரசாங்கத்தின் மூலமாக—வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அதுவும், அதிலே எந்தத் தவறும் நடந்துவிடக்கூடாது என்பதற்காக ஒரு ஆயிரம் ரூபாய் நோட்டு, இல்லையென்றால் 500 ரூபாய் நோட்டு இரண்டு என்று இரண்டு நோட்டுகளை எல்லா மக்களுக்கும் அப்படியே அள்ளிக்கொடுத்த நிகழ்ச்சியை நாங்கள் எல்லாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அதைப் பாராட்டாமல் என்ன செய்வார்கள்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, இன்னும் ஏதாவது ஆங்காங்கு ஒன்றிரண்டு விட்டுப்போயிருந்தாலுங்கூட தயவுசெய்து அதையும் நீங்கள் திருப்தியாகக் கொடுத்துவிடுங்கள், உங்களுக்கு நிகர் நீங்கள்தான், உங்களை மிஞ்சுவதற்கு ஆள் இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற நிலை இன்றைக்கு மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது என்பதை மட்டும் நான் சொல்லிக்கொண்டு, நாம் வருகின்ற தேர்தலைச் சந்திக்க இருக்கிறோம்.

*முற்பகல் 10–35*

எங்களுடைய தலைவர் தேவர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். இந்த நாடு ஒரு கோயில். இந்த நாட்டிலே குடிகொண்டிருக்கின்ற மக்கள் எல்லாம் நான் போற்றி வழிபடுகின்ற தெய்வங்கள் என்று சொல்வார்கள். மக்களைத் தெய்வமாகக் கருதுவார்கள். ஒரு ஜனநாயக நாட்டிலே நமக்கு மக்கள் தான் தெய்வம் என்று குறிப்பிடுவார்கள். அந்த நிலையிலே

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்"





என்று சொல்வார் வள்ளுவர். இந்தக் குடிமக்களைக் காப்பேன். ஏழை எளிய மக்களுக்குத் தொண்டாற்றுவேன். எனக்கென்று வைத்துக்கொள்ளாமல் இந்த நாட்டு மக்களுக்கு நான் அனைத்தையும் தருவேன் என்று சொல்கின்ற ஒருவரை இந்த மக்கள் வெள்ளம் முன் நின்று வழிநடத்திச் செல்லும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அந்த மனித தெய்வங்களாக இருக்கின்ற அந்த மக்கள் 2006 தேர்தலிலே நமக்கு முன்னால் சென்று வழிநடத்திச் செல்வார்கள், வழி நடத்திச் செல்வார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதன்மூலம் மீண்டும் நாம் இங்கே வந்து அமருவோம் என்பதைச் சொல்லி, வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

## 6. விதி 110–ன்கீழ் அறிக்கை

### முன்னாள் உறுப்பினர் திருமதி கிருஷ்ணவேணி அவர்களுக்கு நிதியுதவி மற்றும் குடியிருப்பு வசதி—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் இப்போது பேசிய திரு. சந்தானம் அவர்கள் தெரிவித்த ஒரு கருத்துக்குப் பதில் கூற விரும்புகிறேன்.

வெள்ள நிவாரண உதவிகள் வழங்குவதில் எங்காவது யாராவது விடுபட்டிருந்தால் அவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். வெள்ள நிவாரண உதவிகள் வழங்கப்படுவதற்கு கடைசித் தேதி இதுதான் என்று எந்தத் தேதியும் அரசால் நிர்ணயிக்கப்படவில்லை. ஆகவே, இந்த உதவிகள் தேவைப்படுகின்ற மக்கள், பாதிக்கப்பட்ட மக்களில் ஒருவர்கூட விடுபட்டுவிடக் கூடாது என்பதுதான் இந்த அரசின் எண்ணமாகும். ஆகவே, எங்கள் நடவடிக்கைகளையும் மீறி எங்காவது ஓரிரண்டுபேர் விடுபட்டிருந்தால், சட்டமன்ற உறுப்பினர்கள் அதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அவர்களுக்கும் உடனடியாக நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2006 ஜனவரி 24

இப்போது, விதி 110—ன்கீழ் எனது அறிக்கையை இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன். தமிழக சட்டப் பேரவையில் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டுவரை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய திருமதி கிருஷ்ணவேணி அவர்கள் தற்போது வறுமையில் வாடி வருவது என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், குன்னூர் கிராமத்தின் உட்கடை கிராமமான அம்மச்சியாபுரத்தில் தற்போது வசித்துவரும் திருமதி கிருஷ்ணவேணி அவர்கள், மக்கள் தொண்டு செய்வதில் பேரார்வம் கொண்டு, பல்வேறு பொறுப்புகளை வகித்தவர் ஆவார். தேனி மகாத்மாஜி பெண்கள் இல்லத்தின் மேலாளராக பல ஆண்டுகாலம் பணி ஆற்றியவர். பெரியகுளம் வட்டம், பெண்கள் நல சங்கத்தின் தலைவராக இருந்தவர். ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினராகப் பணியாற்றியவர் திருமதி கிருஷ்ணவேணி அவர்கள்.

'ஆணுக்குப் பெண் சமம்' என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ள இந்தக் காலகட்டத்திலேயே, பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள பெண்கள், எத்தனை எத்தனை துன்பங்களையும், சிரமங்களையும் எதிர்கொள்ள வேண்டி உள்ளது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவர். இப்போதே இந்த நிலைமை என்றால், 44 ஆண்டுகளுக்கு முன்னால் நிலைமை எவ்வாறு இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தக் காலகட்டத்திலேயே, ஏச்சுகளையும், பேச்சுகளையும் தாங்கி, ஏளனங்களையும், ஏகடியங்களையும் தாண்டி, ஒரு பெண்மணி – அதுவும் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி – சட்டமன்ற உறுப்பினராக ஆகி, மக்கள் பணி செய்திருப்பது சாதாரணமான விஷயம் அல்ல. இவ்வாறு முற்போக்கு எண்ணங்களும், முன்னோடிச் சிந்தனையும் கொண்டு மக்களுக்குத் தொண்டு செய்த ஒரு பெண்மணி வறுமையில் வாடுகிறார் என்பதையும், வசிக்க சரியான வீடுகூட இல்லாமல், மாட்டுத் தொழுவத்தில் படுத்து உறங்குகிறார் என்பதையும் அறிந்து, நான் மிகவும் வேதனை அடைந்தேன். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், மாதந்தோறும் 6,000 ரூபாய் ஓய்வூதியமாக இவர் பெற்று வந்தாலும், இவரது பிள்ளைகளின் மருத்துவச் செலவுக்காகப் பெறப்பட்ட கடன் தொகைக்காகவே, பெரும் தொகையைச் செலுத்த வேண்டியுள்ளது என அறிந்தேன்.

திருமதி கிருஷ்ணவேணி அவர்கள், காங்கிரஸ் இயக்கத்தின் சார்பாக சட்டமன்ற உறுப்பினர் ஆனவர். எனினும், 23–1–2006 அன்று, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள்,



2006 ஜனவரி 24] [செல்வி ஜெ ஜெயலலிதா]

திருமதி கிருஷ்ணவேணி அவர்களுக்கு உதவிட வேண்டும் என்று என்னிடத்தில் கோரிக்கை வைத்தார்.

முற்பகல் 10–40

அதனை ஏற்று, நேற்று சட்டமன்றத்திலேயே, திருமதி கிருஷ்ணவேணி அவர்களுக்கு இந்த அரசு என்ன உதவி செய்ய உள்ளது என்பதை நாளை அதாவது 24–01–2006 அன்று, இந்தப் பேரவையில் அறிவிப்பேன் என்று நான் தெரிவித்தேன். இத்தகைய கோரிக்கைகளை ஏற்று, எந்தவித பாரபட்சமும் காட்டாமல், நாட்டுக்கு உழைப்போருக்கு உரிய மதிப்பும், அவர்களுக்கு பொருளாதாரப் பாதுகாப்பும் நான் தொடர்ந்து வழங்கி வருகிறேன் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

நம்மை அடிமை கொண்டிருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி, இந்தியத் திருநாடு சுதந்திரம் பெற வேண்டும் என்று பாடுபட்ட பல சுதந்திரப் போராட்ட தியாகிகள், தங்களுக்கு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று விடுத்த கோரிக்கைகளை பரிவுடன் பரிசீலித்து, அவர்களுக்கு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கியும் மற்றும் இறந்த விடுதலைப் போராட்ட வீரர்கள் பலரது மனைவியருக்கு விடுதலைப் போராட்ட வீரர் குடும்ப ஓய்வூதியம் வழங்கியும் உத்தரவிட்டுள்ளேன் என்பதை இங்கே சுட்டிக் காட்டுவதில் பெருமிதம் கொள்கிறேன்.

இந்திய விடுதலைக்காக நேதாஜி அவர்கள் தலைமையில் போராடிய இந்திய தேசிய ராணுவத்தில் முன்னணி வீராங்கனையாகப் பணியாற்றிய திருமதி சரஸ்வதி என்கிற ராஜாமணி அவர்களின் தியாகத்திற்கு கௌரவம் அளித்து, வறுமை நிலையில் வாடும் அவர், வாழ்க்கை நடத்திட ஏதுவாக, 5 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளித்ததுடன், அவர் தனது வாழ்நாள் முழுவதும் வசிக்கும் வகையில், குடியிருப்பு ஒன்றை இலவசமாக வழங்கினேன். மேலும், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்று, தியாகம் செய்த இந்திய விடுதலைப் போராட்ட வீரரும், 20 ஆண்டுகளுக்கு மேலாக சென்னை காங்கிரஸ் மைதானத்தில் தங்கி இருந்தவருமான, திரு. ராஜூ பிள்ளை என்பவர், அங்கிருந்து வெளியேற்றப்பட்டபோது, 90 வயது நிரம்பிய திரு. ராஜூ பிள்ளை, 80 வயதான தனது மனைவியுடன் தங்குவதற்கு இடமின்றி தவிப்பதை அறிந்து, அவர்கள் இருவரும் நிம்மதியோடும், பாதுகாப்போடும் வாழும் வகையில், அரசுக் குடியிருப்பு ஒன்றை ஒதுக்கீடு செய்து தந்தேன். இவ்வாறு, கட்சி மாச்சரியம் இன்றி, தகுதி உடையோர் அனைவருக்கும் எனது அரசு, உதவிகள் வழங்கி வருகிறது.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2006 ஜனவரி 24

44 ஆண்டுகளுக்கு முன்னதாக பெண்மையின் பிரதிநிதியாக இந்த அவையில் அங்கம் வகித்தவரை, தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக இந்தச் சட்டமன்றத்தில் இடம்பெற்றவரை, வறுமையில் இருந்து காப்பாற்ற வேண்டியதும், அவருக்கு உரிய மரியாதையை வழங்க வேண்டியதும் எனது கடமை என்று நான் கருதுகிறேன்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி கிருஷ்ணவேணி அவர்களுக்கு உரிய மதிப்பும், கௌரவமும் அளிக்கும் வகையிலும், வறிய நிலையில் வாடுகின்ற இவர் வாழ்க்கை நடத்த ஏதுவாகவும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த உதவித் தொகையான 5 இலட்சம் ரூபாய், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில், தேனி மாவட்ட ஆட்சித் தலைவரின் பெயரில், வைப்பு நிதியாக செலுத்தப்படும். இதில் இருந்து மாதந்தோறும் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையான 2,917 ரூபாய், திருமதி கிருஷ்ணவேணி அவர்களின் வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும். இந்த வட்டித் தொகை, மாதந்தோறும், தேனி மாவட்ட ஆட்சித் தலைவரின் மூலமாக வழங்கப்படும்.

மேலும், திருமதி கிருஷ்ணவேணி அவர்கள், போதிய இட வசதியின்றி மாட்டுத் தொழுவத்தில் வசித்து வருகிறார் என்பது வேதனை அளிக்கக்கூடிய செய்தி. இந்த வேதனையை நீக்கிடும்வண்ணம், திருமதி கிருஷ்ணவேணி அவர்கள், தனது வாழ்நாள் முழுவதும் தங்கிடும் வகையில், தேனி வட்டம், அரண்மனைப்புதூரில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான அரசு அலுவலர் அடுக்குமாடிக் குடியிருப்பில் உள்ள குடியிருப்பு ஒன்றினை, வாடகையின்றி ஒதுக்கீடு செய்து நான் ஆணையிட்டுள்ளேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் சார்பாகவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2006 ஜனவரி 24]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று "மாட்டுத் தொழுவத்தில் மாஜி எம்.எல்.ஏ" என்கிற ஒரு கட்டுரை, குமுதம் ரிப்போர்ட்டரில் வந்ததை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அதேபோல விவாதத்தின்போது நான் எடுத்து வைத்து, முதல்வருடைய கவனத்திற்குக் கொண்டு வந்த பிறகு முதல்வர் அவர்கள் இந்த அளவிற்கு அந்த ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்திருக்கிற 1962–லிருந்து 1967 வரை ஆண்டிப்பட்டியினுடைய சட்டப் பேரவை உறுப்பினராக இந்த மாமன்றத்தில் பணியாற்றிய அந்த சகோதரிக்கு உதவிக் கரம் நீட்டியதற்காக காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2006–2007, பொது விவாதம்—தொடர்ச்சி

முற்பகல் 10–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளராத மன வலிமை, துவ்ளாத எதிர்நீச்சலால் தலைவர் வழியில் தடம் பதித்த தாரகையே, தமிழகத்தை உலகின் கிழக்காய் நிறுத்திய உன்னதத் தலைவியே, உலகில் கிழக்கு மேற்கு இல்லை, உந்தன் பெருமையில் என்றுமே உயர்வு தாழ்வு இல்லை, விடியல் கூட உம் உழைப்பைக் கண்டு விம்முகிறது. வைகறை விடியலுக்குள் உமது உழைப்பும் விழிக்கிறது. மக்களைப் பற்றியே எப்போதும் நினைப்பு, அந்த நினைப்பே இந்த அரசின் வனப்பு. முகராசி, அகராசி என முழு ராசியும் பெற்ற மகராசியே, (மேசையைத் தட்டும் ஒலி) தகைமைசால் தலைவியே, தண்ணளி குளிர் நிலவே, பகைமை வரின் பாராட்டும் பண்பே, வகைவகையாய் உம்மீது வஞ்சனைகள் படர்ந்தாலும், தொகைதொகையாய் வாழ்த்து மலர் தொடர்ந்து வந்து குவிந்தாலும், மிகையேதும் கொள்ளாமல், மிதமேதும் இல்லாமல், உமைபாகன் போலிங்கே ஓர் உருவாய் நின்றிடுவீர். அலைகடல் ஓசை உம்மாட்சியில் இல்லை. கலைமகள் ஆட்சிபோல் கருணையின் நீட்சி, கண்களில் ஒற்றமுடியா கயவர்களின் அவதூறுகள், புண்களாய் நின்றுப் புரையோடிப் போனாலும் மண்ணில் உமக்கு இனி மாற்று இல்லை. மக்கள் தந்த மாமருந்து இது—அன்னையே வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



D V 21, 3, 06. P06. 901
தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 22007. சென்னை-600 008 நூலகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்த இடைக்கால நிதிநிலை அறிக்கை மீது நடைபெறும் பொது விவாதத்தில் கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்த எங்கள் ஆராதனைக்குரிய நான் வணங்கும் இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் நன்றி மலர்களை காணிக்கையாக்குகிறேன். இது பன்னிரெண்டாம் சட்டப் பேரவையின் நிறைவுக் கூட்டத்தொடர் ஆகும். *5* ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை எண்ணிப் பார்க்கிறேன். *5* ஆண்டு கால ஆட்சியை நிர்மாணிப்பதற்கு என்னென்ன தியாகங்களை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் செய்தார்கள். பிரதான எதிர்க்கட்சிகளின் சித்து விளையாட்டுகளை எப்படியெல்லாம் எதிர்கொண்டு வெற்றி பெற்றார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். *2001* ஆம் ஆண்டில் தேர்தலிலே நிற்கத் தடை, முதலமைச்சர் பொறுப்பினை ஏற்கத் தடை, திட்டங்களை நிறைவேற்றும்போது முட்டுக்கட்டை, அரசியல் சதுரங்கத்தில் இவற்றையெல்லாம் சந்தித்து, எதிரிகளை வீழ்த்தி, சிங்கநிகர் தலைவியாக, நாடு போற்றும் நல்லாட்சியை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் தந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆளுநர் உரைக்கு நன்றி அறிவிக்கும் தீர்மானத்தின்மீது பதிலுரை தந்து மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் பேசுகிறபோது ஒரு கொள்கையினை தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். நண்பர்கள் அற்ற ஏழைக்கு நண்பன் நான் என்பதுதான் என்னுடைய அரசியல் கோட்பாடு என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்கள். அதன் அடிப்படையில் அமைவதுதான் எனது திட்டம் என்று சொன்னார்கள். அதன் அடிப்படையில் அமைவதுதான் என் செயல்பாடு என்று சொன்னார்கள். அதன் அடிப்படையிலே வீறு நடை போடுவதுதான் எனது அரசு என்று தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த சட்டமன்றத்தை நடத்துகிற விதம், இந்த சட்டமன்றத்தை நடத்துகிற பாங்கு மற்ற மாநிலங்களுக்கு படிப்பினையாகவும், முன்னுதாரணமாகவும் விளங்குகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த சட்டமன்றத்தில் எப்பொழுதுமே இருத்தல், எந்த உறுப்பினர் எத்துறையைப் பற்றிய கேள்விகள் எழுப்பினாலும் சட்டென பதில் அளிக்கும் பாங்கு, எதிரிகளை திக்கு முக்காட வைக்கும் வாதத் திறமை, இவை அனைத்தும் நாட்டு மக்களுக்கு நல்லவையாக அமைகின்றன. இவை எங்களுக்குப் படிப்பினையாக அமைகின்றன. மற்றவர்களுக்கு இவை பாடமாகவும் அமைகின்றன. மாண்புமிகு



அம்மா அவர்கள், அவர்களுடைய செயல்பாடுகளால் அவர் ஒரு ஹீரோவாகத் திகழ்கிறார். மாண்புமிகு அம்மாவினுடைய செயல்பாடுகளால், இங்கே இருக்கிற பிரதான எதிர்க்கட்சிகள், மற்ற எதிர்க்கட்சிகள் எல்லாம் Zero–ஆகத் திகழ்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *10–50*

எப்படி அனைத்துத் துறைகளும் இந்தியாவில் முதன்மை நிலை பெற வேண்டும் என்று பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, இன்றைக்கு அனைத்துத் துறைகளும் முதன்மை அடைந்திருக்கின்றனவோ அதேபோன்று, தேசிய அளவில் இன்றைக்கு தமிழ்நாடு சட்டமன்றம் முதல் நிலை அடைந்திருக்கிறது என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதல்தான் என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓர் அரசுக்கு மக்களின் அங்கீகாரம் எது என்று சொன்னால், ஆளுகிறபோது ஏதாவது ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு இடைத்தேர்தல் வந்தால், அந்த இடைத்தேர்தலிலே ஆளுங்கட்சி வெற்றி பெற வேண்டும். அப்போதுதான் ஓர் அரசுக்கு அங்கீகாரம் அளித்ததாகப் பொருள். அப்படிப் பார்க்கிறபோது அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே ஆண்டிப்பட்டிக்கு இடைத்தேர்தல். அம்மா அவர்கள் அமோகமான முறையிலே வெற்றி பெறுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அச்சரப்பாக்கத்திற்கு, வாணியம்பாடிக்கு மற்றும் சைதாப்பேட்டைக்கு ஆகிய மூன்று தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல். அவற்றிலேயும் அம்மா அவர்கள் வெற்றி பெறுகிறார். சாத்தான்குளத்திற்கு இடைத்தேர்தல். அதிலேயும் அம்மா அவர்கள் வெற்றி பெறுகிறார். இறுதியாக, காஞ்சிபுரம் மற்றும் கும்மிடிப்பூண்டிக்கு இடைத்தேர்தல். அம்மா அவர்களுக்கே வெற்றி, அமோக வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வெற்றி மாண்புமிகு அம்மாவினுடைய திட்டங்களுக்கு கிடைத்த வெற்றி. இந்த வெற்றி மாண்புமிகு அம்மாவினுடைய நல்லாட்சிக்குக் கிடைத்த நற்சான்று. இந்த இடைத்தேர்தல்களுடைய வெற்றிதான் வரப் போகும் பொதுத் தேர்தலின் வெற்றிக்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு முன்னோட்டமாக அமைந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பி.எம். நரசிம்மன்] [2006 ஜனவரி 24

பாராளுமன்றத் தேர்தலிலே வெற்றி பெற்றோம் என்று பிரதான எதிர்க்கட்சிகள் அவர்களோடு கூட்டணி சேர்ந்திருக்கிற கட்சிகள் எல்லாம் இன்றைக்குக் கொக்கரிக்கிறார்கள். அதுபோல் வரப்போகிற சட்டமன்றத் தேர்தலிலும் வெற்றி பெறுவோம் என்று இறுமாப்புக் கொள்கிறார்கள். ஆனால் தமிழகத்தினுடைய வரலாற்றைக் கொஞ்சம் திருப்பிப் பார்க்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். 1980 ஆம் ஆண்டிலே பாராளுமன்றத்திற்குத் தேர்தல். அப்போது வென்றீர்கள், பிரதான எதிர்க்கட்சி, காங்கிரஸ் கட்சியோடு கூட்டணி சேர்ந்து வென்றீர்கள். அதனால் 1980 ஆம் ஆண்டில் நடந்த சட்டமன்றத் தேர்தலில் ஆளுக்குப் பாதி இடங்கள் என பாகம் பிரித்து போட்டியிட்டீர்கள். ஆனால் முடிவு அண்ணா தி.மு.க. வெற்றி, அபார வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) அதே நிலை 1980 நிகழ்வு, 2006–ல் நிகழப் போகிறது; மாண்புமிகு அம்மா அவர்களே மீண்டும் முதல்வராகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவே மக்கள் தீர்ப்பு என நான் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுத் தேர்தலின் வெற்றி என்பது கூட்டணிக் கட்சிகளால் மட்டுமேயல்ல, நிறைவேற்றப்படுகிற திட்டங்களால் மட்டுமே. பொதுத் தேர்தலின் வெற்றி என்பது கூட்டணிக் கட்சிகளின் சந்தர்ப்பவாதக் கூட்டணியால் மட்டுமேயல்ல, மக்களின் வாக்குகளால் மட்டுமே. பொதுத் தேர்தலின் வெற்றி என்பது தேர்தலுக்குத் தேர்தல் நிறம் மாறும் கூட்டணியால் மட்டுமேயல்ல, ஏற்றுக்கொள்கிற மக்களின் ஆதரவால் மட்டுமே. பொதுத் தேர்தலின் வெற்றி என்பது தன் மக்களை முன்னிலைப்படுத்த வேண்டும் என்பதற்காக மட்டுமேயல்ல, மக்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடுவதால் மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–55

வரும் தேர்தலில் அம்மா அவர்கள் நிறைவேற்றப்படுகிற திட்டங்களால் வெற்றிப் பெறப்போகிறார். வரும் தேர்தலில் பெருவாரியான வாக்குகளால் அம்மா அவர்கள் வெற்றிப் பெறப்போகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) வரும் தேர்தலில் ஏற்றுக்கொள்கிற மக்களின் ஆதரவால் அபாரமாக மாண்புமிகு அம்மா அவர்கள் வெற்றிப் பெறப்போகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) வரும் தேர்தலில் மக்களின் கூட்டணியால் மாண்புமிகு அம்மா அவர்கள் வெற்றிப் பெறப்போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



2006 ஜனவரி 24] [திரு. பி.எம். நரசிம்மன்]

கோரிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் திட்டங்களாக மலர்வது மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலேதான். அதனால்தான் நேற்றைக்குக்கூட மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் விவாதத்தில் கலந்துகொண்டு, பேசும்போது தொடக்கத்திலேயே கோரிக்கைகளை வைத்தார். காரணம் மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே கோரிக்கைகளை வைத்தால் எப்படியும் நிறைவேற்றுவார் என்கின்ற ஒரு நம்பிக்கை. அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேதான் இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருக்கு யாரும் எதிர்பார்க்காத விதத்திலே 5 லட்சம் வைப்பு நிதி என்கின்ற ஒரு அற்புதமான திட்டத்தை உருவாக்கினார் என்று சொல்லுகிறபோது கோரிக்கைகள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு திட்டங்களாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே மலர்ந்து கொண்டிருக்கின்றன. மக்களுடைய எதிர்பார்ப்புகள் திட்டங்களாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்கள் மாவட்டங்களுக்குச் செல்லுகின்றபோதும் சரி, மாண்புமிகு அம்மா அவர்கள் கோட்டைக்கு, அலுவலகத்திற்கு வருகின்றபோதும் சரி, பொதுமக்களைச் சந்தித்து மனுக்களைப் பெறுகிறார். அப்படி 14–5–2001 முதல் 14–1–2006 வரை மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அளிக்கப்பட்ட மனுக்கள் 21 இலட்சத்து 39 ஆயிரத்து 38 மனுக்கள். இதில் 92.53 விழுக்காடு அளவிற்கு தீர்வு கிடைத்திருக்கிறது என்று சொன்னால், எந்த அளவிற்கு பொதுமக்கள் அளிக்கிற மனுக்களுக்கு மதிப்பளித்து அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுகிறார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி). எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு கோரிக்கைகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் நிரம்ப வருகின்றன. எந்த ஆட்சிக் காலத்திலுமே இல்லாத அளவிற்கு கோரிக்கைகள் மாண்புமிகு அம்மா அவர்கள் காலத்திலேதான் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிச் சொல்லுகிறபோது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே 1996 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரைக்கும் பொதுமக்களிடத்திலேயிருந்து அன்றைய முதலமைச்சருக்கு எவ்வளவு மனுக்கள் வந்திருக்கின்றன என்பதை ஒப்பிட்டுப் பார்ப்பது

சாலச்சிறந்ததாக இருக்கும். அப்படி 1996 ஆம் ஆண்டிலேயிருந்து 2001 ஆம் ஆண்டு வரைக்கும் அப்போதிருந்த முதலமைச்சருக்கு பொதுமக்கள் எவ்வளவு மனுக்களைத் தந்திருக்கிறார்கள் என்று சொன்னால், 16 இலட்சத்து 18 ஆயிரத்து 932. இதிலே தீர்வு எவ்வளவு என்று சொன்னால் 5 இலட்சத்து 20 ஆயிரத்து 106 மனுக்கள். இதிலிருந்து நமக்குத் தென்படுவது, நமக்குப் புலப்படுவது கோரிக்கைகளை, திட்டங்களாக நிறைவேற்றுவது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், பொதுமக்களுடைய எதிர்பார்ப்புகளை, பொதுமக்களுடைய எண்ணங்களை கோரிக்கைகளாக நம்பிக்கையோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே பொதுமக்கள் தருகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையானாலும் சரி, நிதிநிலை அறிக்கையானாலும் சரி, இடைக்கால நிதிநிலையறிக்கையானாலும் சரி அவற்றிலே அரசின் கொள்கைகள், நிறைவேற்றப்படும் திட்டங்கள் ஆகியன குறித்து விளக்கப்படுகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 2001 ஆம் ஆண்டிலே ஆட்சிப் பொறுப்பினை ஏற்கிறபோது நிதிநிலைமைச் சீர்குலைவு, குழப்பமான வளர்ச்சி ஆக, இவற்றையெல்லாம் அம்மா அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. 1996–லிருந்து 2001 ஆம் ஆண்டு வரைக்கும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அரசின் மொத்த வருவாய் வரவுகள் அரசின் செலவைவிட குறைவாக இருந்தன. செலவுகள் அதிகமாயின. எனவே, இதைச் சரி செய்ய வேண்டுமென்பதற்காக பெருமளவில் அப்போதிருந்த அரசு கடன் வாங்கியது. இதனால் நிதிப் பற்றாக்குறை மேலும் உயர்ந்தது. இதனால் வட்டிச் சுமை அச்சுறுத்தும் நிலைமையை எட்டியது. இதனால் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்குக்கூட தொகை அளிக்க தி.மு.க. அரசு தவறியதால், 2001 ஆம் ஆண்டிலே தமிழ்நாட்டில் சமாளிக்க முடியாத ஒரு நிதிநெருக்கடி ஏற்பட்டது. இதுபோன்ற நிதி நிலைமைச் சீர்கேட்டால்தான் வளர்ச்சிப் பணிகள் முற்றிலுமாகத் தடைபட்டன; பாதிக்கப்பட்டன. இலவச மின்சாரத்திற்குப் பாதிப்பு. இலவச வேட்டி, சேலைகூட வழங்க முடியாத ஒரு துர்பாக்கிய நிலை என்று சொன்னால், இதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிதிச் சீர்கேடுதான் என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.



முற்பகல் 11–00

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 1995–96–ல் ஆட்சியை விட்டு இறங்குகிறபோது அரசிடம் ரூபாய் 649 கோடி இருப்பு. ஆனால், 2001 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியை விட்டு இறங்குகிறபோது கஜானா காலி என்ற நிலை இருந்தது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ரிசர்வ் வங்கியிடம் 242 கோடிக்கு மேல் கைமாற்றுக் கடன். ஒப்பந்தக்காரர்கள் மற்றும் பொருட்களை வழங்கியோர் ஆகியோருக்கு ரூபாய் 4 ஆயிரம் கோடிக்கு மேல் கொடுக்க வேண்டும் என்கின்ற நிலை. பொதுத் துறை நிறுவனங்கள் பெரும் நட்டத்தில் இயங்கின. போக்குவரத்துக் கழகங்களில் 2,000 கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு. மின் வாரியத்திற்குச் சுமார் 4,851 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு. திராவிட முன்னேற்றக் கழக அரசால் ஏற்பட்ட இந்தச் சீர்கேட்டினை கொஞ்சம், கொஞ்சமாக சமாளித்து, கூடுதலாக ஆயத்தீர்வையில், தமிழ்நாடு வாணிபக் கழகம் மதுபான விற்பனையை அரசே மேற்கொண்டதன் பயனாக கொஞ்சம் கொஞ்சமாக இந்தச் சீர்கேட்டினை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சரி செய்தது. அதன் விளைவாக ஆயத்தீர்வை மற்றும் விற்பனை வரியாக மட்டும் கூடுதலாக 9,145 கோடி ரூபாய் அரசுக்குக் கிடைத்தது.

அதேபோன்று விற்பனை வரியிலே கூடுதலாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் காட்டிலும் 22,485 கோடி ரூபாய் அரசுக்குக் கிடைத்தது. தமிழகத்தை வளர்ச்சிப் பாதையிலே இட்டுச் செல்ல மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்த 15 அம்சத் திட்டம் தமிழகத்தினுடைய பொருளாதாரத்தைப் புத்துயிர் பெறுவதற்கு அடித்தளமாக அமைந்தது.

இடைக்கால வரவு–செலவுத் திட்டத்திலே திட்டப் பணிகளை நிறைவேற்றுவதற்காக 11,709 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. சென்ற ஆண்டு திட்டப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலே 28 சதவீதம் உயர்வு. இது ஒரு சாதனை அளவாகும் என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூபாய் 40,000 கோடியை திட்ட கால இறுதிக்குள் எய்தும். இந்தச் சாதனை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒருவரால் மட்டுமே முடிந்தது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பி.எம். நரசிம்மன்] [2006 ஜனவரி 24

தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்கிறபோது தொடர்ந்து மூன்று ஆண்டுகாலம் வறட்சி. 2004 ஆம் ஆண்டிலே சுனாமி பாதிப்பு. 2005 ஆம் ஆண்டு இறுதியிலே வெள்ளச் சேதம். இவற்றையெல்லாம் சமாளித்து சாதனைப் படைத்தவர்தான் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வெள்ளம் ஏற்பட்டபோது நிவாரணம் அளிக்கவும், சேதம் அடைந்த கட்டமைப்புகளைச் சீரமைக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் போர்க்கால அடிப்படையிலே செயல்பட்டு ரூபாய் 1,114 கோடி செலவிலே நடவடிக்கைகளை, நிவாரணப் பணிகளை, வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக ஆணை வழங்கினார்கள். 22 மாவட்டங்களிலேயும் வெள்ளச் சேதம் ஏற்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தாராளமாக 34 இலட்சம் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கியது. ரூபாய் 523 கோடி அளவிலே சேதம் அடைந்த சாலைகள், பாலங்கள், ஏரிகள் போன்ற பொதுக் கட்டமைப்பு வசதிகளை எல்லாம் சீர் செய்ய நடவடிக்கைகளை எடுத்தார்கள். அனைத்து வர்த்தக நிறுவனங்களும், வெளிநாட்டுக் குழுமங்களும், பன்னாட்டுத் தொழில் அமைப்புகளும், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களும் தமிழ்நாட்டிலே முதலீடு செய்கின்றன. இதற்குத் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு மிகச் சிறப்பாகப் பராமரிக்கப்படுவதே காரணம். இன்றைக்குத் தமிழ்நாட்டில் அனைத்துத் துறைகளும் வளர்ச்சி பெற்று சட்டம் ஒழுங்கு சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு, அமைதியும், நல்லிணக்கமும், வாழ்வும் தமிழக மக்களுக்கு உறுதிப்படுத்தப்பட்டது என்று சொன்னால், இது தமிழ்நாட்டின் முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒருவரால் மட்டுமே முடிந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், சட்டம் ஒழுங்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே எவ்வாறு இருந்தது என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்டுவது என்னுடைய தலையாய கடமை என்று கருதுகிறேன்.

முற்பகல் 11–05

திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகிறபோது, திருநெல்வேலி மாவட்டம், சிவந்திப்பட்டி கிராமத்திலே 28–6–1996 மற்றும் 29–6–1996 ஆம் தேதிகளில் 4 பேர் கொல்லப்பட்டனர். 28–1–1997 அன்று நடந்த பழனிபாபா கொலைக்குப் பிறகு 8 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 25 பேர் படுகாயம் அடைந்தனர். திருநெல்வேலி மாவட்டம், துறையூரிலே 5–5–1997 அன்று துப்பாக்கியால் சுட்டு இருவர் கொல்லப்பட்டனர். 7–5–1997 அன்று சிவகாசியில் போலீசார் சுட்டதில்



2006 ஜனவரி 24] [திரு. பி.எம். நரசிம்மன்]

மூவர் இறந்தனர். 30–6–1997 அன்று மேலவளவில் ஏற்பட்ட சம்பவத்தில் 6 பேர் கொல்லப்பட்டனர். 12–8–1997 அன்று மேலப்பாளையத்தில் நடந்த சாதிச் சண்டையில் 3 பேர் கொல்லப்பட்டனர். 2–9–1997 அன்று கோவையிலே நடந்த சாதிச் சண்டையில் 5 பேர் கொல்லப்பட்டனர். 26–9–1997 அன்று கடலூரில் வன்னியர் மற்றும் மீனவர்களிடையே ஏற்பட்ட கலவரத்தில் 3 பேர் கொல்லப்பட்டனர். 1997 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 27 மற்றும் 29 ஆகிய தேதிகளில் கோவையில் ஏற்பட்ட மதக் கலவரத்திலே 22 பேர் கொல்லப்பட்டனர். 30–11–1997 அன்று கோவையில் ஏற்பட்ட மதக் கலவரத்தில் 6 பேர் கொல்லப்பட்டனர். 6–12–1997 அன்று பாண்டியன் துரித இரயில் மற்றும் சேரன் இரயிலில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் 6 பேர் கொல்லப்பட்டனர். 14–2–1998 அன்று கோவையிலே ஏற்பட்ட குண்டு வெடிப்பில் 58 பேர் கொல்லப்பட்டனர். சிவகங்கை மாவட்டம், சக்கோட்டியில் 11–7–1998 அன்று நடந்த துப்பாக்கிச்சூட்டில் இருவர் கொல்லப்பட்டனர். திருவாரூர் மாவட்டம், தீவன்பால்பட்டினம் கிராமத்தில் 4–1–1999 அன்று நடந்த துப்பாக்கிச்சூட்டில் மூவர் கொல்லப்பட்டனர். 1999 ஆம் வருடம் ஜூலைத் திங்களில் தாமிரபரணியில் நடந்த சம்பவத்தில் 17 பேர் கொல்லப்பட்டனர். 17–11–1999 அன்று சென்னை மத்திய சிறையில் ஏற்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 10 பேர் கொல்லப்பட்டனர். திருவள்ளூர் மாவட்டம், அம்மையார்குப்பம் கிராமத்தில் 24–2–2001 அன்று நடந்த துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் கொல்லப்படுகிறார்.

இப்படி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, சட்டம் ஒழுங்கு குறித்த 17 சம்பவங்கள் இதுபோன்ற நடைபெற்றிருக்கின்றன. பலர் உயிரிழப்புக்கு ஆளாகி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சம்பவம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே ஏற்பட்டிருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

இவற்றையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், இன்றைக்குச் சட்டம் ஒழுங்கு சிறப்பான முறையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே பராமரிக்கப்பட்டு வருகிறது. தேசிய அளவில் இந்தியத் துணைக் கண்டத்தில், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு முதல் நிலை மாநிலமாக இன்றைக்கு தமிழ்நாடு சட்டம் ஒழுங்கிலே விளங்குகிறது என்று சொன்னால், அதற்குக் காரணம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

[திரு. பி.எம். நரசிம்மன்] [2006 ஜனவரி 24

அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண்மைத் தொழிலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிற சிறு குறு விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்கள், மொத்தம் 1 கோடியே 37 இலட்சம் பேர் பயன்பெறுகிற விதத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் தொடங்கியிருப்பது மிகவும் பாராட்டுக்குரிய ஒன்றாகும். இதற்காக வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 201.56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முற்பகல் 11–10

இங்கே பிரதான எதிர்க்கட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் பேசுகிறபோதுகூட, எங்களுடைய ஆட்சிக் காலத்திலேகூட விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் கொண்டு வந்தோம், 27–10–2000 அன்று வருவாய்த் துறை ஆணையர் மூலமாகக் கொண்டுவந்தோம். அதற்குப்பிறகு, 9–2–2001–ல்கூட தமிழ்நாடு தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு நலத் திட்டம் என்கின்ற ஆணையின் மூலமாக ஒரு திட்டம் அறிவித்தோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால், நான் கேட்க விரும்புவது, இப்படிப்பட்ட திட்டத்திற்கு அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதா என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தி.மு.க. அரசு 29–1–2001–லே இடைக்கால நிதிநிலை அறிக்கைகூட சட்டமன்றத்திலே தாக்கல் செய்தார்கள். அந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையிலேகூட, அந்தத் திட்டத்திற்கு விவசாயிகளுக்கு ஏதாகிலும் நிதியினை ஒதுக்கீடு செய்தார்களா என்று சொன்னால், ஒரு பைசா கூட ஒதுக்கீடு செய்யவில்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள், 15–8–2005 அன்று உழவர் பாதுகாப்புத் திட்டத்தை அறிவித்தார்கள். 3–10–2005 அன்று அரசு ஆணை மூலமாக ரூபாய் 100 கோடியை ஒதுக்கீடு செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இடைக்கால நிதிநிலை அறிக்கையிலே, இந்தத் திட்டத்திற்காக ரூபாய் 201.56 கோடியை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். 15–1–2006 அன்றைய நிலவரப்படி, இத்திட்டத்தின்மூலம் வழங்கப்பட்ட மொத்த நிதி உதவி ரூபாய் 22 கோடியே 46 இலட்சத்து 56 ஆயிரத்து 300. பயன்பெற்ற மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை 77 ஆயிரத்து 774 பேர். நீங்கள் கொண்டுவந்த திட்டம், தேர்தலுக்காக மக்களை ஏமாற்ற அவசரக்



2006 ஜனவரி 24] [திரு. பி.எம். நரசிம்மன்]

கோலத்தில் அள்ளித் தெளித்த ஏமாற்றுத் திட்டம். (மேசையைத்
தட்டும் ஒலி) ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்த
திட்டம், ஏழை விவசாயிகள் வாழ்வில் ஒளியேற்றிய திட்டம் என்பதை
நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத்
தட்டும் ஒலி)

தமிழ்நாட்டிலே, விவசாயிகளின் கடன் சுமையைக் குறைப்பதற்கு 2001
ஆம் ஆண்டில் பயிர்க் கடன் மீதிருந்த வட்டி மற்றும் அபராத வட்டியை
ரூ. 311 கோடியைத் தள்ளுபடி செய்தார்கள். 2002 ஆம் ஆண்டிலே, ரூ. 61
கோடி, 2003 ஆம் ஆண்டிலே ரூ. 62 கோடி. 31–3–2004 ஆம் நாள் வரையில்
விவசாயிகள் வாங்கிய ரூ.2,598 கோடி அளவிலான குறுகியக் கால பயிர்க்
கடனில், அசல் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கான தவணையை
இரண்டு ஆண்டுகள் ஒத்திவைத்து, கடன் தவணைக்கான அளவினையும்
ஐந்து ஆண்டுகளாக மாற்றியமைத்து மாண்புமிகு அம்மா அவர்கள்
ஆணையிட்டார்கள். 2006 ஆம் ஆண்டு ஜூன் 30 வரையிலான பயிர்க்
கடன்கள் குறித்த ரூ. 645 கோடி வட்டித் தொகை முழுவதையும் தள்ளுபடி
செய்து, மாபெரும் வட்டித் தள்ளுபடித் திட்டத்தை மாண்புமிகு அம்மா
அவர்கள் அறிவித்தார். இப்படிப்பட்ட சலுகைகள் தி.மு.க. ஆட்சிக்
காலத்திலே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டனவா என்பதை நீங்கள்
எண்ணிப் பார்க்கவேண்டும்.

மாநிலம் முழுவதும் உள்ள சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள்
கட்டமைப்பின் தரத்தை உயர்த்துவதிலும், தமிழகம் விரைவான
முன்னேற்றம் கண்டிருக்கிறது. 2001–2006 ஆம் ஆண்டுகளில் ரூ. 6,398.56
கோடி செலவில், 52,676 கிலோ மீட்டர் தொலைவிற்கு சாலைகள்
புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. 993 புதிய பாலங்களை கட்டும்
பணிகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு
மேற்கொண்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டின் இடைக்கால
வரவு–செலவுத் திட்டத்திலே, சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள்
மேம்பாட்டிற்காக ரூ. 3,529.90 கோடி ஒதுக்கப்பட்டு இருக்கிறது.
மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, மின்
வெட்டே இல்லாத மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. தி.மு.க. ஆட்சியிலே
ரூ. 4,850 கோடி மின் வாரியத்திலே வருவாய் இழப்பு. மோசமான நிதி
நெருக்கடிக்குத் தள்ளப்பட்டது தி.மு.க. ஆட்சிக் காலத்திலே.
மிகக் குறுகிய காலத்திலே, மீண்டும் சீரான நிதிநிலைக்குக்
கொண்டுவரப்பட்டது. 2005–2006 ஆம் ஆண்டில், 45,000 விவசாயிகளுக்கு
வேளாண் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டு
வருகின்றன.

முற்பகல் 11–15

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் 2006–2007 ஆம் ஆண்டிலே 50,000 விவசாயிகளுக்கு வேளாண் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும் என்று கூறியிருப்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் விவசாயிகளுக்கு, குடிசைகளுக்கு இலவச மின்சாரம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் வீட்டு உபயோகிப்பாளர்களுக்கு குறைந்த விலையிலே மின்சாரம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் 3 இலட்சம் ஓட்டு வீடுகளுக்கு இலவச மின்சாரம், இவை அனைத்தும் அம்மா ஆட்சியில் கிடைத்த வரப்பிரசாதங்களாகும் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகரை உலகத்தரம் வாய்ந்த மாநகரமாக மாற்றவேண்டுமென்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய இலட்சியம் நிறைவேறி வருகிறது. இதற்காக ரூபாய் 18,000 கோடி மதிப்பீட்டில் 10 ஆண்டுகால திட்டமாக செயல்படுத்தி வரும் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்மூலம் அனைத்து கட்டமைப்பு வசதிகளையும், பூங்காக்கள், நடைபாதைகள் ஆகிய திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. என்றென்றும் சென்னை என்ற திட்டத்தின்மூலமாக இப்பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னை மற்றும் சுற்றியுள்ள சாலைகளை 273 கிலோ மீட்டர் தூரத்திற்கு சாலைகளைச் செப்பனிட வேண்டும் என்பதற்காகவும், 11 பாலங்களை நிறைவேற்றுவதற்காகவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே 1,328 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தப் பணிகள் எல்லாம் இன்றைக்கு சிறப்பான முறையிலே நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

சென்னை மாநகரிலே குடி தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க வேண்டும் என்பதற்காக புதிய வீராணம் திட்டம் மூலமாக நாள் ஒன்றுக்கு 108 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையிலே குறுகிய காலத்திலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் இந்த அற்புதமான திட்டம் நிறைவேற்றப்பட்டது. சட்டமன்றத்திலேகூட பிரதான எதிர்க்கட்சிகள், அவர்களோடு கூட்டு வைத்திருக்கிற கட்சிகள் எல்லாம்கூட இது சாத்தியமா, முடியாது,



முடியாது என்று சொன்னார்கள். ஆனால் மிக விரைவிலேயே முடியாது என்று சொல்வதை முடித்துக் காட்டுபவர்தான் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னையிலே மக்களுடைய ஏக்கம், குழாய் மூலமாக தண்ணீரை நாம் பார்க்க முடியுமா என்கின்ற ஏக்கம்கூட. அவற்றையெல்லாம்கூட மக்களுடைய எதிர்பார்ப்புகளை, எண்ணங்களை நிறைவேற்றியவர்தான் மாண்புமிகு அம்மா அவர்கள்.

கல்வித் துறையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, பொற்கால ஆட்சியிலே பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு தேசிய அளவில் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அனைவருக்கும் கல்வித் திட்டம், சிறப்பான முறையிலே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்திலேதான் 1274 புதிய ஆரம்பப் பள்ளிகள், 2790 நடுநிலைப் பள்ளிகள், 395 உயர்நிலைப் பள்ளிகள், 406 மேல்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. ஆனால் தி.மு.க. ஆட்சியிலே 1996 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டுகள் வரைக்கும் 1039 தொடக்கப் பள்ளிகள், 512 நடுநிலைப் பள்ளிகள், 380 உயர்நிலைப் பள்ளிகள், 283 மேல்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. எத்தனை வேறுபாடு, எவ்வளவு வித்தியாசம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு +1, +2 படிக்கின்ற மாணவ மாணவியர்கள் அனைவருக்கும் இலவச சைக்கிள் திட்டம். ஒன்றாம் வகுப்பிலேயிருந்து 12 ஆம் வகுப்புவரை படிக்கின்ற 1 கோடியே 8 இலட்சம் மாணவ மாணவியர்களுக்கு இலவச பாடப் புத்தகங்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கான அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள், இலவசப் பேருந்து வசதி, உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமாக கல்வி கற்க பல்வேறு உதவிகள், நுழைவுத் தேர்வு இரத்து, இது போன்ற உதவிகள், சலுகைகள் வேறு எந்த ஆட்சியில், எந்த மாநிலத்தில் நடைபெற்றிருக்கின்றன? மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான், மாணவர்களுக்கு வானளாவிய சலுகைகள், உதவிகள் கிடைக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பி.எம். நரசிம்மன்] [2006 ஜனவரி 24

முற்பகல் 11–20

ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த புதுமையான இரண்டு திட்டங்களைச் செயல்படுத்தியதில், தமிழகம் முன்னணியில் நிற்கிறது. உலக வங்கி நிதியுதவியுடன் ரூ. 717 கோடி செலவில் புது வாழ்வு முன்னோடித் திட்டம் 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வசதிவாய்ப்பற்ற குடும்பங்களின் வாழ்வாதாரங்களை வளப்படுத்த வகைசெய்யப்பட்டுள்ளது. இடைக்கால வரவு–செலவுத் திட்டத்திலே, இதற்கு ரூ. 162 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளில் மிகவும் ஏழைகளாக உள்ளவர்களுக்கு உணவுப் பாதுகாப்பு, சுகாதாரப் பாதுகாப்பு போன்ற சமூகப் பாதுகாப்புத் தேவைகளை அனைத்து கிராம ஊராட்சிகளிலும் மிக ஏழ்மையில் வாடும் 3 இலட்சம் பேர்களுக்குப் பயனளிப்பது போன்ற திட்டத்திற்கு வரவு–செலவுத் திட்டத்தில் 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பதிலுரை தந்த மாண்புமிகு அம்மா அவர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளத்துடன் 50 சதவிகித அகவிலைப்படியை இணைத்தது, இதனால் அரசுக்கு 1,200 கோடி ரூபாய் கூடுதல் செலவு, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ. 359 கோடி அளவிற்கு கூடுதல் நிவாரண நிதி, உழவர் பாதுகாப்புத் திட்டத்தைப் பேரூராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு நீட்டித்தது, 3 இலட்சம் ஓட்டு வீடுகளுக்கு இலவச மின்சாரம் தருவது, ரூ.3,600 கோடியிலே குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தியது, நுழைவுத் தேர்வு இரத்து, அரசுப் பணிகளில் நேரடி நியமனத்திற்கான தடையாணை இரத்து, இப்படிப்பட்ட அற்புதமான திட்டங்களையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

தமிழகத்து மக்கள் வாக்குச் சாவடிகளுக்குச் செல்கிறபோது, அவர்கள் மனதிலே கடந்த ஐந்தாண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்கள், ஒவ்வொரு துறையிலும் நிறைவேற்றிய திட்டங்கள் நிழலாடப்போகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களால், பேரிடர் வந்தபோது போர்க்கால நடவடிக்கையிலே நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது, அது தமிழகத்து மக்கள் மனதிலே நிழலாடப்போகின்றது. புதிய வீராணம் திட்டம் நிறைவேற்றப்பட்டது, அது மக்கள் மனதிலே நிழலாடப்போகின்றது.



2006 ஜனவரி 24] [திரு. பி.எம். நரசிம்மன்]

1 கோடியே 37 இலட்சம் பேர்களுக்கு உதவி புரியும் மாண்புமிகு அம்மா அவர்களின் உழவர் பாதுகாப்புத் திட்டம் நிழலாடப்போகின்றது. ப்ளஸ் 1, ப்ளஸ் 2 படிக்கிற அனைத்து மாணவர்களுக்கும் இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் நிழலாடப்போகின்றது. 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற அனைவருக்கும் இலவச பாடப் புத்தகங்கள் வழங்கினார்களே, அந்தத் திட்டம் மக்கள் மனதிலே நிழலாடப்போகின்றது. விவசாயிகளுக்குக் கடன் தள்ளிவைப்பு, வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி, இப்படிப்பட்ட அரிய திட்டங்களெல்லாம் பொதுமக்களுடைய மனதிலே நிழலாடப்போகின்றன. இப்படி, இந்தத் திட்டங்களெல்லாம் பொதுமக்கள் மனதிலே நிழலாடப்போகின்றபோது, அவர்களுடைய வாக்குகள் யாருக்கு என்பதைத் தீர்மானிக்கிறபோது, அவர்கள் வாக்கு இரட்டை இலைக்கே என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன், (மேசையைத் தட்டும் ஒலி) பொதுமக்களுடைய ஒட்டுமொத்த ஆதரவு மாண்புமிகு அம்மா அவர்களுக்குத்தான்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மீண்டும் முதல்வர் ஆவதைத் தமிழகத்து மக்கள் தீர்மானித்துவிட்டார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) காவடிக் கட்சிகளின் கரையோர அறிக்கைகளால், வெள்ளைக் காகிதங்கள்கூட விலையேறிப்போயின. பூவடி வைக்கும் புரட்சித் தலைவிக்கு இது புதுமையல்ல, பழைமையே. செங்கோட்டை, கல்கோட்டையென எல்லாக் கோட்டையுமே, அவர் கோட்டையென அறிவிக்க முயலுகிறார். தன் கோட்டை இனி தரமில்லாக் கோட்டையென, உன்கோட்டை கண்டு உளுத்துதான் போகின்றார். அன்னை கோட்டை, மக்கள் கோட்டை, என்றுமே அது எஃகு கோட்டை, தேர்தல் நேரம் இது, (மேசையைத் தட்டும் ஒலி) வருவார்; வரப்பு வயல் என்று வலிய கால் வைப்பார், கையெடுத்து கும்பிடுவார், கண்ணீர் சொரிவார், என் இதயம் மக்கள் என்பார், எதை எதையோ சொல்லிடுவார், அம்மா ஆட்சியில் அளப்பறிய சாதனைமுன் இதுவெல்லாம் தூசாகும். இரட்டை இலை பாசாகும். இதய தெய்வம் அம்மாவின் முன் இது எனது பதிவாகும். ஏன், இதுதான் மக்களின் நாளைய பதிலாகும் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச்சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) இடைக்கால நிதிநிலை அறிக்கையிலே பேசுகிற வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு தலைவர் அவர்களுக்கும், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் மீண்டும் நன்றியினைத் தெரிவித்து, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி, ஏதோ கேட்க வேண்டும் என்றீர்களே?

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே குறுக்கிடக்கூடாது என்று அமைதியாக அமர்ந்திருந்தேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடேயப்பா, எவ்வளவு கண்ணியம்!

**திரு. பரிதி இளம்வழுதி:** அதாவது சட்டம்–ஒழுங்கு சிறப்பாகப் பராமரிக்கப்படுகிறது, காவல் துறை மிகத் திறமையாகச் செயல்படுகிறது என்றெல்லாம் சொன்னார்கள். நான் அதற்குள் போக விரும்பவில்லை. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடு) இப்படிப் பதுங்கும்போதே தெரியும் எனக்கு; ஏதாவது பிரச்சினையைக் கிளப்புவீர்கள் என்று. (குறுக்கீடு) அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் நிதிநிலை அறிக்கைமீது பல்வேறு கருத்துகளைக் கூறியிருக்கிறார்கள். குறிப்பாக, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையினுடைய திட்டத்தைப் பற்றிய குறிப்புகளை முன்னுரையிலே அளித்திருக்கிறார்கள். அதிலே குறிப்பாக நான் ஒரு விளக்கம் பெற விரும்புவது, மொத்த வருவாய்க் கணக்கு வரவு ரூ. 34,046 கோடி. மொத்த வருவாய்க் கணக்கில் செலவு ரூ. 34,253.56 கோடி, மொத்தம் வருவாய் பற்றாக்குறை குறைந்த அளவாக ரூ. 207.27 கோடி என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. 2006–2007 ஆம் ஆண்டு இறுதியிலே, ஒட்டுமொத்த பற்றாக்குறை ரூ. 5.57 கோடி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் குறைபாடு இல்லாத பட்ஜெட் என்று தோற்றத்தைக் கொடுத்துவிட்டு, 2006–2007ஆம் ஆண்டு நிதிப் பற்றாக்குறை ரூ. 5,570 கோடியே 10 இலட்சம் என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால், இந்த வரவு–செலவுத் திட்டங்கள் இந்தக் கொள்கையின் அடிப்படையிலே நீங்கள் அறிவிக்கிற

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அந்த அறிவிப்புகள் எல்லாமே, பின்னாலே மிகப்பெரிய நிதிச்சுமையை ஏற்படுத்துவதற்குரிய முயற்சியாக எடுத்து, இப்பொழுதே இந்தத் திட்டங்களை நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். ஆக, இந்த ஆண்டே 5,000 கோடி ரூபாய் பற்றாக்குறையாகப் போகிறது என்ற ஒரு அபாய அறிவிப்பையும் இணைத்தே நமது நிதியமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார் என்பதை நாட்டு மக்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள் ...

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் Revenue Deficit–க்கும், Fiscal Deficit–க்கும் உள்ள வித்தியாசத்தை மறந்து, தவறானத் தகவலை அவைக்குத் தந்து கொண்டிருக்கிறார். ஐயாயிரத்து சொச்சம் கோடி ரூபாய் என்பது Fiscal Deficit. அந்த இருநூற்றி சொச்சம் கோடி ரூபாய் என்பது Revenue Deficit. இதற்கும் அதற்கும் மாறுபாடு இருக்கிறது. அதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த விளக்கத்தைச் சொல்லுகிறார்கள். இதேபோலதான், பொதுவாக நம்முடைய மாநில உற்பத்தியிலேயே, 2.35 சதவிகிதம் இதிலே குறைகிறது. ஆனால் 8 சதவிகிதம் வளர்ச்சி என்று குறியீட்டைப் பற்றிச் சொல்லுகிறோம். ஆட்சி சொல்கிறது. ஆனால், இந்த 2.35 சதவிகித வீழ்ச்சி என்றால், இன்றைய நிலவரப்படி, வளர்ச்சி என்பது 5.65 சதவிகிதம் என்பதை ஏற்றுக்கொண்டு இந்த அறிக்கையில் குறிப்பிட வேண்டும். ஆனால், 8 சதவிகிதத்தை நெருங்கிவிட்டது என்று கொடுப்பது என்பது தவறான புள்ளிவிவரமாக நான் இங்கே பதிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர் வறட்சி இருந்தபோதிலும், பல்வேறு பாதிப்புகள் இருந்தபோதிலும், மைய அரசினுடைய உதவி போதிய அளவு இல்லாத போதிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திறமையான நிதி நிர்வாக மேலாண்மை, ஆளுமை காரணமாக நாம் ஒட்டுமொத்தமாக 8 சதவிகித வளர்ச்சிப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறோம் என்பதற்கு புள்ளிவிவரங்கள் அவைக்கு ஏற்கெனவே தரப்பட்டிருக்கின்றன. அவற்றைப் படித்துப் பார்க்க வேண்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** எது எப்படி இருந்தாலும், நமது மாநிலம் நிதிப் பற்றாக்குறைக்கு ஆளாகப்போகிறது என்ற அறிவிப்பு உங்களாலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இது...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையை அவர் சரியாகப் படிக்க வேண்டும். Budget Memorandum ஏற்கெனவே தரப்பட்டிருக்கிறது. அதையும் அவர் சரியாகப் படிக்க வேண்டும். ஒவ்வொரு துறையினுடைய அந்த grants, demand–ம் ஏற்கெனவே அவைக்குத் தரப்பட்டிருக்கின்றன. அவற்றையும் படிக்க வேண்டும். இவற்றையெல்லாம் படித்தால், இந்தியாவிலேயே நிதி மேலாண்மையை மிகச் செம்மையாகக் கையாண்டு, ஒரு சீர்கேட்டு நிலையிலிருந்த தமிழகத்தைக் காப்பாற்றி, பிற மாநிலங்கள் எல்லாம் மெச்சக்கூடிய அளவிற்கு forward improvement என்ற முறையிலே முன்னேறி சென்றுகொண்டிருக்கிறது தமிழகம் என்பதை நீங்கள் முழுமையாகப் படித்தால் புரிந்துகொள்வீர்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வேளாண் துறையை எடுத்துக்கொண்டால், தமிழகத்தில் பெரிய அளவிலே இப்பொழுது பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, நம்முடைய முதன்மைத் துறை வேளாண் துறை என்று மத்திய அரசும் ஒப்புக்கொள்கிறது, மாநில அரசும் ஒப்புக்கொள்கிறது. ஆனால், இந்த வேளாண் துறையினுடைய வளர்ச்சியைப் பற்றிய அக்கறை, அதற்குரிய திட்டத்தைப் பற்றிப் பார்க்கிறபோது, அடிப்படை நோக்கத்தோடு திட்டங்கள் தயாரிக்கப்படுவதாகத் தெரியவில்லை என்பது என்னுடைய கருத்து. இதைப் பற்றிய ஒரு ஆழமான சிந்தனையை அரசு எடுத்துக்கொள்ளவில்லை என்று சொன்னால்.. (குறுக்கீடு) நான் முழுமையாக சொல்லிவிடுகிறேன். தயவு செய்து வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குறுக்கிடக்கூடாது. நான் சொன்னதற்குப் பின்னாலே, அதிலே தவறுகள் இருந்தால் நான் அவற்றை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆகவே, இதிலே குறிப்பாக நம்முடைய அடிப்படைத் துறை என்கிறபொழுது, வேளாண் துறையிலே இப்பொழுது சரியான ஒரு மதிப்பீட்டை நாம் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. குறிப்பாக, தமிழகத்தினுடைய மொத்த நெல் உற்பத்தியிலே மொத்த உற்பத்தியில் 2 ஆயிரம் ஆண்டில் 18 சதவிகிதமாக இருந்தது. 2004–2005 ஆம் ஆண்டில் 13 சதவிகிதமாக குறைவு ஏற்பட்டிருக்கிறது. சரி, வறட்சி. ஆகவே வறட்சி, வெள்ளம், புயல், சுனாமி. இப்பொழுதாவது அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டதற்கு நன்றி. இந்த 5 சத வீழ்ச்சி, சாதாரண



வீழ்ச்சி அல்ல. இது 64 சதம் மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினை. ஆகவே, இந்த 5 சத வீழ்ச்சி என்பது 64 சதமாக இருக்கக்கூடிய விவசாயிகளினுடைய வாழ்க்கைப் பிரச்சினை பற்றியது. ஆகவே, இயற்கைச் சீற்றங்கள் காரணம் இருப்பது ஒருபுறமாக இருக்கிறது. ஆனால், செயற்கையாகவே ஆட்சியாளர்களால் ஏற்படுத்தக்கூடிய காரணம் என்பதுதான் பெரும்பாலான காரணமாக இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வறட்சி, மாண்புமிகு உறுப்பினர் ஒத்துக்கொண்டார். இயற்கைச் சீற்றத்தையும் ஒத்துக்கொண்டார். செயற்கை என்ன என்பதை அவர் சொல்லவில்லை. செயற்கை, டெல்லியிலே இருக்கின்ற ஆட்சி, தமிழகத்தினுடைய பிரதிநிதிகள் முயற்சி இன்னும் சற்று எடுத்திருக்க வேண்டும். நீங்களும் கூட்டாக இருந்தீர்கள். காவிரி பிரச்சினை ஒழுங்காக தீர்க்கப்பட்டிருந்தால், இந்தப் பிரச்சினை இந்த அளவிற்கு வந்திருக்காது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

முற்பகல் 11–35

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் பணிவோடு ஒரு கருத்தைத் தெளிய வைக்க விரும்புவதெல்லாம் 2005–2006 ஆம் ஆண்டினுடைய நெல்லினுடைய பரப்பளவினுடைய சாகுபடியைப் பார்க்கின்றபொழுது 20 இலட்சம் ஹெக்டேரிலே இப்பொழுது 19.25 இலட்சம் ஹெக்டேர் சாகுபடி செய்யப்பட்டிருக்கின்றது என்பதையும், மொத்த சிறு தானியங்களைப் பொறுத்தமட்டிலே, இலக்கு 11 இலட்சமாக இருந்தாலுங்கூட, 11.82 இலட்சம் ஹெக்டேர் சாகுபடி செய்யப்பட்டிருக்கின்றது என்பதையும், மொத்த பயறு வகைகளைப் பொறுத்தமட்டிலே, 8 இலட்சம் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பிறகு, 6.04 இலட்சம் ஹெக்டேர் சாகுபடி செய்யப்பட்டிருக்கின்றது என்பதையும், மொத்த தானியங்களைப் பொறுத்தமட்டிலே 39 இலட்சம் ஹெக்டேர் என்று

[திரு. கே. பாண்டுரங்கன்] [2006 ஜனவரி 24

இலக்கு நிர்ணயிக்கப்பட்டதற்குப்பிறகு *37.11* இலட்சம் ஹெக்டேர் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், பருத்தியைப் பொறுத்தமட்டிலே *2.50* இலட்சம் ஹெக்டேர் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டதற்குப்பிறகு *1.21* இலட்சம் ஹெக்டேர் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், எண்ணெய் வித்துக்களைப் பொறுத்தமட்டிலே *10.50* இலட்சம் ஹெக்டேர் என்று சாகுபடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டதற்குப்பிறகு *6.67* இலட்சம் ஹெக்டேர் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், உற்பத்தித் திறனைப் பொறுத்தமட்டிலே இந்த ஆண்டு நெல்லை பொறுத்தமட்டிலே, *78* இலட்சம் மெட்ரிக் டன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதற்குப்பிறகு தற்போது *59.68* இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், மொத்த சிறு தானியங்களைப் பொறுத்தமட்டிலே *15.51* இலட்சம் மெட்ரிக் டன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதற்குப்பிறகு *13.97* இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், மொத்த பயிர் வகைகளைப் பொறுத்தமட்டிலே, *3.70* இலட்சம் மெட்ரிக் டன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதற்குப்பிறகு *3.02* இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், மொத்த தானியங்களைப் பொறுத்தமட்டிலே *97.27* இலட்சம் மெட்ரிக் டன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதற்குப்பிறகு *76.67* இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், பருத்தியைப் பொறுத்தமட்டிலே, *5.85* இலட்சம் மெட்ரிக் டன் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டதற்குப்பிறகு *2.11* இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், எண்ணெய் வித்துக்களைப் பொறுத்தமட்டிலே *18.59* இலட்சம் மெட்ரிக் டன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதற்குப்பிறகு *9.34* இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், இவையெல்லாம் இயற்கைச் சீற்றங்கள் இருந்தாலும், பெருமழை இருந்தாலும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய தொலைநோக்குப் பார்வையாலே, சீரிய நிர்வாகத்தாலே இவ்வளவு உற்பத்தித் திறனையும் சாகுபடி பரப்பளவையும் உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதை நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் துறை அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தையும், புள்ளிவிவரத்தையும் தந்திருக்கிறார்கள். நான் ஒரு புள்ளிவிவரத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். *2004* ஆம் ஆண்டு



2006 ஜனவரி 24] [திரு. வை. சிவபுண்ணியம்]

நமது அரசின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவர அறிக்கையின் அடிப்படையிலேயே காவிரி டெல்டாவினுடைய நெல் உற்பத்திப் பகுதி என்பது *28* சதம். அதிலே, நெல் உற்பத்தி என்பது *28.8* சதம். வட மாவட்டங்களிலே நெல் உற்பத்தி செய்யப்படுகிற நிலப்பரப்பினுடைய அளவு *38* சதவிகிதம். அதிலே நெல் உற்பத்தி செயய்ப்படுகிற அளவு *48.5* சதம். தென் மாவட்டங்களிலே நெல் உற்பத்தி செய்யப்படுவது என்பது *17.5* சதம். இந்த புள்ளிவிவரங்கள் நம்முடைய *2004* ஆம் ஆண்டினுடைய statistics–ல் நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. இந்த புள்ளிவிவர அறிக்கையின்படி பார்த்தால் காவிரி டெல்டா பகுதி என்பது உலகத்திலேயே தொன்மையான பகுதியாக இருக்கிற அந்தக் காவிரி டெல்டா பகுதியினுடைய நெல் உற்பத்தி என்பது ஆண்டுதோறும் குறைந்து கொண்டே இருக்கிறது என்பது அதிகாரபூர்வமான அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் (குறுக்கீடு) தயவுசெய்து நான் சொல்லிவிடுகிறேன், நீங்கள் விளக்கம் சொல்லுங்கள். அப்படியானால், இந்த புள்ளிவிவரங்களின் அடிப்படையில் நான் சொல்வது––இந்த புள்ளிவிவரமும் நீங்கள் கொடுத்த புள்ளிவிவரங்களிலிருந்துதான் நான் சொல்கிறேன், ஆகவே, நீங்கள் கொடுத்த அந்த புள்ளிவிவரங்களின் அடிப்படையிலேயே நெல் உற்பத்தி என்பது குறைந்து கொண்டே இருக்கிறது. அதிலும், குறிப்பாக உலக அளவிலேயே அதிக உற்பத்தியைச் செய்யக்கூடிய காவிரி டெல்டா பகுதியில் குறைந்து கொண்டிருக்கிறது என்ற அபாயத்தைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விவரம் தெரியாமல் பேசிக் கொண்டிருக்கிறார். நெல் உற்பத்திக்கு அளவு கடந்த தண்ணீர் வேண்டும். தொடர் வறட்சி, தண்ணீர் இல்லை, காவேரித் தண்ணீரும் இல்லை. டெல்டா பகுதியில் எப்படி உற்பத்தி குறையாமல் இருக்கும்? என்ன பொருளோடு சொல்கிறீர்கள், புரியவில்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நான் திட்டப் பணிகள் எப்படிக் குறையாமல் இருக்கும் என்பதைப் பற்றி விவாதிக்கவில்லை. அமைச்சர் அவர்கள் எல்லா திட்டங்களும் சிறப்பாக நிறைவேறிக் கொண்டிருக்கின்றன, உற்பத்தி பெருகிக் கொண்டிருக்கிறது என்பதைப்பற்றிச் சொன்னார்கள். பசுமைப் புரட்சித் திட்டம் வந்ததற்குப் பின்னாலே உற்பத்தி பெருகியது என்பது உண்மைதான். ஆனால், அதேநேரத்தில், இந்த உற்பத்தி செய்யக்கூடிய பரப்பளவு,

அதுவும் குறிப்பாக காவிரி டெல்டா பகுதி, அதேபோல தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளில் விளைச்சல் என்பது கீழ்நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இந்த உண்மையை மறுக்க முடியாது. காரணம், நீங்கள் சொல்கிற காவிரிப் பிரச்சினை இருக்கிறது, நிலத்தடி நீர்ப் பிரச்சினை இருக்கிறது, இயற்கைப் பிரச்சினை இருக்கிறது என்பதெல்லாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றுதான் என்றாலுங்கூட, இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், சரியாக இந்த விவசாயத்தைப் பயன்படுத்தி இதை நம்பியிருக்கக்கூடிய மக்களைப் பாதுகாப்பதற்குமான ஒரு தொலைநோக்குத் திட்டம் என்பது அரசின் சார்பில் இல்லை என்பது என்னுடைய பணிவான குற்றச்சாட்டு.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த தண்ணீரைப் பயன்படுத்தி தேவையான அளவுக்கு உற்பத்தித் திறனை பெருக்கக்கூடிய மாற்றுப் பயிர்த் திட்டத்தை வேளாண் பல்கலைக்கழகத்தின் மூலமாக 3 ஆண்டு காலமாக இதுபோன்ற பகுதிகளில் தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் நடைமுறைப்படுத்தி வருகிறார். அதனால் இந்த primary sector என்று சொல்லக்கூடிய முதன்மைத் துறையிலும், ஆபத்து ஏற்படக்கூடிய நிலையிலிருந்து மீறி, ஓரளவுக்கு வளர்ச்சி உருவாகி இருக்கிறது.

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சபைக்குத் தவறான தகவலைத் தந்து கொண்டிருக்கின்றார். 2003–2004 ஆம் ஆண்டைப் பொறுத்தமட்டிலே நெல் உற்பத்தி 32.22 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி. கடும் வறட்சி. அதற்குப் பிறகு 2004–2005 ஆம் ஆண்டிலே நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய முயற்சியின் காரணமாக 53.02 இலட்சம் மெட்ரிக் டன்னாக நெல் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றது என்கின்ற தகவலை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே, பொதுவாக 80 இலட்சம் விவசாயிகள் தமிழகத்திலே இருக்கிறார்கள். இதிலே சிறு, குறு விவசாயிகள் 71 இலட்சம் பேர் இருக்கிறார்கள். ஏனென்றால் விவசாயம்தான் நம் அனைவருக்கும் அடிப்படையாக இருக்கிறது. அனைத்து உறுப்பினர்களுக்குமே அடிப்படையாக இருக்கிற பிரச்சினை இது. இதைப்பற்றி அக்கறை கொள்ளாமல் வேறு விஷயங்களைப் பேசி எதுவுமே ஆகாது. அது எந்த வகையிலும், வேறு அரசியலுக்கும் பயன்படாது. இது என்னுடைய ஆழமான கருத்து. ஆகவே, இந்த 71 இலட்சம் சிறு, குறு விவசாயிகளைப் பற்றி, குறிப்பாக நாம் அக்கறையோடு பார்க்கவேண்டுமானால், மிகப் பெரிய அளவுக்கு பாதிப்பை அடைந்து கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் மிகப் பெரிய கடன்தாரர்களாக மாற்றப்பட்டு விட்டார்கள். ரொம்பவும் நலிவடைந்த நிலைக்குச் சென்று கொண்டே இருக்கிறார்கள். ஆகவே, இதை அக்கறையாகப் பரிசீலிக்க வேண்டும். மத்திய அரசாங்கம் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்குரிய தொலைநோக்குத் திட்டங்களை அவர்கள் போட வேண்டிய அவசியம் இருக்கிறது. அவற்றைப் போட வேண்டுமென்று நாம் அனைவருமே வலியுறுத்துவோம். அதை எதிர்த்துக் குரல் கொடுப்பதிலே எங்களுக்கு ஆட்சேபணையே கிடையாது. ஆனால் (குறுக்கீடு) நான் கொஞ்சம் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) என் சார்பில் வேளாண்மைத் துறை அமைச்சர் பேசுவார் என்று அறிவித்துவிடலாம் தலைவரே.



**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கே மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள்....

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, point of order. அமைச்சர்கள் பேசும்பொழுது நாங்கள் குறுக்கிட்டால், அவர்கள் பேசி முடித்த பிறகு பேசுங்கள் என்று சொல்கிறீர்கள். தயவுசெய்து அதேபோல் அமைச்சர்கள் குறுக்கிட்டுப் பேசும்பொழுது, உறுப்பினர்கள் பேசி முடித்த பிறகு பேசுங்கள் என்று நீங்கள் அவர்களுக்குச் சொல்லலாம் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அமைச்சர்களுக்கு அந்த விதி எல்லாம் பொருந்தாது. அமைச்சர்கள், நீங்கள் ஏதாவது முக்கியமான, சிக்கலான சில பிரச்சினைகளைக் கிளப்புகிறபோது உடனடியாகப் பதில் சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ..... (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு உறுப்பினர்கள் பேசுகிறபொழுது குறுக்கிட்டுப் பேசுவதற்கு உரிமை உண்டு. பேசவும்

வேண்டும். ஆனால் தாங்களும் அமைச்சராக இருந்திருக்கிறீர்கள். அது எப்படி இருக்கவேண்டுமென்று சொன்னால், போகிறபொழுது நம்முடைய மேல் துண்டு ஒரு முள்ளிலே மாட்டினால் அதை எடுத்துவிடுகிறோம் அல்லவா அப்படித்தான் இருக்கவேண்டுமே தவிர, கிருஷ்ணமேனன் மாதிரி சொல்வார்களே, 13 மணி நேரம், 12 மணி நேரம் பேசினால் என்ன பண்ணுவது?

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4½ ஆண்டு காலமாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேளாண் பெருமக்களுக்குச் செய்திருக்கின்ற சலுகைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நெஞ்சிலே கையை வைத்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு நன்றி சொல்ல வேண்டுமேயொழிய, அதைவிடுத்து, வேளாண் பெருமக்களுக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு எதையும் செய்யவில்லை என்று ஒரு தவறான நோக்கத்தோடு இன்றைக்கு மன்றத்திலே பதிய வைத்துக் கொண்டிருக்கின்றார் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நான் மீண்டும் நினைவுபடுத்த விரும்புவதெல்லாம், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்தபோது கடுமையான நிதி நெருக்கடி இருந்தபோதிலுங்கூட, கடந்த ஆட்சியாளர்களாலே கொடுக்க முடியாமல் இருந்த ஒரு நிலைப்பாடு இருந்தாலுங்கூட, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்த ஆட்சியாளர்கள் மறுத்தபோதுங்கூட, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு ரூ. 310.51 கோடி வேளாண் பெருமக்களுக்காக அவர்கள் வாங்கிய கடனுக்கு, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே பெறப்பட்ட கடனுக்கு வட்டியும், கூட்டு வட்டியும், ஆக ரூ. 310.51 கோடி தள்ளுபடி செய்த வரலாற்றை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2002 ஆம் ஆண்டு ரூ. 61.05 கோடி வட்டி தள்ளுபடி. 2003 ஆம் ஆண்டு ரூ. 62 கோடி வட்டி தள்ளுபடி. நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், இந்த 4½ ஆண்டு காலத்திலே எந்த வேளாண் பெருமக்கள் வாங்கிய கடனுக்காவது ஜப்தி நடவடிக்கை உண்டா? எங்கேயாவது தண்டோரா போடப்பட்டது உண்டா? அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். ஆக, ஒட்டுமொத்தமாக ரூ. 645 கோடி ஒரு பக்கம் தள்ளுபடி. அதற்குப் பிறகு கடந்த வாரம்கூட பெருமழையாலே பாதிக்கப்பட்ட வேளாண் பெருமக்களுக்காக ரூ. 3.50



கோடியை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாரி வழங்கியிருக்கின்றார்கள் என்பதனை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வேளாண் பெருமக்களுக்கு வறட்சியாலே பாதிக்கப்பட்டபோது 30 கிலோ இலவச அரிசியை வழங்கியவர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேளாண் பெருமக்களுடைய கனவை நனவாக்குவதற்காக கரும்புக்கு, 9 சதவீதம் பிழிதிறனுக்கு உட்பட்டிருந்தாலுங்கூட 1,014 ரூபாய் கொடுத்திருக்கின்ற வரலாற்றை நீங்கள் மறந்துவிடக் கூடாது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2,598 கோடி ரூபாய் கடனை, குறுகிய காலக் கடனை, நீண்டகாலக் கடனாக மாற்றி, 2 ஆண்டு காலம் அந்தக் கடனைத் திருப்பிக் கட்ட வேண்டாம் என்றும், 3 ஆண்டு காலத்திலே சம தவணைகளிலே கட்ட வேண்டுமென்றும் ஆணை வழங்கியவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வளவு சலுகைகளையும் அம்மா அவர்கள் வழங்கியதற்குப் பிறகும் மௌனத்தை நீங்கள் சாதிப்பதுதான் எங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், 5 மணித் துளிகளில் பேசி முடியுங்கள். குறுக்கீடுகள் எதுவும் இல்லாமல் பார்த்துக்கொள்கிறேன். தொடர்ந்து 5 மணித் துளிகளில் பேசி முடியுங்கள். அமைச்சர் விளக்கம் சொன்னதற்காக இன்னும்கூட இரண்டு மணித் துளிகள் தருகின்றேன். 7 மணித் துளிகள் உங்களுக்கு வழங்கப்படுகின்றது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்பொழுது ஆட்சியினுடைய கொள்கை நிலைகளைப் பற்றி, அதன்மீது இருக்கின்ற குறைபாட்டைப் பற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த பாயின்ட்டுக்குப் போங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நமது அமைச்சரவர்கள் விளக்கத்தைச் சொல்லி, தேவையில்லாத விவாதத்திற்கு ஆட்படுத்துகின்றார்கள். நான்

நிதிநிலை அறிக்கையின்மேல்தான் பேசிக் கொண்டிருக்கின்றேன். அதிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்ற விஷயங்கள்மீது, இருக்கிற நிறைகுறைகளைச் சொல்லவேண்டியது என்னுடைய கடமை, பொறுப்பு என்ற முறையில். இப்போது 74 சதவிகித விவசாயிகள் கடன்தாரர்களாக இருக்கின்றார்கள். தேசிய மாதிரி ஆய்வு மையம் ஒரு புள்ளி விவரத்தைச் சொல்லியிருக்கிறது. தமிழக விவசாயிகளில், ஒரு விவசாயி, தலா சராசரி கடனாக 23,963 ரூபாய்க்கு கடனாளியாக இருக்கின்றான். இந்திய அளவிலே அதைப் பார்த்தால், 12,585 ரூபாய்க்கு கடனாளியாக இருக்கின்றான். ஆகவே, தமிழ்நாட்டில் 23,963 ரூபாய்க்கு தலா ஒவ்வொரு விவசாயியும் கடன் பெற்றிருப்பதாகத்தான் தேசிய மாதிரி ஆய்வு மையம் சொல்கிறது. ஆகவே இந்தக் கடன் சுமையைப் பொறுத்தவரையிலும், இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசுகின்றபோது, பலபேருக்கு சங்கடங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

நிதிநிலை அறிக்கையில் சில செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை மகிழ்ச்சியளிப்பதாக இருக்கின்றன. அதிலே நமது நிதியமைச்சர் அவர்கள் சில விஷயங்களைச் சொல்லியிருப்பதற்காக அவர்களுக்கு என்னுடைய பாராட்டு. "தமிழ்நாட்டின் சிறப்புமிகு சீர்திருத்தச் சாதனைகளினால் பன்னிரெண்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளில் கணிசமான அளவுக்குக் கடன் தள்ளுபடி பெற இம்மாநிலம் தகுதி பெற்றிருக்கிறது" என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றார். ஆகவே இதை நான் வரவேற்கின்றேன். அந்த அடிப்படையிலே இந்த வேளாண்மைத் துறையைச் சார்ந்திருக்கின்ற விவசாயிகள் பெற்றிருக்கின்ற கடனைப் பொறுத்தவரைக்கும், வட்டித் தள்ளுபடி என்பது எந்தவகையிலும் போதாது. அதற்கு 5 ஆண்டுகள் கொடுத்தாலும், 10 ஆண்டுகள் கொடுத்தாலும், அவர்களால் அதை ஈடுசெய்யவே முடியாத நிலையிலே விவசாயிகள் இருக்கின்றார்கள். ஆகவே கடனைத் தீர்த்துவிட்டு, ஒருமுறை தவணைத் திட்டத்தின் அடிப்படையில் தீர்வு காணுவதற்குரிய முயற்சி என்று சொல்லப்படுவது, அந்த வட்டியைப் பெறுவதற்கான வாய்ப்பே இல்லாமல் போய்விடும். 645 கோடி வட்டித் தள்ளுபடி என்ற அறிவிப்பு பொதுவாக இருக்கிறது. ஆனால் அந்த வட்டித் தள்ளுபடி பெற்ற விவசாயிகள் எத்தனை பேர்? எத்தனை கோடி அந்த சலுகையைப் பெற்றிருக்கின்றார்கள் என்று பார்த்தால் அதற்குரிய வாய்ப்பு மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தால், வட்டி முழுவதையும் தள்ளுபடி செய்துவிட வேண்டுமென்பது என்னுடைய பணிவான கருத்து. அசலைப் பொறுத்தவரைக்கும் தள்ளுபடி செய்வதற்கான முயற்சியை இந்த அரசு எடுக்கவேண்டும். அதை 5 ஆண்டுகால சமதள அளவிலே



செலுத்துவதற்கான புதிய சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். புதிய திட்டத்தை அறிவிக்க வேண்டும். அப்படி இல்லையென்று சொன்னால், விவசாயிகளால் எந்தவகையிலும் மீள முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடியுங்கள். (குறுக்கீடு) கூட்டுறவுத் துறை அமைச்சர், உறுப்பினர் பேசி முடிக்கட்டும். அவர் பேச்சை நிறைவு செய்துவிடட்டும். சிவபுண்ணியம், பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இதைச் செய்து தரவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். குறிப்பாக, கூட்டுறவுத் துறை விஷயங்களைப் பொறுத்தவரையிலும், பல சந்தர்ப்பங்களில் பேசப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, அதற்கான முயற்சியை எடுப்பதற்கான காரியங்களை நமது அரசு செய்யவேண்டும். குறிப்பாக உலக வங்கியும் அப்படித்தான் சில நிபந்தனைகளைப் போடுகிறது. உலக வங்கி இருக்கிற இடமாக இருக்கின்ற அமெரிக்காவில் விவசாயிகளுக்கு கணிசமான தள்ளுபடி. ஆனால் இந்திய விவசாயிக்கு தள்ளுபடி செய்யக் கூடாது என்று உத்தரவு போட்டு அதன்மீது கடனை வாங்குகிறார்கள். நீங்களும் அப்படித்தான் வாங்குகிறீர்கள். ஆகவே அந்த நிர்பந்தம் எங்களது விவசாயிகளுடைய தலையில் சுமத்தப்படுகிறது. ஆகவே இதை நிவர்த்தி செய்வதற்கான முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித் துளிகளில் பேச்சை முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** குறிப்பாக, நமது நிதியமைச்சர் அவர்கள் தொடர்ந்து 2001 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டு வரையிலே ஒரு செய்தியைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டேயிருந்தார்கள், இங்கே அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுடைய சம்பள உயர்வைப் பற்றி குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதிலே குறிப்பிட்டுச் சொல்லுகின்றபோது, வரி வருவாயில், 94 சதவிகிதம் அரசு ஊழியர்களுக்கே போய்விடுகிறது என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். அவர்கள் அகவிலைப்படி கொடுக்கவேண்டும், சம்பள உயர்வு கொடுக்க வேண்டுமென்று கேட்டபோதெல்லாம், இந்த காரண, காரியங்களை நமது நிதியமைச்சர் அவர்கள் தொடர்ந்து இந்த அவையிலே சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். 94 சதவிகிதம் அவர்களுக்குப் போய்விடுகிறது என்றால், மக்களுக்கு எங்கே செல்லும்? இந்தக் கேள்வியைக் கேட்டவர் நிதியமைச்சர். ஆனால் இன்றைக்கு

தாராளமாக 50 சதவிகித அகவிலைப்படியை கொடுப்பதற்கான வாய்ப்பு இப்பொழுது மட்டும் உருவாகிவிட்டது. 94 சதவிகிதம் என்பது கூடுதலாகப் போய்விடாதா? ஆகவே இந்த ஆட்சியினுடைய நிதிச் சுமையைக் குறைத்துவிடாதா? அப்படி நிதிச் சுமையையே சம்பளத்திற்காகவே போய்விடுகிறது என்று 4 ஆண்டு காலமாக இந்த அவையிலே பதிய வைத்துவிட்டு, இப்பொழுது மட்டும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள்மீது அக்கறையாக இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறீர்களே, இதைப் பற்றி விளக்குவீர்களா?

முற்பகல் 11–50

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை சீர்கேட்டைப்பற்றி 2001–லிருந்து சொன்னது உண்மை. அது அவைக்கும் தெரிந்த ஒன்றுதான். ஆனால் தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மேற்கொண்ட நடுத்தர கால அந்த நிதிச் சீர்திருத்தத் திட்ட நடவடிக்கைகளின் காரணமாக அரசினுடைய வருவாய் வெகுவாக உயர்ந்துள்ளது. அவையிலே குறிப்பிலே கொடுத்திருக்கிறோம். பக்கம் 40 இணைப்பு நடுத்தர கால நிதித் திட்டத்தில் 2–வது பாராவில் நீங்கள் படித்துப் பார்க்க வேண்டும், எந்த அளவிற்கு நிலை அப்போது இருந்தது என்று. தவிர கடன் சுமை 16 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக உயர்ந்தது. கடன் மேற்கொண்டு வாங்க முடியாத ஒரு நிலை; மைய அரசினுடைய நிதிக் கட்டுப்பாடு இருந்ததும் உங்களுக்குத் தெரியும். 12 சதவீதமாக இருந்த வட்டிப் பொறுப்பு 19 சதவீதமாக உயர்ந்திருந்த ஒரு நிலையும் உங்களுக்குத் தெரியும். ஐந்தில் ஒரு பங்கு அரசினுடைய வருவாய் வட்டிக்கே சென்ற நிலையும் உங்களுக்குத் தெரியும். இவையெல்லாம் தற்போது சீர்படுத்தப்பட்டு வரி வருவாய், அதேபோல மது விலக்குத் துறை ஆயத்தீர்வைமூலம் உள்ள வருவாய்; சிக்கன நடவடிக்கைகளை திட்டங்களில் மேற்கொண்டது, Schedule of Rates, Estimate–ல் குறைத்தது, இதுபோன்ற காரணங்களால் ஏற்பட்ட கூடுதல் வருவாயின் அடிப்படையில் தற்போது நிதிநிலை சீராகியிருக்கிறது, நல்ல நிலையில் இருக்கிறது. ஓய்வூதியம், சம்பளம் பற்றி எத்தகைய அணுகுமுறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது? 93.18% ஆக இருந்தது; தற்போது 2005–2006–ல் அது 43 சதவீதமாகக் குறைந்துள்ளது என்ற தகவல் 49–வது பக்கத்திலே 21–வது பாரா, அந்த நடுத்தர கால நிதித் திட்டத்தில் தரப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் படித்துப் பார்த்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விளக்கம் கிடைக்கும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், இரண்டு மணித் துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன். அதேபோல நமது ஊழியர்களுடைய சம்பளம் உயர்வுத் தொகை 60 சதவீதம் P.F.–ல் சேர்க்கப்பட்டிருக்கிறது. நமக்கு நேற்றைக்குக்கூட அ.தி.மு.க. சார்பிலே ஒரு போராட்டம். 9.5 சதவீதம் என்பதை 8.5 சதவீதமாகக் குறைத்ததைக் கண்டித்து மத்திய அரசாங்கத்தைக் கண்டித்து நீங்கள் நடத்தியிருக்கிறீர்கள், நாங்களும் நடத்தியிருக்கிறோம். ஆகவே உங்களை நான் பாராட்டுகிறேன். அப்போது ஒரு சதவீத வட்டிக்கே நாம் போராடுகிறோம் எல்லோரும் சேர்ந்து. ஆனால் பிடித்து வைத்திருக்கிற இந்த 60 சதவீத சம்பள உயர்வை அந்த அரசு ஊழியர்களுக்கு தமிழ்நாடு அரசு வட்டியைச் சேர்த்து அவர்களுக்கு வழங்குவதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக கோரிக்கைகள். போக்குவரத்துத் தொழிலாளர்கள் முன்னாள் தொழிலாளர்களுக்கு உச்ச நீதிமன்றத் தீர்ப்புப்படி ஓய்வூதியம் வழங்க அரசாணை பிறப்பித்து எட்டு மாதங்கள் ஆகின்றன. இன்னும் வழங்கவில்லை. அதை வழங்குவதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். போக்குவரத்துத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டதுபோல அலுவலகத்திலே பணிபுரியக்கூடிய மேற்பார்வையாளர்கள், தொழில்நுட்ப மேற்பார்வையாளர்கள் இவர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்குவதற்கான முயற்சியை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

நான் சில கோரிக்கைகளை இந்த சபையிலே சொல்லிக்கொண்டே இருக்கிறேன். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்பற்றிய ஒரு கருத்தை (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தரமணியிலே சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஏனென்றால் அது அறிஞர் அண்ணா காலத்திலே துவக்கப்பட்டிருக்கிறது. ஆட்சியாளர்கள் வருகிறபொழுதெல்லாம் அதற்குப் பல்வேறு உதவிகளைச் செய்திருக்கிறார்கள். என்றாலும், அடிப்படையாகவே அதிலே பணியாற்றுகிற சுமார் 30 ஊழியர்களுக்கு பென்ஷன் என்பதே கிடையாது. மத்திய மாநில அரசு ஊழியர்களுக்கு பென்ஷன் என்பது பல்வேறு விதமான அரசு சலுகை என்பது தொடர்ந்து இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு மட்டும் அது வழங்கப்படாமல் இருப்பதென்பது ரொம்ப விநோதமாக இருக்கிறது,

[திரு. வை. சிவபுண்ணியம்] [2006 ஜனவரி 24

வருத்தமாக இருக்கிறது. இதைப்பற்றி நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கோரிக்கை மனுவை அளித்திருக்கிறேன். அதைப் பரிசீலித்து அவர்களுக்குரிய அந்த பென்ஷன் திட்டத்தையும் சலுகைகளையும் அறிவிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, ஆயுள் தண்டனை கைதிகள் 14 ஆண்டுகள் என்று நமது மாநிலத்திலே தொடர்ந்து இருக்கிறார்கள். இது கேரளாவிலே 10 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டிருக்கிறது, ஆந்திராவிலே 8 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதையும் தமிழகத்திலே செய்வதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக என்னுடைய தொகுதி கோரிக்கை என்ற முறையில், மன்னார்குடியிலே Sub–Court அமைக்க வேண்டும் என்ற கோரிக்கைபற்றி இங்கே நான் பேசினேன். நேற்று முன்தினம்கூட மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் அளித்திருக்கிறார்கள். அதற்குரிய வாய்ப்பு நிறைவாக இருக்கிறதாக செய்தி கேள்விப்படுகிறேன். உடனே துவக்குவதற்குரிய வாய்ப்பு உண்டா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று கேள்வி போட்டீர்கள். அதற்கு பதில் சொன்னாரே! மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** இப்போது favour–ஆக சொல்லப் போகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, நேற்றையதினம் அவர் கேள்வி நேரத்தின்போது எழுப்பியபோது, அரசினுடைய தீவிர பரிசீலனையில் இருக்கின்ற அந்தக் கருத்தைச் சொன்னேன். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கேட்டதையெல்லாம் கொடுக்கின்ற எங்கள் தாய், இந்த ஆண்டு புத்தாண்டின் பரிசாக மன்னார்குடி தொகுதிக்கு ஒரு சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். விரைவில், ஓரிரு நாட்களில் ஆணைகள் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2006 ஜனவரி 24]

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி நகரிலே சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை வழங்கிய நமது சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நமது தமிழ்நாடு அரசுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பில் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை. இல்லை. இரண்டு கோரிக்கைகள் மட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** கோரிக்கைகள்தான். பிரச்சினைகளுக்குள்ளே போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நேரம் இல்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** தொகுப்பூதியத்திலே பணிபுரிகின்ற (குறுக்கீடு) மருத்துவர்கள். தொகுப்பூதியத்திலே பணிபுரிகின்ற டாக்டர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை. அதிலும் மருத்துவக் கல்லூரியிலே படிக்கக்கூடிய மருத்துவ பட்ட மேற்படிப்புப் படிக்கக்கூடிய மாணவர்களுடைய உதவித் தொகையை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11–55

அதேபோல, தொகுப்பூதிய ஆசிரியர்களுக்கும், கல்லூரி விரிவுரையாளர்களுக்கும் ( குறுக்கீடு) இந்த நிதியை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் ஒரே ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார். மாநில நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ் கோவில்பட்டியிலே இரண்டு இரயில்வே மேம்பாலங்கள் கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒரு பாலம் நிறைவுபெற்றிருக்கிறது. இன்னொரு பாலப் பணி நடைபெறுகிறது. ஆனால் 2005 ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்படவேண்டிய பணி தாமதமான காரணத்தினாலே போக்குவரத்து நெரிசல் இருக்கிறது என்று செய்தி சொல்கிறார். ஒரு பாலத்தையாவது திறந்து மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் அடுத்தப் பாலத்தை விரைவாக நிறைவேற்றுவதற்குரிய முயற்சியையும் எடுக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பளித்தத் தங்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டின் இடைக்கால நிதிநிலை அறிக்கை, மேதகு ஆளுநர் அவர்களால் வாசித்தளித்த உரை, இவற்றின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துகளை நான் முன்வைக்கிறேன். நிதிநிலை அறிக்கையும் சரி, ஆளுநர் உரையும் சரி, அதைத் தொடர்ந்து அறிவித்துள்ள அறிவிப்புகளும் சரி, அனைத்துமே தேர்தலை மையமாகக் கொண்டவைதான். இவற்றை எல்லாம் நிறைவேற்றவோ இவற்றின் பயன்கள் மக்களைச் சென்று அடையவோ வரும் 3 மாதக் காலத்தில் நிச்சயமாக சாத்தியம் இல்லை. பல புதிய அறிவிப்புகள் தமிழக மக்களாலும், எதிர்க்கட்சிகளாலும் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்தவை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னமே இவற்றில் சிலவற்றையாவது ஏற்றுக் கொண்டிருந்தால் இவற்றின் பயன் ஓரளவாவது மக்களுக்குக் கிடைத்திருக்கும். ஆகவே, தேர்தலை மையமாக வைத்து அறிவித்துள்ளவை உடனடியாக அமலாக்கி, நடைமுறைக்கு வர இயலாத அறிவிப்புகள் என்றே எங்கள் கட்சி கருதுகிறது. கடந்த நான்கே முக்கால் ஆண்டுக் காலமாக...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாகரன் அவர்கள் அறிவிக்கப்பட்ட சலுகைகள் எல்லாம் தேர்தலுக்காக, மக்களைச் சென்றடையவில்லை என்று சொல்கிறார். அனைத்து அறிவிப்புகளுக்கும் ஆணையிடப்பட்டிருக்கிறது. நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. பணிகள் நடந்து வருகின்றன. மக்களை அவை சென்று சேருகின்றன.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நான்கே முக்கால் ஆண்டுக் கால ஆட்சியின் நிறைகளை, குறைகளை, பலத்தை, பலவீனங்களை நிறைவேறியவற்றை, நிறைவேறாமல் உள்ளவற்றை ஒட்டுமொத்தமாய் தொகுத்து, பகுத்து வகுத்துப் பார்க்கும் காலக் கட்டம் இது. அப்படிக் கணக்குப் பார்க்கும் நிதிநிலை அறிக்கையாக வெறும் நிதி ரீதியிலான வரவு–செலவு மாத்திரமில்லாமல் நடைபெற்றுக் கொண்டுள்ள நிகழ்வுகளையும் இணைத்துப் பார்ப்பது அவசியம் என்றே எங்கள் கட்சி கருதுகிறது. நிறைவுகள் பலவற்றையும் இங்கே வேண்டிய அளவுக்கு நிறைவாகவே ஆளுங்கட்சித் தரப்பில் சொல்லியுள்ளார்கள். வணக்கத்திற்குரிய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மிக நீண்ட விளக்கங்களை ஏராளமாய்த் தந்துள்ளார்கள். ஆகவே நிறைகளை நீங்கள் சொல்லியுள்ளீர்கள். மறுதரப்புக் குறைகளையும், பலகீனங்களையும்,



இன்னும் சொல்லப்போனால் சில விமர்சனங்களையும் செய்வதற்குக்கூட எங்களைப் போன்று உள்ள கட்சிகளுக்கு உள்ள ஜனநாயக உரிமைகள் அனுமதிக்கிறது என்றே நான் கருதுகிறேன். ஆகவே, அவற்றின்மீது நியாயப்பூர்வமான வகையிலே சொல்லப்படும் விஷயங்களில் நாட்டு நடப்புகளிலே உள்ளவற்றை, குறைந்தபட்சம் அங்கீகரிக்கவில்லை என்றாலும், அனுமதிப்பது, அவற்றின்மீது உரிய நடவடிக்கை எடுப்பது என்பதுதான் ஒரு நல்ல அரசுக்குச் சிறந்ததாக இருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அந்த வகையில் சிலவற்றை எங்கள் கட்சியின் சார்பில் நான் குறிப்பிட விரும்புவது, சுனாமி, மழை வெள்ள பாதிப்பு போன்றவற்றில் உடனடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் நீங்கள் சொல்லியுள்ளவற்றை ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால், நிரந்தர மறுவாழ்வு, புனர் நிர்மாணம் பற்றி நிதிநிலை அறிக்கையினுடைய பக்கம் 16–ல் முதல் இரண்டு கட்ட நடவடிக்கைகள் உடனடியாகவும், முறையாகவும் செய்து முடிக்கப்பட்டதை உறுதி செய்த பின்னர், நிரந்தர மறு சீரமைப்புப் பணிகள் மற்றும் புனர்வாழ்வுப் பணிகள் ஆகிய மூன்றாம் கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு விரைவாக நடைபெற்று வருகின்றன என்று பொதுவாக சொல்லப்பட்டுள்ளது. 16 ஆம் பக்கத்தில் இப்போதைய நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. "இரண்டு கட்டப் பணிகள் எவ்வாறு நடந்துள்ளன என்பதை உறுதிசெய்ததற்குப் பிறகு, மூன்றாம் கட்ட நிரந்தர புனர்வாழ்வு மற்றும் மறுவாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்று உள்ளது. எந்த அளவிற்கு அது நடைபெற்றிருக்கிறது, அது தொடர்ந்து நடைபெற்று எப்போது நிறைவுபெறும் என்பதை இந்த சபை அறிய விரும்புகிறது. நிரந்தர மறு சீரமைப்புப் பணிகள் மற்றும் புனர்வாழ்வுப் பணிகள் எவ்வளவு பேருக்கு, எந்த அளவு கால அவகாசத்திற்குள் நிறைவேற்றப்படும் என்பதையும் தெரிவிப்பது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

*நண்பகல் 12–00*

அதேபோல், வேலை நியமன தடைச் சட்டம் நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டு, அதனால் ஏற்படும் அபத்தங்களையும், ஆபத்தையும் தொடர்ந்து நாங்கள் எல்லாம் வலியுறுத்தி வந்தவர்கள். இப்பொழுது அது திரும்பப் பெறப்பட்டுள்ளது, மகிழ்ச்சி. ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளில், தேர்வாணையம் மூலம் நிரப்பப்பட்டிருக்கவேண்டிய ஒரு இலட்சத்து எழுபதாயிரம் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படுமா? சுமார் 85 ஆயிரம், இடைநிலை, நடுநிலை ஆசிரியர்கள் பல

ஆண்டுகளாக தொகுப்பு ஊதியத்திற்கு, ரூபாய் 3,000–த்திற்கும், 4,000–த்திற்கும்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி மறுவாழ்வுத் திட்டங்களுக்கு பெறப்பெற்ற நிதி, ஒதுக்கப்பட்ட பணம், செயல்பாடுகள், அவற்றினுடைய பலன் ஆகியவை பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். என்னுடைய இறுதி உரையிலே கூறுகிறேன். அது பல பக்கங்கள் இருக்கின்றன. அரசு பெறப்பட்டத் தொகை, மத்திய அரசாங்கம் அனுமதித்தது எவ்வளவு, நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பெற்ற கடன் எவ்வளவு, எந்த அளவிற்கு மாநில அரசு கடன் — பொதுவாக இதிலே எங்கு கடன் வாங்கினாலும், அந்தக் கடன் முழுமையாக முன்கூட்டியே தரப்படுவது இல்லை. இரண்டாயிரத்து முன்னூற்று சொச்சம் கோடி நாம் பணம் வாங்குகிறோம் என்றால், மாநில அரசு தன்னுடைய கைப்பணத்திலிருந்து செலவுகளை முதலில் செய்யவேண்டும். செய்து முடித்த பிறகு, செலவு செய்யப்பட்டதற்குள்ள ஆதாரத்தைக் காட்டிய பிறகுதான் Asian Development Bank –ஆக இருந்தாலும் சரி, உலக வங்கியாக இருந்தாலும் சரி, பிறகு அதை ஈடுகட்டும். இதுதான் நடைமுறை. எங்கெங்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இறுதியிலே நான் கூறுகிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** ஆகவே, இந்த 85 ஆயிரம் இடைநிலை, நடுநிலை ஆசிரியர்கள் பல ஆண்டுகளாக ரூபாய் 3,000, 4,000 என்ற குறைந்தபட்ச தொகுப்பு ஊதியத்தின்கீழ் உள்ளார்களே, அவர்கள் நிரந்தரம் செய்யப்பட்டு, உரிய சம்பளம் வழங்கப்படுமா? அலுவலக உதவியாளர்கள், ஓட்டுநர்கள், சத்துணவு ஊழியர்கள், வருவாய் கிராம ஊழியர்கள், ஆசிரியர் பணியிடங்கள் என மேலும் காலியாக உள்ளவை நிரப்பப்படுமா? 162 கல்லூரிகளில் 4,000 விரிவுரையாளர்கள் பணியிடங்கள் நியமனம் செய்யப்படாமல் உள்ளனவே, அவை உடனடியாக நியமனம் செய்யப்படுமா? 10,000 சாலைப் பணியாளர்கள் நிர்கதியாய் நிற்கிறார்களே, அவர்கள் கதி தொடர்ந்து அதோகதிதானா? இவையெல்லாம் பிரச்சினைகளாக இருக்கும்படியான விஷயங்கள். இவை இப்பொழுது மூன்று மாதத்தில் நிச்சயமாய் நிறைவேறாது. ஆனால், இவை தொக்கி நிற்கின்ற பிரச்சினைகள் என்பதை, நாம் அனைவருமே சந்திக்கவேண்டிய பிரச்சினை என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அரசியல் காழ்ப்புணர்ச்சி அல்லது விருப்பு, வெறுப்பு, எதிரணி, ஆளும் அணி என்ற நிலையில் இல்லாமல், பொதுவாக தமிழ்நாடு சந்திக்கும் இந்தப்



பிரச்சினைகளை நாம் நேர்கொள்ளவில்லை என்று சொன்னால், உங்களுக்கும் சரி மற்றவர்களுக்கும் சரி — அதற்குமேல் நான் அதிலே சொல்வதற்கும் ஒன்றும் இல்லை.

அடுத்து, ஏழைகளுக்கு இந்தப் பட்டா என்கிற விஷயத்தைப் பொறுத்தவரை, ஊரகப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கும் புதிய திட்டம் ஒன்றை சென்ற ஆண்டு 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது பக்கம் 38–லே சொல்லப்பட்டிருக்கிறது. 2005–2006 ஆம் ஆண்டில் 50 கோடி ரூபாய் மொத்தச் செலவில், ஊரகப் பகுதிகளிலே வாழும் ஏழை மக்களுக்கு இலவசமாய் வீட்டுமனை வழங்கும் புதிய திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளதாகவும், 2005–2006 ஆம் ஆண்டில் 2 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்றும், உள்ளூரில் நிலத்தைக் கையகப்படுத்தி, வீட்டுமனைகள் வழங்குவது குறித்து முடிவுகள் எடுப்பதற்கு மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படும் என்றும் சொல்லப்பட்டது. இந்த ஓராண்டில் நேற்றைய முன்தினம் பொதுவான பட்டியல் வாசிக்கப்பட்டது. 5 ஆண்டுகளில் வழங்கிய மொத்தப் பட்டாக்களின் எண்ணிக்கை வாசிக்கப்பட்டது. என்னுடைய கேள்வி, இந்த அறிவிப்பிற்குப் பிறகு 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாய்ச் சொல்லப்பட்டுள்ள இந்த அறிக்கையின்படி, கடந்த ஓராண்டில் அரசு எடுத்த நிலம் எவ்வளவு? விநியோகிக்கப்பட்ட பட்டாக்கள் எவ்வளவு? இதனால் பயனடைந்தோரின் எண்ணிக்கை எவ்வளவு?

பிற்பகல் 12–05

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழகத்தில் இன்றைக்கு நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற தமிழகத்தினுடைய முதலமைச்சர், ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வ்ழங்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு இரண்டு இலட்சம் வீடற்ற ஏழை குடும்பத்தினருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பின்படி அரசால் 50 கோடி ரூபாய் நிதியில் முதற்கட்டமாக 31 கோடி ரூபாய் அனைத்து மாவட்டங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ் 31–12–2005 முடிய புறம்போக்கு நிலங்களில் 32,739 வீட்டுமனைப் பட்டாக்களும், தனியார் பட்டா நிலங்களை நேரடி பேச்சுவார்த்தைமூலம் கையகப்படுத்திய நிலங்களில் 9,086 பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன. இது தவிர, 31–1–2006–க்குள் புறம்போக்கு நிலங்களில்

17,976 பட்டாக்களும், தனியார் பட்டா நிலங்களை நேரடி பேச்சுவார்த்தையின்மூலம் கையகப்படுத்தி 23,428 பட்டாக்களும் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதியளித்திருக்கின்றார்கள். எனவே, இந்த ஜனவரிக்குள் 75,129 பட்டாக்கள் வழங்கி முடிக்கப்படும். மேலும், புறம்போக்கு நிலங்களில் எஞ்சிய பட்டாக்களை 28–2–2006–க்குள் வழங்கிடுமாறும், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையில் தனியார் நிலங்களை விரைவில் நேரடி பேச்சுவார்த்தையின்மூலம் கையகப்படுத்திடவும், அவற்றில் பட்டா வழங்கி குறியீட்டை தவறாது செய்திடுமாறும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. அண்மையிலே பிறப்பிக்கப்பட்ட ஒரு நீதிமன்ற ஆணையின்படி ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுகின்றன, நீர்நிலைகளை பாதுகாக்கிற அடிப்படையில். அது நீதிமன்ற ஆணை என்பதன் பேரில் செய்கிறோம். ஆனால், அவ்வாறு அந்த ஆக்கிரமிப்புகள், சாதாரண ஜனங்கள் குடிசை போட்டிருக்கிற பகுதிகளிலே ஆக்கிரமிப்புகள் என்பதன்பேரில் அகற்றப்படுமானால், அப்படிப்பட்ட அந்த மக்களுக்கு மாற்று இடம் தருவதற்கான திட்டம் என்ன? சென்ற முறை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்காக 50 கோடி ரூபாயை ஒதுக்குவதாக சொன்னார்கள். அவ்வாறு அப்புறப்படுத்தப்பட்ட அந்த மக்களுக்கு மாற்று இடம் கொடுக்கப்பட்டுள்ளதா? நகர்ப்புறங்களில் இலவசமாய் பட்டா கொடுக்கும் தடையை இந்த அரசு இரத்து செய்துள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சேபணை உள்ள புறம்போக்கு நிலங்களிலும், ஆக்கிரமிப்பு செய்து வீட்டுமனையில் வசித்து வருகின்ற நிலமற்ற ஏழைகளுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த இ ந்தத் திட்டத்தின்மூலம் அவர்கள் ஆக்கிரமிப்புகளிலிருந்து வெளியேறுகிறபோது அவர்களுக்குரிய வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 2005–2006 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலே ஊரக வேலைவாய்ப்பு பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது.



"இந்த அரசு, முழுமையான கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தைச் (SGRY) செயல்படுத்தி வருகிறது. 2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ஊரகப் பகுதிகளில் பயனுள்ள சொத்துக்களை உருவாக்குவதற்கும் 4.33 கோடி மனித உழைப்பு நாட்கள் அளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் 1.24 இலட்சம் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 2.28 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி பயன்படுத்தப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் மொத்தம் 273.84 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதிலும் இவ்வாறு நடந்துள்ளது உண்மைதானா? எந்தவொரு வேலையாவது வேலைக்கு உணவு திட்டத்தின்கீழ் கூலி, கிராமப்புறத்து தொழிலாளிகளை, கூலி உழைப்பாளிகளை, வேலையற்றோரை, கிராமப்புற விவசாயத் தொழிலாளிகளை, வறுமை ஒழிக்கும் திட்டத்தின் அடிப்படையிலே அவர்களை வைத்து வேலை வாங்கியதுண்டா? அனைத்தும் கான்டிராக்ட்டுகளுக்கு விடப்பட்டு இயந்திரங்களின்மூலமாகத்தான் இது பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற நிதர்சமான உ,ண்மையை இந்த அரசு மறுக்கிறதா? (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடம், நான் முடித்துவிடுகிறேன். முடித்துவிடுகிறேன், இந்த ஒரு பாயின்ட்டை முடித்துவிடுகிறேன். மறுக்கிறதா? குறிப்பாக, நான்கு மாவட்டங்களில், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகை ஆகிய நான்கு மாவட்டங்களிலாவது குறைந்தபட்சம் இது அமல் நடத்த வேண்டுமென்று வலியுறுத்தப்பட்ட அறிவுரை அல்லது வழிகாட்டி நெறிமுறை இந்த மாநில அரசால் கடைபிடிக்கப்பட்டதா? இல்லை என்பதுதான் பதில். ஆகவேதான், இந்த மாவட்டத்து விவசாயத் தொழிலாளர் மக்கள் கடும் போராட்டங்களை நடத்தினார்கள்.

பிற்பகல் 12–40

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் முழுமையாக கான்ட்ராக்டர்களுக்கு விடப்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்றார். அவர் முற்றிலும் அவைக்குத் தவறான தகவலைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில் அப்படிப்பட்ட நிகழ்வுகள் ஏற்படவில்லை. வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட பணிகள் முழுமையாக வேலைக்கு உணவுத் திட்டத்தினால் அந்தந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களால் வேலை

செய்யப்பட்டது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொண்டு, மார்ச் 2005 வரை மொத்தமாக வேலை நாட்கள், 28.62 இலட்சம் மனித வேலை நாட்கள் அங்கே நடைபெற்றது. ஏப்ரல் ஒன்றாம் தேதி முதல் இப்போது டிசம்பர் 5 ஆம் தேதி வரை 70.80 இலட்சம் மனித உழைப்பு நாள் அங்கே வேலை செய்யப்பட்டது. மார்ச் 2005–லே எடுக்கப்பட்ட பணிகள் 2444. அதற்குப் பின்பு எடுக்கப்பட்டு இப்போது டிசம்பர் 5 வரை முடிக்கப்பட்ட பணிகள் 6559. மேலும் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனைப்படி இங்கே வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட பணிகளானது, 70.48 சதவீதமானது முழுமையாக மனித சக்தியின்கீழ் செய்யப்பட்ட வேலைகள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்து அமைகிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லியதுபோல் அவ்வாறு நடந்திருக்குமானால் சம்பந்தப்பட்ட மக்கள் நிச்சயமாய் இந்த அரசுக்கு நன்றி உள்ளவர்களாக இருப்பார்கள். கிராமப்புற வேலைவாய்ப்புகள் முற்றிலும் சீர்குலைந்து . . .

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12,618 கிராம ஊராட்சிகளிலே வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் நடைபெற்ற பணிகளிலும், மேலும் 4 மாவட்டங்களிலே அதிகப்படியான மக்கள் சக்தி வேலைசெய்யப்பட்ட காரணத்தினாலும் அந்த கிராமங்களில் இருக்கின்ற மக்கள் முழுமையாக இந்த அரசுக்கு நன்றி தெரிவிக்கின்றவர்களாக இருக்கின்றார்கள் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** கிராமப்புற வேலைவாய்ப்புகள் முற்றிலுமாய் சீர்குலைந்து போனதால், நகர்ப்புறத்தை நோக்கி கிராமப்புற மக்கள் வருகின்றனர். இதனால் நகர்ப்புற மக்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நகர்ப்புற தொழில் வளர்ச்சிக்கோ, முன்னேற்றத்திற்கோ தகவல் தொழில்நுட்பம் ஒன்றைத் தவிர—நான் அதைப் பதிவு செய்கிறேன். தகவல் தொழில்நுட்பம் ஒன்றைத் தவிர நகர்ப்புற தொழில் வளர்ச்சிக்கோ, முன்னேற்றத்திற்கோ— வேறு புதிய திட்டங்கள் எவையும் இல்லை. இந்தத் தகவல் தொழில்நுட்பம் ஒன்றினால் மட்டும் அதிகரித்துவரும் வேலை இன்மையை, வறுமையை நிச்சயமாய் தீர்த்துவிட முடியாது. இரண்டு கோடி பேர் தமிழ்நாட்டில் எந்தவிதமான சட்டம் மற்றும் சமூகப் பாதுகாப்பும் இல்லாத முறைசாராத கூலி உழைப்பாளி தொழிலாளிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் வாழ்க்கைத் தரத்தை சமூக



ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் உயர்த்தவில்லை என்று சொன்னால், வறுமை ஒழிப்பு, வேலையின்மை ஒழிப்பு என்பதெல்லாம் வெறும் வாக்குறுதிகளாக மாத்திரமே இருக்கும் என்பதை நான் எங்கள் கட்சியின் சார்பில் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆகையினால்தான் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், இன்னும் 3 மணித் துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** 10 நிமிடங்கள்தான் ஆகியிருக்கின்றன. இன்னும் 5 நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. கே.சி. கருணாகரன்:** ஆகவேதான் தரிசு நிலங்களை நிலமற்ற ஏழை விவசாய மக்களுக்கு வழங்கவேண்டுமென்று கோருகிறோம். நில உச்சவரம்பை அமல் நடத்தி உபரி நிலங்களை கையகப்படுத்த வேண்டுமென்று கோருகிறோம். ஆனால் அரசின் நடவடிக்கைகள் நில உச்சவரம்பு தளர்த்தப்படுவதும், நிலக் குவியல் ஏற்படுவதற்குமான நிலைமையை உருவாக்கியுள்ளது. தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சுமார் 8 இலட்சம் எக்டேர் நிலம் பயன்பாட்டுக்கு வந்ததாக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த 8 இலட்சம் எக்டேரை கணக்குப்போட்டு 20 இலட்சம் ஏக்கர் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்கம் தந்தார்கள். அப்படியென்றால் இந்த 20 இலட்சம் ஏக்கர் நிலம் யாருக்குக் கொடுக்கப்பட்டது? தனியார் பண்ணைகளென கம்பெனிகளுக்குக் கொடுக்கப்பட்டால் 2000 ஏக்கர் வரை உச்சவரம்பு இல்லாமல் கொடுக்கப்பட்டுள்ளதா? விவரங்களை அரசு தெரிவிக்க வேண்டும். விவசாயத் தொழிலாளர்களுக்கான . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடட்டும். இன்னும் 3 மணித் துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** நான் உரையை முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன். அவர் பாயிண்டுக்கும் சேர்த்து சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்கான (குறுக்கீடு) சேர்த்து சொல்லிவிடுகிறேன் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருணாகரன், வேளாண்மைத் துறை அமைச்சர் மீசையைப் பார்த்து இவ்வளவு நடுங்குவீர்கள் என்று எனக்குத் தெரியாது. (சிரிப்பு)

**திரு. கே.சி. கருணாகரன்:** அவர் டோனி மாதிரி அடிக்கிற பந்துகள் ஒவ்வொன்றும் 6 மாதிரி, 7 மாதிரி சீறிக் கொண்டிருந்தால் நாங்கள் என்னதான் செய்ய முடியும்? எங்களால் பந்தே வீச முடியவில்லையே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** விவசாயத் தொழிலாளர்களுக்கான கூலி நாளொன்றுக்கு 80 ரூபாய் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவையில் அறிவித்தார்கள் சென்றமுறை. அனைத்துத் தரப்பிலேயும் வரவேற்றோம். ஆனால் இந்த சட்டக் கூலியானது தமிழ்நாடு முழுவதும் தஞ்சை உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் இப்போது அமலாகிறதா? இதை அமல் நடத்துவதற்கு அரசாங்கம் எதுவும் பணம் கொடுக்க வேண்டும் என்பதில்லை. விவசாயிகளுக்குத் தருகிறார்களா? அவர்களிடம் இதைப் பெற்றுத் தருவதற்கு நம்முடைய அரசு நிர்வாக ரீதியில் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன? (குறுக்கீடு) அது இன்னும் கிடைக்கவில்லை என்கிற தகவல் இருக்கிறது.

பிற்பகல் 12-15

அதேமாதிரி, மீனள மேம்பாடும் மீனவ சமுதாயத்தின் நலனும் என்கிற தலைப்பில் நிதிநிலை அறிக்கை பக்கம் 14, 15-ல் சொல்லப்பட்டிருக்கிறது; இந்த அரசு, உலக வங்கியின் நிதியுதவியுடன் ரூபாய் 35.78 கோடி செலவில், பழையாறு, நாகப்பட்டினம், மல்லிப்பட்டணம் மற்றும் சின்னமுட்டம் ஆகிய இடங்களில் மீன்பிடித் துறைமுகங்களை நிலையுயர்த்தி நவீனப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் ரூபாய் 11.47 கோடி செலவில் முடசலோடை, பழையாறு, சேதுபாவாசத்திரம், மல்லிப்பட்டினம், கோட்டைபட்டினம், ஜகதாபட்டினம், புன்னக்காயல், தூத்துக்குடி மற்றும் சின்னமுட்டம் ஆகிய மீன்பிடித் துறைமுகங்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பது அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே என்ன எங்களுடைய கேள்வி என்றால், நாம் மாநில அரசாங்கத்தின் மூலம் 35 கோடியே 78 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்தும், 11.5 கோடி அளவில் ஆசிய வளர்ச்சி வங்கியின் மூலம் கடன் வாங்கியும் சுமையேற்று இந்தப் பணிகளைச் செய்வதற்குப் பதிலாக இப்பிரச்சினைகள் சேது சமுத்திரத் திட்டத்துடன் சேர்க்கப்பட்டிருந்தால் தனிச் செலவைத் தவிர்த்திருக்கலாம். அந்தத் திட்டத்தோடு இந்தப் பணிகள் நிறைவேறியிருக்கும் என்று எங்கள் கட்சி கருதுகிறது. (குறுக்கீடுகள்)



அதேமாதிரி, நெல், அரிசி கொள்முதல் சம்பந்தப்பட்ட பிரச்சினையிலே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மத்திய அரசின் ஒரு ஏஜென்சியாக செயல்படுகிறது. மத்திய அரசு நிர்ணயிக்கும் விலைக்கு கொள்முதல் செய்து அனுப்புகிறது.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கருணாகரன் அவர்கள் சேதுசமுத்திரத் திட்டத்தை இதோடு இணைத்துச் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆசிய வளர்ச்சி வங்கி, உலக வங்கிகளின் மூலமாக நிதி பெறுவது என்பது, இது வேறு விதமாக அதனுடைய, உலக வங்கியினுடைய ஆலோசனைப்படி அதற்கென்று கன்சல்டன்சியை நியமனம் செய்து, அந்தப் பணி இன்னும் 2, 3 மாத காலத்திற்குள்தான் வேலையைத் துவங்கவிருக்கும். இந்த சேதுசமுத்திரத் திட்டம் என்பது உங்களுக்குத் தெரியும். மீனவப் பெருமக்களெல்லாம் ஒவ்வொரு மாவட்டம் வாரியாக எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதோடு நீங்கள் இதைச் சேர்த்து குழப்ப நினைக்கின்றீர்கள். அதற்குத்தான் அடிக்கல் நாட்டுவிழாவையே நீங்கள் தூத்துக்குடி போன்ற இடங்களில், இராமநாதபுரம் போன்ற இடங்களிலே செய்யாமல், மதுரையிலே நீங்கள் செய்வது என்றால், அந்த மீனவப் பெருமக்கள் இருக்கின்ற இடத்திலே உங்களால் அடிக்கல் நாட்ட முடியவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order, point of order.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**திரு. கே.சி. கருணாகரன்:** மாறுபட்ட கொள்கைகளை (குறுக்கீடுகள்) ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கப் போகிறார். (குறுக்கீடுகள்) கருணாகரன் முடிக்கட்டும், முடித்த உடனே கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே.சி. கருணாகரன்:** கொஞ்சம், ஒரு நிமிஷம் இருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன் பேசி முடித்த உடனே கூப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்) பொன்முடி, கருணாகரன் பேசி முடித்த உடனே கூப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்) திரு. கருணாகரன் பேசி முடித்த உடனே கூப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. கே.சி. கருணாகரன்:** இந்தப் பிரச்சினையிலே மாறுபட்ட கொள்கை உள்ளது என்பது எங்களுக்குத் தெரியும். அதனுடைய விளக்கங்கள்தான் இவை என்பதும் எங்களுக்குப் புரியும். ஆனாலும், இவ்வாறு அதைச் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்பது எங்கள் கட்சியினுடைய கருத்து. (குறுக்கீடுகள்) ஏற்றுக்கொள்வதும், நிராகரிப்பதும் உங்கள் பொறுப்பு. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், உரையை முடியுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** உரையை முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன். அடுத்து, இந்தத் தனியார்மயக் கொள்கைகள் சம்பந்தப்பட்ட வரைக்கும் நாங்கள் எப்போதும் எதிர்க்கிறோம். இப்போது கேபிள் டி.வி. சம்பந்தமான அந்த நடவடிக்கை சரியானதுதான். சரியானது. (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்தில் அனைத்து தனியார்மய நடவடிக்கைகளையும் எதிர்ப்பதற்கு, முடிந்தால் குறைந்தபட்சம் கட்டுப்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். பஸ்களை தனியார்மயமாக்குவது என்ற அறிவிப்பை நீங்கள் வெளியிட்டபோது நாங்கள் அதை எதிர்த்தோம்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிப்பு எதுவும் வெளியிடவில்லை . . .

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, இல்லை, நான் உரையை முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை டைம் இல்லை. நான் சொல்லி முடிக்கிறேன். நான் வார்த்தையைச் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொல்லி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) திரு. கருணாகரன், ஒரு மணித் துளியிலே உரையை முடியுங்கள். கருணாகரன், ஒரு மணித் துளியிலே உரையை முடியுங்கள்.



**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**திரு. கே.சி. கருணாகரன்:** சொல்லி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களை இருக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களே, நீங்கள் உறுப்பினர் கருணாகரன் பேசி முடித்தவுடனே கேளுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** வார்த்தை வாயிலே இருக்கும்போதே வந்தால் நாங்கள் என்ன செய்ய முடியும்? அப்போது, தனியார்மயம் பண்ணுவது என்ற முயற்சி அல்லது அதை அறிவிக்காமல் இருக்கலாம். ஆனால் அதை எதிர்த்து இப்போது கோர்ட்டிலே இருக்கிறது பிரச்சினை. அவ்வாறான முயற்சியில் இந்த அரசு ஈடுபடக்கூடாது என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

அதேமாதிரி, மின்சாரத் துறையிலே செய்யப்படுகிற சீர்திருத்தம் என்பதன் பெயரில் தனியார் முயற்சி இந்த அரசு மேற்கொள்ளக் கூடாது. வேறு எந்த அரசு வந்தாலும் மேற்கொள்ளக் கூடாது என்பதை அடுத்து யார் வந்தாலும் சரி, நாங்கள் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். (குறுக்கீடுகள்) நீங்களே வந்தாலும் சரி. (சிரிப்பு)

அதேபோல, கங்கைகொண்டான், (குறுக்கீடு) கங்கைகொண்டான், சிவகங்கை போன்ற பகுதிகளில் தண்ணீரைத் தனியார்மயம் ஆக்குகிறீர்கள். கொக்கோ கோலா கம்பெனிக்குத் தருகிற பிரச்சினையை (குறுக்கீடு) மாபெரும் மக்கள் இயக்கம் . . .

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .

**திரு. கே.சி. கருணாகரன்:** மாபெரும் மக்கள் இயக்கம் அங்கே எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. ஆகவே, அதற்கும் அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு அமைச்சர், அவர் முடித்துவிடட்டும். ஒரு மணித் துளியில் முடித்துவிடுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** ஒரு மணித் துளியிலே முடித்துவிடுகிறேன். முடித்துவிடுகிறேன். ஓரேயொரு பேப்பர்தான் இருக்கிறது. வீட்டு வசதி வாரியம் சம்பந்தமாக, இந்தப் பத்திரம் இருக்கிறது பார்த்தீர்களா – அதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். அமைச்சர் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக நான் பார்க்கவில்லை. மாநிலம் முழுவதும் உள்ள ஒரு பிரச்சினை. Not only in Dindigul. திண்டுக்கல்லில் மட்டும் இருக்கிற பிரச்சினை அல்ல. 7,000 ரூபாய் 8,000 ரூபாய் வரைக்கும் கட்ட வேண்டிய பழைய பாக்கி அல்லது 100 சதம் கட்டி முடிக்கப்பட்ட பணம். இப்போது பத்திரம் கொடுக்கும்போது, ஒன்றரை இலட்சம், இரண்டு இலட்சம் – திண்டுக்கல் போன்ற இடங்களில் 20 இலட்சம்--கூடுதல் பணம் கேட்டால் யார் கட்ட முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** ஆகவே, அந்தப் பத்திரங்கள் அவர்களுக்கு வழங்குவது இலவசமாக அல்ல. அவர்களுடைய உரிமை கட்டி முடிக்கப்பட்டதற்கு. அதை உடனடியாக செய்யவேண்டுமென்று சொல்லி கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, அவினாசி–அத்திக்கடவு திட்டம். தேர்தல் அறிவிப்போடே நின்று போயிருக்கிறது. அவற்றைப் பற்றியும், உள்ளாட்சி மன்ற அமைப்புகளுக்கான நிதி ஒதுக்கத்தில், இந்த மாநில அரசு கடைப்பிடிக்கும்படியான உள்ளாட்சி மன்ற அமைப்புகளுக்கான நிதி ஒதுக்கீட்டு கொள்கை, உள்ளாட்சி மன்ற அமைப்புகளை சுதந்தரமாகவும், ஜனநாயகமாகவும் செயல்பட அனுமதி மறுக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, நான் சொல்லிவிடுகிறேன். பிரச்சினை சேதுசமுத்திர திட்டத்தைப் பற்றி அல்ல. (குறுக்கீடு) உட்காருங்கள். இப்போது அமைச்சர் சொன்னது, கருணாகரன் சில திட்டங்களை சேதுசமுத்திர திட்டத்தோடு இணைக்க வேண்டுமென்று அவர் சொன்னார். அமைச்சர் அவர்கள், அதனுடைய பிரச்சினை வேறு, இதனுடைய பிரச்சினை வேறு என்பதற்குதான் பதில் சொல்லியிருக்கிறார். இப்போது அதுபற்றி விவாதம் அல்ல. (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. ஜி.கே. மணி (குறுக்கீடு) பிரச்சினை அது அல்ல. (குறுக்கீடு) தாங்கள் குறிப்பிடுகிற பிரச்சினைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** தப்பாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, (குறுக்கீடு) இல்லை, அவர் தவறாக ஒன்றும். சொல்லவில்லை. கருணாகரன் குறிப்பிடக்கூடிய திட்டங்களை அதிலே இணைக்க முடியாது. அதனுடைய பிரச்சினை வேறு, இதனுடைய பிரச்சினை வேறு என்பதைத்தான் அவர் குறிப்பிடுகிறார். திரு. ஜி.கே. மணி பேசுங்கள். (குறுக்கீடு) அது விரிவாக விவாதிக்க வேண்டிய பிரச்சினை. திரு. ஜி.கே. மணி (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள், பொன்முடி சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பிரச்சினை அது அல்ல. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடுகள்) திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005–2006 ஆம் ஆண்டின் இடைக்கால நிதிநிலை அறிக்கையில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் இங்கே கூற விழைகிறேன்.

*"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"*

என்ற வள்ளுவனுடைய வாய்மொழிக்கேற்ப, நெறிகளைத் திட்டப்படுத்தலும், பொருள் பெருக்குதலும், பெருக்கிய பொருளைக் காத்தலும், காத்த பொருளை தக்கவாறு மக்களுக்கு பகிர்ந்தளித்தலும், ஒரு சிறந்த அரசிற்கு இலக்கணம் என்று நம்முடைய வள்ளுவர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதேபோல, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்கின்ற நேரத்திலேகூட சொல்கிறபடி செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஆட்சியாளருக்கும், சொன்னபடி செய்யக் காணோமே ஏன் என்று

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கேட்கும் விழிப்புணர்ச்சி மக்களுக்கும் ஏற்பட வேண்டும் என்ற மகத்தான தத்துவத்தை இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே, அந்த வகையிலேதான் இந்த அரசு செய்யத் தவறியவற்றை செய்ய வேண்டியவற்றை மக்களின் பிரதிநிதிகளாக இருக்கிற எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற நாங்கள் குறிப்பிடுவது கடமை என்ற அடிப்படையிலே சிலவற்றை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே, அதிலும் குறிப்பாக நிதிநிலை குறிப்பு பகுதி 1 புத்தகத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. 2006–2007 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை குறிப்பு பகுதி 1, பிரிவு 4–ல் நிதிநிலை குறியீடுகளின் வரைபடத்தில் சில புள்ளிவிவரங்களையும் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் புள்ளிவிவரங்களையும் வரைபடத்தையும் பார்க்கின்றபோது, மாநில மொத்த உற்பத்தி மதிப்பின் வளர்ச்சி விகிதத்தைப் பார்த்தால், 1996–97 ஆம் ஆண்டு முதல் 2000–2001 வரையிலான 5 ஆண்டுகளில் மாநில மொத்த உற்பத்தி வளர்ச்சி G.S.D.P. சராசரியாக 12.58 சதவிகிதம் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், 2001–2002 முதல் 2005–2006 வரை உள்ள 5 ஆண்டுகளில் மாநில மொத்த உற்பத்தி வளர்ச்சி G.S.D.P. 8.51 சதவீதமாக குறைந்துள்ளது. ஆக, இந்த 5 ஆண்டுகளில் இந்த ஆட்சியில் மாநில மொத்த உற்பத்தி வளர்ச்சி குறைந்து உள்ளது என்பதை நீங்கள் கொடுத்த புள்ளிவிவரமே காட்டுகிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, கடந்த 5 ஆண்டுகளைக் காட்டிலும் நடப்பு 5 ஆண்டுகளில் அரசுக்கு கடன் சுமை கூடி இருக்கிறது. அதற்கான வட்டி செலுத்துவதும் அதிகரித்து இருக்கிறது இது நீங்கள் கொடுத்த புள்ளிவிவரமே. அதாவது பக்கம் 13 வரைபடம் சொல்லுகிறது நிதிநிலை குறிப்பு ஒன்று, அதே பக்கம் கடனைப் பற்றி படம் 7–லே சொல்லப்பட்டிருக்கிறது. வட்டியைப் பற்றி படம் 8–லே சொல்லப்படுகிறது. நிதிப் பற்றாக்குறையை பற்றி 13–வது படத்திலே சொல்லப்படுகிறது. ஆக, இந்த அரசு கடன் சுமையைக் கூட்டியுள்ளது. அதற்கான வட்டிச் செலுத்துவதும் அதிகரித்து இருக்கிறது. அதைப்போல நிதிப் பற்றாக்குறையும் கூடுதலாகிக் கொண்டே போகிறது. கடந்த 5 ஆண்டுகளில் சராசரி நிதிப் பற்றாக்குறை என்பது 3,960 கோடி, கடந்த 5 ஆண்டுகளில். ஆனால் நடப்பு 5 ஆண்டுகளில் நிதிப் பற்றாக்குறை என்பது சராசரி 5,609 கோடி இதுவும் நீங்கள் கொடுத்த புள்ளிவிவரம் தான். ஆக, ஒட்டுமொத்தமாக நீங்கள்



சொல்லுவதிலிருந்து பார்த்தால், ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதமே இந்த 5 ஆண்டுகளில், நடப்பு 5 ஆண்டுகளில் குறைந்து உள்ளது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12–25

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கூற்று தவறான கூற்று. நான் ஏற்கெனவே அவையிலே வைத்துக் கூறினேன். அதாவது அரசினுடைய கடன் சுமையைப் பொறுத்தவரைக்கும் 16 சதவீதம் from G.S.D.P. என்ற நிலையிலிருந்து 25 சதவீதம் என்ற நிலைக்கு அது உயர்ந்தது 2001 வாக்கில். அதைப்போலவே interest payment–ஐ பொறுத்தவரைக்கும் 12 per cent of the total revenue receipt–லிருந்து அது கிட்டத்தட்ட 19 சதவீதம் என்ற நிலைக்கு உயர்ந்தது. வட்டி கட்ட வேண்டிய பொறுப்பு மட்டும் கிட்டத்தட்ட அரசினுடைய மாநில வருவாயில் ஐந்தில் ஒரு பங்கு வட்டியாக கட்ட வேண்டிய ஒரு நிலை இருந்தது. இப்படி இருந்த காரணத்தால்தான் இந்த Fiscal Responsibility Act of 19–203–ஐ நாம் கொண்டு வந்தோம். சீர்திருத்த நடவடிக்கைகள் எடுத்து வருவாயைப் பெருக்கிய காரணத்தால்தான் Revenue Deficit–ஐப் பொறுத்தவரைக்கும் 2002–2003 வாக்கில் 23.28 சதவீதம் என்று இருந்ததை தற்போது 2003–2004–ல் 6.6 சதவீதம் என்ற நிலைக்கு குறைத்து விட்டோம். அதைப்போலவே 2004–2005 வாக்கில் அந்த 6.6 சதவீதத்தை 2.47 சதவீதம் என்ற முறையில் குறைக்கின்ற நடவடிக்கையை நாம் எடுத்து அதிலும் வெற்றி பெற்றிருக்கிறோம். அதிலும் குறிப்பாக 5 சதவீதம் அளவுக்கு குறைவாக Revenue Deficit வரவேண்டும் என்பது விதி–அறிவுரை எங்களுக்கு. ஆனால், 2007–2008 வாக்கில் அந்த 5 சதவீதத்திற்குக் கீழே வரவேண்டும் என்பதை ஈராண்டுகளுக்கு முன்கூட்டியே அடைந்துவிட்ட பெருமை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய நிர்வாகத் திறமை—நிதி நிர்வாகத் திறமைக்குத்தான் அது சேரும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மற்றொன்று Fiscal Deficit–அந்த Fiscal Deficit–ஐ பொறுத்தவரைக்கும் அதிலே கட்டாயம் அதிகமாக ஆகியிருக்கிறது இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், நீங்கள் சதவீதத்தில் அதைக் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். 2003–2004–ல் 3.28 சதவீதம் as a per cent of G.S.D.P. 3.28 சதவீதம் என்று இருந்தது. அதை 2004–2005 வாக்கில் 2.95 சதவீதமாகக் குறைத்து இருக்கிறோம். கடன் வாங்குவதைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான்

ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒட்டுமொத்தமாக 100 ரூபாய் அரசுக்கு வருமானம் வருகிறது என்றால் அந்த 100 ரூபாயை 2000–2001 வாக்கில் இருந்த நிலவரம் 100 ரூபாய் அரசுக்கு வருகின்ற வருவாயில் 81.75 ரூபாய் அன்றாடச் செலவுக்காக—சம்பளம் போன்ற அன்றாடச் செலவுகளுக்காக—நடைமுறைச் செலவுகளுக்காக செலவு செய்யப்பட்டது. வெறுமெனே 18.25 ரூபாய் மட்டுமே தான் மூலதனச் செலவுகள். கட்டமைப்பு வசதிகளை Assets அவற்றை உருவாக்குகின்ற ஆக்கப் பணிகளுக்கு செலவழிக்கப்பட்டன. ஆனால், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு செம்மையான, தூய்மையான நிர்வாகத்தை ஒவ்வொரு துறை வாரியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடைமுறைபடுத்திக் காட்டிய காரணத்தால் இன்று அகில பாரதமே ஆச்சரியப்படக்கூடிய அளவிற்கு 81.75 இலட்சம் ரூபாய் அன்றாடச் செலவுக்கு செய்யப்பட்ட நிலை மாறி 87.38 ரூபாய் தற்போது ஆக்கப் பணிகளுக்கு அசையாச் சொத்துக்களை உருவாக்குவதற்கு Capital Expenditure–க்கு செலவு செய்யப்படுகிறது. அன்றாடச் செலவுகளுக்காக வெறுமனே 100 ரூபாயில் 12.62 ரூபாய் மட்டுமே செலவு செய்யப்படுகின்றது என்ற அகில இந்திய சாதனையை எட்டியிருக்கிற அரசு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு என்பதைப் பெருமையுடன் கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–30*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் சொல்லவில்லை. நீங்கள் கொடுத்திருக்கிற வரைபடத்தில் பச்சை நிற வண்ணம், இன்னும்–இரண்டு நிற வண்ணங்களில் காட்டப்பட்டிருக்கிறது. இந்தப் படத்தைப் பார்த்தாலே தெரியும்.

(நிதிநிலைக் குறிப்பு பகுதி I–புத்தகத்தைக் காண்பித்தார்.)

கடந்த ஐந்து ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் என்ன? நடப்பு ஐந்து ஆண்டுகளில் என்ன? அதைப்போலவே, கடன் பெற்றது, மற்ற எல்லா விவரங்களும் இதில் இருக்கின்றன, இதைப் பார்த்துத்தான் சொல்கிறேன். இதில் இருக்கிறதுதான். இதைப் பாருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அதை நீங்கள் (குறுக்கீடு) அந்த graph–ஐ நீங்கள் பார்க்க வேண்டும். (குறுக்கீடு) அந்த graph–ஐ நீங்கள் பார்க்க வேண்டும். அதாவது, 2001–2002, 2002–2003, 2003–2004–இல் எல்லாம் வறட்சிக் காலம். வறட்சிக் காலத்திலே, primary sector–இல்



வருவாய் குறையத்தான் செய்கிறது. ஒட்டுமொத்த, அனைத்துத் துறைகளை, Primary Sector, Secondary Sector and Tertiary Sector எல்லாவற்றையும் கணக்கில் எடுத்து, total G.S.D.P. என்று பார்க்கின்றபோது, அது 8.73 சதவீதம் என்ற நிலையை அடைந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்க ஒன்று. தொடர் வறட்சி, வெள்ளச் சேதம், அளவுகடந்த பாதிப்பு, அப்படியிருந்தும் ஒட்டுமொத்த வளர்ச்சி 8.73 என்பது உயர்ந்த அளவான வளர்ச்சி. இது பாராட்டப்பட வேண்டிய வளர்ச்சி. இந்தச் சிறப்பு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களினுடைய நிருவாகத் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஐந்தாண்டை சராசரியாகத்தான் சொன்னேன். ஐந்தாண்டு வளர்ச்சியை நான் சொல்கிறேன். அதைப்போல அடுத்து மூலதனக் கணக்கு என்பதன்கீழ், செலவு விவரங்கள், குடிநீர் வழங்கல், வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறைகளில் குறைந்திருக்கிறது. அதுவும் நிதிநிலைக் குறிப்பு பகுதி–I, இதிலே பக்கம் 38–இலே சொல்லப்பட்டிருக்கிறது. 38–வது பக்கத்திலே. 38–வது பக்கத்தில் குடிநீர் வழங்கல், துப்புரவு இதிலே கணக்கு 2004–2005–இல் 1348 கோடியே 25 இலட்சத்து 93 ஆயிரம். அது 2005–2006 திருத்திய மதிப்பீட்டில் 476 கோடியே 50 இலட்சத்து 39 ஆயிரம். அதைப்போல வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு. அதில் 321 கோடியே 66 இலட்சத்து 50 ஆயிரம். அதைப்போல 2005–2006–இல் 22 கோடியே 3 இலட்சத்து 54 ஆயிரம். எவ்வளவு குறைந்திருக்கிறது? 300 கோடி குறைவு. அதைப்போல நகரப்பகுதி வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. அதிலே 2004–2005–இல் 533 கோடியே 80 இலட்சத்து 30 ஆயிரம். அது இப்போது 2005–2006–இல் 133 கோடியே 19 இலட்சத்து 16 ஆயிரம். இதிலே பக்கம் 38–இலே இந்த விவரம் இருக்கிறது. ஆகவே, இந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் மூலதனச் செலவினங்கள் குறைக்கப்பட்டிருப்பதற்கு என்ன காரணம்? இப்படி, இவ்வளவு குறைவு என்று சொன்னால், மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகள், தேவைகள் எப்படி நிறைவு செய்யப்படும்? மாநிலம் எப்படி வளர்ச்சி பெறும் என்பதுதான் என்னுடைய கேள்வி. அதைப்போல...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு சில துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாது.

ஊரக வளர்ச்சியைப் பொறுத்தவரைக்கும், நமது கிராமத் திட்டத்திலே 175 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல தன்னிறைவுத் திட்டத்திலே 75 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கச்சா வீடுகள்— – R.D. Department — ஊரக வளர்ச்சித் துறையிலேயே கச்சா வீடுகளை நிலை உயர்த்துவதற்கு 37.50 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, இன்னும், மேற்கொண்டு 2 இலட்சம் கச்சா வீடுகளை நிலை உயர்த்துவதற்கு, ஊரக வளர்ச்சித் துறையிலே 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல ஊரக—நகராட்சி குடிநீர்த் துறையின் மூலமாக ஊரகக் குடிநீருக்காக மட்டும், 411 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. உள்ளாட்சி அமைப்பிலே நகராட்சியை எடுத்துக்கொண்டீர்கள் என்றால், அதற்கு 649.62 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு துறைவாரியாக ஒவ்வொரு பகுதியாக ஒதுக்கப்பட்டிருப்பதையும் கணக்கில்கொண்டுதான் ஒட்டுமொத்த வளர்ச்சியை, கிராம வளர்ச்சியைக் கணக்கிட வேண்டுமேயொழிய ஒரு துறையில் சற்று அதிகமாகிறது, குறைகிறது என்பதைக் கணக்கில்கொண்டு, அதனால் குறைந்துவிட்டது என்று கணக்கெடுப்பது தவறு.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவான பணிகளைத்தான் சொல்கிறேன். அதிலே பாருங்கள். குடிநீர் வழங்கல், துப்புரவு குறித்த மூலதனச் செலவு, நகர்ப்பகுதி வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு — 38 ஆம் பக்கத்திலே — அதிலே குடிநீர் வழங்கலுக்கு 1348 கோடியே 25 இலட்சத்து 93 ஆயிரம். 2005–2006–இலே 476 கோடியே 50 இலட்சத்து 39 ஆயிரம். எவ்வளவு குறைந்து இருக்கிறது என்று பாருங்கள். வீட்டு வசதிக்கும் அதே மாதிரி. நகர்ப்பகுதி வளர்ச்சிக்கும் அதே மாதிரி. இது ரொம்பக் குறைவாக இருக்கிறது. அதைத்தான் சுட்டிக்காட்டுகிறேன்.

பிற்பகல் 12–35

அதைப்போல இன்னொன்று பொருளாதாரப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஊரக வேலைவாய்ப்பு, பெரிய, நடுத்தர மற்றும் சிறு பாசனம், பாசனப் பகுதி மேம்பாடு குறித்த செலவினங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன ஆண்டுக்காண்டு. அதிலேயும் நிதிநிலைக் குறிப்பு பகுதி 1 புத்தகத்தில், 35 வது பக்கத்தைப் பாருங்கள். அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் ஆண்டுதோறும் செலவினங்கள் குறைந்து கொண்டே வருகின்றன. அதிலும் குறிப்பாக 2005–2006 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பீடுகளைவிட 2005–2006 ஆம்



ஆண்டின் திருத்திய மதிப்பீடுகள் மிகக் குறைந்துள்ளன. மேலும், 2005–2006 ஆம் ஆண்டில் திருத்திய மதிப்பீடுகள் 2004–2005 கணக்கு ஒதுக்கீட்டுத் தொகையை விடவும் குறைவாக இருப்பதுதான் வேதனை அளிக்கிறது. இந்தப் புள்ளிவிவரங்கள் நீங்கள் கொடுத்ததுதான் பாருங்கள் 35–ல் இருக்கிறது. (குறுக்கீடு) இல்லை. மூலதனச் செலவு. ஆகவே இது ஒன்று.

அதைப்போல, அரசு ஊழியர்களுக்கு மிக முக்கியமான பிரச்சினை, 5 வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படி 1–1–1996 முதல் செயல்படுத்திய அரசு நிலுவைத் தொகையில் 60 சதவிகிதத் தொகையை ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதியில் சேர்த்தது. 1998–ல் இவ்வாறு சேர்க்கப்பட்ட நிலுவைத் தொகையை வட்டியுடன் 5 ஆண்டு கழித்து 2003 ஆம் ஆண்டு திரும்பக் கொடுக்கப்படும் என்று முந்தைய அரசு அறிவித்தது. அறிவித்த பிறகு 31–3–2003 வரை வட்டியும் அந்த அரசு தந்தது. ஆனால், 1–4–2003–க்குப் பிறகு அரசு ஊழியர்களின் பணத்திற்கு, அரசு ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதியில் சேர்க்கப்பட்ட நிலுவைத் தொகைக்கு வட்டி இல்லை என இந்த அரசு அறிவித்திருக்கிறது. ஆக, 2003–2004–க்குப் பிறகு சராசரியாக ஒரு அரசு ஊழியருக்கு ஓராண்டுக்கு கிடைக்க வேண்டிய தொகை என்பது ரூ.5000–த்திலிருந்து 6000. இது சராசரி ஊதியம் பெறக் கூடியவர்களான அரசு ஊழியர்களுக்கு. ஓராண்டில் 5000–லிருந்து 6000–க்கு மேற்பட்ட தொகையை அரசு ஊழியர்கள் இழந்திருக்கிறார்கள் இந்த அரசினால் என்ற வேதனையான செய்தியை இந்த நேரத்திலே குறிப்பிட்டு அதை நீங்கள் நிறைவு செய்ய வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல அரசு ஊழியர்கள் பிரச்சினை. நான்கூட ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். எல்லா உறுப்பினர்களும் சொல்லியிருக்கிறார்கள். இங்கே நிறைய சலுகைகள் . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Water Supply and Sanitation என்ற தலைப்பிலே மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதற்கு capital expenditure என்று சொல்லப்படுகின்ற அளவுக்கு 687.70 கோடி ரூபாய் 2004–2005–க்குரியதை அந்தப் பணம் வந்து முற்பட்ட காலத்திற்கு adjust செய்யப்பட்டிருக்கிறது. இது Demand No.57–ல் பக்கம் 15–ல் விளக்கப்பட்டுள்ளது.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஊழியர்களின் சலுகைகளைப் பறித்தீர்கள். சில சலுகைகளை மீண்டும்

வழங்கியிருக்கிறீர்கள். அதை நான் மறுக்கவில்லை. இருந்தாலுங்கூட அவர்களுடைய சலுகைகள் இன்னும் நிறைய வழங்கப்படாமல் இருக்கின்றன. இவற்றை, இன்னும் கோரிக்கையாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதாவது ஈட்டிய விடுப்பு, ஒப்புவிப்பு விடுப்பு ஆண்டுக்கு 15 நாட்களாக மீண்டும் வழங்கப்பட வேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல பணி ஓய்வு முழுப் பயன்களைப் பெறுவதற்கான தகுதிகாண் காலம் 30 ஆண்டிலிருந்து 33 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதனால் நிறைய பாதிப்பு, மிகப் பெரிய பாதிப்பு. ஆகவே, 33 ஆண்டுகள் என்பதை மீண்டும் 30 ஆண்டுகளாகக் குறைக்க வேண்டும். இதற்கு முன்னாலே கடந்த காலங்களில் அரசு ஊழியர்களுக்கு போனஸ். தொகை, கருணைத் தொகை எல்லாம் வழங்கப்பட்டது. அதை நிறுத்தி விட்டீர்கள். ஆகவே, அந்த போனஸ், கருணைத் தொகைகளை மீண்டும் வழங்க வேண்டும். அதைபோலவே ஓய்வு ஊதிய தொகையில் கடன், வழங்குவதற்கு அதாவது commutation செய்வதில் பழைய நடைமுறையை நீங்கள் மீண்டும் திரும்ப கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வருங்கால வைப்பு நிதியிலிருந்து முன்பணம் பெறவும் பகுதி தொகையை எடுத்துக் கொள்ளவும் உள்ள பழைய அளவிலான அந்தச் சதவிகித அளவை மீண்டும் கொண்டு வர வேண்டுமென்று, உயர்த்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, இந்த ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை நியமனம் செய்திருக்கிறீர்கள். சம வேலைக்கு சம ஊதியம் என்ற அடிப்படையில் மீண்டும் அதை நீங்கள் வழங்க வேண்டுமென்று இங்கே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இது தந்தை பெரியார் பிறந்த மண். தந்தைப் பெரியாரை ஏற்றுக்கொள்ளாத அரசியல் கட்சிகள் இருக்க முடியாது. அப்படி இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் சமூக நீதிக்கு வித்திட்ட இந்தத் தமிழ் மண்ணில் பிறந்த தந்தை பெரியாரின் பிறந்த தினத்தை எல்லோரும் உணர வேண்டும். எதிர்க்காலத்தில் ஒவ்வொரு தனி மனிதனும் சமூக நீதி பெற வேண்டும் என்ற அந்த உண்மைத் தத்துவத்தை உணரக்கூடிய வகையில் தந்தை பெரியார் பிறந்த தினத்தை சமூக நீதி தினமாக அறிவிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த மன்றத்தில் நர்ன் தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கிறேன். இந்த அரசுக்கு மனம் இருந்தால் செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளையும் மீண்டும் வைக்கிறேன்.



பிற்பகல் 12–40

அதைபோல தமிழகத்தில் பட்டி தொட்டி எல்லாம் பாமர மக்கள் படிக்க வேண்டும் என்று சொல்லி, கர்மவீரர் காமராஜர் அவர்கள்தான் பள்ளிக்கூடங்களை எல்லாம் திறந்து கல்விக் கண்ணை வழங்கினார்கள். ஆகவே, பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த தினத்தை கல்வித் தினமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வைத்துக்கொண்டிருக்கிறோம். அதையும் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, இப்போது இருக்கக்கூடிய இட ஒதுக்கீட்டு முறை. பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, மிகப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட எல்லோருக்கும் இருக்கிற இட ஒதுக்கீட்டு முறையிலே சில இடங்களிலே, சில நேர்வுகளிலே பல பேருக்குப் பயன் இல்லாமல் போய்விடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 108 ஜாதிகளுக்கு 20 விழுக்காடு. பிற்படுத்தப்பட்டவர்கள் என்று சொல்லக்கூடிய குறிப்பிட்ட 92 ஜாதிகளுக்கு 30 விழுக்காடு. ஆகவே, இவற்றிலே சிலருக்கு, பெரும்பான்மைச் சமுதாயங்களுக்குக்கூட இடமே கிடைக்காமல் இருக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிவிடுகிறது. ஆகவே, இவற்றையெல்லாம் மாற்றுவதற்காக தொகுப்பு இட ஒதுக்கீட்டு முறைதான், compartmental reservation என்று சொல்கிறார்கள், அந்த முறை இருந்தால் எல்லோருக்கும் உரிய பலன் கிடைக்கும் என்ற காரணத்தினாலே அந்தத் தொகுப்பு இட ஒதுக்கீட்டு முறையை இந்த மண்ணிலே அமலாக்க வேண்டும். அண்டையிலே இருக்கிற கர்நாடக மாநிலத்திலே, ஆந்திர மாநிலத்திலே, கேரள மாநிலத்திலே இருக்கிறது. ஆனால், பெரியார் பிறந்த மண்ணிலே இங்கே இல்லையென்ற வேதனையான அம்சத்தைச் சுட்டிக்காட்டி, அதையும் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று கீழே பள்ளத்திலே, அடித்தட்டிலே, ஆழத்திலே இருக்கிற எஸ்.சி. மக்களுடைய இட ஒதுக்கீடு, அந்த 18 விழுக்காட்டை 22 விழுக்காடாக உயர்த்த வேண்டும் என்று இந்தச் சட்டமன்றத்தின் ஆரம்பக் காலத்திலிருந்து நான்கூட குரல் கொடுத்து வருகிறேன். இந்த அரசுக்கு மனம் இருந்தால் ஒடுக்கப்பட்ட மக்கள் மேலே வருவதற்கு அதை 22 விழுக்காடாக உயர்த்த வேண்டும்.

அதைப் போலவே இப்படி இட ஒதுக்கீட்டைத் திருத்துவதனாலே சில சிக்கல் என்றுகூட நீங்கள் நினைக்கலாம். ஆனால்,

ஒட்டுமொத்தமாக இந்த compartmental reservation – தொகுப்பு இட ஒதுக்கீட்டு முறை வருகிறது. அதைப்போலவே மாநில அரசு இட ஒதுக்கீட்டுக் கொள்கையை வகுத்துக்கொள்ளலாம் என்ற நிலையை உருவாக்கினால் இவற்றையெல்லாம் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையிலே பக்கத்து மாநிலத்திலே, கேரளாவிலே இருக்கிற இட ஒதுக்கீட்டு முறையில் இஸ்லாமியர்களுக்கும், கிறித்துவர்களுக்கும் இட ஒதுக்கீடு இருக்கிறது. ஆனால், பெரியார் பிறந்த மண்ணில் அவர்களுக்கு இல்லை. ஆகவே, அந்த இஸ்லாமியப் பெருமக்களுக்கும், கிறித்துவப் பெருமக்களுக்கும் இட ஒதுக்கீட்டு முறையை, தனி இட ஒதுக்கீட்டு முறையை இந்த அரசு வழங்க வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, அரசுத் துறைகளிலே வேலைவாய்ப்புகள் குறைந்துகொண்டே வருகின்றன. நான் குறை சொல்வதற்காக அல்ல. அப்படி வேலைவாய்ப்பு குறைந்து கொண்டு வரக்கூடிய சூழ்நிலையில் படித்தவர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகின்ற வகையில், தனியார் நிறுவனங்களை அணுகுகின்றபோது, அங்கே சாதாரண ஒடுக்கப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்களுக்கு, மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பே இல்லை; அரிதாகிவிடுகிறது. வேறு மாநிலங்களிலேயிருந்து வந்தவர்களுக்கு வேலை கிடைக்கிறது. ஆகவே, மத்திய அரசு தனியார்த் துறை இட ஒதுக்கீட்டிற்கு வழிவகை செய்து கொண்டிருக்கிறது. பக்கத்திலே மராட்டிய மண்ணிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல இந்த மண்ணிலேயும் தனியார்த் துறை இட ஒதுக்கீட்டை அரசு கொண்டு வரவேண்டும் என்று (மணியடிக்கப்பெற்றது) நான் வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, இது ஒரு பொதுப் பிரச்சினையாக இருப்பதனாலே உங்களிடம் ஒரு சந்தேகம் கேட்கிறேன். மத்திய சர்க்கார் அமைப்புகளுக்கு உட்பட்ட இந்த IIT, IIM இவற்றிலே எல்லாம் இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்படுகிறதா ?

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு இல்லவே இல்லை. அதைத் தொடர்ந்து மத்திய அரசில் குரல் கொடுத்திருக்கிறோம். அதற்காக ஒரு கருத்தரங்கை நடத்தி, தீர்மானம் நிறைவேற்றி அரசுக்குக் கொடுத்து நிறைவேற்றுவதற்கு (சிரிப்பு) நீங்கள் சிரிப்பது எனக்கு ரொம்பக் கேலியாக இருக்கிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி (குறுக்கீடு) இல்லை. மணி, நான் ஒரு அரசியல் சர்ச்சைக்காகக் கேட்கிறேன் என்று தயவு செய்து நினைக்காதீர்கள். பேரவைத் தலைவர் அரசியல் சர்ச்சைகளில் சிக்கக் கூடாது. இது ஒரு பொதுப் பிரச்சினை. பெரியார் வளர்ந்த மண் என்கிற அந்த உணர்வின் காரணமாகக் கேட்கிறேன். IIT, IIM இவற்றிலே இட ஒதுக்கீடு பின்பற்றப்படுவதில்லையே! என்ன காரணம் என்று கேட்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் கேள்வி நியாயமான கேள்வி. உங்களுடைய கோரிக்கையை எங்களோடு இணைத்துக்கொள்கிறோம். ஆனால், (குறுக்கீடு) இந்த இட ஒதுக்கீடு . . .

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**திரு. ஜி.கே. மணி:** IIT, IIM இவை போன்ற மத்திய அரசுக் கல்வி நிறுவனங்களில் பல்வேறு நிலைகளில் இட ஒதுக்கீடே இல்லை. அதை இன்று மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சராக இருக்கிற மாண்புமிகு அர்ஜுன்சிங் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, அங்கே இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை எல்லாம் ஒன்று சேர்த்து அவர்களைச் சந்தித்து, அது வருவதற்கு இப்போது தயாராகிக் கொண்டிருக்கிறது. அந்த வேலை நடந்துகொண்டிருக்கிறது. இதை எல்லோரும் . . .

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வருடா வருடம் நமது மாநிலத்தின் மூலமாக All India quota–விலே M.S., M.D., எல்லாம் எடுத்துக்கொள்கிறோம். அதுவும் நமது மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும், அங்கே இட ஒதுக்கீடே கிடையாது. இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12–45*

**திரு. ஜி.கே. மணி:** இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் முதலிலே சொன்னேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இட ஒதுக்கீட்டை உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார். S.C.–க்கு 22 சதவிகிதமும், மற்ற பிரிவினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீட்டை உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டிருக்கின்றார். ஆனால், இப்போது மத்தியிலே தொழிற்கல்வியிலே மாணவர்கள் சேர்க்கைக்காக ஒரு சட்டத் திருத்தத்தை எடுத்துக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அதிலே 50 சதவிகிதம் என்றுதான் அவர்கள் அந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கே 69 சதவிகிதம் இட ஒதுக்கீட்டைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் அடுத்துச் சொல்ல வருகிறேன். அதாவது, இப்போது தனியார் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் போன்ற.. (குறுக்கீடு)

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,–

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அவர் முடித்துவிடட்டும்.

**திரு. ஜி.கே. மணி:** பல்வேறு அரசு கல்வி நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்களிலே இட ஒதுக்கீடு கூடாது. கல்விக் கட்டணம் அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப வசூலித்துக் கொள்ளலாம் என்ற நிலையில், உச்சநீதிமன்றமும் அவர்களுக்குச் சாதகமாகவே இருந்தது. ஆகவே, அந்த உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பை நல்வழிப்படுத்த வேண்டுமென்ற அந்த அடிப்படையில் மத்திய அரசு இதையெல்லாம் பரிசீலித்து, இன்றைக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டம் 5, அதிலும் குறிப்பாக சட்டத் திருத்தம் 104–ஐக் கொண்டுவந்து வழி வகுத்திருக்கிறது. அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது? 50 சதவிகிதம் என்று சொல்கிறார்கள். 50 சதவிகிதம் என்பது பொதுவானது. ஆனால், மாநிலம் விரும்புகிறபட்சத்தில், அதை அவர்களுக்கு ஏற்ப வகுத்துக் கொள்ளலாம் என்று சொல்லி அதை..

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். 50 சதவிகிதத்திற்குள்ளேதான்



இட ஒதுக்கீட்டைப் போடவேண்டுமே தவிர, 50 சதவிகிதத்திற்கு மேலாக இட ஒதுக்கீட்டைச் செய்வதற்கு அரசுக்கு, மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 104–வது Constitution Amendment–லே 50 சதவிகிதத்திற்குள்ளேதான் இட ஒதுக்கீடு இருக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே சொல்லப்பட்டிருப்பது, மாநில அரசு விரும்புகிறபட்சத்தில், அந்தந்த மாநிலத்தின் நிலைமைக்கேற்ப வகுத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைத்தான் (குறுக்கீடு) இல்லை, இல்லை, இப்போது சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு, நான் இப்போது மதியம்கூட (குறுக்கீடு) இல்லை, இல்லை, காலையிலே வருவதற்கு முன்பு நான் அதைப் பேசிவிட்டு வருகிறேன். அந்தத் தொழில்நுட்ப வல்லுநரிடத்திலே பேசி, துணை வேந்தரிடத்திலே பேசி, மத்திய அரசினுடைய (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவைக்குத் தவறான தகவலைத் தரவேண்டாம். ஏற்கெனவே உச்சநீதிமன்றம் வழங்கிய அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே மண்டல் கமிஷன் 50 சதவிகிதம் அளவிற்கு இட ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் என்று சொன்னபோது, மாண்புமிகு அம்மா அவர்கள் அதற்காக அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் அன்றைக்குக் கடிதம் எழுதினார்கள். அன்றைக்கு நான் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சராக இருந்தேன். அம்மாவோடு டெல்லிக்குச் சென்றோம், பிரதமரைச் சந்தித்தோம். ஆண்டாண்டு காலமாக இட ஒதுக்கீட்டிலே தமிழ்நாடு ஒரு முன்னோடி, 1921–லேயிருந்து சமூக நீதியைக் காக்கின்ற மாநிலம். எனவே, 69 சதவிகிதம் என்பது ஒரு உரிமைப் பிரச்சினை. எக்காலத்திலும் இதிலே கை வைக்கக்கூடாது என்று சொல்லி அன்றைக்கு வலியுறுத்தினோம். 9–வது அட்டவணையிலும் அது சேர்க்கப்பட்டது. எனவே, இப்படி இருக்கின்ற நிலையிலே, உச்சநீதிமன்றம் 50 சதவிகிதம் என்று சொன்னபோது, கூடுதலாக சீட்டுகளை உயர்த்தி, இன்றைக்கும் அந்த 69 சதவிகிதத்தைக் கொடுத்து சமூக நீதியைக் காக்கின்ற ஒரு முதலமைச்சர் என்று சொன்னால் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலேதான் இந்த Backward Class Commission–பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் அமைக்கப்பட்டது. எனவே, Compartmental system என்று சொல்லும்போது, அது எப்படி சாத்தியமாகும்? இங்கே

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் மிகவும் பின்தங்கியவர்களாக வரவேண்டுமென்று மனு கொடுக்கின்றார்கள். மிகவும் பின்தங்கியவர்கள் S.C.–ஆக வரவேண்டுமென்று மனு கொடுக்கின்றார்கள். S.C.–ஆக இருப்பவர்கள், S.T.–ஆக வரவேண்டுமென்று மனு' கொடுக்கும்போது, இதையெல்லாம் ஆராய்ந்தறிந்து பார்த்து, அந்த Backward Class Commission, அந்த recommendation அடிப்படையிலேதான் அரசு முடிவு செய்யும்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது பழைய நிலை. நான் அதற்குள்ளே போகவில்லை. இப்போது கல்வி, அதாவது, தனியார் கல்வி நிறுவனங்களிலே இட ஒதுக்கீட்டைச் செய்துகொள்வதற்கு மத்திய அரசு கொண்டு வந்த சட்டத் திருத்தத்தின் அடிப்படையிலே, அதைக் குறிப்பிட்டுச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதிலே வழி சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது நான்கூட சற்று நேரத்திற்கு முன்பாகப் பேசுகின்றபோது, ஒவ்வொரு மாநிலத்திலும் அந்த நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அடுத்த ஆண்டு தனியார் கல்வி நிறுவனங்களிலும் மாணவர்கள் ...

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மற்றொரு தகவலைச் சொல்ல விரும்புகிறேன். 50 சதவிகிதத்திற்கு மேலாக இட ஒதுக்கீட்டைக் கொடுக்கக்கூடாது என்பது உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கே சட்டமன்றத்திலே ஒரு சட்டத்தை இயற்றி, அது பாராளுமன்றத்திலே 9–வது அட்டவணையிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. 69 சதவிகிதத்திற்கு சட்டப் பாதுகாப்பு பெறப்பட்டது. ஆனால், அதற்கு உச்ச நீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்திருக்கின்றார்கள். அந்த வழக்கிலே 50 சதவிகிதத்திற்கு மேலாக நீங்கள் இட ஒதுக்கீட்டைக் கொடுக்கக்கூடாது என்று கூறப்பட்டிருக்கின்றது. அதற்கும் மேலாக கூடுதலாக இடத்தைக் கொடுத்துதான் அந்த 69 சதவிகிதத்தை இன்றைக்கும் நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இன்றைக்கும் உச்ச நீதிமன்றத்திலே அந்த வழக்கு நிலுவையிலே இருக்கிறது. இன்னும் அந்த வழக்கிலே இறுதித் தீர்ப்பு வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே, 50 சதவிகிதத்திற்கு உள்ளாகத்தான் அந்த இட ஒதுக்கீடு இருக்க வேண்டுமென்று 104–வது Constitutional Amendment–ல் சொல்லப்பட்டு



இருக்கின்றதே தவிர, மாநில அரசுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–50

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இது பழைய நிலைமை. (குறுக்கீடு) நீதிபதி லஹோடி தீர்ப்பில் ...

**டாக்டர் க. பொன்முடி:** ஒரு நிமிடம். பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்திலே 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு இருக்கவேண்டுமென்று சொன்னது உண்மைதான். ஆனால், அட்டவணைக்குப் பிறகும்கூட அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதனால்தான், அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவரவேண்டுமென்று எல்லா கட்சிகளும் வற்புறுத்தி, அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தில் — 50 சதவிகிதம் என்று உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டிருந்தாலும் — அந்தந்த மாநிலங்களில் இருக்கிற நிலைமைக்கேற்ப அவர்கள் இதை ஏற்றுக்கொள்ளலாம் என்று எல்லா கட்சிகளும் வற்புறுத்தியதன் அடிப்படையிலே அதுவும் சேர்க்கப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினை என்பதனாலே, மிகவும் சுருக்கமாக நான் சொல்கிறேன். அமைச்சர் அவர்கள் சொன்னதிலே, அந்த வழக்கு இன்னும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையிலேதான் இருக்கிறது. அந்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படுகிற நேரத்திலே, நான் இங்கே அவையிலே உறுப்பினராக இருந்தேன், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தேன். நானும், அதிலே இருக்கிற சிக்கலை தெளிவாக அன்றையதினம் எடுத்து விளக்கியிருக்கிறேன். அதிலே என்ன பிரச்சினை என்று சொன்னால், 50 சதவிகிதத்திற்குமேல் கூடாது என்கிற அந்தத் தீர்ப்பு முன்பே வந்துவிட்டது. பிரிவு 31–(சி)–ன்கீழே இதைக் கொண்டு வரலாம் என்று சொன்னார்கள். பிரிவு 31–(சி)–ன்கீழ் இது வருவது கஷ்டம். நீங்கள் பிரிவு 31–(சி)–ன்கீழ் இதைக் கொண்டுவந்தீர்களானால், பின்னால் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து Supreme Court – உச்ச நீதிமன்றத்திற்குப் போனால், இது நிற்குமா என்பது எனக்கு சந்தேகமாக இருக்கிறது, நிற்காது என்று நான் கருதுகிறேன். எனவே, இந்தப் பிரிவு 31–(சி) என்பதன்கீழ் நிலச் சீர்திருத்தம் சம்பந்தமான சட்டங்கள் மட்டுமே இதில் இடம்பெறவேண்டுமே தவிர, இதுபோன்ற சட்டங்கள் அதிலே இடம்பெற முடியாது என்று

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2006 ஜனவரி 24

தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 31–வது பிரிவு ஏற்கெனவே அரசியல் சட்டத்திலேயிருந்து அகற்றப்பட்டுவிட்டது. 31–வது பிரிவு இப்போது கிடையாது. 31 வெறும் 300–ஏ ஆகி ஒரு பிரயோஜனமும் இல்லாமல் இருக்கிறது, பிரிவு 31–(சி)–ன்கிழே இது நிற்பது சிரமம். எனவே, கொஞ்சம் நாம் ஜாக்கிரதையாக இதைக் கையாள வேண்டும். அதை எப்படிக் கையாளவேண்டும் என்பது பற்றி பரிசீலிப்பது நல்லது என்றுதான் நான் சொன்னேன். என்றாலும் அது அன்றையதினம் நிறைவேற்றப்பட்டு நாடாளுமன்றத்திலும் அதை ஒப்புக்கொண்டு, அன்றையதினம் இருந்த காங்கிரஸ் அரசாங்கம் நிறைவேற்றிக் கொடுத்தது. என்றாலுங்கூட, இன்று உச்ச நீதிமன்றத்திலே அது நிலுவையிலே இருக்கிறது. அதையும் நாம் கருத்திலேகொண்டு பேசவேண்டும். இருந்தாலும், அதை எப்படி அதிகரிப்பது? முடிந்தவரையில் ஒவ்வொரு துறையிலேயும் எப்படி இடஒதுக்கீடு கொண்டுவருவது என்பது பற்றிப் பரிசீலிக்கவேண்டும். அதை நிதானமாக அணுகி, அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து உட்கார்ந்து, நிதானமாக அணுகி அதை நிறைவேற்றுவதற்கு வழிகாணவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, ஒரு மணிக்குள் முடித்துவிடுங்கள். திருமதி யசோதா பேசவேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குள்ளே ஆழமாகப் போகவில்லை. நேரம் ஆகிவிட்டது. இப்பொழுது, அடுத்த ஆண்டு தனியார் தொழிற் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை. மத்தியிலே 104–வது சட்டத் திருத்தம் வந்திருக்கிறது. நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? நீங்கள் அதற்கு, மாணவர்கள் சேர்க்கைக் குறித்த இடஒதுக்கீடு, கட்டண முறையை எந்த வகையிலே வகுத்துக்கொள்ளப் போகிறீர்கள்? கடந்த ஆண்டைப்போல, இந்த ஆண்டும் பிரச்சினை வந்துவிடக்கூடாது. மாணவர்களும், பெற்றோர்களும் பாதிக்கக்கூடாது. ஆகவே, என்னுடைய கோரிக்கையெல்லாம், நீங்கள் ஒரு நெறிமுறையை வகுத்துக்கொள்ளவேண்டும். அதன் அடிப்படையிலே செய்யவேண்டும். என்ன செய்யப்போகிறீர்களோ அதை நல்லவையாகச் செய்யவேண்டுமென்ற கோரிக்கையை இங்கே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

அதைப்போல, இப்போது பள்ளிகளிலே தமிழ்நாடு முழுவதும் தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் எல்லாம் இன்னும் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக



2006 ஜனவரி 24] [திரு. ஜி.கே. மணி]

இருக்கின்றன. அந்தப் பணியிடங்களை நிரப்ப வேண்டும். அதைப்போல, அரசுக் கல்லூரிகளில் இன்னும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அதிலும் குறிப்பாக நீங்கள் கௌரவ விரிவுரையாளர்களை நியமிக்கிறீர்கள். இதை உயர் நீதிமன்றம்கூட சுட்டிக் காட்டியிருக்கிறது. இதையெல்லாம் நிவர்த்தி செய்து, நீங்கள் அந்தக் கல்லூரிகளிலே போதிய ஆசிரியர்களை உடனடியாக நியமனம் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, இன்று தொடக்கப் பள்ளி ஆசிரியர் சங்கங்கள், பட்டதாரி மற்றும் முதுகலை ஆசிரியர் சங்கம், தமிழாசிரியர் கழகம், கல்லூரி ஆசிரியர் சங்கம், JACTO – GEO போன்ற அமைப்புகள் எல்லாம் இன்னும் கோரிக்கை வைத்திருக்கின்றன கல்வித் துறையிலே. அதை நீங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுப் பணியாளர், அங்கன்வாடிப் பணியாளர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். இந்த ஆசிரியர் மாறுதலில் கலந்தாய்வு முறையை நீங்கள் கொண்டுவந்தீர்கள். ஆசிரியர் மத்தியிலே வரவேற்பு இருந்தது. ஏன் அதை கைவிட்டீர்கள்? ஏன் மிகப்பெரிய குழப்பம்? ஆகவே, அந்தக் கலந்தாய்வு முறை மீண்டும் வருமா என்பதை நீங்கள் விளக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும் ஆசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு முறையிலேதான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவு செய்து தவறானத் தகவலைக் கொடுக்கக்கூடாது. எவ்வளவு பாதிப்பு, குளறுபடி என்று தெரியும்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறானத் தகவலை நான் கொடுக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் தவறானத் தகவலைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கலந்தாய்வு முறையில்தான் இப்போதும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை. இந்தக் காவல் துறையிலே உள்ளவர்களுக்கு பணி நேரமே கிடையாது. காவல் துறையிலே பணியாற்றக்கூடியவர்களுக்கு எட்டு

[திரு. ஜி.கே. மணி] [2006 ஜனவரி 24

மணி நேரம் பணி வரம்பு. அதை நிர்ணயிக்கவேண்டும். அவர்களுக்கு மற்ற துறைகளைக் காட்டிலும் அவர்களின் பணியினுடைய தன்மையைக் கருதி கூடுதல் ஊதியம், 8 ஆண்டுகளுக்கு ஒருபடி பதவி உயர்வு என்ற நிலையை உருவாக்கவேண்டும். தலைமைக் காவலர்களாகப் பணியாற்றியவர்கள் உதவி ஆய்வாளர்களாக பதவி உயர்வு பெறுவதற்கு தேர்வு முறை இருக்கிறது. அதையெல்லாம் தவிர்த்துவிட்டு பணி மூப்பு அடிப்படையிலே வழங்கவேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–55*

அதைப்போல, ஆசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் போன்றோர் பல்வேறு துறைகளிலே தொகுப்பு ஊதியத்திலே பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். சம வேலைக்கு சம ஊதியம் என்ற அடிப்படையிலே நீங்கள் காலமுறை ஊதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சமீபத்தில் ஆசிரியர் தேர்வாணையத்தின் மூலமாக பட்டதாரி ஆசிரியர்கள் 3,177 பேர் தேர்வு செய்யப்பட்டார்கள். அதிலே தமிழ் ஆசிரியர்களும், வரலாறு ஆசிரியர்களும் ஒருவர்கூட இல்லை. எப்படி தமிழில் மாணவர்கள் முன்னேற முடியும்? ஆகவே தமிழ் மற்றும் வரலாறு ஆசிரியர்களுக்கு நீங்கள் வாய்ப்பளிக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்கிறேன்.

இன்னொன்று, விவசாயிகளுக்கு வட்டிச் சலுகை வழங்கினீர்கள். அதிலே வட்டிச் சலுகையோடு கடனைச் செலுத்தியவர்களுக்கு மீண்டும் கடன் பெற முடியவில்லை, நிறைய இடங்களிலே. விழுப்புரம் மாவட்டத்திலே எந்தெந்த கூட்டுறவு வங்கிகளில் என்று குறித்து வைத்திருக்கிறேன். ஆகவே, அதை வழங்குவதற்கு நீங்கள் முன்வர வேண்டும்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த வங்கிகளில் யார் யாருக்கு கடனையும் அசலையும் செலுத்தியவர்களுக்கு வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், அவர்களுக்கு உடனடியாக கடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. ஜி.கே. மணி:** அதைக் கொடுத்து விடுகிறேன். அதைப்போல ஒரு யோசனை. விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் வயது நிரம்பிய காலத்திலே அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும். மேலும், பனை வெல்லம்



2006 ஜனவரி 24] [திரு. ஜி.கே. மணி]

முதலான பனைப் பொருள் உற்பத்தி செய்வதற்கு அரசு முன்னுரிமை வழங்க வேண்டும். வணிகர் சங்கத்தினர் நீண்ட நாட்களாக பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தற்காலிகப் பணியாளர்கள் நிறைய பேர், பல்லாயிரம் பேர் இருக்கிறார்கள். அவர்களுடைய பணியை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு I.T.I. படித்தவர்கள் உதவியாளர்கள்; அதாவது helper பணிக்கு 2,500 பேர் தேர்வு செய்வதாக வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே நீங்கள் கோரியிருக்கிறீர்கள். அது வரவேற்கக்கூடியதுதான். ஆனால், தமிழ்நாட்டிலே இருக்கிற 37 வட்டங்களில் அந்த Circle-களில் காலியாக இருக்கிற helper பணியிடம் 22,815. அதிலே, இப்போது தேர்வு செய்வது 2,500 என்றால், ஆகமொத்தம், தற்போது உள்ளவர்கள் 3,956 பேர். இன்னும் தேவையானவர்கள் 18,859 பேர். இவ்வளவு காலியிடங்கள் இருக்கின்றன. இதனால்தான், மின்வெட்டை பழுதுபார்க்கக்கூடிய நிலை இயலாமல் போகிறது. அதை நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் இப்போது, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கேட்கின்ற நேரத்தில், அங்கே தாழ்த்தப்பட்டவர்கள், மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வயது வரம்பைக் குறைத்திருக்கிறீர்கள். வேலையில்லாத் திண்டாட்டத்திலே வேலையே கிடைக்கவில்லை, அலைந்து கொண்டிருக்கிறான். இப்போது வயது வரம்பைக் குறைத்துவிட்டீர்கள் என்றால், இந்த I.T.I. படித்தவர்கள் இரண்டு இலட்சம் பேர் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அந்த வயதுவரம்பைத் தளர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மூன்று மணித்துளிகளுக்குள் முடித்துவிடுகிறேன். அதைப்போல, தமிழ்நாடு பல்கலைக்கழகத் திருத்தச் சட்டம் கொண்டுவந்தீர்கள். அந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவந்தபோது அரசுக் கல்லூரிகள் 30, மற்ற கல்லூரிகள் 60, கல்வியியல் கல்லூரிகள் 7, மொத்தம் 67, இவற்றை நீங்கள் பல்கலைக்கழகங்களுடைய உறுப்புக் கல்லூரிகளாக இணைத்த நேரத்தில் கல்லூரிகளுக்கு நிதி கூடுதலாகக் கிடைக்கும், அங்கே பணியாற்றக்கூடிய ஆசிரியர் பெருமக்களுக்கு

நிறைய சலுகைகள் எல்லாம் கிடைக்கும் என்று சொன்னீர்கள். அவர்கள் செய்த போராட்டத்தின் எதிரொலியாக முதலமைச்சர் அவர்கள்கூட அவர்களை அழைத்துப் பேசினார்கள். பேசுகின்றபோது உங்கள் கோரிக்கையை ஏற்றுக்கொள்கிறேன், இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம், பாதிப்பு என்று சொன்னால், அதைக் கைவிடுவதாக வாக்குறுதியளித்தார்கள். மூன்றாண்டுகளுக்கு மேலாக, நான்காண்டுகள் ஆகிவிட்டன, ஆனால், நிதியும் கூடுதலாகக் கிடைக்கவில்லை, அங்கே ஆசிரியர் பணியிடங்களும் நிரப்பப்படவில்லை, பழைய நிலைமையே நீடிக்கின்ற காரணத்தினாலே அதை நீங்கள் திரும்பப்பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் இருக்கின்ற விரிவுரையாளர்களுடைய காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டு அரசு கல்லூரிகளிலே 500 இடங்களையும், உதவி பெறுகின்ற கல்லூரிகளிலே 300 இடங்களையும் நிரப்புவதற்கு அரசு ஆணை வெளியிடப்பட்டது. ஆனால் அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையில் இருப்பதால், அந்த வழக்கில் தீர்ப்பு வந்தவுடனே அதை நிரப்புவதற்கு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த இட ஒதுக்கீடு கொள்கை குறித்து இங்கே பேசும்போது சட்ட அமைச்சர் என்கின்ற முறையில் நானும் சொன்னேன். நம்முடைய கல்வித் துறை அமைச்சரும் உச்ச நீதிமன்றத்தில் உள்ள அந்த வழக்குக் குறித்துச் சொன்னார்கள். அதுதான் தெளிவானது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்தத் தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் 1993 ஆம் ஆண்டு ஒரு சட்டத்தைக் கொண்டுவரும்போது, அதாவது Tamil Nadu Act 45 of 1994, i.e., Tamil Nadu Backward Classes, Scheduled Castes and Scheduled Tribes (Reservation of seats in educational institutions and of appointment or posts in the services under the State) Act, அதிலே ஒரு writ petition No. 454/1994 challenging the validity of Tamil Nadu Backward Classes, Scheduled Castes and Scheduled Tribes (Reservation of seats in educational institutions and of appointment or posts in the services under the State) Act. This writ petition has been clubbed with the connected cases in S.L.P. No. 13526/93, 16534 –16540/1993 etc., and



referred to the Constitution Bench. The Bench has not yet been constituted. இன்னும் அந்த பெஞ்ச் அமைக்கப்படவில்லை உச்ச நீதிமன்றத்திலே. The Supreme Court is passing interim directions every year for creation of additional seats in professional courses. அதுதான் அந்த 69 சதவிகிதம். (குறுக்கீடு) இப்போது உள்ளதைத்தான் நான் சொல்கிறேன்.

பிற்பகல் 1–00

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதோடு ஒரு விளக்கத்தையும் சொல்ல விரும்புகிறேன். உச்ச நீதிமன்றம், அந்த இட ஒதுக்கீடு, மாணவர் சேர்க்கை பற்றி ஒரு தீர்ப்பு வழங்கிய பிறகு, அதை எதிர்த்து நாம் ஒரு review petition போட்டோம். அதுவும் dismiss செய்யப்பட்டது. அப்போது ஒரு கருத்தை வெளியிட்டார்கள். நாங்கள் அந்த 69 சதவிகிதத்தை எதிர்த்துப் போடப்பட்ட வழக்கிற்குள்ளாகச் செல்லவில்லை. அதைப்பற்றி நாங்கள் கருத்துச் சொல்லவில்லை என்று கூறியிருக்கிறார்கள். அதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈமச்சடங்கிற்கான உதவி, கிராமப்புறங்களிலே வழங்கப்பட்டு வந்தது. அதிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை நிறைவு செய்யுங்கள். நன்றாக, மங்கலமாக முடியுங்கள். ஈமச்சடங்கோடு முடிக்காதீர்கள். (சிரிப்பு) பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படவில்லை. அதை மீண்டும் வழங்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் நிலத்தடியில் fluoride என்ற நச்சுத்தன்மை, குடிநீர் பாதிப்பு, அதனால் பல வியாதிகளெல்லாம் வருகின்றன. ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர்த் திட்டம் கட்டாயம் வேண்டும். அதையும் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, பஞ்சப்பள்ளி வாய்க்கால். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள். திருமதி யசோதா. (குறுக்கீடு) பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதைப்போல, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இந்தப் பிரச்சினைகளையெல்லாம் சொல்வதற்கு நேரமில்லை. இத்தோடு பேச்சை நிறைவு செய்யுங்கள். திருமதி யசோதா. (குறுக்கீடு) வேறு ஏதாவது பிரச்சினை இருந்தால் அமைச்சரிடம் கொடுங்கள். ஏதாவது பிரச்சினை இருந்தால் அமைச்சரிடம் கொடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இதெல்லாம் குற்றச்சாட்டுகள், நீக்கப்படுகின்றன. ஆதாரம் இல்லாமல் சொல்லக்கூடாது. திருமதி யசோதா. (குறுக்கீடு) உங்களுடைய பேச்சு நிறைவு பெற்றது. (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி அவர்களுடைய பேச்சு நிறைவு பெற்றது. திருமதி யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,- (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை. முடித்துவிடுகிறேன். ஒரேயொரு நிமிடம். தலைவர் அவர்களே, உரையை நிறைவு செய்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முடித்துக் கொள்ளுங்கள், முடித்துக் கொள்ளுங்கள். அவர்கள் ஆரம்பித்துவிட்டார்கள்.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12–வது...

**திரு. ஜி.கே. மணி:** நான் முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அதைப்போல என்றெல்லாம் கிடையாது.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, ஒரேயொரு கோரிக்கைதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மணிக்கு எப்போதும் முடிக்கிறதுதான் பிரச்சினை. மணி பேச்சை ஆரம்பிப்பாரே தவிர, முடிக்கத் தெரியாமல் திணறுவார். புதுசா சைக்கிள் விடக் கற்றுக்கொள்ளக்கூடியவன், ஏறுவதற்குத்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



தெரிந்துகொள்வான். இறங்குவதற்குத் தெரியாது. எங்கேயாவது மோதி, விழுந்துதான் கடைசியாக இறங்க வேண்டியதிருக்கும். மணி, பேச்சை இத்தோடு முடியுங்கள். ஒரு நாளாவது, "நான் பேச்சை இத்தோடு நிறைவு செய்கிறேன், பேரவைத் தலைவருக்கு நன்றி" என்று சொல்லி முடித்திருக்கிறீர்களா? இன்றைக்கு முடியுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருக்கு எப்போதும் flight மாதிரிதான். Take off easy. ஆனால், landing–தான் problem. அவருக்கும் landing–தான் problem.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2006–2007 ஆம் ஆண்டு இடைக்கால நிதிநிலை அறிக்கையிலே தேர்தலுக்காக மக்களைக் கவரக்கூடிய திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவை நிறைவேற்றப்படாத திட்டங்கள். இந்தத் திட்டங்களினால், மக்களுக்குப் பயனேதும் இல்லை என்ற கருத்தைச் சொல்லி, இந்த 12–வது சட்டப் பேரவையில் நிறைவாகப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், இந்த மன்றத்தில் பணியாற்றியிருக்கிற அத்தனை பேருக்கும் மீண்டும் நன்றி சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12–வது சட்டமன்றம் முடிவடைகின்ற சூழ்நிலையில், இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கை 2006–2007 இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. இந்த மாமன்றத்திற்கு ஸ்ரீபெரும்புதூர் தொகுதியின் சார்பாக மூன்றாவது முறையாக என்னைத் தேர்ந்தெடுத்திருக்கின்ற மக்களுக்கும், என்னை காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக நிறுத்திய அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், அவருக்குத் துணையாக இருந்த அருமைத் தலைவர்கள் அம்பிகா சோனி, மார்க்கரெட் ஆல்வா அவர்களுக்கும், குலாம் நபி ஆசாத் அவர்களுக்கும், மறைந்த மக்கள் தலைவர் திரு. மூப்பனார் அவர்களுக்கும், நான் இந்த 12–வது சட்டமன்றத்தின் உறுப்பினராவதற்குத் துணையாக நின்றவர்களுக்கும் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய கூட்டணியிலே (குறுக்கீடுகள்) பின்னால் சொல்வதற்குள் (குறுக்கீடுகள்) நீங்கள் அவசரப்பட்டீர்கள் என்றால் எப்படி...

பிற்பகல் 1–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதற்கு அவர்களைப் போய்ச் சிக்கலில் மாட்டிவிடுகின்றீர்கள் பாவம்.

**திருமதி டி. யசோதா:** சட்டமன்ற காங்கிரஸ் தலைவர், இச்சட்டமன்றப் பேரவையின் மாமன்ற உறுப்பினர்கள், முதல்வர், அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும் 12–வது சட்டமன்றம் முடிவடைகின்ற நேரத்தில், எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடந்த 4 ¾ ஆண்டுகளில் காரசாரமான விவாதங்கள், வெளிநடப்புகள், கவன ஈர்ப்புகள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள், இரங்கற் தீர்மானங்கள், அவசரச் சட்டங்கள் என வேகமாக நடத்தி முடித்திருக்கிறோம். இதை நினைக்கின்றபோது கவியரசருடைய பாடல் எனக்கு நினைவுக்கு வருகிறது. "பசுமை நிறைந்த நினைவுகளே, பாடித் திரிந்த பறவைகளே, பறந்து செல்கின்றோம்" என்கின்ற அந்த வரியின் அடிப்படையில் மீண்டும் எத்தனை பேர் திரும்பி வருவார்களோ, எத்தனை பேர் வரமுடியாத சூழ்நிலையில் இருப்பார்களோ, இருந்தாலும் உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் நான் இறுதியாக காங்கிரஸ் கட்சி சார்பில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பினை உருவாக்கித் தந்த எங்கள் சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் எஸ்.ஆர்.பி. அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நான் நிறைய இந்தக் கணக்குகளையெல்லாம் கோடிட்டுக் காட்ட விரும்பவில்லை. அதாவது, 2006–2007 இடைக்கால நிதிநிலை அறிக்கை, மொத்த வருவாய் கணக்கு 34,046.29 கோடி ரூபாய், செலவு 34,257 கோடி ரூபாய், பற்றாக்குறை 2,007.27 ரூபாய் இவ்வளவு கோடி ரூபாய், நீங்கள் காட்டியிருக்கின்ற கணக்குகளைப் பற்றி நான் பேசுவதற்கு முன்னதாக, நாட்டு நடப்புகளை உங்களுடைய கவனத்திற்கு நான் ஈர்க்க விரும்புகிறேன்.

சுனாமி வந்தது. புயல்–மழை விட்டுவிட்டு வந்தது. பன்னீர்தாஸ் கம்பெனி மாதிரி தவணை முறையில் வந்தது. பாதிப்பு அதிகம்தான். இல்லையென்று நான் குறிப்பிடவில்லை. ஆனால், நமக்கு ஏதோ ஓரளவிற்கு உதவி செய்த மத்திய அரசாங்கத்திற்கு ஒரு சிறிதுகூட, நன்றியினைக்கூட இந்த மாமன்றத்தின் வாயிலாகச் சொல்லவில்லையே என்கின்ற ஆதங்கம் எனக்கு இருக்கத்தான் செய்கிறது. (குறுக்கீடுகள்) உங்களுக்கு இருக்கின்ற எண்ணங்கள் எங்களுக்கில்லையென்று நீங்கள் சொல்ல முடியாது. நம்முடைய தேவை அதிகம்தான். அதை மறுப்பதற்கில்லை. நாம் கேட்டது அதிகம். கேட்டது நமக்குக் கிடைக்கவில்லையென்றாலும், கொடுத்ததற்கு நன்றி சொல்ல வேண்டுமா, வேண்டாமா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். (குறுக்கீடுகள்)



மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவதாக இருந்தால் ஸ்பீக்கரிடம் சொல்லிவிட்டு என்னிடம் பேசுங்கள். நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் ஒரு சுமூகமான உறவு இருந்தால்தான் நிச்சயமாக எதிர்காலத்திலே நல்ல பணிகளை தமிழகத்து மக்களுக்கு உங்களாலே பெற்றுக்கொடுக்க முடியும் என்கின்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலேதான் சொல்கிறேன். நான் ...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு concrete proposal, மழைக்காக 13,685 கோடி ரூபாய்க்கு ஒரு கருத்துரு அனுப்பினார்கள். அதேபோன்று சுனாமிக்கு கிட்டத்தட்ட 9 ஆயிரம் கோடி ரூபாய்க்கு அந்த proposal அனுப்பப்பட்டது. ஆனால், சுனாமிக்கு மத்திய அரசு கொடுத்தது 882 கோடி ரூபாய். மழைக்கு கொடுத்தது ஆயிரம் கோடி ரூபாய். இரண்டு நாள் மழைக்கு மகாராஷ்டிராவிற்கு ஆயிரம் கோடி ரூபாய், பாட்னா அதாவது, பீகாருக்கு மூவாயிரம் கோடி ரூபாய், இரண்டு மாதம் மழைக்கும் ஆயிரம் கோடி ரூபாய் என்றால், யானைப் பசிக்கு இது சோளப்பொரி. அதுமட்டுமல்ல, வெண்ணெய் ஒரு கண்ணிலே, சுண்ணாம்பு ஒரு கண்ணிலே என்றுதான் மத்திய அரசினுடைய செயல்பாடு இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் மாநிலத்தினுடைய வருவாய் என்று சொல்லும்போது, மத்திய அரசுக்கு நம்முடைய தமிழ்நாட்டிலிருந்து 50 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலே வரியாகச் செல்கின்றது. ஆனால், நாம் பிச்சையா கேட்கின்றோம்? நம்முடைய உரிமையைக் கேட்கின்றோம். இதைத்தான் இங்கே சொல்லியிருக்கின்றோம்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமிக்கு ஏதோ 800 கோடி ரூபாய்தான் கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். சுனாமியைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே மத்திய அரசாங்கம் இரண்டு கடிதங்களை மாநில அரசுக்கு எழுதியிருந்தது. அதன்படி சுனாமிக்காக, சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு, ராஜீவ்காந்தி தொகுப்பு நிதி என்கின்ற பெயரில் நிதி ஒதுக்கினார்கள். ஒதுக்கப்பட்ட நிதியினுடைய தொகை 2,347.19 கோடி ரூபாய். அதிலே Relief and Response என்பது 617.20 கோடி ரூபாய் முழுவதுமாக மத்திய சர்க்கார் ஒதுக்கி இங்கே வந்துவிட்டது.

*பிற்பகல் 1-10*

அதேபோல, குடி தண்ணீருக்காக 8.50 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், fishing harbour 9.94 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். உணவு 54 ஆயிரம் மெட்ரிக் டன் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. மீனவர்களுக்கு வழங்கப்படுகின்ற மானியம் என்கிற தலைப்பில் 441.08 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். அதிலே நீங்கள் கொடுத்த கடனுக்கு எவ்வளவு கடன் கொடுத்திருக்கிறோம், இவ்வளவு மானியம் வேண்டும் என்று மாநில சர்க்கார் கேட்கும்போதெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். இந்த 441.08 கோடி ரூபாயிலே 131.91 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் ஒதுக்கி அந்த நிதியும் வந்துவிட்டது. ஆகமொத்தம் நீங்கள் 820 கோடியாக இருந்தாலும் சரி, 830 கோடியாக இருந்தாலும் சரி, மத்திய சர்க்கார் உங்களுக்காக ஒதுக்கி இருக்கிற தொகையில் மீதி இருக்கிறதே தவிர வங்கிகளிலிருந்து கடனாகக் கொடுப்பதற்கு 566.47 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். அதேபோல, வீட்டு வசதிகளுக்காக 650 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் அதை முறையாக அதற்கு நீங்கள் எப்படி பட்டியலிட்டு மதிப்பீடுகள் தயாரித்து அங்கே கடனையும் வழங்கிவிட்டு அல்லது கடன் வழங்க ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்டால் நிச்சயமாக அந்தத் தொகையும் வந்து சேரும். அதேபோல, மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையில்,.. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, இல்லை, கேட்டதற்கு, திருப்பித் திருப்பி ஒரு தடவை அல்ல, பல தடவை ஆகிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் உதாரணத்தைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரே நிமிடத்தில் சொல்லி விடுகிறேன். இன்னும் ஒரே ஒரு நிமிடத்திலே சொல்லிவிடுகிறேன். அதேபோல . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இடையிலே ஒரு clarification கேட்டதற்கு, இவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ளக்கூடாது. சரி சொல்லிவிடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேசவில்லை, ஒரே நிமிடம், ஒரே நிமிடம்தாங்க. மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையில் எதையும் செய்யவில்லை, செய்யவில்லை என்று சொல்கிறார்களே, உலக



வங்கியிடமிருந்து 1,909.68 கோடியும், அதேபோல ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து 637.29 கோடி ரூபாயும் கிடைத்தது என்று சொன்னால், அதிலே 388.51 கோடி ரூபாய் மானியமாகவும், 248.78 கோடி ரூபாய் கடனாகவும் வழங்கப்பட்டு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் ... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, இல்லை. அதோடு முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, முடித்து விடுகிறேன், முடித்து விடுகிறேன், முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, யசோதாவிற்குப் பதிலாக நீங்களே பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அது தவிர, வேளாண்மை வளர்ச்சிக்கான சர்வதேச நிதியத்திலிருந்து ரூபாய் 131.40 கோடி வழங்கப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் தமிழக அரசின் முழுமையான பங்கேற்புடன் இந்த பன்னாட்டு நிதி உதவித் திட்டங்கள் மத்திய அரசு சம்பந்தப்பட்ட அமைப்புகளுடன் முறைப்படி பேச்சுவார்த்தை நடத்தி, வாங்கிக் கொடுத்திருக்கிறது. அதுமட்டுமல்ல,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, முடித்துவிடுங்கள். முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரே ஒரு நிமிடம், முடிந்தது. பணம் வருகிறது, எப்படி வருகிறது என்று சொன்னால் மத்திய அரசாங்கத்தின் மூலமாக உலக வங்கியிடமிருந்து பணம் வருகிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. எஸ்.ஆர்.பி., யசோதாவை கொஞ்சம் பேச விடுங்கள். அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** முடிந்தது. அதாவது Controller of Aid Accounts & Audit and the Department of Expenditure மூலமாகத்தான் மாநில சர்க்காருக்கு அவர்களிடத்திலேயிருந்து நிதி வரும். அந்த வகையில், இதுவரை பெற்றுக்கொண்ட நிதி 207.50 கோடி ரூபாய் எனவும்..(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அதையெல்லாம் விளக்கமாக அவர்களிடம் கொடுங்கள், அவர்கள் சொல்லி முடிக்கட்டும்.

[2006 ஜனவரி 24

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** 207.50 கோடி ரூபாய் இதுவரை பெறப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் மூலமாகத்தான் மாநில சர்க்காருக்கு அந்தத் தொகை வந்திருக்கிறது.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, C.R.F. என்பதற்கும், N.C.C.F. என்பதற்கும் உள்ள மாறுபாட்டை நான் மாண்புமிகு யசோதா அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். சாதாரண அளவில் ஏற்படுகின்ற இயற்கைச் சீற்றத்திற்கு மாநில அரசு 25 சதவிகிதம், மைய அரசு 75 சதவிகிதம் என்ற ஒதுக்கீட்டின் அடிப்படையில் 2005–2006 ஆம் ஆண்டுக்கு 156.81 கோடி ரூபாய் மைய அரசும், மாநில அரசின் சார்பிலே 52.27 கோடி ரூபாயும் தரப்பட்டது. ஆனால், சுனாமியைப் பொறுத்தவரைக்கும் மற்றும் அளவுகடந்த வெள்ளத்தைப் பொறுத்தவரைக்கும் அது சாதாரண அளவிலே ஏற்படும் சீற்றங்களாகக் கருதக்கூடாது. அசாதாரண அளவில் பெருமளவில் சேதங்களை ஏற்படுத்தக்கூடிய பேரழிவுக்குத்தான் தேசிய இயற்கைச் சீற்றம் குறித்த எதிர்பாராத செலவு நிதி National Calamity Contingency Fund ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒரு இயற்கைப் பேரழிவின் பெரும் சேத அளவைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு அப்பேரழிவை தேசியப் பேரழிவாக அறிவிக்க வேண்டும். அதற்குரிய நிவாரண நடவடிக்கைகள் அனைத்திற்கும் மாநில அரசு அனைத்து உதவியும் பெறவேண்டும். மைய அரசும் முழுமையாக அதைத் தரவேண்டும். இதுதான் மைய அரசு கடைப்பிடிக்க வேண்டிய N.C.C.F. என்ற அந்த தேசிய இயற்கைச் சீற்றங்கள் குறித்த எதிர்பாராச் செலவு நிதி குறித்த வரன்முறையாகும். இந்த அடிப்படையில் நாம் 13,685 கோடி ரூபாய் இந்த அசாதாரண செலவிற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மைய அரசைக் கேட்ட நேரத்தில் அவர்கள் கொடுத்திருப்பது வெறுமனே ஆயிரம் கோடி ரூபாய்தான். (குறுக்கீடு) அல்ல, அல்ல. அதிலே மைய அரசு அனுமதித்த தொகை என்று மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கூறினார். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இதுகுறித்து ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அனுமதிக்கப்பட்ட தொகை என்றால் என்ன, வழங்கப்பட்ட தொகை என்றால் என்ன என்ற மாறுபாட்டைச் சுட்டிக்காட்டினார்கள். எந்தத் தேதியில், எந்த வங்கியில், எங்கே, எப்படி இந்தப் பணம் அனுப்பப்பட்டது என்பதெல்லாம் கேட்கப்பட்டன. எனவே, தொகை வழங்கப்பட்டதா, அதற்கான ஆதாரத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டபோது, மைய நிதி அமைச்சர் அவர்கள் வழங்கப்பட்டதாகச் சொல்லவில்லை, எங்களுக்கு இன்னும் அதுகுறித்த விவரங்கள் வரவில்லை என்று



2006 ஜனவரி 24] [திரு. சி. பொன்னையன்]

சொல்லி மழுப்பிவிட்டார். நிவாரணம் மற்றும் ஆதாரம் என்ற தொகுப்பின் அடிப்படையில் மைய அரசு அனுமதித்த தொகை 617.20 கோடி ரூபாய். ஆகவே, வழங்கப்பட்ட தொகை, இந்த 617.20 கோடி ரூபாயை அவர்கள் வழங்கிவிட்டார்கள். அதுபோல விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்திலே ரூ. 8.50 கோடி அனுமதித்தார்கள், அதையும் வழங்கிவிட்டார்கள். பொன்விழா கிராம வேலைவாய்ப்புத் திட்டத்திலே 54 கோடி ரூபாயை அவர்கள் அனுமதித்தார்கள், 43.97 கோடி ரூபாய் தந்துவிட்டார்கள். அரிசி, 54,000 மெட்ரிக் டன் அரிசி அனுமதிக்கப்பட்டது, 43,968 மெட்ரிக் டன் அரிசிதான் தந்திருக்கிறார்கள். வங்கி மூலம் கடன் என்று அவர்கள் அறிவித்ததோ 566.47 கோடி ரூபாய் மீனவர்களுக்காக. ஆனால் சல்லிக் காசுகூட அவர்கள் தரவில்லை. வீட்டு வசதிக்காக 650 கோடி ரூபாய் அவர்கள் அறிவித்தார்கள், சல்லிக் காசுகூட தரவில்லை. ஒட்டுமொத்தமாக மைய அரசு அறிவித்தது, மைய நிதி அமைச்சர் அறிவித்தது, 2,347.19 கோடி ரூபாய். ஆனால், இதுகாறும் மாநில அரசுக்கு அவர்கள் வழங்கிய தொகை ரூ. 811.52 கோடி மட்டுமே. இதுதான் உண்மை. (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா. (குறுக்கீடு) பிரச்சினையை இத்தோடு முடியுங்கள். யசோதா, அடுத்த பிரச்சினைக்குப் போங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள், (குறுக்கீடு) நீங்கள் சொன்னதற்கு நிதி அமைச்சர் அவர்கள் உரிய பதிலைச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) யசோதா, பேசுங்கள். (குறுக்கீடு) அவர்களுடைய நேரம் முடிந்து போய்விடும். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய பேரிடர் நிதியிலிருந்துதான்—அந்த மீனவர்களுக்கான மானியம் 131.91 கோடி ரூபாய் தேசிய பேரிடர் நிதியிலிருந்தும், அதேபோல, fishing harbour–க்காக வழங்கப்பட்டதும் தேசிய பேரிடர் நிதியிலிருந்தும், relief and response–617 கோடி ரூபாய் என்பதும் இந்தத் தேசிய பேரிடர் நிதியிலிருந்துதான்— வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2006 ஜனவரி 24

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அப்படித்தான் கொடுக்கப்பட்டது, வெறுமனே 811 கோடி ரூபாய்தான். கேட்டதோ 13,685 கோடி ரூபாய். யானைப் பசிக்கு சோளப் பொரி போல் தந்துவிட்டு, தந்துவிட்டோம், தந்துவிட்டோம் என்று கூறுவது மாநில மக்களை ஏமாற்றுவதாகும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, யசோதா பேசி முடிக்கட்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** ஒரேயொரு பாயின்ட்தான். (குறுக்கீடு) ஒரேயொரு பாயின்ட்தான்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன செலவு...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்ட அமைச்சர் பதில் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன செலவு என்று கேட்கிறார், 8 ஆம் பக்கத்திலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அம்மா கேட்ட கேள்விக்கு இதுவரையிலும், மத்திய அமைச்சகத்திலிருந்தோ, நிதி அமைச்சரோ ஏதாவது வாய் திறந்திருக்கின்றார்களா? ஒரே கேள்வி கேட்டார்கள், பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து மீனவர் நல்வாழ்வுக்காக 2,218 கோடி ரூபாய் மாநில அரசு கடனாகப் பெற்றது. மாநில அரசு கடனாகப் பெற்றது என்றால், மாநில அரசு செலுத்த வேண்டும். அது, மாநிலத்திற்கு ஒரு சுமை. எனவே, இப்படிப்பட்ட நிலையில் மத்திய அரசாங்கம் அதை ஏற்கத் தயாரா என்று கேட்டபோது, இன்னும் வாய் திறக்கவில்லை மத்திய அரசு, உங்களுடைய மத்திய நிதி அமைச்சர், நீங்களும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, The external assistance packages were negotiated by the Government of India with the full participation of the Government of Tamil Nadu. மாநில அரசினுடைய அதிகார...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள், நீண்ட விவாதத்திற்குள்ளே போக வேண்டாம். (குறுக்கீடு) திருமதி யசோதாவை அடுத்த பிரச்சினை குறித்து பேசச் சொல்லுங்கள்.



2006 ஜனவரி 24]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** கேட்ட கேள்விக்குத்தானே பதில் சொல்கிறேன். முழுமையாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் இல்லை. 1–30 மணியோடு முடிந்துவிடும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார்தான் அதற்கு பொறுப்பே தவிர, மத்திய சர்க்கார் மூலமாகத்தான் அந்த நிதியும் வருகிறது, அந்தக் கடனும் வருகிறது, அந்த உதவியும் வருகிறது. (குறுக்கீடுகள்) எனவே, நீங்கள் செலுத்த முடியாது என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** உங்களால் செலுத்த முடியாதா? (குறுக்கீடு) உங்களால் செலுத்த முடியாதா அந்தப் பணத்தை ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி, யசோதா, பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நீங்கள் வரி வசூலிக்கவில்லையா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** ஏன் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளக் கூடாது?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நீங்கள் வரி போடவில்லையா ? வருமானமே வரவில்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பட்ஜெட் போடுகிறீர்களே, எதற்காகப் போடுகிறீர்கள், பட்ஜெட் எதற்காகப் போடுகிறீர்கள்? பூராவும் மத்திய சர்க்கார் என்றால், இங்கே ஒரு சர்க்காரே வேண்டாமே? பூராவும் மத்திய சர்க்கார் என்றால்...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** வருடத்திற்கு 50,000 கோடி ரூபாய் கொடுக்கிறோம், மத்திய அரசாங்கத்திற்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) சட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *பிச்சையா கேட்கிறோம், பிச்சையா கேட்கிறோம். (குறுக்கீடு) மாற்றாந்தாய் மனப்பான்மை எதற்கு? 2,218 கோடி ரூபாயை ஏற்றுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மத்திய சர்க்கார்தான் முழுவதும் செய்ய வேண்டுமென்று சொன்னால், இங்கு ஒரு மாநில சர்க்காரே தேவையில்லை. அதேபோல, ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா. (குறுக்கீடு) திருமதி யசோதா. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** வேண்டாம், நீங்கள் கேட்கின்ற கேள்விக்கு பதில்... (குறுக்கீடு) மாநில சர்க்கார்தான்...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள் தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) எஸ்.ஆர்.பி. அவர்கள் உட்காருங்கள். திருமதி யசோதா பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50,000 கோடி ரூபாய் மத்திய அரசாங்கத்திற்கு வரி வருவாயாகச் செல்கிறது. எங்களுடைய உரிமையை நாங்கள் கேட்கிறோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) சட்ட அமைச்சர், உட்காருங்கள்.

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். மாநில அரசுக்கு வருவாய் வருகின்றபோது இதுபோன்ற பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டுமென்று சொல்கிறார். அதற்காகத்தான் மைய அரசு உருவாக்கி இருக்கிற அமைப்பு- C.R.F. - Calamity Relief Fund-ஐப் பொறுத்தவரைக்கும் மாநில அரசினுடைய பொறுப்பு. ஆனால் National*



Calamity Contingency Fund-ஐப் பொறுத்தவரைக்கும், It is the mandatory duty on the part of Government of India to take care of the problems and plights of the State Governments like Tsunami and the flood relief என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நம்முடைய மாநில சர்க்காரும் ஒரு பேரிடர் நிவாரண நிதி வைத்திருக்கிறது. National Calamity Contingency Fund-லே இருந்துதான் இந்த நிதியை எல்லாம் ஒதுக்கினார்கள் என்பதை நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினை இத்தோடு முடிகிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீப காலத்தில் ஏற்பட்டுவிட்ட அபரிமிதமான வெள்ளத்தினால் பாதிப்படைந்த பொதுமக்களுக்கும், வீடுகளை இழந்தவர்களுக்கும் நிவாரணத் தொகுப்பு உதவிகளாக மத்திய அரசினுடைய நிதியைக்கூட எதிர்பார்க்காமல், மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு பல்வேறு வகையான நிவாரணப் பணிகளை முடுக்கி விட்டதோடு, நிவாரணங்களையும் வழங்கினார்கள். ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசிலிருந்து 811 கோடி ரூபாய்தான் வந்திருக்கின்றது என்ற விவரங்களையும், எந்தெந்த வகைக்கு வந்துள்ளது என்பதனையும் விரிவாகச் சொன்னார்கள். ஆனால் இரண்டு மாத காலமாக விவசாயி தன் கையில் இருந்த விதை, பணம், உரங்களை எல்லாம் நிலத்தில் போட்டுவிட்டு, மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகி, விவசாயமும் பாதிக்கப்பட்டு இதுவரை எந்த நிவாரணமும் கிடைக்காத ஒரு சூழ்நிலை இருந்தது. தேசிய இயற்கைப் பேரிடர் நிதியினுடைய வரையறைகளின்படி ஏக்கருக்கு 1,000 ரூபாய்தான் என்று விதி இருக்கின்றது. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு ஏழை விவசாயிகளுக்கு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அதை மூன்று மடங்காக

உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்து மூன்று தினங்கள் ஆகிவிட்டன. இன்னும் மத்திய அரசு மௌனமாக இருக்கின்றது. இன்று, இங்கு விவாதத்தில் ஈடுபட்டிருக்கின்ற காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள், மத்திய அரசிடம் வலியுறுத்தி மாண்புமிகு அம்மா அவர்கள் கேட்ட, ஏக்கருக்கு 8 ஆயிரம் ரூபாய் என்ற நிவாரணத்தைப் பெற்றுத் தருவார்களா என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் கொடுத்திருக்கின்ற உதவிகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா, அடுத்த பிரச்சினைக்குப் போங்கள். தொகுதி சம்பந்தமாக கோரிக்கை ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி என்று சொன்னவுடனே இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் சலசலப்பு ஏற்பட்டு என் நேரத்தை, 20 நிமிடத்தை எடுத்துக் கொண்டுவிட்டார்கள். மூன்று நிமிடம்கூட நான் பேசவில்லை. இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையிலே நிறைய வேலைகளுக்குப் பணம் ஒதுக்கியிருக்கின்றோம். அதிலே முதலிலே என் தொகுதியைப் பற்றி பேசிவிடுகிறேன். ஏனென்றால், கடைசியிலே நேரம் இல்லை என்று சொல்லிவிட்டீர்கள் என்றால் என்ன செய்வது? ஆகவே, இறுதிக் கட்டமாகப் பேசிக் கொண்டிருக்கின்ற நிலையில், தொகுதி மக்களுடைய பிரச்சினைகளைப் பேசவேண்டும்.

குன்றத்தூர் 18 ஆயிரம் பேர் இருக்கக்கூடிய ஒரு பேரூராட்சி. அதைச் சுற்றியிருக்கின்ற கிராமங்களைச் சேர்த்தால் 30 ஆயிரம் பேர் இருக்கக்கூடிய பகுதி. அதிலே ஒரு மருத்துவமனை, பிரசவ மருத்துவமனை இருந்தது. இப்போது மூன்று வருட காலமாக அதை மூடிவிட்டார்கள். நான் முன்னாலேகூட இதை சட்டமன்றத்திலே பேசினேன். அப்போது, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் நீங்கள் என்ன பேசினீர்கள் என்றே புரியவில்லை என்று சொன்னார் வெளியிலே. நான் இங்கே பேசியது அவர்களுக்குப் புரியவில்லையோ, என்னமோ, வெறும் சத்தமாக இருந்ததினாலே. நிறைய கூச்சலினாலே நாம் என்ன சொல்ல வருகிறோமோ அதைச் சொல்ல முடியாமல்,



அது உரியவர்களுக்கும் தெரியாமல் போகிற சூழ்நிலை ஏற்படுகிறது. அப்போது துரைமுருகன் கூடச் சொன்னார். என்னம்மா, அந்தப் பிரசவ மருத்துவனையைத் திறக்கணுமா திறந்துவிட்டார்கள் போ என்று சொன்னார். அவர் இந்தப் பக்கமிருந்து அதைச் சொன்னார். ஆனால், இன்னும் திறக்கவில்லை. ஒரே ஒரு நர்ஸ்தான் இருக்கிறார். நிறையபேர், பிரசவம் பார்க்க வருகிறவர்கள் தாம்பரம் போகிறார்கள், இல்லையென்றால் சென்னைக்குப் போகிறார்கள். அந்த மருத்துவமனையைத் .திறக்க வேண்டுமென்று நான் கிட்டத்தட்ட மூன்றாண்டு காலமாக இந்த மாமன்றத்திலே கேட்டுக்கொண்டு வருகின்றேன். இதுவரையிலும் அது திறக்கப்படவில்லை. முன்னாலே திரு. செம்மலை அவர்கள் இருந்தார்கள். இப்போது இவர் வந்திருக்கிறார். அந்த மருத்துவமனை, பிரசவ மருத்துவமனை–பெண்களுக்காக எவ்வளவோ உதவிகளை நீங்கள் செய்திருக்கிறீர்கள். ஆனால் அந்த மருத்துவமனை–இன்னும் திறக்கப்படவில்லை. அது உடனடியாகத் திறக்கப்பட வேண்டும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–25*

படப்பையிலே இரண்டு கவுன்சிலர்கள் இருக்கக்கூடிய ஓர் ஊர். கிட்டத்தட்ட அதிலும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இருக்கின்றார்கள். சுற்றியிருக்கின்ற கிராமங்களைச் சேர்த்தால் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் போய் வரக்கூடிய பகுதி அது. அந்தப் பகுதியிலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று கடந்த 4¾ ஆண்டுகளாகக் கேட்டு வருகின்றேன். இதுவரைக்கும் என்னுடைய தொகுதி மக்களுக்கு அது கிடைக்கவில்லை என்பதை வேதனையோடு நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதேபோல, ஸ்ரீபெரும்புதூர் தொகுதியிலே நான் வந்ததிலிருந்து சொன்ன பிரச்சினை. நான் பேசியதையே திருப்பித் திருப்பிப் பேசுவதாக நீங்கள் நினைக்கக் கூடாது. இங்கே வீரபாண்டியார் பேசும்போது சொன்னார், 'நான் என் தொகுதியில் எல்லாவற்றையும் செய்துவிட்டேன். என் மக்கள் ரொம்ப மனநிறைவாக இருக்கின்றார்கள், நானும் நிறைவாக இருக்கின்றேன்.' என்று சொன்னார். அந்த வார்த்தையை நானும் சொல்லவேண்டுமென்று ஆசையாக இருக்கிறது, ஆனால் என்னால் சொல்ல முடியவில்லை. அதேபோல இங்கேயிருக்கின்ற பெண் சட்டமன்ற உறுப்பினர்களை ரூமுக்கு வரும்போது கேட்பேன். 'என்னம்மா, எப்படி இருக்கிறது உன் தொகுதி' என்று கேட்பேன். 'எனக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை அக்கா, எல்லா வேலையையும்

முடித்துவிட்டேன்' என்று சொல்வார்கள். நம்முடைய பேரணாம்பட்டு எம்.எல்.ஏ.கூட சொன்னார். 'நான் ஒரு அணைக்கட்டுகூட கட்டிவிட்டேன் அக்கா' என்று சொன்னார். ஆனால் என்னால் அப்படி ஒன்றும் சொல்ல முடியவில்லை. நான் ஒரு நீதிமன்றம் கேட்கின்றேன். Taluk Headquarters–ஸ்ரீபெரும்புதூர். அந்த ஸ்ரீபெரும்புதூருக்கு ஒரு நீதிமன்றம் கேட்கின்றேன். அவர் எல்லாவற்றையும் பரிசீலிக்கிறேன், பரிசீலிக்கிறேன், பரிசீலிக்கிறேன், என்று சொல்கிறாரே தவிர 4¾ வருடமாக பரிசீலித்து அதற்கு ஒரு முடிவும் வரவில்லை.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இந்த மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கோரிக்கையை வைத்துள்ளார்கள். அதனால் அப்போது அரசின் சார்பிலே கருத்து கேட்டபோது, அப்போது Registrar...

**திருமதி டி. யசோதா:** ஒரே ஒரு திருத்தம். தி.மு.க. ஆட்சிக் காலத்திலே நான் எம்.எல்.ஏ.வாக இல்லை Sir. 1980–லே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலே எம்.எல்.ஏ.வாக இருந்தேன். (குறுக்கீடு) 1984–லே எம்.ஜி.ஆர் காலத்திலே எம்.எல்.ஏ.–ஆக இருந்தேன். இப்போது அம்மா முதல்வராக இருக்கும்போது எம்.எல்.ஏ.வாக இருக்கிறேன். தி.மு.க. ஆட்சிக் காலத்திலே நான் எம்.எல்.ஏ.வாக இல்லை.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** 1999 ஆம் வருடம் அரசின் சார்பிலே கருத்து கேட்டபோது, Registrar, Government–க்கு எழுதுகிறார். '...with reference to the Government's Letters cited, I am to state that the High Court, after careful consideration has resolved that the constitution of a Sub–Court at Sriperumpudur for the exclusive trial of L.O.P. cases is not feasible...' சொன்னது யார்? உயர் நீதிமன்றம். இருந்தாலும், நீங்கள் 1999–ல் சொன்னதை நிராகரித்ததை, நீங்கள் வந்து சட்டமன்றத்தில் 16–3–2005 அன்று இந்தக் கோரிக்கையை வைக்கிறீர்கள். கோரிக்கையை வைத்தவுடனே, பரிசீலனை செய்கிறோம் என்று சொன்னதன் அடிப்படையில், 24–6–2005 அன்று சட்டமன்றப் பேரவையின் உறுதிமொழியாக அது கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் உயர் நீதிமன்றத்தின் பதிவாளரிடமிருந்து அறிக்கை 29–9–2005 அன்று கோரப்பட்டது. 21–10–2005, 25–10–2005 மற்றும் 19–11–2005–தேதிகளில் நினைவூட்டுகள் அனுப்பப்பட்டுள்ளன. இன்னும் உயர் நீதிமன்றத்திடமிருந்து பதில் வரவில்லை. ஒரு கோர்ட் அமைக்க வேண்டுமென்றால் அரசே தன்னிச்சையாக முடிவு செய்ய முடியாது. உயர் நீதிமன்றத்தினுடைய கருத்தைப் பெற்றுதான் முடிவு செய்ய முடியும். எனவே உயர் நீதிமன்றம் அந்த இடத்திலே கோர்ட்



அமைப்பதற்கு சாத்தியக்கூறு இருக்கின்ற ஒரு சூழ்நிலையில் நிச்சயமாக அனுப்புமானால், அதை நிச்சயமாக அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** Sir, ஓர் உறுப்பினர் பேசுகிறபோது, ஒரு கருத்தை அல்லது குறையைச் சொல்வார்கள். அமைச்சர்கள் அதை குறித்து வைத்துக்கொண்டு, பிறகு பதில் சொல்வார்கள். அப்பொழுதேகூட சொல்லலாம் தெரிந்திருந்தால். ஆனால், யசோதா அவர்கள் பேசியதற்கு, file ஆதாரமாக, correct-ஆக நின்று, இப்பொழுது பேசுவார் என்று தெரிந்து, எப்படி file–லோடு உட்கார்ந்துகொண்டிருக்கிறீர்கள். setup–ஆ? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் அம்மா அவர்களுடைய அமைச்சர்களிடம் உள்ள சிறப்பு. அதாவது ஒரு பாட்டுகூட வரும், "வருமுன் காப்பவன்தான் அறிவாளி, வந்தபின் தவிப்பவன் ஏமாளி". (சிரிப்பு)

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நான் பலமுறை இதைச் சொல்லியிருக்கின்றேன். நேற்று அவரிடம் பேசும்போதும் சொன்னேன். அவர் என்ன சொன்னார் என்றால், வழக்குகள் அதிகம் இல்லை உங்கள் தொகுதியில், அதனால் வரவில்லை என்று சொன்னார். நான் சொன்னேன், 3 பிரிவுகளாகப் பிரித்துவிடுகிறீர்கள். குன்றத்தூர் பகுதியைக் கொண்டு வந்து நீங்கள் திருவள்ளூர் மாவட்டத்துக்கு அனுப்புகிறீர்கள். ஸ்ரீபெரும்புதூரில் இருக்கிறவர்களை பூந்தமல்லிக்கு அனுப்புகிறீர்கள். சுங்குவார்சத்திரம் பகுதியில் இருக்கிறவர்களை காஞ்சிபுரம் கோர்ட்டுக்கு அனுப்புகிறீர்கள். இப்படி ஒரு தொகுதியை 3 ஆக divide செய்து, வழக்குகளை divide செய்து கொடுப்பதால்தான் அங்கு நீதிமன்றம் வரவில்லையே தவிர அங்கு வழக்குகள் எக்கச்சக்கமாக இருக்கின்றன. போலீஸ் ஸ்டேஷனில் வழக்குகள் நிறைந்திருக்கின்றன. அங்கு வழக்குகள் வந்துகொண்டேதான் இருக்கின்றன என்று சொன்னேன். அப்படியென்றால் நான் பார்க்கிறேன் என்று சொன்னார். அதற்காகத்தான் அந்த details எடுத்துக்கொண்டு வந்திருப்பாரே தவிர, இந்த setup, getup எல்லாம் என்னிடம் பலிக்காது. அதேபோல என்னுடைய குன்றத்தூர் தொகுதியிலே நிறைய மக்கள் தொகை. கிட்டத்தட்ட ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டு இருக்கக்கூடிய பகுதியிலே ... (மணியடிக்கப்பெற்றது)

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் முன்னனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திருமதி டி. யசோதா:** தீயணைப்பு. தீ விபத்து ஏற்பட்டால் உடனடியாக தீயை அணைப்பதற்கு அந்தத் தீயணைப்பு வண்டியைக் கொண்டுவர முடியவில்லை. ஏனென்றால் பூந்தமல்லிக்குப் போக வேண்டும், பூந்தமல்லியைத் தாண்டி திருவள்ளூருக்குப் போக வேண்டும், திருவள்ளூரிலே இல்லையென்றால் மெட்ராசுக்குப் போக வேண்டும் என்கிறார்கள். அந்த மாதிரி தீ விபத்து என்னுடைய தொகுதியிலே கொளப்பாக்கம் என்கிற ஓர் ஊர் பற்றிக்கொண்டு எரியும்போது நான் அங்கே இருக்கிறேன். நான் எத்தனையோ தடவை போன் பண்ணி S.P.-க்கு D.S.P.-க்கு எல்லாம் பண்ணி, அந்த வண்டி வருவதற்குள்ளே நாங்களே பாதி அணைக்க வேண்டிய சூழ்நிலை வந்துவிட்டது. அதனாலே குன்றத்தூரிலே ஒரு தீயணைப்பு நிலையம் உருவாக்கித் தர வேண்டும் என்று உங்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே வழுதலம்பேடு என்கிற ஓர் ஊர். அந்த ஊரிலே நான்கு வருடங்களுக்கு முன்னாலே ஒரு பாலத்தைக் கட்டுவதற்கு டெண்டர் விட்டு வேலை நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் இன்னும் முடியவில்லை நான்கு வருடங்களாக. இப்போது பெய்த மழையிலேகூட அந்த வழுதலம்பேடு பாலத்திலேயிருந்து கடக்க முடியாமல் தண்ணீரிலே சிக்கிக்கொண்டு ஐந்து பேர் செத்துப் போய்விட்டார்கள். அதனாலே அதை உடனடியாகக் கட்டி முடிப்பதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஊரிலே சாலைகள் சரியாக இல்லை என்பதற்காக பொதுமக்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். நான் அப்போது அமைச்சரைப் பார்த்தேன். உண்ணாவிரதம் இருக்கிறார்கள், நீங்கள் எங்கள் ரோடுகளை எல்லாம் உடனடியாக சரிப்படுத்த வேண்டும் என்று சொன்னேன். சகோதரி வளர்மதிக்குக்கூடத் தெரியும். ஏனென்றால் அடிக்கடி முருகன் கோயிலுக்கு எங்கள் தொகுதிக்கு வருவார். அந்த நேரத்திலே ரோடு சரியில்லை, அவர்களே eye witness மாதிரி. ரோடு சரியில்லை. இப்போது அதனாலே என்னுடைய பகுதியிலே வெள்ளத்திலே இன்னும் பாதிப்பு அதிகமாகப் போய்விட்டது. செம்பரம்பாக்கம் ஏரியை ஒட்டியிருக்கிறது குன்றத்தூர் யூனியன். ஆகவே எங்கள் தொகுதிக்கு வெள்ளம் இயற்கையாக வந்தது இல்லை. செம்பரம்பாக்கம் ஏரியைத் திறந்துவிட்டதனாலேதான்



என்னுடைய தொகுதிக்கு மிகப் பெரிய ஆபத்து ஏற்பட்டது. எங்களுடைய local மந்திரி சோமசுந்தரம் அவர்களுக்குக்கூடத் தெரியும். அதனாலே ஏரியைத் திறந்துவிட்டதனாலே ஏற்பட்ட பாதிப்புகளுக்கு சாலைகளை நிச்சயமாக நாம் போட வேண்டும். திறந்துவிடவில்லை என்றால் அதிகமான பாதிப்பு ஏற்பட்டிருக்கும். இருந்தாலும் பாதிப்புகள். அதனாலே சாலைகள் ஸ்ரீபெரும்புதூர்-போரூர், குமணன்சாவடி-பல்லாவரம், குன்றத்தூர்-திருமுடிவாக்கம், மாங்காடு-பட்டு, குன்றத்தூர்-சோமங்கலம், முடிச்சூர்-அமரம்பேடு, முடிச்சூர்-ஸ்ரீபெரும்புதூர் இந்தப் பகுதிகளிலே எல்லாம் சாலைகளிலே போகவே முடியவில்லை. அதனாலே . . .

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் ஏற்பட்ட அதிகமான வெள்ளப் பெருக்கினால் சாலைகள் மிகவும் பழுதாகக்கூடிய இக்கட்டான ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. மாண்புமிகு இதய தெய்வம் இன்றைக்கு தமிழகத்தில் நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற தமிழகத்தின் முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற 22 மாவட்டங்களில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் இருக்கின்ற சாலைகளை உடனடியாக சீர் செய்வதற்கு, செப்பனிடுவதற்கு 400 கோடி ரூபாயை அனுமதித்து உடனடியாக பணிகள் மேற்கொள்ளப்படும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஒப்பந்தங்கள் கோரப்பட்டிருக்கின்றன. கூடியவிரைவில் தேர்தலுக்கு முன்பாகவே உங்களுடைய ஆசைகள் நிறைவேறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திருமதி டி. யசோதா:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இந்த செம்பரம்பாக்கம் ஏரியைத் திறந்துவிட்டதனாலே தண்ணீர் ஊருக்குள்ளே போகிறது. அதற்கு என்ன காரணம் என்றால், P.W.D. கால்வாய்கள் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன, ஏரிகள் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன, குளம் குட்டைகள் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆக்கிரமித்த இடங்களிலே கட்டடம் கட்டுகிறார்கள். கட்டடம் கட்டும்போது V.A.O.-க்கோ R.I.-க்கோ தாசில்தாருக்கோ தெரியாமல் இருப்பதற்கு நியாயம் இல்லை. பெரிய பெரிய கட்டடங்களைக் கட்டி அந்தத் தண்ணீர் போவதற்கு வழியில்லாமல் தடுத்ததனால்தான் இன்றைக்கு பல இடங்களிலே மிகப் பெரிய வெள்ளச் சேதாரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே கட்டடம் கட்டும்போதே நம்முடைய அதிகாரிகள் தடுத்திருப்பார்களேயானால், நீதிமன்றத்திற்குப் போய் நீதிமன்றம் அதையெல்லாம் இடிக்க வேண்டும்,

[திருமதி டி. யசோதா] [2006 ஜனவரி 24

தரைமட்டம் ஆக்க வேண்டும் என்று சொல்கிற உத்தரவு வரும்வரைக்கும் நாம் காத்திருக்க வேண்டியதில்லையே. அதனாலே நம்முடைய நிர்வாகத்திலே எங்கேயோ தவறுகள் நடக்கிறதை நாம் மிகக் கூர்மையாகக் கவனித்து, இதுபோன்ற ஆக்கிரமிப்புகளை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல ஸ்ரீபெரும்புதூரிலே நிறைய தொழிற்சாலைகள் வருகின்றன. அப்பகுதி மக்கள் பயன்பெறுவது ரொம்பக் குறைச்சல். சிப்காட்டுடன் ஒப்பந்தம் பண்ணிக்கொள்கிறார்கள். என்ன ஒப்பந்தம் பண்ணுகிறார்கள்? லோக்கலிலே இருப்பவர்களுக்கு 10 per cent பேருக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று தொழிற்சாலையை நடத்துகிறவர்களோ, சிப்காட்டோ ஒப்பந்தம் பண்ணிக்கொள்கிறது. 10% பேருக்கு லோக்கலிலே வேலை கொடுக்க வேண்டும் என்று. ஆனால் இதுவரைக்கும் நீங்கள் கணக்கெடுத்துப் பாருங்கள், ஸ்ரீபெரும்புதூர் தொகுதியிலே வந்திருக்கிற அத்தனை தொழிற்சாலைகளிலேயும் 10 per cent வீதம் அவர்கள் வேலை கொடுத்திருந்தால் இன்றைக்கு என் தொகுதி மக்களில் பாதிப் பேருக்கு வேலை கிடைத்திருக்கும். இளைஞர்களுக்கு வேலை இல்லை என்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்காது. அதனாலே தயவுசெய்து இதையும் நீங்கள் சரிபார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர். (குறுக்கீடு) தொழில் துறை அமைச்சர்.

பிற்பகல் 1-35

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூரில் வருகின்ற தொழிற்சாலைகள் அந்த சிப்காட்டோடு 10 சதவிகிதம் வேலைக்குப் பணியமர்த்த வேண்டும் என்று கோரிக்கை அவர்கள் வைத்திருந்தால், அது உண்மையாக இருந்தால் கண்டிப்பாக அந்த 10 சதவிகிதம் நிச்சயமாக அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உண்மையைத்தான் சொல்கிறேன். உண்மையாக இருந்தால் என்றால் எப்படி? நான் உண்மையைத்தான் சொல்கிறேன். வருபவர்களை எல்லாம் contract basis-லேதான் வேலைக்கு வைத்துக்கொள்கிறார்கள். அந்த contract basis-ல் வேலை



2006 ஜனவரி 24] [திருமதி டி. யசோதா]

கொடுக்கிறவன் என்ன பண்ணுகிறான் என்றால், 3 ஆயிரம் ரூபாய் சம்பளம் என்றால் ஒரு கமிஷனை அவன் எடுத்துக் கொண்டு விட்டு மிச்சத்தைத்தான் அங்கே கொடுக்கிறான். அதுபோன்ற contract வேலைதான் அங்கே இருக்கிறதே தவிர நிரந்தரப் பணியாளர்களாக அந்தத் தொகுதியிலே இருக்கிறவர்களை அவர்கள் வைத்துக்கொள்வதில்லை.

அதேபோல, தாம்பரத்திலிருந்து 400 அடி ரோடு- மன்னிக்கவும் 100 அடி சாலை ஒன்று வருகிறது. அந்த 100 அடி சாலையைப் போடும்போது bridge ஒன்று வருகிறது என்னுடைய தொகுதி வழியாக. அந்த bridge-ற்குக் கீழேதான் அந்த P.W.D. சேனல் போகிறது. 400 அடி P.W.D. channel போகிறது. supply channel போகிறது. அதை complete-ஆக முடித்துவிட்டார்கள். ஒரு அடியிலே இப்போது அந்த supply channel இருந்தால் செம்பரம்பாக்கத்திலேயிருந்து 10 ஆயிரம் கன அடி தண்ணீரை நீங்கள் திறந்துவிட்டீர்களென்றால் அது ஒரு அடிக்குள்ளே எப்படி போகும்? அதனாலே அதைக் கொஞ்சம் பார்த்து அந்த இடத்திற்கு மறுபடியும் 400 அடி அகலத்தில் செல்லக்கூடிய அந்த supply channel-ஐ நீங்கள் உருவாக்கித் தந்தால்தான் அடுத்து வருகிற காலக் கட்டங்களிலே இதுபோன்ற வெள்ளம், பேய் மழை வந்தால் அதைத் தடுக்க முடியும்.

அதேபோல, ஆதிதிராவிட மக்கள் பொருளாதார ரீதியாகவும், கல்வி அறிவிலும் பின்தங்கியவர்களாக உள்ளனர். இதனைப் போக்க மத்திய, மாநில அரசுகள் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. 1970 ஆம் ஆண்டின் தொடர்ச்சியில் தமிழகத்தில் 250 கல்லூரிகளே மாநில அளவில் இருந்தன. ஆதிதிராவிடப் பிள்ளைகள் குறிப்பாக பெண்கள் கல்லூரிப் படிப்பே இல்லாமல் S.S.L.C. வரை மாணவர் பருவத்தை முடித்துக்கொண்டனர். 1978-ல் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது கல்லூரியில் இருந்த P.U.C. வகுப்பை தமிழகத்திலே இருந்த 1500 உயர்நிலைப் பள்ளிகளில் கொண்டு வந்து இணைத்தார். இதனால் அப்பள்ளிகள் ப்ளஸ் 2 என்ற மேல்நிலைப் பள்ளி என்ற அந்தஸ்தைப் பெற்றன. ஆதிதிராவிட மாணவர்கள் கல்லூரிப் படிப்பின் ஒரு பகுதியையாவது படிக்கும் வாய்ப்பு பள்ளிக்கூடங்களிலே கிடைத்தது.

அதேபோல ஆதிதிராவிட மாணவர்கள் உள்நாட்டிலேயும், வெளிநாட்டிலேயும் வேலைவாய்ப்பினைப் பெற வேண்டுமென்றால் B.E. Mechanical, B.E. Electrical, Computer Engineering போன்ற பட்டப் படிப்புகள் பெற வசதி பெற்றால் அது மேன்மையான நடைமுறை

வழியாகும். எப்படி புரட்சித் தலைவர் கல்லூரி படிப்பின் ஒரு பகுதியான P.U.C. கல்லூரிப் படிப்பை பள்ளிக் கல்வியுடன் இணைத்தாரோ, அதேபோல அண்ணா பொறியியல் கல்லூரி வல்லுநர்களின் ஒத்துழைப்போடு ஆதிதிராவிட மேல்நிலைப் பள்ளிகளிலேயே B.E. Electrical, B.E. Mechanical, Computer Engineering போன்ற பாடங்களுக்கான 3 ஆண்டு Diploma பாடங்களைப் படிக்க வசதி செய்து தரவேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வரைக் கேட்டுக்கொள்கிறேன். உடனடியாக அரசு நடவடிக்கை எடுப்பதாக இருந்தால் 6 முதல் 8 வரை வகுப்பிலுள்ள மாணவர்களை அருகிலுள்ள வேறு பள்ளிகளில் சேர்த்துவிட்டு அதன் மூலம் ஏற்படும் வகுப்பறை இடவசதியைக் கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம். இப்பணிக்காக உள்கட்டமைப்பு, பேராசிரியர்களுக்கான ஊதியம் அனைத்தும் ரூபாய் 10 கோடிக்குள் இருக்கும் என நான் நினைக்கின்றேன். பாடத் திட்டங்கள், உள்கட்டமைப்பு, மேற்பார்வை இவற்றை அண்ணா பல்கலைக்கழக வல்லுநர்களைத் துணை கொண்டு நடத்தித் தர மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் உள்ளதுபோல--மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் பேசுகிறபோது சொன்னார், சென்னையிலே இருக்கிறமாதிரி--கல்லூரிகளை, விளையாட்டு அரங்கங்களை மற்ற மாவட்டங்களிலும் உருவாக்க வேண்டும் என்று சொன்னார். நான் என்ன சொல்கின்றேன் என்று சொன்னால், அதையே ஒத்துத்தான் நான் இங்கே கருத்து சொல்ல விரும்புகின்றேன். சென்னையில் உள்ளதுபோல மிகப் பெரிய விளையாட்டு அரங்கங்கள் சுமார் 50 கிலோ மீட்டர் சுற்றளவில் இல்லை. 2012–ல் ஒலிம்பிக் போட்டிக்கு வீரர்களை உருவாக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. சானியா மிர்ஸாவைப் போன்ற வீராங்கனைகளை உருவாக்க வேண்டுமென்று சொன்னால் நாம் விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து தாலுகா தலைநகரங்களிலே ஒரு விளையாட்டு அரங்கம், ஒரு stadium அமைப்பதற்கு இந்த அரசாங்கம் முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல கலைக் கல்லூரிகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர். அவருக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள்.

* **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒரு மினி விளையாட்டு அரங்கம்



அமைக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். அதிலே பொதுமக்கள் பங்களிப்புத் தொகையாக 7½ இலட்ச ரூபாயும், நம்முடைய தமிழக அரசு மூலமாக 22½ இலட்ச ரூபாயும் ஒதுக்கப்பட்டு கிட்டத்தட்ட 10 வட்டத் தலைநகரங்களில் வேலை நடந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–40

**திருமதி டி. யசோதா:** 22 இலட்சம் ரூபாய் ஒரு மினி விளையாட்டு அரங்கத்திற்குப் போதுமா என்று எனக்குத் தெரியவில்லை. அதேபோல, 10 பகுதிக்குச் செய்கிறார்கள், ஆனால், அது என்னுடைய பகுதிக்கு வரவில்லை. என்னுடைய பகுதிக்கும் வரவேண்டும்.

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** உங்களுடைய சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட இடத்தில் வரவேண்டுமென்றால், 5 ஏக்கர் இடம் வேண்டும். பொதுமக்கள் பங்களிப்புத் தொகையாக 7½ இலட்ச ரூபாய் கட்டவேண்டும். கட்டினால் உடனடியாக தமிழக அரசு மூலமாக, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவுப்படி 22½ இலட்ச ரூபாய் ஒதுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி டி. யசோதா:** அதேபோல, அரசுக் கலைக் கல்லூரிகள், குறிப்பாக பெண்களுக்கு 50 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு இல்லாததால், குன்றத்தூர், ஸ்ரீபெரும்புதூர் போன்ற பகுதிகளில் கலைக் கல்லூரி உருவாக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, தொழில் முனைவோர் பயிற்சி மையம் அரசின் சார்பில் கிராமங்களில் பயிற்சி நடத்த வேண்டும். மக்கள் கல்வி நிறுவனம் என்ற தலைப்பிலும், மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறை பொறுப்பாளர்கள், தமிழக அரசின் வழிகாட்டுதல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள மகளிர் சுய உதவிக் குழுவிற்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி டி. யசோதா:** மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறை பொறுப்பாளர்கள் தமிழக அரசின் வழிகாட்டுதல்படி, பயிற்சியாளர்களை அனுப்பி, உதவித் தொகையும் பெற்றுத் தருவதாக அறிகிறேன். இந்தத் தொழில் பயிற்சி மையங்களை, கிராமங்களில் ஏற்படுத்தி, முறையான பயனீட்டாளர்களுக்கு அதன் பலன் கிடைக்க அத்துறையைச் செம்மைப்படுத்த வேண்டும். தவிர, மகளிர் சுய உதவிக் குழுவில், ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 20 பேர் இருக்க வேண்டும். ஆதிதிராவிட மக்களுக்கென்று தனிக் குழு இருக்கிறது. இருந்தாலும், general–ஆக இருக்கின்ற இந்தப் பொதுக் குழுவிலே, ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த 2 பேர் இருக்க வேண்டும். அதற்கு வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார்த் துறை நிறுவனங்களை, சமுதாய வளர்ச்சிப் பணியில் பங்கேற்கச் செய்து, ஆரம்ப சுகாதார நிலையங்களைக் கட்டித்தரவும், கட்டியுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தி புதுப்பிக்கவும், ஆதிதிராவிட மாணவ, மாணவியர் தங்கும் விடுதிகளில் அடிப்படை வசதிகளை உருவாக்கித் தரவும், பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவதற்கு, தனியார் நிறுவனங்களை ஈடுபடுத்தவும் வழிவகை காணவேண்டும்.

அடுத்து, கால்நடைத் துறை. ஆடு தொட்டியிலே, ஆட்டை வெட்டுவதற்கும், அதன் கழிவுகளை அகற்றுவதற்கும் நவீனப்படுத்த வேண்டும். பழைய காலத்திலேயே இருக்கிறது. ரொம்ப அருவருப்பாக இருக்கிறது. அதனாலே, நீங்கள் அதை நவீனப்படுத்தினால், இறைச்சியும் சுத்தமாக இருக்கும். சுற்றுப்புறச்சூழல் சுகாதார வசதியுடன் இருப்பதற்கு நீங்கள் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடைப் பல்கலைக் கழகம். இதில் கன்று மாற்றல் ஆராய்ச்சி மிக மிக வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. வெண்புரட்சி சிறப்பாக இருப்பதை கிராமங்களுக்கு நடைமுறைப்படுத்த கேட்டுக்கொள்கிறேன். Vaccine, நோய்த் தடுப்பு மருந்து — இதை உற்பத்திச் செய்வது இந்தப் பல்கலைக்கழகம்தான். இதை உற்பத்திச் செய்வதை நடைமுறைப்படுத்த வேண்டும். கால்நடைத் துறை அதிகாரிகள் இதற்கு நிதி உதவி, Department of Science & Technology மற்றும் ICAR (Indian Council of Agricultural Research) மற்றும் CSIR (Council of Scientific and Industrial Research) இந்த ஆராய்ச்சியின் வெற்றி கிராம மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும். அந்த vaccine மருந்தினுடைய அந்த effect கிராமங்களிலே கிடைப்பதற்கு, கால்நடைத் துறை அதிகாரிகளும், அந்த University–யைச் சேர்ந்த



அதிகாரிகளும், இரண்டுபேரும் இணைந்துதான் இதைச் செய்யமுடியும். அந்த இணைப்பு உடனடியாக ஏற்படுத்தவேண்டுமென்று உங்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன். கல்லூரி ஆசிரியர்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், ஒவ்வொரு கிராமத்திலேயும், இணைப்புத் தம்பதிகளுக்கு இப்படிப்பட்ட பயிற்சிகளைக் கொடுத்து, இப்பொழுது எல்லா கிராமங்களிலேயும், அந்த இணைப்புத் தம்பதிகள் சென்று வருமுன் காப்போம் என்ற சொல்லின்படி, குடற்புழு நீக்கம், கோழிகளுக்கு தடுப்பூசிப் பணிகள் போன்றவற்றை அனைத்துக் கால்நடைகளுக்கும் சிறப்பான முறையிலே அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே செய்துகொண்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி டி. யசோதா:** நீங்கள் நிறைவேற்றுவதை நான் குறை சொல்லவில்லை. இந்தப் பல்கலைக்கழகத்திலே கண்டுபிடிக்கின்ற இந்த மருந்துகள், அந்தத் துறையினுடைய அரசு அதிகாரிகள் மூலமாக, இரண்டுபேருக்கும் நிறைய Co–operation உருவாக்கி, கிராமங்களுக்கு அதனுடைய பலன் கிடைப்பதற்கு நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–45*

கல்லூரி ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரைப்படி 1996–ல் அமல்படுத்தியதில் நிலுவைத் தொகை 60% யாருக்கும் தரப்படவில்லை. 1996–லும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். அப்போதுதான் இதை நீங்கள் செய்திருக்கிறீர்கள். அந்த 60% தொகையை நீங்கள் retire ஆனவர்களுக்காவது பணமாகக் கொடுங்கள். அந்த bond, பத்திரம் எல்லாம் கொடுத்தீர்கள் என்றால் அவர்களுக்கு அந்த கஷ்ட நேரத்திற்கு இது உதவியாக இருக்காது. அவர்கள், கல்யாணம் காட்சி, பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டுமென்று நினைப்பார்கள். அதற்கு இந்தப் பணம் அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டுமென்று சொன்னால், retire ஆனவர்களுக்கு மட்டுமாவது நீங்கள் அந்தத் தொகையை கொடுக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பக்கம் 20–ல் பி.எட். ஆசிரியர்கள் 20 ஆயிரம் பேருக்கு, மன்னிக்க வேண்டும், ஆயிரம் பேருக்கு மேல் பணி கொடுக்கப்பட்டிருக்கிறது. வயது வரம்பு இல்லை. இவர்களுக்கு தொகுப்பு ஊதியம் 4 ஆயிரம் வீதம் கொடுக்கப்பட்டு, 5 வருடத்திற்குப் பிறகு இவர்களுக்கு முறையான ஊதியம் வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். பாவம் இப்போதே அவர்களுக்கு வயது எக்கச்சக்கமாக இருக்கும் என்று நினைக்கிறேன். நிறைய பேர் கல்யாணம் ஆனவர்களாகக்கூட இருக்கிறார்கள். அவர்கள் ரொம்ப தூரத்திற்கு வேறு பள்ளிக்கூடங்களுக்குப் போய்ச் சேர வேண்டிய நிலை இருக்கிறது. போய்விட்டு வர வேண்டும். அதனால், அரசாங்கம், 4 ஆயிரம் ரூபாய் இந்தத் தொகுப்பு ஊதியம் கொடுப்பதை இப்போதே கொஞ்சம் consider பண்ணி அவர்களுக்கு ஒரு முறையான ஊதியத்தை வழங்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

பல்கலைக்கழகங்கள் 16 இருக்கின்றன. அந்த 16–ல் இரண்டு பல்கலைக்கழகங்களான சென்னை, மதுரை பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர் பதவிக்கு வயது வரம்பு இல்லை. மீதமுள்ள 14 பல்கலைக்கழகங்களுக்கு வயது வரம்பு 65 என்று இருப்பதை எல்லா துணை வேந்தர்களுக்கும் வயது வரம்பு இல்லையென்ற நிலைப்பாட்டினை அரசு உருவாக்க வேண்டும். ஏ.எல். முதலியார் இருந்தார். 87 வயது வரை இருந்தார். சுந்தரவடிவேலு இருந்தார், அவரும் அந்தமாதிரி இருந்தார். வரதராசனார் இருந்தார், வி.சி. குழந்தைசாமி இருந்தார், பொன்னுசாமி இருந்தார், எல்லோரும் 65 வயதுக்கு மேல்தான் இருந்தார்கள். அதனால், வயது வரம்பு இல்லாமல் கல்விக்காக பணியாற்றக்கூடியவர்கள் இருப்பார்களேயானால், ஆழ்ந்த கல்வியும் அனுபவமும் மிக்கவர்கள் துணை வேந்தர்களாக அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் வரும் வாய்ப்பை நீங்கள் நிச்சயமாகக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீதிமன்றத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யசோதா, உரையை நிறைவு செய்யுங்கள்.

**திருமதி டி. யசோதா:** நான் படித்துவிடுகிறேன், தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை நிறைவு செய்யுங்கள்.

**திருமதி டி. யசோதா:** Point–க்கே வரவில்லை இன்னும். ஓர் உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய காவல் துறை. காவல் துறை, ரொம்ப நல்ல வசதியாக, நல்ல மரியாதையோடு,



கௌரவமாக இந்த ஆட்சியிலே நடத்தப்படுகிறது. அவர்களுக்கு ஒரு குறையும் கிடையாது. ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இன்னொரு ஐந்து மணித் துளிகள் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திருமதி டி. யசோதா:** 10 நிமிடங்கள் எடுத்துக்கொள்கிறேன். அவர்கள் ஒரு நல்ல நிலையிலே இருக்கிறார்கள். அரசாங்கத்தின் மூலமாக, காவல் துறையாளர், நன்றாக, செம்மையாக இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் எடுத்துக்கொண்டு போகின்ற வழக்குகள் ஒரு நீதிமன்றத்திலே குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்படுகிறது. அது உயர் நீதிமன்றத்திற்கு வந்தால் அந்தக் குற்றம் நிரூபிக்கப்படாமல் அங்கு, அவர்கள் நிரபராதிகள் என்று வெளியே வரக்கூடிய சூழ்நிலைமையிருக்கிறது. அதிகமான குற்றவாளிகள் இன்றைக்கு நிரபராதிகளாக வெளியே வருவதற்குக் காரணம் சரியான சாட்சிகளை, நாம் நீதிமன்றத்தில் பதிவு செய்கின்ற அந்த எப்.ஐ.ஆர்., இவை சரியாக இல்லாத காரணத்தினால் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிருக்கின்றதோ என்கின்ற ஐயப்பாடு இன்றைக்கு நாட்டு மக்களிடத்திலே ஏற்பட்டிருக்கின்றது. அதேபோல, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சேலத்தில் நான்கு வருடத்திற்கு முன்னாலே விஜயகுமார் என்பவர் போலியாக ஐ.ஏ.எஸ். அதிகாரி என்று கூறிக்கொண்டு, பலரை ஏமாற்றி பணம் பறித்துள்ளார். ரெட் லைட் காரோடு பவனி வந்திருக்கிறார். சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் புகாரின் பேரில்தான் அவர் மேல் சி.பி.சி.ஐ.டி. போலீசார் வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். நான்கு வருடங்களாகியும் அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரியை இன்னும் நாம் கண்டுபிடிக்க முடியவில்லை. அவரைக் கைது செய்யவில்லை.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றம் செய்பவர்கள் யாராக இருந்தாலும் சட்டத்தின் பிடியிலிருந்து அவர்கள் தப்பக் கூடாது, உரிய தண்டனையை பெற்றுத் தர வேண்டும் என்பது அரசின் கொள்கை, நீதியின் கொள்கை. மாண்புமிகு அம்மா அவர்கள், இந்த அடிப்படையிலே அதிகமான அளவிற்கு நீதித் துறைக்கு ஒதுக்கீடு செய்து, விரைந்து தீர்ப்பு வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக்கூட சில வழக்குகள் எந்த அளவிற்கு குறுகிய காலத்திலே விசாரிக்கப்பட்டு, தீர்ப்பு அளிக்கப்பட்டு, தண்டனை கொடுக்கப்பட்டன என்பதைக் கூற இங்கே ஒரு நிமிடம் நான் எடுத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். Crime No. 687 — அதாவது ஒரு கொலைக் குற்றம் 302 I.P.C.–யிலே 75 நாட்களிலே, R6 காவல் நிலையத்திலே

தண்டணை வழங்கப்பட்டிருக்கின்றது. இன்னொன்று, எண் 376/2 I.P.C., 5 வருடம் தண்டனை, 92 நாட்களுக்குள். அதே போன்று கொலைக் குற்றம் — 40 நாட்கள். அதேபோல, இன்னொரு கொலைக் குற்றத்திலே 68 நாட்கள். (குறுக்கீடுகள்) இப்படி R6 காவல் நிலையத்திலே இந்த மாதிரி 60 நாட்கள், 68 நாட்களில் விரைந்து குற்றவாளிகளுக்குத் தண்டனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல வடபழனி R8 காவல் நிலையத்தில் 44 நாட்களிலே குற்றவாளிக்கு தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. இன்னொரு வழக்கில் 29 நாட்கள்.

*பிற்பகல் 1–50*

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நடவடிக்கை எடுத்து தண்டனை வாங்கிக் கொடுத்ததைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. ஆனால் அதேநேரத்திலே நீதிமன்றத்திற்குப் போய், ஒரு நீதிமன்றத்திலே குற்றவாளி என்று தண்டிக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்திற்குப் போய் அங்கே தள்ளுபடி ஆவதற்கு என்ன காரணம்? அதைத்தான் நான் கேட்கிறேன். அதேபோல, (குறுக்கீடு) இல்லை, இல்லை. அதற்கு நம்முடைய காவல் துறையைச் சேர்ந்தவர்கள் கொடுக்க வேண்டிய அந்த F.I.R., அந்த சாட்சிகள், இவை எல்லாம் சரியாக இல்லாத காரணத்தாலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யசோதா, இதுவெல்லாம் என்ன? குறிப்பிட்டு ஏதாவது ஒன்றைச் சொன்னால் பரவாயில்லை. மொத்தத்தில் இப்படிச் சொல்லக்கூடாது. அடுத்த பாயின்ட் ஏதாவது இருந்தால் பேசுங்கள்.

**திருமதி டி. யசோதா:** சேலத்தில் 4 வருடங்களுக்கு முன்பாக போலி I.A.S. Officer . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை ஏற்கெனவே பேசிவிட்டீர்கள். அதற்கு அடுத்த Point-க்குப் போங்கள்.

**திருமதி டி. யசோதா:** இல்லை. அதைத்தான் கண்டுபிடிக்க வேண்டும். இவர் நடுவில் வரவில்லை என்றால் நான் முடித்துவிடுவேன். வராமல் இருந்தால் நன்றாக இருக்கும். மொத்தம் கத்தையாகக் கொடுத்துவிடுங்கள் பதிலை.

அதேபோல, சென்னை அரசு பொது மருத்துவமனை பிரம்மாண்டமாக இருக்கிறது, Five Star Hotel மாதிரி கட்டியிருக்கிறீர்கள்.



குறை சொல்லவில்லை. ஆனால் அங்கே பழைய கட்டடம், புதிய கட்டடம் என்று இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. புதிய கட்டடத்தில் 250 டெலிபோன்கள் இருக்கின்றன. பழைய கட்டடத்தில் 160 டெலிபோன்கள் இருக்கின்றன. டெலிபோன்களை நிர்வகிப்பதற்கு டெண்டர் விட்டு அதன் மூலமாகத்தான் அவர்கள் maintenance செய்கின்றார்கள். அந்த maintenance–க்கு இந்த வருடம் டெண்டர் விடாததால் 160 டெலிபோன்கள் பழைய கட்டடம் இருக்கும் இடத்தில் வேலை செய்யாததால், இதயம், நரம்பியல், எலும்பு முறிவு போன்ற பகுதிகளில் இருக்கிற வியாதியஸ்தர்கள் அவசரமாக contact செய்ய முடியாமல் அங்கே இருக்கின்ற மருத்துவர்கள் . . .

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குறைபாடுகள் ஒரு வாரத்திற்கு முன்னதாக மருத்துவத் துறைக்கு வந்ததும் உடனடியாக இது குறித்து நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கை இப்போது எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி டி. யசோதா:** தனியார் வங்கிகளில், இப்போது இருக்கின்ற ICICI Bank போன்ற வங்கிகளில் அவர்கள் என்ன செய்கின்றார்கள் என்றால் Phone number, mobile number –களை தெரிந்து வைத்துக்கொண்டு phone செய்கின்றார்கள். Phone செய்து, உங்களுக்குக் கடன் வேண்டுமா, நாங்கள் கடன் கொடுக்கிறோம் என்று கூவிக் கூவி அழைக்கிறார்கள். அப்படி சிலர் சென்று கடன் வாங்குகிறார்கள். (குறுக்கீடு) அதனுடைய பலன் என்னவென்றால். வாங்கியபின் 3 வருடங்களாக கடனுக்கான பணத்தைக் கட்டியும், இப்போது அவர்கள் என்ன செய்கின்றார்கள் என்றால், வாங்கியது 15 ஆயிரம் ரூபாய் என்றால் 49 ஆயிரம் கட்ட வேண்டும் என்று நிற்கிறார்கள். 3 வருடங்களாகக் கட்டியதற்குப் பிறகு– –கந்து வட்டியை ஒழித்தீர்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் நாங்கள் என்ன செய்வது, கொடுமையாக இருக்கிறதே! (சிரிப்பு)

**திருமதி டி. யசோதா:** சொல்கிறேன் சார், சொல்கிறேன். கந்து வட்டியை ஒழித்தீர்கள் அல்லவா, கந்து வட்டியை ஒழித்தீர்கள். கந்து வட்டியை ஒழித்து ஏழைகளைக் காப்பாற்றியிருக்கிறீர்கள். அதுமாதிரி ஒரு கொள்ளைக்கூட்டம் இந்த Bank மூலமாக . . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசி முடியுங்கள். நீங்கள் பேசி முடியுங்கள்.

**திருமதி டி. யசோதா:** Bank மூலமாக இந்த கந்து வட்டியை வசூலிப்பதற்கு என்ன செய்கின்றார்கள் என்றால் ரௌடிகளோடு வீடுகளுக்கு வருகின்றார்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கிகளில் நடைபெறுகின்ற முறைகேடுகளை விசாரிக்கின்ற பொறுப்பு R.B.I. சம்பந்தப்பட்டது. அது மத்திய நிதி அமைச்சருடைய பொறுப்பில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

**திருமதி டி. யசோதா:** நான் அதற்கே போகவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** நாங்களா பார்க்கிறோம்?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய வங்கிகள் செய்ததாக உறுப்பினர் குறிப்பிடவில்லை. தனியார் இதுபோன்று ஏமாற்றுகிறார்கள் என்றுதான் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** தனியார் என்றாலும் அதுவும் நிதி அமைச்சர் control–வில்தான் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனியார் வங்கிகளைத்தான் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாநில அரசின் அதிகார எல்லைக்கு உட்பட்டதல்ல. தனியார் வங்கிகள் ஆகட்டும், அரசின் தேசிய வங்கிகள் ஆகட்டும், அனைத்தும் மத்திய நிதி அமைச்சருடைய அதிகார எல்லைக்கு உட்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யசோதா, அடுத்த பாயின்ட்டுக்குப் போங்கள்.

**திருமதி டி. யசோதா:** அவர்கள் பணத்தைக் கொடுப்பது பற்றி நான் சொல்லவில்லை. அவர்கள் கடனை கூவிக் கூவி கொடுத்துவிட்டு, கடனை வாங்கியதற்குப் பிறகு ரௌடிகளை விட்டு மிரட்டுகின்ற தன்மை—அதற்குக்கூட மத்திய அரசாங்கம் வரவேண்டுமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** அந்த வங்கிகளை நிர்வகிக்கின்ற நிதி அமைச்சரைத்தான் கேட்க வேண்டும்.



**திருமதி டி. யசோதா:** இந்தக் குரல் இங்கே பிரதிபலிக்கிறது. இப்பொழுது அந்தப் பிரச்சினை வந்துவிட்டது அல்லவா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை, ஒரு நிமிடம் அம்மா. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த வங்கியாக இருந்தாலும் சரி, அது R.B.I.–னுடைய control –லில்தான் வருகின்றது. எனவே நீங்கள் உடன்பட்டு ஒரு கடனைப் பெற்றுவிட்டு, ஒப்பந்தப் பத்திரத்தில் எல்லாம் கையெழுத்து போட்டுவிட்டு அதன் பிறகு அவர்கள் கேட்கின்றார்கள் என்றால் அதற்கு அரசு என்ன செய்ய முடியும்? அரசின் நிலை என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யசோதா, பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திருமதி டி. யசோதா:** Please, கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** அப்படி சில வங்கிகள், தனியாராக இருந்தாலும் சரி, நீங்கள் சொல்வதுபோல் ICICI Bank எந்த bank–ஆக இருந்தாலும் கொடுத்த பணத்தை வசூல் செய்வதற்காக அடியாட்களைக் கொண்டு (குறுக்கீடு) இங்கே பாருங்கள் அம்மா, (குறுக்கீடு) இங்கே பாருங்கள் அம்மா, ICICI வங்கியோ, City வங்கியோ அல்லது எந்த வங்கியாக இருந்தாலும் கொடுத்த கடனை வசூல் பண்ணுவதற்கு சட்டப்படியாகத்தான் முயல வேண்டும். அப்படி சட்டத்திற்கு மீறி (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, அப்படி சட்டத்திற்கு மீறி அவர்கள் அடியாட்களைக் கொண்டு செயல்படுவார்களேயானால் நிச்சயம் சட்டம் தன் கடமையைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

*பிற்பகல் 1–55*

**திருமதி டி. யசோதா:** அது போதும், எனக்கு அதுபோதும். சட்டம் வந்து அதன் கடமையைச் செய்தால்போதும். ஏன் என்றால் நீங்கள் கந்து வட்டியை ஒழித்தீர்கள். அதேமாதிரி, இதுபோன்ற தனியார் வங்கிகளை வைத்துக்கொண்டு மிரட்டி பணம் வசூலிக்கின்ற நிலைமையைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, தமிழ்நாடு சத்துணவு அமைப்பாளர்களாக, M.A., B.A., B.Sc., B.Com., M.Com., M.Phil முடித்தவர்கள் மட்டும் 5,000 பேர் உள்ளனர். 1983 ஆம் ஆண்டிலிருந்து இவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். 22 ஆண்டுகாலம் சத்துணவு அமைப்பாளர்களாகப் பணியாற்றி வருகின்ற இவர்களை, விதிகளைத் தளர்த்தி கருணையின்

அடிப்படையில் அரசு தேர்வாணையம், T.N.P.S.C. மூலம் சிறப்புத் தேர்வு நடத்தி சத்துணவுப் பட்டதாரிகளுக்கு இளநிலை உதவியாளர் பணியிடம் வழங்க அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா இதுபோன்ற கோரிக்கைகளை நீங்கள் எழுதிக் கொடுத்துவிடுங்கள். பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திருமதி டி. யசோதா:** இல்லை, இல்லை. இரண்டே இரண்டு பிரச்சினைகள்தான், தலைவரே, இரண்டேயிரண்டுதான். சொல்லிவிடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே. 24–9–2001 அன்று மற்றும் 23–4–2002 ஆகிய தேதிகளில் நடைபெற்ற சத்துணவு மானியக் கோரிக்கையில் சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றிவரும் இளங்கலை, முதுகலைப் பட்டம் முடித்த பட்டதாரிகளுக்கு அரசு பிற துறைகளில் இளநிலை உதவியாளர் பணியிடம் வழங்கப்படும் என்று இருமுறை இம்மாமன்றத்தில் அறிவிக்கப்பட்டதற்குப் பிறகும், இன்னும் நடவடிக்கை வரவில்லை. அ.இ.அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை பக்கம் 94–ல் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திருமதி டி. யசோதா:** இறுதியாக, ஒன்றே ஒன்றுதான். வேறு ஒன்றும் இல்லை தலைவர் அவர்களே. அதாவது, தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத் துறை, அதற்கு hostel வசதி இருக்கிறது. ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத் துறையின் மூலம் நடைபெற்றுவரும் 980 அரசுப் பள்ளி விடுதிகளில் வார்டன், சமையலர், காவலர்கள் சம்பளம், விடுதி வாடகை, மின் கட்டணம், தனியார் கட்டணம், சமையல் பாத்திரங்கள், கிரைண்டர், நாற்காலி, தண்ணீர் கட்டணம், பீரோ போன்றவற்றுக்கு ஆகும் செலவுகள் அனைத்தும் அரசே செலவு செய்து வருகிறது. அதுமட்டுமல்லாமல், 68,348 விடுதிப் பிள்ளைகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 300 கொடுக்கிறார்கள் உதவித் தொகையாக. மட்டன், முட்டை, மோர் (சிரிப்பு) போன்றவையும் வழங்கப்பட்டு வருகின்றன அரசுத் துறையின் மூலமாக நடைபெற்றுவருகின்ற hostel-க்கு இவற்றைக் கொடுக்கின்றார்கள். அது தவிர, மாதந்தோறும் பார்பர் செலவு, டோபி கட்டணமும் கொடுக்கிறார்கள். வருஷத்திற்கு ஒரு முறை பாய்--படுப்பதற்குப் பாயும் கொடுக்கிறார்கள். ஆனால், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் அங்கீகாரம்



பெற்று நடத்தப்பட்டுவரும் 43 விடுதிகளின் நிர்வாகச் செலவுகள் மீதப்படும் நிலையில் அந்த விடுதி நிர்வாகம் செலவு செய்து வருகிறது. ஆனால், அந்த விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற 4,316 பிள்ளைகளுக்கு ஒரு பிள்ளைக்கு மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். உணவு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. 6 ரூபாய் 66 பைசா ஒரு நாளைக்கு, இது போதாது. அது இல்லாமல் பார்பர் செலவு, டோபி கட்டணம், படுக்கப் பாய், சீருடை இவர்களுக்குக் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா, இதுபோன்ற கோரிக்கைகளை நீங்கள் எழுதிக் கொடுத்துவிடலாம். அதிலே ஒன்றும் இல்லை.

**திருமதி டி. யசோதா:** இல்லை, இல்லை, இதோ முடித்துவிடுகிறேன். முடித்துவிட்டேன். முடிவிற்கு வருகிறேன். உங்களுக்கு thanks சொல்லிவிட்டு முடித்துவிடுகிறேன். பசி எல்லோருக்கும் ஒன்றுதான் என்று முதல்வர் அவர்கள் சொல்கிறார்கள். அதனாலே அரசாங்கத்திலே இருக்கிற கல்லூரி விடுதிகளிலே படிக்கிறவர்களுக்கு ஒரு பசியும், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு விடுதியிலே படிக்கிற பிள்ளைகளுக்கு ஒரு பசியும் இருக்கப் போவதில்லை. பசி எல்லோருக்கும் ஒன்றுதான். அதனாலே, அரசாங்கத்தாலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற விடுதிக்குக் கொடுக்கிற, அந்தச் சலுகைகளை இவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஒன்றே ஒன்று. இந்த சுனாமி வந்தபோது, நிறையபேர் உதவி செய்தார்கள். அதிலே குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், எங்கேயோ பிறந்தவர்கள் அமிர்தானந்தமயி. அந்த அம்மா இங்கே வந்து 2,000 வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். 144 boat கொடுத்திருக்கிறார்கள், மீனவர்களுக்கென்று. அப்படிப்பட்டவர்களுடைய அந்தப் பணியை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், அதேபோல நிறைய கிறிஸ்தவப் ஃபாதர்கள் எல்லாம் வந்து உதவி செய்திருக்கிறார்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் இதுமாதிரி குறை சொல்லக் கூடாது. நன்றி சொல்லி முடியுங்கள், நீங்கள் பேச்சை முடியுங்கள். அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திருமதி டி. யசோதா:** சரி. அந்த அம்மா செய்த நல்லதையாவது பாராட்ட வேண்டும். அந்த எண்ணம் எல்லோருக்கும் வர வேண்டுமென்று உங்கள் சார்பாகக் கேட்டுக்கொண்டு, நான் பேசுவதற்கு வாய்ப்பினைத் தந்த உங்கள் அனைவருக்கும், பேரவைத் தலைவருக்கும் என்னுடைய நன்றியினைக் கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன.

பேரவை மீண்டும் நாளை (25–01–2006) காலை 10–00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–59 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

47. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம்) முப்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

48. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை) முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

49. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் இருபத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

50. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் இருபத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)



### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

50. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

51. மனுக்கள் குழுவின் நூற்று முப்பத்து இரண்டாவது அறிக்கை. (2003–2006)

52. மனுக்கள் குழுவின் நூற்று முப்பத்து மூன்றாவது அறிக்கை. (2003–2006)

53. மனுக்கள் குழுவின் நூற்று முப்பத்து நான்காவது அறிக்கை. (2003–2006)

54. மனுக்கள் குழுவின் நூற்று முப்பத்து ஐந்தாவது அறிக்கை. (2003–2006)

55. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்து நான்காவது அறிக்கை. (2003–2006)

56. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

D
N211,31P06.
P06.90.1

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
221007
சென்னை-600 008
நூலகம்